www.tamilarangam.net

# உயிர்நிழல்





Uyirnizhal
VOL IV - N°1 - ISSUE 17
Published by Exil
JANUARY - FEBRUARY 2001


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**மறையாத மறுபாதி**

(புகலிடத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பு)

முதற் பதிப்பு: பெப்ருவரி 1991



**தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு**

**சி. சிவசேகரம்**

முதற் பதிப்பு: ஏப்ரல் 1994

## எக்ஸில் வெளியீடுகள்



**எனக்குள் பெய்யும் மழை**

மூன்றாம் உலகப் பெண்நிலைவாதம்:
இருபத்திரண்டு ஆசியக் கவிகள்
தொகுப்பும் மொழியாக்கமும்:
**யமுனா ராஜேந்திரன்**

முதற் பதிப்பு: மே 1999



**பனிவயல் உழவு**

(கவிதைத் தொகுப்பு)

**திருமாவளவன்**

முதற் பதிப்பு: டிசம்பர் 2000

## எமது அடுத்த வெளியீடாக!

**பி. ரவிவர்மனின்**

**நெடுங்காலத்தின் பின்னொரு நாள்**

(சிறுகதைத் தொகுப்பு)

**பிரதிகட்கு:**
EXIL
27 Rue Jean Moulin,
92400 Courbevoie, FRANCE
e-mail: EXILFR@aol.com



உயிர்நிழல்

Uyirnizhal

**Vol. IV No. 1** 17
**JAN. - FEB. 2001**

எக்ஸிலிலும் பின்பு உயிர்நிழலிலும் தொடர்ந்து பங்காற்றிய (தொகுப்பாளராகவும் வடிவமைப்பாளராகவும்) ஓவியர் கிருஷ்ணராஜா அவர்களின் வடிவமைப்புகளில் சில நன்றியுடன் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

*தொகுப்பாசிரியர்கள்:*
லக்ஷ்மி
கலைச்செல்வன்

**அன்பளிப்பு:** வருட சந்தா - 120FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)

காசோலைகள் அனுப்பவேண்டிய வங்கியும், இலக்கமும்:
CREDIT LYONNAIS
CODE BANQUE 30002
COMPTE 554/6788M/21
ASSOCIATION EXIL

வங்கி முகவரி:
49 Bd Clémenceau
92400 Courbevoie
FRANCE

**தொடர்புகளுக்கு:**
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: EXILFR@aol.com

N° d'enregistrement de l'association : 13023204

**வெளியீடு: எக்ஸில்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அவன்
*சுமதி ரூபன்* ........ 04

27வது இலக்கியச் சந்திப்பு
........ 05

டொமினிக் ஜீவாவுடன் ஒரு செவ்வி
*அசோக்* ........ 07

ஔவையின் ‘எல்லை கடத்தல்’
........ 15

தழும்பு
*மொ.பெ. பிரணவி குணசீலன்* ........ 20

அமார்க்ஸ் என்ற அமகாத்மா
*பிரேம் : ரமேஷ்* ........ 25

சனதருமபோதினி வெளியீடும் அறிமுகமும்
*சு. கருணாநிதி* ........ 30

போதை கழற்றிய போர்வை
*லக்ஷ்மி* ........ 31

ஆன் பிராங்க்
*தமிழில் குயிலி* ........ 32

பலஸ்தீனிய உண்மைக்கான புத்திஜீவி சயிட்டும்.....
*தேசபக்தன்* ........ 37

தற்கொலைப்படை
*கலையரசன்* ........ 40

அகதிகள் குற்றவாளிகளா?
*கலையரசன்* ........ 43

Paris Connection, அ. மார்க்ஸ்
*ஸ்பாட்டகஸ்தாசன்* ........ 46

சுதந்திர அடிமைகள்
*வித்யா* ........ 49

நீட்சேயும் நீட்சேயும்
*வாசுதேவன்* ........ 52

வன்முறையும் இலக்கியமும்
(நாவலாசிரியை திலகவதியுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்)
........ 57

எதிர்வினை
*சு. இராசமணி (பிலிப் சுந்தரம்)* ........ 70

நிழல்கள்
........ 72

“சனி” மாற்றம்
*றஞ்சினி* ........ 75


இணையத்தில் உயிர்நிழல் :
**http://www.geocities.com/uyirnizhal**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவன்

## சுமதி ரூபன்



இப்போதெல்லாம்
சாப்பிடுவது உடுப்பது படுப்பது
ஏன்
எட்டுமணி வேலை கூட
அர்த்தமாகிப் போகிறது

தொலைபேசிகள் அன்பானவை

மௌனமாக
என் முடி
அவன் முகத்தில் வலை பின்ன
கடற்கரையோரம்
நாம் களித்த மாலைகள்
பொய்யற்றவை

ஒவ்வொரு வினாடியும்
அவனை
வெறுக்கக் காரணம் தேடும் என் மனது
அவனிடமே கேட்டும் பார்த்தேன்
என்னை வெறுக்கத்
தனக்கான காரணத்தை என்னிடம்
அவன் கேட்டான்

தனிமையின் வலி
இழப்பு
எனக்கும் அவனுக்கும்

காதலிப்பதிலும் சுகம்
காதலிக்கப் படுவது
அவனுக்கும் அகுதே.

**பின்னட்டை:**
புகைப்படம்: S. F. T. குணாளன்
நன்றி: யுகம் மாறும் (தமிழர் நலன்புரிச்சங்கம், ஐ.இ., 1999)

**முன்னட்டை:**
27வது இலக்கியச்சந்திப்பு, பிரான்ஸ் (டிசம்பர் 2000)
புகைப்படங்கள்: அசோக்

**VOL. III N° 6 - ISSUE 16 (November- December 2000)** இதழ், பல சிரமங்களுக்கு மத்தியில் கொண்டு வருவதற்காக எடுத்த முயற்சிகள் கருகிப் போயிற்று. அந்த இதழ் வரமுடியாமற் போனதால் காலக்கிரமத்தில் அடுத்த இதழைக் கொண்டு வருவதற்கான சகல சிரமங்களுடனும் இந்த இதழ் உங்கள் கைகளில். இப்படியான இடையூறுகள், இடையீடுகள் நமது தொடர்ந்த பயணத்தில் இல்லாமல் இருக்கும் என உங்களுடன் இணைந்து நாமும் நம்புகிறோம். 2001ம் ஆண்டிற்கான முதலாவது இதழுடன் தொடருகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 27 வது இலக்கியச் சந்திப்பு

பத்து வருடங்களுக்கும் மேலாக இலக்கியச்சந்திப்பு ஓர் இலக்கில்லாப் பயணத்தை நடத்தி வந்திருந்தாலும், அது தன் பாதையைச் செப்பனிட்டு அகலித்து வருகிறது. புகலிடத்தின் சமகால இலக்கியம் அமைப்பவர்களில் ஒரு சிலர் தம் புகழ் விருப்பப் பொய்களை எவ்வளவுதான் இப்பாதையில் விதைத்தாலும் இலக்கியச் சந்திப்பு என்னவோ அவற்றை இலகுவாகக் கடந்து விடும் வளமும் வலுவும் பெற்று வருகிறது.

இறுதியாக, பிரான்ஸில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பு செய்த மிக முக்கியமான விடயம், ஈழத்து இலக்கியத்தின் ஒரு பாதையாகத் திகழும் டொமினிக் ஜீவா அவர்களை அழைத்து புகலிட இலக்கியப் பரிவர்த்தனையோடு பகிர்ந்து கொண்டதுதான்.

தலித்தியவாதியும், மார்க்சியவாதியுமான டொமினிக் ஜீவா அவர்களை இலக்கியச்சந்திப்பு அழைத்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. இலக்கியச்சந்திப்பு அதன் ஆரம்பம் முதலே அனைத்து ஒடுக்குமுறைக்கும் எதிராக மனித உரிமைகள் சார்ந்து செயற்பட்டு வருகிறது.

டொமினிக் ஜீவா, 50 ஆண்டுகளுக்கு மேலான இடதுசாரி சிந்தனைகளினூடு சிறுகதை புனைவிலக்கியத்திற்குள் புகுந்தவர். இன்னும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு அங்கத்தவராகக் கடமையாற்றுபவர். பிறப்பாலும் இவர் ஓர் தலித் ஆகையால் சைவ, வேளாள, யாழ் மேலாதிக்க எதிர்ப்புகளை எதிர்கொண்டு செயற்படவேண்டியவராக இருந்தார். வெறுமனே பத்திரிகைகள், சஞ்சிகைகளில் தனியே எழுதிக் கொண்டிருப்பதை விடுத்து தாம் கொண்ட கருத்துநிலைகளில் இருந்து தாம் சார்ந்த வர்க்கசக்திகளை ஒழுங்கமைக்கவும் நெறிப்படுத்தவும் வேண்டும் என்பதற்கும் அப்பால் தலித்துக்களாகவும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தவர்களாகிய நாம் நமது எழுத்துக்களுக்கு அடுத்தவர் தயவை வேண்டாத ஓர் சூழலை உருவாக்கவேண்டும் என எண்ணினார்; உருவாக்கினார்.

'மல்லிகை' மாத இதழ் 1966ம் ஆண்டு ஆகஸ்டில் உருவாகியது. இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கும் 'மல்லிகை'யில் தொடர்ந்து ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் செயற்பட்டு வரும் டொமினிக் ஜீவா அவர்கள் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுப் போராடினார். சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட எழுத்தாளர்களுக்கும் தொழிலாள, விவசாய வர்க்கசக்திகளுக்கும் முன்னுரிமை கொடுத்து 'மல்லிகை'யை இன்றளவும் நடத்தி வருகிறார். அவர் என்றும் கட்சி பேதம் பாராட்டியவரல்ல. எவர் எங்கிருந்தாலும் மனித சமூக விடுதலையின்பால் உண்மையாக ஊழியம் செய்வோரை இனம் கண்டு அவர்கட்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்தார்.

'மல்லிகை' சஞ்சிகைக்கூடாக சாதி ஒடுக்குமுறை எதிர்ப்பு, வர்க்க ஒடுக்குமுறை எதிர்ப்பு, நச்சு இலக்கிய எதிர்ப்பு எனப் போராடி வந்த இவர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். அதற்கூடாக சிங்கள-தமிழ் இலக்கிய புத்திஜீவிகளுக்கிடையில் இணைப்பு, ஈழ-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய முற்போக்கு இலக்கியப் பரிவர்த்தனை என இந்திய, இலங்கை சார்ந்த சமூக எழுத்து இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்து உழைத்து வருகிறார்.

தற்போது புலம்பெயர்ந்த ஈழத்தவர்களின் வாழ்வு, இலக்கிய முயற்சிகள் என்பவற்றோடு அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் டொமினிக் ஜீவா அவர்களை இலக்கியச்சந்திப்பு அழைத்து அவர் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டது இலக்கியச்சந்திப்பு வரலாற்றில் மிகவும் முக்கியமான விடயம்.

இலக்கியச்சந்திப்பில் டொமினிக் ஜீவாவின் உரை மிகவும் சிறப்பாக இருந்தது. ஒன்றரை மணி நேரங்களாக உரையாற்றிய அவர் தமது பல்வேறுபட்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். அவர் எதிர்கொள்ள நேர்ந்த இன்னல்களையும் அவை ஒவ்வொன்றையும் எப்படிக் கடக்க நேர்ந்தது என்பதையும் அவற்றிற்குரிய உணர்வுகளோடு உயிரோட்டமாகத் தந்தார்.

100 பேர்வரையில் கலந்து கொண்டிருந்த, அனைவர் கண்களிலும் அவர் உரை கண்ணீரை வரவழைத்ததை வேறு எங்கும் பார்த்தல் அரிது. அவர் உரை முடிந்தபோது பங்குபற்றிய அனைவரும் எழுந்து நின்று 10நிமிடங்களுக்கும் மேலாக கரகோஷம் செய்து அவரைக் கௌரவித்தார்கள்.

இலக்கியச்சந்திப்பிற்கு பிரான்ஸ் வந்திருந்த டொமினிக் ஜீவா அவர்கள் பேர்லினிலும் (ஜேர்மனி), இலண்டன் நகரிலும் பல அரங்குகளில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

டொமினிக் ஜீவாவை ஐரோப்பாவிற்கு அழைப்பதற்கு பலர் உதவி புரிந்து இருந்தாலும் பல இன்னல்களுக்கும் மத்தியில் அவரை அழைத்தே தீரவேண்டும் என முயற்சிகளை மேற்கொண்ட இலக்கியச்சந்திப்பு செயற்குழுவினர்களான புஸ்பராஜா, அசோக், லக்ஷ்மி, கலைச்செல்வன் ஆகியோர் முக்கியமானவர்கள்.
தொடர்ந்தும் இலக்கியச்சந்திப்பு தனது பாதையை அகலித்து செப்பனிடும் என எதிர்பார்க்கலாம்.

*உயிர்நிழல்*

**அன்புடன்**
**நண்பர்களுக்கு**



# செல்வியின் நினைவுப் பதிவு

*...மானுட நேயம் நோக்கிய வாழ்வை*
*படைத்திட முயல்கையில் எத்தனை தடைகள்*
*கொடூரம் மிகுந்த விழிகள் தொட*
*வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும்*
*மனிதம் மறந்து சவமாய் கிடந்து*
*வாழ்தலில் எனக்கு பிரியமேயில்லை....*
-செல்வி

செல்வியின் (செல்வநிதி - தியாகராஜா) நினைவாய் அவரது பன்முக ஆளுமைகளையும், சிந்தனைகளையும் பதிவு செய்ய விரும்புகிறோம். செல்வியினால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், தினக்குறிப்புகள் மற்றும் அவரின் ஓவியங்கள், அவர் எடுத்த புகைப்படங்கள், அவரது புகைப் படங்கள், அவரது ஏனைய எழுத்துப் பிரதிகள் தங்களிடம் இருப்பின் அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.
மூலப்பிரதிகள் தங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதி அளிக்கிறோம். செல்வி பற்றிய நினைவுகளையும், உங்கள் படைப்பு களையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு:
செல்வி படைப்புகள் தொகுப்பு
**UYIRNIZHAL**
**EXIL, 27 Rue Jean Moulin**
**92400 Courbevoie, FRANCE.**
**e-mail: EXILFR@aol.com**

இத்தொகுப்பிற்கான விடயங்களை இவ்வருட இறுதிக்குள் அனுப்பி வைத்து உதவும்படி வேண்டிக் கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டொமினிக் ஜீவாவுடன்

## ஒரு செவ்வி

**இரண்டு மூன்று வருடத்திலேயே சிறுபத்திரிகைகளினுடைய வாழ்க்கைச்சூழல் முடிந்து போகிறது. ஆனால் நீங்கள் 30 வருடமாக இந்த மல்லிகையை நடாத்தி வருகிறீர்கள். இந்த 30 வருடமாக இந்த சஞ்சிகையை நடாத்துவதற்கு உங்களுக்கு பின்புலமாக இருந்த அடிப்படைக் காரணங்கள், இவ்வளவு காலம் கொண்டு நடாத்துவதற்குரிய இந்தப் பலம் எப்படிக் கிடைத்தது என்று சொல்ல முடியுமா?**

எனக்கே அது அதிசயம் தான். ஏனென்றால், பெரும் பெரும் என்னைவிட அற்புதமான, பிரமாண்டமான, மக்கள் செல்வாக்குள்ள ஆறுகோடி தமிழர்களைக் கொண்ட தமிழ்நாட்டில் கூட பெரும் எழுத்தாளர்கள் என்று சொல்லக்கூடிய ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன், ரகுநாதன், சுந்தரராமசாமி, க.ந.சு. போன்றவர்கள், குறிப்பிட்ட காலம்தான் சிற்றிதழ்களை நடாத்தி இருக்கின்றார்கள். அது தான் மரபு. அதாவது, சிற்றிலக்கிய ஏடென்றால் 5 வருடம். இது எப்படி என்னாலை அந்த 5 வருடத்தை மீறி, 35 வருடத்திற்கு வர முடிந்தது என்று நானும் ஆழமாக யோசிக்கிறனான் தான்; இதற்கு என்ன காரணம் எண்டு. நான் நினைக்கிறேன் நான் இதை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டன் என்று.

**செவ்வி கண்டவர்: அசோக்**
**தொகுப்பு: பிரியதர்ஷினி**



ஏன், என்னத்துக்கு ஒரு பத்திரிகை தோல்வி அடையுது. பொருளாதாரமா? நானும் அவ்வளவு பெரிய வசதி படைச்சவனோ, அல்லது இலக்கியத்துக்கு பணத்தைச் செலவளிக்க வேணுமெண்ட அந்த நோக்கமோ எனக்கு இல்லை. அப்ப இதற்கு என்ன காரணம் அப்படியெண்டு நான் யோசித்தால், நான் ஆரம்பத்திலேயே இரண்டு பேரை முன்னுதாரணமாக கொண்டனான். ஒன்று, எஸ். எஸ். வாசன். இன்னொன்று பெரியார். எஸ்.எஸ்.வாசன் அப்ப ஒன்றரை அணா, அதாவது ஒன்றரைச் சதம். அது தான் அவரின்ரை, அந்தப் புத்தகத்தின்ர விலை. அப்ப அவர் அங்கை ஒரு ஆய்வு செய்து, சும்மா இருக்கிற பெண்களில் குறிப்பாக மயிலாப்பூரைச் சுத்தி இருக்கிற பிராமணப் பெண்கள். படிப்பில்லாமல் பொழுது போகாமல் இருக்கிறவர்களை நோக்கத்தில கொண்டு மயிலாப்பூரை மையமாக வைத்துத்தான் முதற் பத்திரிகைகளைக் கொண்டு வந்தார். பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக அது வேரூன்றத் தொடங்கிவிட்டது. சூழ்நிலை, அரசியல் பின்னணி, சுதந்திரப் போராட்டம் அப்பிடியாக. பெரியார் மிக வலிமையாக தன்னுடைய 'குடியரசை' நடத்தினதால அதற்குச் சரியான எதிர்ப்பு இருந்தது. அப்ப அவர் என்ன செய்தார் என்றால், தமிழ்நாட்டில இருக்கிற சலூன் கடைகள் எல்லாத்தையும் 'கவர்' பண்ணினார். நம்ம புள்ளையள், நம்ம புள்ளையள் எண்டு. அதில இரண்டு டெக்னிக் இருக்கு. சலூனில இருக்கிற வளம் என்னென்றால், எல்லோரும் பத்திரிகையைப் பார்ப்பான். ஒரு நாளைக்கு முப்பது பேர் வந்தால் குறைஞ்சது இருபது பேரின்ர கண்ணிலையாவது படும். அப்ப இவர், மெதுவா தன்னுடைய போராட்டங்கள். 'குடியரசு', 'விடுதலை' இதுகளை வைச்சு கொஞ்சம் பரவல்படுத்தி வர அவருக்கு ஒரு தளமாகப் போச்சு இந்த சலூன்கள்.

பெரியார் சலூனை வைச்சிருந்தார். அப்ப எனக்கு படார் எண்டு ஒரு யோசனை வந்திது. அட! அவர் சலூனை வைச்சு யோசிக்கிறார். நான் அந்த அபிமானத்தை வைச்சு யோசிச்சால் என்ன எண்டு. இதற்காக வேண்டி நான் கொழும்பு வவுனியா அங்கை இங்கையெல்லாமாச் சேர்ந்து உள்ள முகவரிகளை எடுத்து ஆரம்பத்திலை பத்திரிகையை அனுப்பிறது. அப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆனால், தமிழ்நாட்டு அல்லது கேரள அல்லது ஆந்திர, மராட்டியத் தலித்துக் களும் நாங்களும் ஒன்றல்ல. அதேமாதிரி இங்குள்ள பிராமணன் அங்குள்ள பிராமணன் அல்ல. இங்கே ஆதிக்க சக்திகள் யார் என்றால் சைவ வேளாளர். எனவே, எங்கடை கோஷம் சைவ வேளாளனுக்கு எதிராக வைக்கப்பட வேணுமே தவிர சும்மா இங்கே இருக்கிற அப்பாவிப் பிராமணனுக்கெதிராக வைக்கிறதிலை இல்லை.**

மல்லிகை முப்பது சதம். ஆனால், காசு வருகுதோ வரவில்லையோ அனுப்பி விடுவன். அதிலையும் நான் கொழும்புக்கு ஒரு மாதத்தில ஒருக்கால் போவன். அப்ப போனால் கொண்டு போய்க் குடுக்கிறது. பாவம், இவன் வந்து ஏதோ செய்யிறான் எண்டு காசு ஒருவேளை தருவான் அல்லது இரண்டு மாதத்துக்கு ஒருக்கா போனா ஏதாவது தருவான். ஆனால், எனக்கு காசல்ல, பிரச்சாரம் தான் முக்கியம். அப்படி அப்படிக் கொண்டு வர, மல்லிகை கொஞ்சம் சின்னப் பத்திரிகை. ஆனால், அந்த பேர் எழும்பிற்றுது. மல்லிகையின்ர வெற்றிக்குக் காரணம் என்னெண்டா மல்லிகை வித்ததல்ல, மல்லிகையின்ர பேர்.

இப்ப ஒரு வரலாறு எழுதிக் கொண்டிருக்கிறன். கொஞ்சம் கொஞ்சமா பெயர் வந்தவுடனை இரண்டு விசயத்தை நான் கையாண்டன். ஒன்று படிச்சவனுக்கு பத்திரிகை நடத்திறது எண்டால் யாழ்ப்பாணத்துக்குள்ளதான் நடத்தலாம். யாழ்ப்பாணத்தான் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டான், சாதி பார்ப்பான். நான் என்னத்தைத்தான் அற்புதமாக நடத்தினாலும் அவன் இதை ஒரு பத்திரிகை எண்டு சொல்ல மாட்டான். அப்ப இதுக்கு மாற்று வழி என்ன? யாழ்ப்பாணத்தான் அல்லாதவர்களிட்டைப் போக வேணும். அப்ப முஸ்லிம்களை 'கவர்' பண்ணினனான். அப்ப என்னென்றால் பஹ்டீன் முகமத்தின் அரசியல். அந்த நேரம் அவர் கல்வி அமைச்சராக இருந்ததால ஒரு புதிய சமூகம் வெடிச்சுக் கொண்டு வந்துது. அப்ப நான் அதை விளங்கிக் கொண்டன். வெறும் வர்த்தகச் சமூகமாக இருக்கிற ஒரு சமூகம் ஒரு புதிய பாய்ச்சல் பாயப் போகுது என்று.

அப்ப நான் அதை வளைச்சுப் பிடிச்சன். எல்லாப் பகுதிகளிலையும் இருந்து மல்லிகைக்கு முஸ்லிம்கள் எழுதுறாங்கள் என்றதை. மற்றது யாழ்ப்பாணத்தான் என்ற அந்தத் திமிர் அவனின்ர ஒவ்வொரு படைப்பிலையும் இருக்கும். அது நாவல் எழுதினாலும் சரி, சிறுகதை எழுதினாலும் சரி, சிறு பத்திரிகை எழுதினாலும் சரி. அப்ப நான் முதல் முதலாக யோசிச்சது இது யாழ்ப்பாணப் பத்திரிகை அல்ல. யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஆனால் யாழ்ப்பாணத்தானின் பத்திரிகை அல்ல. அதால என்ன நடந்துது, கனபேர் என்னை நம்பினான். இவன் சொல்லுறது சரி. நிச்சயமாக. அந்த சின்னத்தனமான குணங்கள் இல்லாமல் இவன், நம்பகத்தன்மை உடையவன் என்று. எனக்கு அந்த நம்பகத்தன்மை கிடைச்சது ஒரு பெரிய பெறுபேறாப் போச்சுது. மூணாவது, நான் பத்திரிகை அச்சடிச்சு, அச்சடிச்ச பின்னேரமே வீதிவீதியாக கொண்டு போய் விற்கத் தொடங்குவன். இது உலக வரலாற்றிலை எந்தப் பத்திரிகைக்காரனும் செய்ததில்லை. அது சோசலிச நாடாய் இருக்கட்டும் அல்லது அமெரிக்காவாக இருக்கட்டும், ஒரு ஆசிரியனே அச்சடிச்சுப் போட்டு தெருத்தெருவா வித்தது நான் தான் வரலாற்றிலை முதன்முதல் செய்த காரியம்.

நான் ஒரு சமூகவிஞ்ஞானியாக அப்ப இலக்கியத்தைப் பார்த்தன். எழுத்தாளனாகப் பார்த்ததை விட ஒரு 'மாஸ் சைக்கோலஜி' (Mass Psycology) அதைத்தான் பார்த்தன். இந்த மக்கள் என்ன எதிர் பார்க்கிறாங்கள்; சமூகம் எங்கே மாறிக் கொண்டிருக்கு; இந்த சமூகத்துக்கு என்ன தேவை; இந்தச் சமூகம் இதை விரும்புமா? யாழ்ப்பாணத்தான் இல்லை என்கிறதும் யாழ்ப்பாணத்தானின்ர கல்வித் தகைமையை ஏற்றுக் கொண்டதும், அதே நேரத்திலை நான் அதிகம் படிக்காதவன் என்கிறதும் எனக்கொரு வாய்ப்பாப் போச்சு. படிச்சிருந்தால் எனக்கும் யாழ்ப்பாணத்தான்ர அத்தனை கெட்ட குணங்களும் இருந்திருக்கும்.

நானும் இந்தச் சம்பவங்களை வைச்சு வைச்சு வர, கொஞ்சம் கொஞ்சமா மல்லிகையிலை எழுதிறது ஒரு மதிப்பெண்டு வந்திட்டுது. பேராசிரியர்கள் அவை இவையெல்லாம் மல்லிகைக்கு எழுத வேண்டிய தேவை வந்திட்டுது. இவ்வளவுக்கும் ஒரு சமூகப்போராட்டம் நடத்திக்கொண்டிருந்த னாங்கள்.

உலக வரலாற்றிலை இன்னுமொன்று பாருங்கோ, பெரிய அதிசயம் என்னென்றால், இதை என்னுடைய மரணத்திற்குப் பின்தான் இதையெல்லாம் அங்கு சொல்ல வேணும். சலூனுக்குள்ளை தொழில் செய்து கொண்டு அதுக்குப் பின்னாலேயே ஒரு பதிப்பகம் வைச்சு. அதுக்குள்ளை அச்சடிச்சு, 60 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்று அந்த ஜோசப் சலூனின்ர பெயரைப் போட்டு, அந்த மல்லிகையில பேராசிரியர் அல்லது 'வைஸ் சான்சிலர்' (Vice Chancellor) சு.வித்தியானந்தம், கைலாசபதி, சிவத்தம்பி, முருகையன் இவர்களை எழுத வைச்சு.... இதெல்லாம் உலக வரலாற்றிலை இல்லை. அது ஜப்பானாக இருக்கட்டும், முன்னேறிய நாடுகளாக இருக்கட்டும், அமெரிக்காவாக இருக்கட்டும் அல்லது இந்தியாவாக இருக்கட்டும், இப்பிடியொரு வரலாறு யாழ்ப்பாணத்திலை மாத்திரம் தான் நடந்திருக்கு.

**உங்களிற்கு உதவியாக இருந்தது, உங்களுடைய தத்துவார்த்தப் பின்னணியாக இருக்குமா? நீங்கள் ஒரு இடதுசாரி தத்துவப் பின்னணியில் வந்ததும் ஒரு காரணமாக இருக்குமா? இப்படியான உங்களுடைய பரவலான....**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை. அதிலை ஒரு சங்கடம் இருக்கு. தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியைத்தான் அதிகம் நம்பினார்கள். ஆனபடியால் அரசியல் காரணம் என்று நான் சொல்லமாட்டன். அப்பிடியென்றால் தமிழரசுக்கட்சிப் பத்திரிகைதானே ஒரு சிறந்ததாய் வந்திருக்கவேணும். ஆனால், எங்களை. அதாவது கொம்யூனிஸ்ட்டுகளையோ எங்களுடைய கருத்துக்களையோ வெறுக்கிறவங்கள், இலக்கியத்திலை எங்களை நேசிச்சாங்கள். அது தான் எங்களுக்குக் கிடைச்ச ஒரு வாய்ப்பு. தமிழரசுக்கட்சியை நேசிச்சவன், இலக்கியத்திலை அவனை வெறுத்தான். மாற்றாகப் பார்த்தான். உன்னிலை வேலை இல்லையடா என்றான். என்னிலை வேலையில்லையெண்டா நீ எழுதடாப்பா எண்டான்.

இது வலு நுணுக்கமான ஒரு ஆய்வு. அதை வடிவாகச் சொன்னால்தான் அந்த நோக்கம் விளங்கும். இவ்வளவுக்கும் சத்தியாக்கிரகம் நடந்த பின்னணியிலை தான் அதை விசாரிக்க வேண்டும். 60ம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடந்தது. அந்த 60ம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசை நான்தான் முதல் முதலிலை பெறுகிறன். அந்த சத்தியாக்கிரகம் நடந்தபோது, 13 தொகுதிகள் இருந்த காலத்திலை, நான்தான் ஒரு இலக்கியப் பத்திரிகை நடத்திறன். அப்ப அரசியலில



கொண்டு திரிஞ்சு வித்ததால சமூகத்தில என்னுடைய படிமானம்.

இவன் வெட்கம், ரோஷம், மானம் ஒண்டும் இல்லாமல் தமிழுக்கு ஏதாவது செய்யக் கூடியவன். இவன் செய்வான். எஞ்சினை இயக்கிறத்துக்குத் தான் சக்தி தேவை. எஞ்சின் இயங்கத் தொடங்கிட்டா அது தானா இழுத்துக் கொண்டு போகும். ஒரு குறிப்பிட்ட காலத்திலை மட்டும் மாத்திரம் தான் நான் கஸ்டப்பட்டது. அதுக்குப் பிறகு எனக்குப் பிரச்சினையே இல்லை.

**தலித்தியம் என்கிறது சாதி மாத்திரமல்ல. அந்தச் சாதியிலை பிறந்தவன்தான் தலித்தியம் பேசவேண்டும் என்பதல்ல. ஆனால், முழுதாய் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட பக்கத்திலை நிற்கிறவனும் தெளிவான வர்க்கப் பார்வையோடை பார்க்கிறவனும்தான் அதைச் சொல்லலாம் சொல்லமுடியும்.**

அவங்களுக்குப் பின்னாலேயும் இலக்கியத்தில எங்களுக்குப் பின்னாலேயும் ஒரு அணி சேர்ந்தது. இந்த அணி சேர்றதுக்கு என்ன காரணம்; என்ன பின்னணி என்பதை நான் கவனத்தில எடுத்துக் கொண்டன். மற்றது, நான் இடதுசாரியாக இருந்தாலும் நான் இதை யார் மேலேயும் திணிக்கேல்லை.

கருத்துக்களைத் திணிக்கவோ அல்லது நான் சொல்வதுதான் சரி என்று வாதிக்கவோ அல்லது நீ சொல்வதை நான் போட மாட்டேன் என்று மறுக்கிறதோ இல்லை. உனக்கு ஒரு கருத்திருந்தால் நீ அதை வை. எனக்கொரு கருத்து இருந்துதென்றால் நான் வைக்கிறன். அதை வாசகன் தீர்மானிக்கட்டும். ஒரு குறுகிய கருத்தாக இல்லாமல் மல்லிகைக்கு ஒரு பரந்த தளத்தை உருவாக்கிறேன். அதனாலை மல்லிகைக்கு எழுதுகிறவன் எல்லாம் கொம்யூனிஸ்ட்டுகளோ அல்லது என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுகிறவனோ அல்ல. இதை இந்தப் பின்னணியில வைச்சுப் பார்க்கேக்க தான், நான் நினைக்கிறன் என்னுடைய அளவீடுதான் வெற்றி பெற்றது என்று.

முதலாவது, என்னுடைய கருத்துக் கணிப்பு. இரண்டாவது, என்னுடைய அர்ப்பணிப்பு. இப்பிடி ஒருவனும் அர்ப்பணிச்சு உழைக்க மாட்டான். மூணாவது, நான் தெருத்தெருவாக மல்லிகை

## சாதிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களில், மல்லிகையின் பங்களிப்பு எப்படி இருந்தது?

இரண்டுதான் எனக்கு முக்கியமானது. ஒன்று, இடதுசாரி இயக்கத்தின்ர இளைஞர் தலைமுறையை இலக்கியபூர்வமாகக் கட்டிக் காக்கிறது. இரண்டாவது, ஒடுக்கப்பட்ட சமூகத்தினுடைய உயிராக மல்லிகை இயங்கினது. சிறுபான்மைத் தமிழர் மகாசபை, மாவிட்டபுரப் போராட்டம் அதெல்லாம் கொடி கட்டிப் பறந்த நேரம். அப்ப அவனுக்கு ரசனை இருக்கோ இல்லையோ, எங்கட ஜீவாவின்ர புத்தகம் வாங்கிறன் எண்டு வாங்குவான்கள். அந்த நேரத்திலை தாழ்த்தப்பட்ட மக்கள் அவ்வளவு படிக்கக் கூட இல்லை. ஆனா என்கிட்ட வாங்க வேணும், ஏனென்றால், அவன் எங்கட பெடியன் என்று. இதிலை இரண்டு மூன்று அம்சங்களை நாங்கள் இணைத்துக் கொண்டு போனபடியாத்தான் இப்ப நீண்ட காலத்துக்குப் பிறகு இருந்து சிந்திக்கேக்கை, நான் அதை கணக்கில் எடுத்து இருக்கிறன் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரியுது. இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலை சமூகமாற்றத்திலை ஏற்படக்கூடிய ஒவ்வொரு சம்பவத்தையும் நான் இலக்கியமாக்கி இருக்கிறன். இந்த இலக்கியம் ஆக்க ஆக்க, அது மல்லிகைக்கு பசளையாக வந்திருக்கு. இப்படிப் பசளையாக வரத்தான் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அடே! நான் இவ்வளவு காலம் இதுகளை எல்லாம் எப்படி செய்து இருக்கிறன். ஆனால், செய்யேக்கை எனக்கு அந்த அறிவு இல்லை. செய்யேக்கை செயல் மாத்திரம் தான். பின்னுக்குத்தான் நான் அதைப் பொருத்திப் பார்க்கேக்கை எனக்கு இப்பிடி ஒரு எண்ணம் வருகுது. 35 வருடம் என்பது ஒரு பொடியன் பிறந்து வளர்ந்து கலியாணம் கட்டி அந்தப் பொடியனுக்கும் 15 வயது அல்லது 14 வயது வரக்கூடியளவுக்கு செய்திருக்கிறன். அது ஒரு நிச்சயமாக சிற்றிலக்கிய ஏட்டினுடைய வரலாறு அல்ல.

**யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மத்தியில் இடதுசாரிக் கட்சி அரசியலைக் கொண்டு சென்றதில் மல்லிகைக்கு ஒரு பங்கு இருக்குத்தானே?**

அதுதான், அதுதான். அது என்ன பிரச்சினை என்றால் அவங்களையே இலக்கியத்துக்கு இடதுசாரிகள் என்று சொல்ல வைச்ச பெருமை மல்லிகைக்கு வழங்கப்பட்டிருக்கு. அது ஒரு முக்கியமான காரணம்.

**மற்றும், உதாரணமாக இப்போது தலித்தியம் என்ற போக்கு இந்தியாவில் இயல்பாக வளர்ந்து கொண்டு வருகிறது. இது யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ் பேசுகிறவர்கள் என்று கருதப்படுகின்ற ஒடுக்கப்பட்டவர்களுக்கான தலித்திய சூழலுக்கும் இந்திய தலித்திய சூழலுக்கும் இடையிலான முரண்பாடுகள்பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

எங்களுடைய தலித்தியம், வார்த்தை தலித்தியமே தவிர அடக்குமுறைத் தலித்தியம் அல்ல. அதாவது, நாங்கள் ஒடுக்கப்படுகிறோம் என்று சொல்கிறோமே தவிர இன்றைக்கு அதைச் சரியான வரைவிலக்கணம் சொல்லிச் சொல்ல இயலாது. அதாவது, எந்த வழியில் ஒடுக்கப்படுகிறோம், என்ன மாதிரியாக ஒடுக்கப்படுகிறோம் என்று.

சில வரையறைதான் எங்களுக்கு இருக்கு. அதாவது முந்தி கோவிலுக்குப் போகேக்கை இருந்த பிரச்சினை, தேனீர்க்கடைப் போராட்டத்துக்கு முந்தி இருந்த பிரச்சினை இவைகளெல்லாம் இன்றைக்கு வேறை உருவம் எடுத்திட்டுது. ஆனால், ஒட்டுமொத்தமாச் சமூகநிலையில நின்றுதான் நாங்கள் தலித்தியம் என்று சொல்கிறோமே தவிர, ஆனால் உண்மையிலேயே தலித்தியத்தின்ர அந்த நச்சுவேர் இல்லை. ஆனால், இந்தியா பயங்கரம். அதனாலதான் இந்தியாவிலை கண்டவனெல்லாம் அதைக் கையாளுகிறான். தலித் என்று சொல்லி ஆரோக்கியமாக யோசிக்கிறவன் கூட, எங்க போய் முடியிறாங்கள் எண்டால் மற்றவனோட தேர்தலுக்கும் அதுக்கும் இதுக்கும் பேரம் பேசுகிறவனாக. பெரியார் ஒருவர்தான் பேரம் பேசாதவர்.

ஆனால், பெரியாரைப் பற்றியும் எனக்கு அறிவு பூர்வமா சில விமர்சனங்கள் இருக்கு. பெரியார் கூட தலித்துகளைப் பற்றி கருத்துச் சொன்னாரே தவிர தலித்துகளை வளர்க்கவில்லை. இடைப்பட்ட சாதியை வளர்த்தாரே தவிர ஒடுக்கப்பட்ட சாதியையோ, தலைவர்களையோ வளர்க்கவில்லை. இதை ரொம்பப் புத்திசாலித்தனமாக செய்திருக்கிறார். போராட்டம் பிராமணனுக்கு எதிராக என்று சொல்லிக் கொண்டே ஒரு புதிய சாதியை உருவாக்கி இருக்கிறார். பெரியாரின் நேர்மையில எனக்கு சந்தேகம் இல்லை. இதை அவர் வேணும் என்று செய்தார் என்று நான் சொல்லேல்லை. ஆனால், அந்தப் பாதை அப்படித்தான் போயிருக்கு. அதனாலைதான் அப்பீல் வழங்கப்பட்ட கருணாநிதி இன்றைக்குப் போய் பி.ஜே.பி.யோடு சமரசம் பேசிக்கொண்டுதான் ஆளுறதுக்காக வேண்டி இருக்குது. அது அப்பிடித்தான் சறுகும். இந்த நிலையிலை பார்க்கேக்க, எங்கட தலித்தியம் இடதுசாரி இயக்கங்களாலை கிட்டத்தட்ட 60, 70 வருஷம் தலைமை தாங்கப்பட்டது. இந்திய தலித்தியம் அம்பேக்கராலை தலைமை தாங்கப்பட்டாலும் காலத்திற்கு காலம் பல்வேறு விதமான தலைவர்கள் வந்து எல்லாரும் ஒவ்வொரு ஆளும் கட்சிகளின்ர சமரசப் பேச்சாளராக இருந்தினமே தவிர அந்த முழுச் சக்தியையும் திரட்டி நிமிர்ந்து நிற்கிறத்தில வந்து, மராட்டியத்தில வந்த தலித்தியமோ அல்லது கர்நாடகத்தில இருந்த தலித்தியமோ தமிழ்நாட்டுத் தலித்தியம் இல்லை. தலித்தியம் எண்டு சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வருகிற கட்சிகளோட பேரம் பேசித் தலைவர்கள் பதவிக்கு

> ஏனென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின்ர வர்க்கக் குணாம்சங்களைப் பார்க்காமல், ஒடுக்கப்பட்ட மக்களின்ர சாதிக் குணாம்சங்களைப் பார்த்து வந்தால் அந்தப் போராட்டம் அப்படித்தான் வரும். அவனவன் சாதியைச் சொல்லிக் கொண்டு பேரம் பேசிக் கொண்டு காலத்திற்கு காலம் ஓடுவான். வர்க்கக் குணாம்சம் உள்ளவன் தலித்தியம் பேசினாலும் அவனுக்கு வர்க்க விடுதலைதான் முக்கியமே தவிர,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கருத்துக்களைத் திணிக்கவோ அல்லது நான் சொல்வதுதான் சரி என்று வாதிக்கவோ அல்லது நீ சொல்வதை நான் போட மாட்டேன் என்று மறுக்கிறதோ இல்லை. உனக்கு ஒரு கருத்திருந்தால் நீ அதை வை. எனக்கொரு கருத்து இருந்துதென்றால் நான் வைக்கிறன். அதை வாசகன் தீர்மானிக்கட்டும்.**

வாறது. அதுதான் கிருஷ்ணசாமி போன்றவர்கள். அது அப்படித்தான் வரும்.

ஏனென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின்ர வர்க்கக் குணாம்சங்களைப் பார்க்காமல், ஒடுக்கப்பட்ட மக்களின்ர சாதிக் குணாம்சங்களைப் பார்த்து வந்தால் அந்தப் போராட்டம் அப்படித்தான் வரும். அவனவன் சாதியைச் சொல்லிக் கொண்டு பேரம் பேசிக் கொண்டு காலத்திற்கு காலம் ஓடுவான். வர்க்கக் குணாம்சம் உள்ளவன் தலித்தியம் பேசினாலும் அவனுக்கு வர்க்க விடுதலைதான் முக்கியமே தவிர, சாதி விடுதலை அவனுக்குப் பிரச்சினை அல்ல. வர்க்க விடுதலையிலை சாதி இணையுது. ஆனால், சாதிப் போராட்டத்திலை வர்க்கம் இருக்கு. அவன் மூலம் வர்க்கப் போராட்டமே தவிர இந்தச் சாதிகள் அது இது என்று போராடி சாதிகளுக்குப் பிரச்சினை தீர்க்கிறது அல்ல. ஏனென்றால், அவன் அப்பிடிச் சொன்னான் என்றால் அவனும் தென்னிந்திய தலித்துகளாகத்தான் மாறிவிடுவான்.

எங்களுக்கு அப்பிடி ஒரு வரலாறு இல்லை. ஆனபடியால்தான் நானோ, டானியலோ முழு மக்களாலேயும் அங்கீகரிக்கப்பட்டனாங்கள், நாங்கள் தலித்துக்களாக இருந்தாலும். மற்ற வளமாகப் பாருங்கோ, தலித் ஒருவன் அதாவது யாழ்ப்பாணத்துத் தலித் ஒருவன் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போராட்டம், தேனீர்க்கடை போராட்டம், சாதிப்போராட்டம் நடத்தேக்கை மல்லிகை ஆசிரியராக இருக்கிறான். மல்லிகையை யாழ்ப்பாணத்தான் வாங்கிறான். வித்தியானந்தன், கைலாசபதி எழுதுறான். பார்த்தீங்களா அந்த முரண்பாடு என்ன என்று? நாங்கள் சமூகப்போராட்டம் நடத்திக் கொண்டு, நான் என்னுடைய முகத்தைக் காட்டிக் கொண்டு, நானும் அதிலை ஒரு அங்கம் என்று சொல்லிக் கொண்டு, நானும் அந்தப் போராட்டத்தில இருந்து கொண்டு மல்லிகை நடத்திறன். என்னை எதிர்க்கிறான். மல்லிகையை ஏற்றுக் கொள்கிறான். இது ஒரு விசித்திரமாக இல்லையா? இது யாழ்ப்பாணத்தான்.

கொழும்பில நான் நடத்தியிருந்தா அது ஒரு பெரிய அதிசயம். எழுதுறான். என்ன சொன்னானோ அவன் சொன்ன அத்தனை பேரும் எழுதுறான். இது ஒரு வித்தியாசமான அணுகுமுறை. அது என்னென்றால், நான் தலித் போராட்டம் நடத்தேல்லை. சாதிப்போராட்டம் நடத்தேல்லை. நான் சாதிப் போராட்டத்தை ஒரு வர்க்கவிடுதலையில இருந்து பார்த்தேனே தவிர இந்தச் சாதியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இந்தச் சாதியெல்லாம் ஒன்று சேரவேண்டும் என்று நான் சொல்லேல்ல. இது ஆய்வுரீதியாக பார்க்க வேண்டிய விஷயங்கள். அதை நான் சொல்லேலாது. சொல்லக் கூடாது. அது பற்றிய சரியான மதிப்புலம் எனக்குத் தெரியாது. வேறு ஒருவன் பார்க்க வேணும். ஒரு ஆய்வு மாணவன் அல்லது பல்கலைக்கழக மாணவன் நோக்க வேண்டிய விஷயம், இந்த வரலாறு. 35 வருஷமாக நடந்த இந்த சாதியப் போராட்டங்கள், யாழ்ப்பாணத்திலை இருந்து இப்படி ஒரு பத்திரிகை வந்தது. அந்தப் பத்திரிகையில இன்ன இன்னார் எழுதிச்சினம். இந்த சமூக முரண்பாட்டுக்குள்ள மல்லிகை எப்படித் தாக்குப் பிடிச்சுது? ஏன் தாக்குப் பிடிச்சுது? இவ்வளவு காலமும் வந்ததின்ர பின்னணி என்ன? என்று என்னைவிட ஒரு வெகுதூரத்திலை நின்று அல்லது வேறை கோணத்திலை நின்று பார்க்கிறவனாலைதான் தெளிவாகச் சொல்ல முடியும். நான் சிந்திக்கிறேன். நான் அதை இப்பிடித்தான் இருக்கும் எண்டு சிந்திக்கிறேனே தவிர, நான் தெளிவாகச் சொல்ல மாட்டேன்.

**இந்த யாழ்ப்பாணச் சமூகத்தை பொறுத்தவரை இடதுசாரிகள் என்று சொல்லப்பட்ட முழுப்பேருமே வேளாள சமூகத்தில் இருந்து வந்த தலைவர்கள்தான் வழிநடத்தி இருக்கிறார்கள். ஆக, அந்த கொம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த முக்கிய தலைவர்கள் தலித் என்று சொல்லப்படுகின்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வந்திருந்தால் இன்றைக்கு ஓரளவு மாற்றம் கண்டிருக்க முடியும் தானே, இந்த ஒடுக்கப்பட்ட சமூகம்?**

இப்ப வரலாற்றிலை, யாழ்ப்பாண வரலாற்றிலை எம்.சி.சுப்பிரமணியம் என்ற ஒருவர் பாராளுமன்றத்தின்ரை விசேஷ பிரதிநிதியாக சேர்ந்தார். இது கொம்யூனிஸ்ட் கட்சி செய்த பெரிய வேலை என்று நான் நினைக்கிறேன். மற்றது யார் போராடினார்கள் என்கிறது அல்ல முக்கியம். என்ன வெற்றி பெற்றார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் என்பது தான் அங்கு முக்கியம். இப்ப மற்ற வளமாகப் பார்ப்போம். தாழ்த்தப்பட்டவன் தலைவனாக இருந்து கொண்டு எங்களைக் காட்டியும் குடுக்கலாம் தானே.

இப்ப நாங்கள் இடதுசாரி இயக்கம். இவ்வளவு சாதிவெறி, இவ்வளவு சாதிக்கொடுமை, இவைகளைக் கை நீட்டி அடிச்சு நொருக்கிற நாங்கள் அதே நேரத்திலை பொன்.கந்தையா, தர்மகுலசிங்கம், கார்த்திகேசன், வைத்திலிங்கம் என்று சொல்கிறமே அவங்களும் அவங்கள் தானே. ஏன் அவங்களுக்கு எங்களை உருவாக்க வேண்டிய இந்தத் தேவை வந்தது. தங்கடை ஆக்களை உருவாக்கியிருக்கலாம் இல்லையா நாங்கள் சொல்கிற இந்த வேளாளத் தலைவர்கள். செயலை வைத்துத்தான் அவனின்ர தன்மையைப் பார்க்க வேணுமே தவிர வெள்ளாளனாக இருக்கிறான் என்கிறதுக்காக நாங்கள் பார்க்க முடியாது. அவன்ர செயல் என்ன, யாருக்காகச் செய்தான், எந்த மக்களுக்காக வேண்டிப் பாடுபட்டான், எந்த மக்களின்ர கருத்துக்காக வேண்டிப் போராடினான் என்பதையே பார்க்க வேண்டும். அந்தப் போராட்டம் இல்லையென்றால் நாங்கள் வெற்றி பெற்றிருக்க மாட்டோம். அவங்களின் ஒத்துழைப்பும், பார்வையும் அந்நியமென்றால் நாங்கள் தென்னிந்திய தலித்துக்களாக போயிருப்போமே தவிர நாங்கள் வெற்றி பெற்றிருக்க மாட்டோம். தலைவர்மார் வந்திருப்பாங்கள். எல்லாம் சந்தர்ப்பவாத தலைவர்களாக இருந்திருப்பாங்கள்.



இனி ஒன்றைப் பார்த்தால் தெரியும். இந்த 30 வருஷத்துக்குள் எக்கச்சக்கமான ஆசிரியர்களை உருவாக்கி இருக்கிறோம். பல தனிப் பள்ளிக்கூடங்களை உருவாக்கி இருக்கிறோம். வெறும் சாதியைச் சொல்லிக் கொண்டு நாங்கள் இருக்கேல்லை. சாதியின்ர நச்சுவேர்களை அறுக்கிறதுக்கு என்னென்ன பொருளாதாரத் திட்டம், என்னென்ன உத்தியோகத்திட்டம் எல்லாம் செய்யவேணுமோ அதுகளைச் செய்திருக்கிறோம். இண்டைக்கு அவனின்ர பிள்ளைகளெல்லாம் நெஞ்சை நிமித்திக் கொண்டு உயந்திட்டுதுகள். ஆனால், இதில துரதிஷ்டம் என்ன சொல்லுங்கோ பார்ப்பம், யாருக்குப் போராடினமோ அவன் சொல்லுறான் இல்லை. இந்தப் போராட்டமில்லாமல் எப்படி இவைகள் வந்திருக்க முடியும். ஆனால் எப்பவும் அதை சொல்லுறத்துக்கு முடியாமல் இருக்கிறான். ஏன் என்றால், அவற்றை பார்வை அவற்றை கண்ணோட்டம், அவற்றை சமூகத்தின்ர தன்மைகள் எல்லாம் அப்படிச் சொன்னால் தனக்கு கேவலம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கு. இது ஒரு உதாரணம்.

எங்கடை போராட்டத்தாலை வெளிவந்த, பதவி அனுபவிச்ச, சமூக அந்தஸ்து பெற்றவனெல்லாம் இன்றைக்கு மௌனியாக இருக்கிறான் காரணம் என்னென்றால் சொன்னால் தன்ரை சாதி தெரிஞ்சு போயிடும் எண்டு. என்னென்றால், எந்த அறிவு நிலைக்கு நாங்கள் பாடுபட்டோமோ அந்த அறிவு நிலையே எங்கடை சமுதாயத்தைக் காட்டிக் கொடுக்குது.

**ஆனால் இப்ப எஸ். பொ. சொல்கிறார்: உதாரணத்துக்கு கைலாசபதி, சிவத்தம்பி பற்றிச் சொல்லும் போது, அவர்கள் சாதிமான்களாகவும் இருந்தார்கள் அதனாலை தான் சாதி அடிப்படையிலே தான் ஒடுக்கப் பட்டேன் என்று. இதைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

இப்ப நான் கேட்கிறேனே. என்னையும் டானியலையும் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தினது நாங்களா? அவங்கள் தானே? படிப்பில்லாத, ஒரு விதமான தகைமையும் இல்லாத என்னையும் டானியலையும் தூக்கமுடியும் என்றால் பட்டதாரியான எஸ்.பொ.வைத் தூக்கிறதுக்கு அவங்களுக்கு என்ன இருக்கு. இது என்னென்றால், தான் செய்யிற தகிடுதத்தங்களுக்கெல்லாம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி எதிரிகளைத் தாக்கிறது. சரி. ஒரு வருஷம் தாக்கட்டும், இரண்டு வருஷம் தாக்கட்டும். போற இடம் எல்லாம் இந்த 35 வருஷமாகத் தாக்கினால் இதிலை என்ன அர்த்தம். நீ கெட்டிக்காரனென்றால், நீ ஒரு பி.எச்.டி.யாக வந்து அல்லது ஒரு கலாநிதியாக வந்து இந்தா வந்திட்டன் என்று சொல்லலாம்; அல்லது இதுகள் ஒன்றும் வேண்டாம் என்று வேறு ஏதாவது ஒரு சாதனை செய்யலாம். சும்மா திட்டி என்னப்பா பிரயோசனம். திட்டிறதால என்னத்தைச் சாதிக்கிற. இந்தா நான் இருக்கிறன், எந்த எதிரியும் வரட்டுக்கும், நான் ஒன்று கேட்கிறன். 35 வருஷம் மல்லிகை நடத்தினான். உன்னாலை நடத்த ஏலுமா? செய்து காட்டு.

**எஸ்.பொ.வினுடைய இந்தத் தாக்குதல்கள் இப்பிடி இருக்க முடியாதோ? நாங்கள் ஒரு சமூகத்திலை எதை நோக்கி எங்களை நகர்த்த விரும்புகிறோமோ அந்த இடத்திலை முக்கியமாக இருப்பவர்களைத் தாக்குவதன் மூலம் தான் அந்த**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இடத்தை அடையலாம் என்பது தான் நோக்கமாக இருக்கலாம். கைலாசபதியையும் சிவத்தம்பியையும் தாக்குவதன்மூலம் தன்னை முன்னிறுத்துகிற முயற்சி என்று நான் கருதுகிறன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

கருத்துச் சொல்கிறது வேறை, தாக்கிறது வேறை. இவர் என்ன நினைக்கிறார் என்றால் கைலாசபதி, சிவத்தம்பிக்கு எதிரான ஒரு கோஷ்டி இருக்கு பல்வேறு மட்டங்களிலை - கல்வி மட்டங்களிலை, பேராசிரியர் மட்டங்களிலை இப்படி. இதில் இந்தியப் பிராமணியம் முக்கியமான பங்களிப்புச் செய்யுது. இவர் அப்பிடித் தாக்கிற தாலை என்ன செய்கிறார் என்றால் அவையின்ரை எடுபிடிகளாய் மாறுகிறார். அவை என்ன செய்யினம் எண்டால் கை தட்டி ஆஹா! ஓஹோ! என்று சொல்லுகினம். இவருக்கு அது தேவையாக இருக்குது ஏனென்றால் அவங்களைவிடத் தான் பெரிது என்று காட்டிறத்துக்கு.

**புலம்பெயர் சூழலில் வேளாள சமூகம் பற்றிய எந்த ஒரு அக்கறையும் இல்லாமல், இன்றைய இலங்கை சாதியப் பிரச்சினை தொடர்பாக பூரணமாக உணர்ந்து கொள்ளாமல் பிராமணியத்தைத்தான் முன்னிலைப்படுத்தி இங்கு சாதியத்தை முன்னெடுப்பதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இங்கு எங்களுக்கு எதிரி யார்? யாழ்ப்பாணத்திலை பிராமணிகூட நளவன், பள்ளன், அம்பட்டன் மாதிரி ஒரு சமூகத் தேவையாளனே தவிர அவன் ஒரு ஆதிக்கசக்தி அல்ல. அவன் கோயிலுக்குப் பூசை வைக்கிறத்துக்கு, கலியாணம் வந்தால் தாலி கட்டுவிப்பதற்கு என்று. அவரும் ஒரு எடுபிடிதான். ஐஞ்சு குடிமக்களோடை ஆறாவதாக.... அப்ப வந்து உண்மையான எங்கடை வர்க்க எதிரி யார்? யாழ்ப்பாணச் சூழலிலை உண்மையாய் எங்களுக்கு எதிர்முகாமிலை உள்ளவன் ஆரெண்டு பார்க்க



வேணுமே தவிர பிராமணன் என்று சொல்லிப்போட்டு....? அவன் எங்கடை நேச சக்தியெல்லே. அவன் பிராமணன் என்று சொல்லலாம். ஆனால், அந்த வர்க்கநிலையில் அவன் பிராமணனாகவா இருக்கிறான்? ஆதிக்க சக்தியாகவா இருக்கிறான்? அது பாருங்கோ, அதை எப்பிடிச் சொல்லலாமென்றால் இந்தத் தென்னிந்தியக் கருத்து, தென்னிந்தியத் தாக்கம் என்றுதான். அப்பிடிச் சொல்லுறதாலைதான் தாங்கள் தலித்துக்கள் என்று மறைமுகமான ஒன்றைக் கொண்டு வரப்பார்க்கினம். ஆனால், தமிழநாட்டு அல்லது கேரள அல்லது ஆந்திர மராட்டியத் தலித்துக்களும் நாங்களும் ஒன்றல்ல. அதேமாதிரி இங்குள்ள பிராமணன் அங்குள்ள பிராமணன் அல்ல. இங்கே ஆதிக்க சக்திகள் யார் என்றால் சைவ வேளாளர். எனவே எங்கடை கோஷம் சைவ வேளாளனுக்கு எதிராக வைக்கப்படவேணுமே தவிர சும்மா இங்கே இருக்கிற அப்பாவிப் பிராமணனுக்கெதிராக வைக்கிறதிலை இல்லை. வேணும் என்றால் திருப்திப்படலாம்; இப்படிச் சொல்கிறோம் என்பதிலை சந்தோஷப்படலாம்; அது ஒரு சரியான பார்வை அல்ல. நாங்கள் ஆதிக்கசக்தி எது என்று தெரிந்துகொள்ள வேணும். அப்பதான் எதிரியை இனம் கண்டு பிடிக்கலாம். சும்மா இருட்டோடை நின்று சண்டை பிடிச்சுக் கொண்டிருக்க முடியாது.

மற்றது யார் போராடினார்கள் என்கிறது அல்ல முக்கியம். என்ன வெற்றி பெற்றார்கள் என்பது தான் அங்கு முக்கியம்.

**புலம்பெயர் சூழலிலை ஆரோக்கியமான தலித்திய சிந்தனைகள் இருக்கிறமாதிரி உங்களுக்குத் தெரிகிறதா?**

இந்தக் கூட்டங்களுக்கு வந்தாப்பிறகு எனக்கு ஒன்று தெரியுது. அங்கை இருந்து அனுபவிக்காத, பெறாத அல்லது அங்கை இருந்து ஒடுக்கப்பட்ட ஏதோ ஒரு குழுவினர் தத்துவார்த்தரீதியாக, சும்மா வெறும் சாதிரீதியாக அல்ல, நாங்கள் ஒடுக்கப்பட்டனாங்கள் இங்கை நிமிர்ந்து நிற்கிறம் என்ற குரல் பரவலாய் இருக்கு. நான் இப்ப கொஞ்சக் காலமாய் யோசிச்சன், என்னடா இப்பிடி ஒரு குரல் வருகுது, இப்பிடி ஒரு வீச்சு வருகுது என்று என்ன காரணம் என்று பார்த்தால் அவன் வாயை மூடிட்டான். இஞ்சை வந்தவன் ஏன் நிமிர்கிறான் என்றால், அதைச் சொன்னால் என்ன, அவனுக்குச் சமூக நெருக்குவாரம் இல்லை. ஊரல்ல இங்கு. மற்றவர்களிடம் தங்கி இருக்கிறதல்ல இங்கு. அவனைவிட நல்லாய் இருக்கிறோம் என்ற மேம்பாட்டு உணர்வுதான் இந்தக் கருத்தை வைக்குதோ என்றுகூட நான் யோசிக்கிறன். இப்பதான் எனக்குத் தெரியுது முந்தி நசுக்கிடாமல் நெளிஞ்சு மெல்லமாகச் சொல்லிக் கொண்டிருந்தவை எல்லாம் இப்ப துணிஞ்சு தைரியமாகத் தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள். அது ஒரு பெரிய விஷயம்தான்.

கிருஷ்ணப் பறையனார் என்று சொல்லி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருதரைச் சந்தித்தனான் மட்றாஸிலை. அப்ப நான் அவரைக் கேட்டனான், ஏன் இப்படி பெயர் வைத்திருக்கிறார் என்று. அவர் சொன்னார், ஐயர் தன் பெயருக்குப் பின்னால் ஐயர் என்று போட்டால் நான் ஏன் பறையன் என்று போடக்கூடாது என்று. இந்த மாற்றுச் சிந்தனை எப்பிடி வருகுது பார்த்தீங்களா? அது என்னென்றால் நீ என்னை எளியவன் என்று சொல்ல நான் உன்னை விடப் பெரியவன் பாரடா என்று சொல்கிற ஒரு தன்மைதான். அது புலம் பெயர்ந்த சூழலிலை ஞாயமாகத் தெரியுது.

**ஆனால், இந்தத் தலித்தியம் பேசுகிற நாங்கள் வந்து குறிப்பாக இந்தியத் தலித்தியவாதிகளுடைய கோட்பாட்டை முன்னெடுத்து......**

தலித்தியம் என்கிறது சாதி மாத்திரமல்ல. அந்தச் சாதியிலை பிறந்தவன்தான் தலித்தியம் பேசவேண்டும் என்பதல்ல. ஆனால், முழுதாய் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட பக்கத்திலை நிற்கிறவனும் தெளிவான வர்க்கப் பார்வையோடை பார்க்கிறவனும்தான் அதைச் சொல்லலாம்; சொல்லமுடியும். சும்மா பேச்சுக்குக் கதைக்கிற ஒருவன் இரண்டுதரம் சொல்லிப் போட்டுப் பிறகு காணாமல் போய்விடுவான். இப்படிச் சொல்கிறவன் ஒரு ஆளுமை உள்ளவனாகவோ ஒரு கருத்தாளமுள்ளவனாகவோ நாளைக்கு நின்று பிடிக்கிறவனல்ல. இவங்க எல்லாம் பாருங்கோ, இரண்டு வருஷத்திலை வேறை எங்கையோ போய்விடுவாங்கள். ஏனென்றால், இப்ப 40 வருஷமா நாங்க சொல்லிக்கொண்டு வாறம் என்றால், நாங்கள் தினசரி வளர்கிறோமே தவிர நாங்கள் காணாமல் போகேல்லை. ஏனென்றால் எங்களுக்குத் தெரியும் நாங்கள் அதிலை இருந்துதான் வேர் விட்டுக்கொண்டு வாறம். இப்பிடிப் பேசுகிறவன் ஒரு கட்டத்திலை வேறை வாய்ப்புகள் இருந்தால் போய்விடுவான். இலக்கியம் அப்பிடி என்று பேசுகிறவன் அவனுக்கு வேறை வாய்ப்புகள் வந்தாப் போய்விடுவான். 2002ம் ஆண்டு பாருங்கோவன் இதிலை எத்தினைபேர் இருக்கிறாங்கள் எண்டு. தன்னை நெஞ்சாலை தாரை வார்க்கிற அந்த வேகம் இருக்கவேணும்; அல்லாட்டி ஏலாது. இதிலை என்ன வசதி இருக்கு? என்ன லாபம் இருக்கு? ஆனால் ஒரு சந்தோஷம்.

**பின்நவீனத்துவவாதிகள், இதில் குறிப்பாக தோழர் அ. மார்க்ஸ் போன்ற பழைய இடதுசாரிகளாக இருந்தவர்கள், சமீப காலத்திலை வந்து நீட்சேயம் என்ற புதிய சொல்லாடலைப் பயன்படுத்துகிறார்கள். இதுபற்றி...?**

இப்ப எங்களுக்குத் தெரிஞ்சு இந்தத் தத்துவங்கள் பிரெஞ்சிலைதானே ஆரம்பத்திலை இருந்து வந்தது. இதன் மூலம் எல்லாம் எங்களுக்குச் சொந்தம் அல்ல. வேறை வேறை சிந்தனைகளும் இப்ப லத்தீன் அமெரிக்க நாடுகளாலையும் வருகுது. ஆனால், என்ன தத்துவம் என்றாலும், அது மக்களிட்டை வேர் விடாட்டி அந்தத் தத்துவம் எத்தனை நாளைக்கு உயிர் வாழப் போகுது? தத்துவ விசாரங்கள் எல்லாம் வரட்டும். இதுகள் எல்லாம் தேவை. ஒரு வளருகிற இலக்கியத்திற்கு வளர்கிற மொழிக்கு தத்துவச் சண்டைகள் தேவை. ஆனால் தத்துவச் சண்டைகள் ஒரு ஆரோக்கியமான இலக்கியத்தை வளர்த்தெடுத்தது என்பதை வரலாற்றிலை காணேல்லை. அது நடைமுறைச் சாத்தியமில்லை. ஆனால் சண்டை பிடிப்பாங்கள்.

தனக்குக் கூடத் தெரியும் என்கிறது ஒரு வகையான இலக்கிய மிரட்டல். உன்னை விட எனக்குத் தெரியும் என்று சொல்கிறதிலை ஒரு அகம் பாவம். எத்தனை தத்துவங்கள் வந்தது? எத்தனை ஆயிரம் கருத்துக்கள் வந்தது? ஆனால், மனிதன் மனிதனாய் இருக்கிறது என்கிற தத்துவம்தான் உலகத்தில் ஆகச் சிறந்தது. மனிதன் மனிதனாய், மனிதப் பண்போடும், மனித நேசத்தோடும் பக்கத்திலுள்ளவனுடன் அன்பு செலுத்துகிறதுடன் அவனுடைய நல்வாழ்வுக்காகத் தன்னுடைய வாழ்வில் ஒரு பகுதியை ஒப்படைக்கிறதோடு இருக்கவேணும். என்னதான் ஆயிரம் தத்துவத்தைச் சொல்லி என்ன, இந்த ஒரு நாலைஞ்சு வரிக்குள்ளைதான் இவ்வளவு தத்துவங்களும் அடங்குது.


தமிழீழ புதிய ஜனநாயகக் கட்சி இதழ்
**(N.D.P.T.)**

**தேசபக்தன் (இதழ் 18)**



WWW.ndpt.org
Patriot_editor@Yahoo.com

சமாதானத்துக்காக சமாதானமல்ல!

ஒரே நேரத்தில் யுத்தமும் பேச்சுவார்த்தையுமா?
முதலில் யுத்தநிறுத்தம் பின்பு பேச்சுவார்த்தை

போரா – சமாதானமா?
மக்களின் அரசியல் கோரிக்கை தீர்க்கப்படாதவரை
மக்களின் யுத்தம் தொடரும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஔவையின்
# எல்லை கடத்தல்

[ அ. மங்கையின் மனதில் தோய்ந்தெழும் ஔவையின் அகம் முன்னுரையாக இங்கு நன்றியுடன்.... ]

ஔவை நீ சைக்கிளிலும், நடந்தும் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் பயணித்தாய்; பாடல்கள் இசைத்தாய்; மக்களோடு பேசினாய்; பல்கலைக்களக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டாய்; விஜிதரனில் தொடங்கி இன்னும் பலப்பல நட்புகள் சில்லிட்டுப் போயின; கால்மட்டும் உன்னோடு கூட வர மண்ணை விட்டுப் புறப்பட்டாய்; பள்ளி ஆசிரியையாய், சிறுமியர்க்கு தோழியாய் இருக்கிறாய்; தாயாய், மனைவியாய் காலம் கழிகிறது. உன் வாழ்வு தொடர்கிறது இன்றுவரை.... இவற்றில் எதனையும் நான் நேரில் கண்டவள் இல்லை. ஆனால் இதைப்போன்ற பலரில் ஒருத்தியாக நானும் இருந்திருக்கிறேன்; மேலும் பலரைக் கண்டிருக்கிறேன், காண்கிறேன். எங்களின் குரலாக உன் கவிதைகள்; உனது உள்மனப் பதிவாக உன் கவிதைகள்.

❦ ❦ ❦

உனது இந்தக் கவிதைகளை ஒன்றாகப் படித்து முடித்த கனத்தோடு எனது வீட்டருகே உள்ள கடற்கரையில் நாம் பேசிக்கொண்டிருந்தோம். நீ, நான், நாம்.... என விரிந்தோம். அற்ப கணத்தில் எனது பாதம் முதல் கண்கள் வரை உணர்ந்த ஈரத்தை எழுத என்னிடம் சொற்கள் இல்லை.

❦ ❦ ❦

முன்வாசல் கதவு தட்டப்பட்டால் திடுக்கிட வைக்கும் வாழ்வை வாழும் நாளில், கவிதைகளுக்கு எதற்கு முகப்பு?

தொண்டையடைத்து, நாவறள கடிதம் எழுதவும் வார்த்தையின்றித் தவிக்கையிலே.... கவிதைகளில் தராதரம் பிரிக்க காலம் ஏது? எனக்கு மனசில்லை. இவைதான் எமது நாளைய வரலாறுகள் இன்றைய நம்பிக்கைகளையும் இழப்புகளையும் சாம்பல்பூத்த கங்குகளாய் தக்க வைத்துக் கொண்டிருப்பவை.

கூட்டல், கழித்தல் கணக்குப் போட்டுச் சரியான தொரு விடையைச் சொல்ல முடிந்தவர்களுக்கு எழுத்து வேறுமாதிரி தோன்றலாம்; அதிசய வேலைப் பாடுகள் கொண்ட ஆபரணமாய் வாழ்வைக் காண முடிந்தவர்களுக்கு எழுத்து போதை ஏற்றலாம்.

ஆனால்-

எழுத்தே வடிகாலாகவும் விடைகாணும் முயற்சி யாகவும் உயிர்மூச்சைத் தக்கவைக்கும் படிப்பா கவும் இருக்கையிலே....?

❦ ❦ ❦

நீ எண்பதுகளில் எழுதத் தொடங்கினாய். கிட்டத்தட்ட இருபதாண்டுகள் கழித்து உனது படைப்புத் தடத்தைத் திரும்பிப் பார்க்கிறாய். எண்ணிக்கை அதிகமில்லை. உன்னுள் ஊறி ஊறிக் கிடப்பவற்றைத்தான் நீ எழுத விரும்புகிறாய் என்று சொன்னது நினைவுக்கு வருகிறது.

ஆறு மாதக் கணக்கில் ஆறப் போட்ட கவிதை பற்றி அன்று நீ சொன்னாய்!

**"அம்மா**
**நான் போகவேண்டும்**
**விடை கொடு எனக்கு"**

என்று எத்தனை ஈழத்தமிழ்ப்பெண்கள் சொல்லி இருப்பார்கள். எத்தனை பேர் தம் தோழியரிடம்,

**"இன்னும் என்னடி இருட்டில் வேலை?"**

என்று கேட்டிருப்பார்கள்.

அம்மாவிடம் வெகு நிதானமாக துர்க்கையைச் சொல்லி, அவள் வீரத்தைச் சொல்லி, உனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நியாயத்தை விளக்கி, இன்றைய தேவையைச் சுட்டிக்காட்டி...

"எம்மைச் சூழ
இரத்தமும் தீயுமாய் காலம் நகர
இச் சிறுவீட்டின் ஊமை வாழ்வை
எப்படி நான் தனியனாய் வாழ்வேன்?"

எனக் கேட்பது வரலாற்று ஆவணமாய் காலத்தின் குரலைப் பதிவு செய்கிறது.

❦ ❦ ❦

மற்றபடி-

உனது வெளிப்பாட்டில் நான் உணர்வது பாரம்! தாங்க முடியாத பாரம்! நெகிழ்ந்தால் கரைந்து விடுவோம் என அஞ்சி பனிக்கட்டியாய் உறைய வைக்கும் கனம். கண்கள் சிவந்து, கண்ணீர் சிந்த மறுக்கும் சோகம்!

மகளருகில் அமர்ந்தபடி-

"மௌனமாய் இருந்தபடி
விண்ணை நான் நோக்குகிறேன்"

என்ற உன் வரிகள் என்னை உலுக்குகிறது. மகளின் கவலை கேட்டு ஆறுதல் சொல்லும் தாய் உறவெல்லாம் தலைகீழாகி, ஏதென்று தெரியாத பருவத்தில் உள்ள மகளிடம்,

"உன்னருகில் நானிருந்து
என் கவலை சொல்கிறேன்
கேளம்மா என் மகளே!"

என புலம்பும் தாயின் நிலை என்னை உலுக்குகிறது.

பிரிவுகள்! பிரிவுகள் குறித்த நினைவுகள்! அச்சங்கள்! சோகங்கள்! தற்காலிக - நிரந்தரப் பிரிவுகள் குறித்த நினைவுகள்....

"நாளைய இரவில்
நானோ. நீயோ
எங்கள் இதழ்களோ
எதுவும் இருப்பது
நிச்சயமில்லை"

என்பதால், நினைவுகள் மட்டுமே நிச்சயமாய்த் தோன்றுகின்றன போலும்! விஜிதரன் கொல்லப் பட்டதை பதிவு செய்திருக்கும் விதம்..., மண்டையில் அறைந்து தாக்கும் உண்மையை எப்படி விபரிப்பது? ஒரு தனி மனித மரணம், பூமியின், இயற்கையின், வாழ்வின் மரணமாய் விரிந்தது எப்படி?

"மீண்டும் ஒரு இரவு
உயிர்ப்படங்கி
சில்லிட்டது பூமி
உனது வாய்
உனது கண்
மூடியது மண்
இருள்"

பூமி சில்லிட்டதும், உடல் சில்லிட்டதும், மண் மூடிப் போனதும், இருளாகிப் போனாலும் ஒன்றன் மீதொன்றாய் படிமங்கள் விழுகின்றன இருந்தாலும், வீழ்ந்து படவில்லை மனிதம்.

"எலும்பை எடுத்துப்
பாதையில் வீசினர்
பாதைகள் மூடப்படுமென....
சாம்பலை எடுத்துக் காற்றில் எறிந்தனர்
காற்றும் மௌனமாய் இருக்கட்டுமென
மௌனத்துக்கு அப்பாலும் வாழ்வுண்டு
மரணத்தை மீறியும் போராட்டம் உண்டு"

என்ற உன் பாடல் அதைத்தான் சொல்கிறது.

❦ ❦ ❦

தாயாக இருப்பதைப்பற்றிய உனது பாடல்கள் என்னை நெருக்கமாக அணைக்கின்றன.

பூஞ்சிறகு முளைத்த சிட்டுக்குருவியாய் பறந்து போனான் அந்த மகன்! அவன் கேட்கும் கேள்வி களுக்கு பதில் சொல்லி மாளாது. அந்த மகன் போனான்! ஆனாலும் அவன்,

"எங்கோ தொலைவில்
நீ என்ன செய்வாய் என்பதும்
நீ நடக்கும் பாதையும் நான் அறிவேன்"

என நம்பிக்கை வைத்திருக்கும் தாய். இராணு வத்திடமும் நமக்குள் இருக்கும் எதிரிகளிடமும் அகப்படாமல் இருக்க ஆலோசனை கூறும் தாய்.

"மனித நேயத்தை இழந்து விடாதே
மக்களை அதிகம் நேசிக்கப் பழகு"

எனக்கூறும் தாயின் சமூகப் பொறுப்பும், அக்க றையும் அழகானவை. இப்படியெல்லாம் இருக்கும் தாயிற்கும் அதிர்ச்சி - இராணுவ வீரனாய் தன்முன் வந்த மகன், நண்பனைக் கொன்றுவிட்டு வீரம் பேசியபோது அவன்,

"நிறையவே பேசினான்
இப்போது நான் மௌனமாக இருந்தேன்
......
இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது"

என்று தாய் கூறும்போது தாய்மைப் புனைவுகள் பொடிப்பொடியாகின்றன.

மகளுடனான உரையாடலில் வரும் தாய் எனக்கு நெருக்கமானவள். ஔவை உனக்குத் தெரியும். மகளுக்குப் பாலியல் வன்முறைபற்றி எப்படிச் சொல்வதெனத் தவிக்கும் தாயின் குரலாய் வரும் கவிதை என்னை எப்படி நெகிழ வைத்ததென.

"உன்னை மீறிய எந்தக் குறியும்
உனது உடலைத் தீண்டாதவாறு
அக்கினிக் குஞ்சாய்
உயிர்த்தெழு!"

என்று நான் என் மகளிடம் மனதுக்குள் தினம் தினம் சொல்கிறேன். அவள் பூரித்து. மகிழ்ந்து சிறகு விரிக்கும் போதெல்லாம் என் வாய் நுனிவரை அந்தச் சொற்கள் வருகின்றன (ஔவை நாட கத்தில் உன் கவிதையின் ஒரு பகுதியைக் கூறுப வளாக என் மகள் பொன்னி, உனது முழுக் கவிதையை முதல்தரம் படித்தபோது...

"சூழவுள்ள உலகம் முழுவதும்
விறைத்துப் போன ஆண்குறிகளாய்
அச்சம் தருவதை
எப்படித் தவிர்ப்பேன்"

என்பதைப் படித்தபோது....

"நிசமாவே இப்படி எல்லாம் நடக்குமாம்மா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றாள். எனது பதினாறு வயது மகளை பச்சிளம் பாலகியாக்கி மார்புற அணைக்க இயலாமல் நான் தவித்தேன். ஆமாம் எனச் சொல்லக் கூசியது வாய்.)

❦ ❦ ❦

இத்தனை இத்தனையாய்.... வாழ்க்கை நெருக்கியபோதும் உன்னால் சிரிக்கமுடிகிறது. எனக்கும் முடியும். எனக்கு அது பிடிக்கும்.

"தாடியும் மீசையுமாய்
தடியர்கள் உள்ளனராம்
ஆம்பிள்ளைதானாம்!
குமர்களை முற்றவிடாமல்
கன்னி கழிக்க
சீதனம் மட்டும்
சிறப்பாய் வேணுமாம்"

என்று ஆம்பிள்ளைத் தனத்தை தாடியாலும் மீசையாலும் அடையாளம் காட்டுவதை எண்ணிச் சிரிக்கிறாய். உனது பள்ளி மாணவிகள் இதனை நாடக நிகழ்வில் செய்ததாகக் கூறினாய். அதனைக் கற்பனை செய்து பார்க்கிறேன். மாயா ஆஞ்செலோ என்ற ஆப்பிரிக்க-அமெரிக்கப் படைப்பாளி ஒருமுறை பேசும்போது, "நான் சிரிப்பேன்; தொண்டை அடைக்கும் வரை சிரிப்பேன்" என்று கூறியதுதான் நினைவுக்கு வருகிறது.

❦ ❦ ❦

உனது கவிதைகளை முன்னிறுத்தி நிறைய எண்ணங்கள் தொடர்கின்றன.

......

எரிகின்ற ஈழத்து மண்ணில் இருந்து கிளம்பியுள்ள குரல்கள்தான் எத்தனை? அவை எழுப்பும் புதுக் கேள்விகளும்தான் எத்தனை? குறிப்பாக, தமிழில் கவிதைத்துறையில் புதிய வீச்சினைத் தருவது ஈழக்கவிதைகளே என்பதை மறுக்க இயலாது. அதிலும் சிறப்பாகப் பெண்கள் பலர், கவிதையினைத் தன் வெளிப்பாட்டு ஊடகமாகத் தேர்ந்தெடுத்தது இன்றைய வரலாற்றின் புதிய கண்ணி.

செல்வி, சிவரமணி, ஊர்வசி, ஔவை, சன்மார்க்கா, மைத்ரேயி என்று தொடங்கிய இத் தலைமுறை கொற்றவை, கண்ணகி, ஆழியாள், ஆகர்ஷியா, கலா, பெண்ணியா என்றும் பாரதி, வானதி, கஸ்தூரி என்றும் விரிவடைந்து வருகிறது.

சிவரமணி தனது இறப்புக்கு முன், தனது அடையாளங்களை எல்லாம்

'சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுப்பில் கவிதை சேர்த்த ஔவையின் தனித்தொகுப்பு இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. இவரின் கவிதைகள் மிகவும் சொற்பமாயினும் வாழ்வின் மூலத்தை உறுத்துபவை. உணர்த்துபவை. உயிர்ப்பவை.
இவருடைய கவிதைத் தொகுப்பில் இருந்து....

## வீடு திரும்பிய என் மகன்

இதயத்தை இரும்பாக்கி
மூளையைத் துவக்காக்கி
நண்பனை பகைவனாக்கி
என்னிடம் திரும்பினான்
இராணுவ வீரனாய் என்முன் நின்றான்
என் மகன்
ஊட்டி வளர்த்த அன்பும் நேசமும்
ஆழப்புதைய
ஆடித்தான் போனேன்.

நண்பனைச் சுட்டுவிட்டு வந்து
வீரம் பேசினான்
தியாகம் பற்றி
ஆயுதம் பற்றி
எல்லைப்புற மக்களைக் கொல்வதைப்பற்றி
நிறையவே பேசினான்.

இப்போது நான் மௌனமாக இருந்தேன்
மனிதர்கள் பற்றி
விடுதலைபற்றி
மறந்தே போனான்.

இப்போது நான்
தாயாக இருத்தல் முடியாது
என்று தோன்றுகிறது

துரோகி என்று
என்னையே புதைப்பானோ
ஒரு நாள்?

*1988.*

தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினரால், க. பாலேந்திராவின் நெறியாள்கையில் 'எரிகின்ற எங்கள் தேசம்' எனும் கவிதா நாடக நிகழ்வில், மேலுள்ள கவிதையும் சேர்க்கப்பட்டு நீண்ட காலமாக மிகவும் சிறப்பாக நிகழ்த்திக் காட்டப்பட்டு வருகிறது. ஓர் படைப்பு பலவிதமான ஊடகங்களில் புதைந்தெழுவது பலவகைகளிலும் கலை இலக்கியத்திற்கு புத்துணர்ச்சியையும் புத்துயிர்ப்பையும் வழங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழிக்கும் முயற்சியில் தனது கவிதைகளை எரித்துவிட்டுச் சென்றது ஆணித்தரமான வாக்கு மூலமாகிறது. தனது கவிதைகளையே தனது அடையாளமாக உருவகப்படுத்தி தனது மரணத்தையும், கவிதைகளை அழித்ததையும் ஒருங்கே நிர்ணயித்த சிவரமணி நமக்குச் சொல்லிச் செல்வது என்ன?

படைப்பு நமது உடல், உயிர், வாழ்வோடு கொண்டுள்ள உறவென்ன? படைப்பாளி எனச் சாதனை செய்ததாக நெஞ்சு நிமிர்த்தும் பலரை நம்மைச் சுற்றிலும் காண்கிறோம். பெரும்பாலான ஆண் படைப்பாளிகள் - பலர் நல்ல நண்பர்கள்; நல்ல மனிதர்கள் - எழுத்தைத் தமது வெற்றிகளில் ஒன்றாகக் கருத, பெண்கள் தமது படைப்புகளை தாங்கொணாத உணர்வு, சிந்தனைச் சுமைகளை இறக்கி வைத்தலாகக் காண்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது. ஆண்-பெண் பாலின் வேறுபாட்டை உடல் சார்ந்த அடிப்படை வாதத்திற்குள் (biological determination) அடக்குவதை நான் ஏற்கவில்லை. ஆனால், படைப்புப் பாதைகளில் பெறும் வேறுபட்ட அனுபவப் பரிமாணங்களை ஏற்கத்தான் வேண்டியுள்ளது. மனநிறைவு அளிப்பதான அனுபவமாகவே தாக்கம் செலுத்துகிறது என்று கூறலாமா?

அரசியல் நெருக்கடி நிறைந்த சூழலில் இலக்கியம் எதைப் பேசுகிறது என்பதை வைத்து அதன் சமகாலப் பொருத்தப்பாடு முடிவு செய்யப்படுகிறது. பேரினவாதத்தின் பிடியில் சிக்குண்டு உலகெங்கும் சிதறி இருக்கும் ஈழத் தமிழினத்தின் குரலாக வரும் படைப்புகள் எதனை முதன்மைப் படுத்தவேண்டும்? பேரினவாதத்தின் அடக்குமுறைகளையா? தேசியம் பேசும் குழுக்களின் செயற்பாடுகள், அவற்றுக்குள் உள்ள வேறுபாடுகள் ஆகியவை குறித்தா?

பிறக்கப்போகும் நாளை நமக்கு எப்படி விடிய வேண்டுமென விரும்புகிறோம் என்பதையா...? இவற்றை வரிசைப்படுத்த இயலாதென நான் அறிவேன்.

அனைத்தையும் உயிர்ப்பிணமாய் சகித்துப் போகும் அமைதிவாதமல்ல உன் போன்றோர் நாடுவது என்பதையும் என்னால் புரிய முடிகிறது. அதிலும் தேசியத்தை, மதவாதத்தை, சாதீயத்தை முன்னிருத்திய அடையாளங்கள் எல்லாம் பெண்ணின் உடலையும், வாழ்க்கை நியதிகளையும், ஒழுக்க மதிப்பீடுகளையும் தத்தம் அடையாளம் சார்ந்த பெட்டகமாய் பார்ப்பதும் நாம் அறிந்ததே!

பொட்டு வைப்பதும், புடவை கட்டுவதும் தமிழ் தேசிய அடையாளங்களாக.... அதற்காகவே சிங்கள இனவாதத்தினர் தண்டிக்கும்போது அந்த அடையாளங்களைத் தரித்துக் கொள்வதில் நமது இருப்பு உள்ளது. தமிழ் இன அடையாளத்திற்காக அவை திணிக்கப்படும்போது, அவை இல்லாவிடில் இன நேயத்தைக் குறைத்து மதிப்பிடும்போது அதே புற அடையாளங்களை மறுப்பதும் நமது இருப்பு ஆகிறது. இந்த இரு நிலை இருப்பு தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. நமது வெளிப்பாடுகள் இவர்களுக்கு பதில் சொல்வதிலேயே காலம் கழிகிறது. நமக்காக, நம் சொல்லைச் சொல்லும் காலம் எங்கே?



ஔவையின்
## எல்லை கடத்தல்
(கவிதைத் தொகுதி)

வெளியீடு:
மூன்றாவது மனிதன்
37/14 Vauxhall Lane
Colombo 02
Srilanka

தேசியம் என்ற வாதம் தலை எடுக்கும்போது பிற அடையாளங்கள் - குறிப்பாக பாலின இருப்பு - கேள்விக்காளாக்கப்படாமல் போவது உலக வரலாறு நெடுக காணப்படுகிறது. ஆப்பிரிக்க, இஸ்லாமிய நாட்டுத் தோழிகள் அதைப்பற்றி நிறையக் கற்றுத் தந்துள்ளார்கள். முதலில் தேசியம், சமூகவிடுதலை. அது சாத்தியமான பின்பு பெண்விடுதலை பேசலாம்... என்று கூறும் கடலலை ஓய்ந்தபின் ஓடம் விடும் கதைகளை நாம் ஏற்க முடியாது. தேசியம் சார்ந்த சார்புத்தன்மை, பிற நெருக்குதல்களில் இருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் நேர்கோட்டுச் சிந்தனையாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நெருக்கடி தொடர்பான தீர்வு என்று மட்டுமே பார்ப்பதை ஏற்காத உன் மனதை நான் புரிய முடிகிறது.

தாயின் குரலாக,

> **"இன்னுமா 'தாய்நிலம்'**
> **புதல்வர்களைக் கேட்கிறது?"**

என்று நீ கேட்கும்போது அது மகனை இழக்க அஞ்சும் கோழைத்தனமல்ல. தானும், தன் புதல்வர்களுமாக தாய்நிலத்திற்காக நடந்த தாய்.

> **"மக்கள், புரட்சி, விடுதலை எல்லாம்**
> **வாய்ச் சொல்லாக**
> **சந்தியின் ஓரமும்**
> **வாவிக்கரையும்**
> **புதைகுழியும், மணல்மேடும்**
> **என் புதல்வர்களின் சடலங்களால் நிரம்பிய பிறகு...."**

தான் இக் கேள்வியை எழுப்புகிறது.

> "பற்றி எரிக ஆயுதக் கலாச்சாரம்"

என அத்தாய் விடும் சாபம் தேசியப் போராட்டத்தில் பங்கேற்க மறுக்கும் தாயின் குரல் அல்ல. போதும் போதும் எனும் அளவு அனுபவித்தபின் எழும் ஆதங்கத்தை, ஆத்திரத்தை அவள் வெளிப்படுத்துகிறாள்.

இக் கேள்வியின் நியாயத்தில் எனக்கு நூறு சதவீத ஒப்புதல் உண்டு.

ஆயுதக் கலாச்சாரம் சாலைகள்தோறும் வீடுதோறும் பரவிய வரலாறு நமக்குத் தெரியும். ஒடுக்குபவன் ஆயுதத்தோடு எதிர் வருகையில் வெறுங்கையோடு வீரம் பேசுவது இயலாது என்பதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாமறிவோம். இந்தச் சூழலில், யார் வென்றால் யாருக்கு நன்மை என்று பிரித்துப் பார்ப்பதும்கூட இயலாததாகிவிட்டது. சரியோ? தவறோ? இம்மாதிரி நேரத்தில் பிடிப்புக் கிடைக்க சிறு துரும்பாவது தேவைப்படுகிறது. அப்படித் துரும்பாய் எத்தனை கவிதைகள் நம்மிடம் உள்ளன? வாழ்க்கையைத் தள்ளவாவது நமக்குப் பிடிப்பூட்டும் எழுத்துக்கள் உண்டா? அது எப்படிச் சாத்தியம் என எனக்குத் தெரியவில்லை. தேவை என்று மட்டும் தோன்றுகிறது.

சிக்கல்களும் முரண்களும் புதிதாகத் தலை தூக்கும் காலத்தில், நம்மை வெளிப்படுத்த புதிதாக மொழிக் களனைக் கண்டுள்ளோமா?

நீயாழ் மண்ணைவிட்டு இடுப்பில் குழந்தையோடு பெயர்ந்த நிகழ்வைப் பலகாலம் கழித்துக் கவிதை ஆக்கியதைக் கூறினாய்.

புளியமரம் பூதமாகவும், வானம் கோரப் பற்களாகவும், மண் புதைகுழியாகவும்.

> "நீண்டிருந்த பனைகளும்
> கடும் கோபம் கொண்டு"

வெறித்தபடி நீ மேற்கொண்ட அப்பயணம்....

> "செம் மண்ணும் போயிற்று
> எம் மண்ணும் போயிற்று
> போ"

என்று நீ தட்டிவிட்ட ஓசையில் கிளம்பிய புழுதி நெருப்பில் எதிர்காலம் உருவாகிறது.

ஆனால், 'இரும்புமூளை', 'துப்பாக்கிச் சத்தம்', 'இரத்தச் சேறு' இவையெல்லாம் தினம் தினம் காணும் வாழ்க்கையாகிப் போனதால் அவை மரத்துப்போன சொற்களாக விழுகின்றன. ஒப்பாரி வைத்தழவும் திராணியற்றுப் போன வாழ்வை மொழியில் காட்டுவது எப்படி? கணநேரமாவது உலுக்கி எடுக்கும், நிமிர வைக்கும் சொற்களை, படைப்புகளை நாம் கண்டெடுக்க வேண்டாமா?

> "சமூகத்தின் நிசப்தமோ
> பயங்கர இரைச்சலாய்
> என் மன நிம்மதியைக் கெடுக்கிறது"

என்று சொல்லும்பொழுது நிசப்தம், இரைச்சல், நிம்மதி எல்லாம் அகராதிப் பொருள் மாறி என்னுள் அறைகிறது. இக் கேள்வி அழகியல் தொடர்பானது அல்ல. மரத்துப்போன உணர்வுகளுக்குச் சிலிர்ப்பைத் தரும் படைப்புகளை, ரணமான வாழ்வில் மருந்தைத் தடவும் எழுத்துக்களை, எப்படி எப்படித் தரலாம் - பெறலாம் என்ற அங்கலாய்ப்பில் எழுவது. இதற்கு நாம் பதில் தேடவேண்டிய கட்டாயம் இன்று உள்ளது.

இன்னுமொன்று இங்கு சொல்லவேண்டும்.... வாசுகியின் ஓவியமும், உனது நேரடிப் பரிச்சயமும் எனக்குக் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் வாய்த்தது. கவிதை, ஓவியம், நாடகம் என்ற வேறு துறைகள் ஒருமிக்கும்போது கிடைக்கும் வீச்சு உற்சாகம் ஊட்டியது. கூட்டுத்தன்மையை முதன்மைப் படுத்தும் நமக்கு நீ முந்தி, நான் முந்தி என்று இல்லாமல் கைகோர்த்து நடப்பதில் கிடைக்கும் பலத்தை மனதுள் சேமிப்போம்.

படைப்பு அனுபவம் இரகசியங்கள் நிறைந்தது. புதிரானதும்கூட. விளக்கங்கள், வியாக்கியானங்கள் தேவைப்படாமல் விரல்நுனியால் தோள்தொட்டு நிற்கும் உறவுகள் இருந்தால் போதும். நிமிரவும், நேரே நடக்கவும், உயரே பறக்கவும், உரமாய் மாறவும் தெம்பு கிடைக்கும் இல்லையா?

அ. மங்கை
சென்னை, தமிழ்நாடு
14.09.1999




**இவ்விதழில் இடம்பெறுபவர்கள்**

சுந்தர ராமசாமி, மதுசூதனன், றமீஸா, கே. எஸ். சிவகுமாரன், யமுனா ராஜேந்திரன், திசேரா, எம். கே. எம். ஷகீப், சி. சிவசேகரம், கா. சிவத்தம்பி, த. தயாபரன், அஸ்வகோஷ், தேவஅபிரா, எஸ். போஸ், சித்தாந்தன், றஷ்மி, பெண்ணியா, பாத்திமா ஜஹான், கருணை ரவி, கல்லூரன், உமாஜிப்ரான், கைசரவணன், அறபாத், பொன் கணேஸ், பன்னாமத்துக் கவிராயர், மு. பொன்னம்பலம், எஸ். கே. விக்னேஸ்வரன், சி. அ. யோதிலிங்கம், கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன் இன்னும் கடிதங்களும்.

**மூன்றாவது மனிதன்**
**இதழ் 10**
**ஜனவரி—மார்ச் 2001 (காலாண்டிதழ்)**

**ஆசிரியர்: எம்: பௌசர்**

தொடர்புகளுக்கு:
The Editor
37/14 Vauxhall Lane, Colombo 02, Srilanka
tel. 01 302759
e-mail: 3man@sltnet.lk




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம்: அமி தான்

# தழும்பு



மொ. பெ.: **பிரணவி குணசீலன்**

"உனது தாய் ஆவியாக உள்ளாள். நீ அவளை மறந்து விடவேண்டும்" என்று எனது அம்மம்மா என்னைக் கஷ்டப்படுத்தினாள். இதன் அர்த்தம், எனது அம்மா இறந்துவிட்டாள் என்பதல்ல. மாறாக அம்மாவுடனான தொடர்புகளையோ, அம்மாவின் பெயரையோ நான் உச்சரிக்கக்கூடாது என்பதாகும். அம்மம்மா, அம்மாவை மறந்துவிடவேண்டும் என என்னை வற்புறுத்திய போதெல்லாம் அம்மாவின் எண்ணங்களே என்னில் அதிகரித்து வந்தன.

தம்பியும் ஒரு வாத்து இட்ட முட்டையில் இருந்து பிறந்தவர்கள் என்றும் அந்த முட்டைகளை அப்போது எவரும் விரும்பவில்லை என்றும் அவள் கூறினாள். அரிசிப்புடிங் செய்வதற்குக்கூட உதவாத அந்த முட்டைகளை ஆவி எடுத்துச் செல்லாதபடி தான் காப்பாற்றியதாகவும் அவள் கூறினாள்.

எனது வாழ்க்கை முழுவதும் அம்மம்மா பயத்தையே ஊட்டினாள். அவள் நோயுற்றபோது எனது பயம் மேலும் அதிகரித்தது. அப்போது 1923ம் ஆண்டு நான் ஒன்பது

சொன்னாள். அது ஒரு பேராசை கொண்ட சிறுமியின் கதையாம். அந்தச் சிறுமியின் வயிறு எப்போதும் பெருத்துக்கொண்டே போனதாம். இதை அவள் வெளியில் சொல்ல வெட்கப்பட்டதால் தற்கொலை செய்து கொண்டாளாம். பின்னர் அவளது வயிற்றை வெட்டிப் பார்த்தபோது அதற்குள் பெரிய வெள்ளரிப்பழம் ஒன்று இருந்ததாம். ஒருவருக்கு எப்போதும் பசி இருக்குமானால் அவர் பேராசை உடையவர் என்பதுதான் அர்த்தம் என்று அம்மம்மா சொன்னாள்.

அடுத்தமுறை மற்றொரு



**அமி தான்** (AMY TAN) **சீனப் பெண் எழுத்தாளர்களுள் குறிப்பிடக் கூடிய சிறுகதை எழுத்தாளர். அவரால் எழுதப்பட்ட சிறுகதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுதியொன்று ஜேர்மனியில் 'சொர்க்கத்தின் மகளிர்'** (TÖCHTER DES HIMMELS) **என்ற பெயரில் வந்துள்ளது. அதில் வெளிவந்துள்ள** DIE NARBE **என்ற சிறுகதையே இங்கு தழும்பு என்னும் பெயரில் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**

சீனாவின் NINGPO என்ற இடத்தில் அது ஒரு பெரிய வீடு. நீண்ட முன் மண்டபத்தையும் செங்குத்தான படிக்கட்டுகளையும் அது கொண்டிருந்தது. நான் சிறுபிள்ளையாக இருந்தேன். மாமா,மாமி, அம்மம்மா, தம்பி, நான் எல்லோரும் அந்த வீட்டில்தான் ஒன்றாக வாழ்ந்தோம். அம்மம்மா ஆவிக்கதைகளை எனக்குச் சொன்னாள். நானும் எனது

வயதுச் சிறுமியாக இருந்தேன். அம்மம்மாவோ நன்கு முற்றிப் பழுத்த பரந்த சுரைக்காய் போன்று கொழுத்து இருந்தாள். அவளிடமிருந்து ஒரு நெடியும் வீசியது. எனக்கு நீண்ட கதைகளைச் சொல்வதற்காகத் துர்நாற்றம் வீசும் அந்த அறைக்குள் அவள் என்னை அடிக்கடி அழைத்தாள். "அன்மீ, நான் சொல்வதைக் கவனமாகக் கேள்" என்று கூறி என்னால் நம்ப முடியாத கதைகளைச்

சிறுமியின் கதையை எனக்குச் சொன்னாள். அந்தச் சிறுமி பெரியவர்களின் கதையைக் கேட்க மறுப்பவளாம். அவளுக்கு ஒரு நாள் கடுமையான தலைவலி ஏற்பட்டதாம். வலி தாங்க முடியாமல் அவள் தலையைக் குலுக்கியபோது மூளை கலங்கி காதின் வழியாக வெள்ளை வெள்ளையாக வெளியே வந்துவிட்டதாம்.

அம்மம்மாவின் உடல்நிலை மோசமடைந்து செல்கின்ற ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாளில் என்னை அழைத்து எனது அம்மாவைப்பற்றிச் சொல்லத் தொடங்கினாள். “அவளுடைய பெயரை ஒருநாளும் உச்சரிக்காதே. அப்படி உச்சரித்தால் அது உனது தகப்பனின் புதைகுழியில் நீ காறித் துப்புவதற்குச் சமமானது” என்றாள். எனது அப்பாவை எனக்கு ஒரு படமாகத்தான் தெரியும். எங்கள் வீட்டின் முன் மண்டபத்தினுள் அவர் ஒரு படமாகத் தொங்க விடப்பட்டிருந்தார். அந்த வீட்டின் சகல நிகழ்வுகளையும் கண்காணிப்பவர் போன்று அவர் தொங்கிக் கொண்டிருந்தார். எனது அறைக்குள் இருந்து பார்த்தால் அவர் என்னையே பார்த்துக் கொண்டிருப்பது போன்று தெரியும். நான் எப்படி நடந்து கொள்கிறேன் என்பதை அவர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று அம்மம்மா எனக்குச் சொன்னாள். பாடசாலையில் நான் யாருக்கும் கல்லால் எறிந்தால் அல்லது தவறுதலாக ஒரு புத்தகத்தை விட்டுவிட்டால் எனது அறைக்குள் சென்று அவர் என் முகத்தைப் பார்க்காதபடி மறைத்துக் கொள்வேன்.

எனது தம்பியோ துடிப்பானவன். அந்த வீட்டில் அவன் இருந்தானென்றால் ஒரே சத்தமாக இருக்கும். சைக்கிளை அவன் எடுத்துக்கொண்டு கூட்டாளிகளுடன் விளையாடச் சென்றுவிட்டான் என்றால் கொஞ்சம் நிம்மதி. பகிடி விட்டுச் சிரிப்பதில் அவனுக்கு நிகர் அவன்தான். மாமாவும் மாமியும் வீட்டில் இல்லை என்றால் அவனுக்குக் கொண்டாட்டம்தான்.

அது ஒரு வெப்பமான கோடைகால நாள். அம்மம்மா கடுமையாகச் சுகவீனமுற்றிருந்தாள். நாங்கள் வீட்டு முற்றத்தில் கூடிநின்று கவலையோடு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த தம்பி சத்தமாகச் சிரித்தான். அடுத்த கணம் மாமா அவனது கன்னத்தைப் பொத்தி அறைந்தார். இவனுக்கு இந்தக் குடும்பத்தில் ஒரு மரியாதையுமில்லை. அவனது தாய் மாதிரித்தான் தாறுமாறாக நடக்கின்றான் என்று பொறுமையற்ற மாமி அவனைத் திட்டினாள்.

மாமியின் நாக்குக் கொடியது. அது பசிமிக்க ஒரு கத்தரிக்கோலைப் போன்றது. மின்னல் வேகத்தில் ஒரு மென்மையான பட்டுத்துணியை கிழித்துவிடுவது போன்றுதான் மாமியின் நாக்கும் ஒரு கணத்தில் மனத்தில் வேல் பாய்ச்சி விடும். ஒரு சிறிய விடயத்திற்கும் கத்திக் குளறிக் கூத்தாடுவாள். எல்லாவற்றிற்கும் என் தம்பிமீதுதான் குற்றங்களைச் சுமத்துவாள்.

இன்று எங்கள் அம்மாவின் திருமணம். அம்மா Wu Tsing என்பவரைத் திருமணம் செய்கின்றார். அவர் முதல் வேறு திருமணம் செய்தவர். அவருக்குப் பல பிள்ளைகள் உண்டு. மாமியோ இன்று முழுவதும் கொக்கரித்துக் கொண்டேயிருந்தாள். தம்பி அழுதுகொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் மாமி அவன் முகத்தில் துப்பினாள். “நீ ஒரு பெரிய மனிதனாக விளையாடப் பார்க்கிறாய். நீ ஒரு செல்லாக் காசு. ஓடிப்போனவளின் மகன்” என்று அவளது வார்த்தைகள் எல்லையைத் தாண்டியிருந்தன.

இப்போது அம்மம்மா எனக்குச் சொன்ன கதைகளின் அர்த்தங்கள் மெல்ல மெல்லப் புரியத் தொடங்கின. இந்தக் கதைகளின் சாராம்சங்களை நான் எனது அம்மாவுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டியிருந்தது. “மனிதர்கள் சொந்த முகத்தைத் தொலைத்தால் அது கிணற்றில் வீழ்ந்த கழுத்துச் சங்கிலிக்குச் சமமானது. அதை மீண்டும் மனிதர்கள் பெறவேண்டுமானால் சங்கிலியைத் தொடர்ந்து தாமும் கிணற்றில் விழவேண்டும்” என்று அம்மம்மா எனக்கு அடிக்கடி சொல்லியிருக்கின்றாள்.

இப்போது அம்மாவைப்பற்றி எனக்கு ஓரளவு தெரிந்திருந்தது. அவள் ஒரு மெல்லிய பெண். அடிக்கடி சிரிக்கின்றாள்.

**நானும் எனது தம்பியும் ஒரு வாத்து இட்ட முட்டையில் இருந்து பிறந்தவர்கள் என்றும் அந்த முட்டைகளை அப்போது எவரும் விரும்பவில்லை என்றும் அந்த முட்டைகளை ஆவி எடுத்துச் செல்லாதபடி தான் காப்பாற்றியதாகவும் அவள் கூறினாள்.**
**எனது வாழ்க்கை முழுவதும் அம்மம்மா எனக்குப் பயத்தையே ஊட்டினாள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலையை மீண்டும் மீண்டும் ஆட்டுகிறாள். அம்மா எங்களை விட்டுப் பிரிந்து சென்றிருப்பதும் அவள் எங்களுக்குத் தாயாக இருந்திருப்பதும் எனக்குக் கவலையாகவே இருந்தது. அதுதான் எங்கள் வீட்டில் தொங்கிக்கொண்டிருக்கும் அப்பா எங்களைப் பார்க்காமல் நான் முகத்தை மறைத்துக் கொண்டு எனது அறைக்குள் சிலவேளைகளில் இருப்பது.

எங்கள் வீட்டுப் படிக்கட்டில் நான் அமர்ந்து இருந்தேன். அப்போதுதான் அவள் அங்கே வந்தாள். அவள் பற்றிய எந்த இனிய நினைவுகளும் எனக்கு இல்லாத போதும் அவள் எனது தாய் என்பது எனக்குத் தெரிந்தே இருந்தது. அம்மா கதவடியில் நின்றிருந்தாள். அவளது முகத்தில் நிழல் படிந்திருந்தது. எனது மாமியை விடவும் உயரமானவள். கிட்டத்தட்ட எங்கள் மாமாவின் உயரம் என்று சொல்லலாம். அம்மா ஒரு வெளியாள் போன்றே எமக்குத் தோற்றமளித்தாள். எங்கள் பாடசாலையில் மிஷனரிப் பெண்கள் உயர்வான சப்பாத்துக்களையும் வெளிநாட்டு உடுப்புகளையும் அணிந்துகொண்டு குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடிகளுடன் எங்களுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது எங்களுக்கு அவர்களைப்பற்றி ஏற்படும் வெளியாள் உணர்வுதான் அம்மாவைப் பார்க்கும்போதும் எனக்கு ஏற்பட்டது.

மாமி அந்த இடத்தில் இருந்து அகன்றுவிட்டாள். அம்மாவைப் பெயர் சொல்லி அழைக்கவும் இல்லை. தேநீர் அருந்துமாறு



**“மனிதர்கள் சொந்த முகத்தைத் தொலைத்தால் அது கிணற்றில் வீழ்ந்த கழுத்துச் சங்கிலிக்குச் சமமானது. அதை மீண்டும் மனிதர்கள் பெறவேண்டுமானால் சங்கிலியைத் தொடர்ந்து தாமும் கிணற்றில் விழவேண்டும்” என்று அம்மம்மா எனக்கு அடிக்கடி சொல்லியிருக்கின்றாள்.**

கேட்கவும் இல்லை. எனது உணர்வுகள் நன்றாக இல்லை. எனது இதயம் முட்கம்பிகளால் நிறைக்கப்பட்ட கூடு போன்று நெருடிக்கொண்டிருந்தது. அம்மம்மாவின் அறைக்குள் அம்மா நுழைந்தபோது “காலம் கடந்துவிட்டது.... காலம் கடந்துவிட்டது....” என்று மாமி கூறினாள். அம்மம்மாவின் கட்டிலுக்கு அருகே அம்மா வந்தபோதும்கூட மாமி அதை நிறுத்தவில்லை. தொடர்ந்தும் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

“திரும்பி வா! இப்படி எனக்கருகே இரு!!” என்று அம்மா தலையில் அடித்துக்கொண்டு அழுதாள். “NUYER வந்திருக்கிறேன். உனது மகள் திரும்பி வந்திருக்கிறேன்” என்று அழுதாள். அம்மம்மா கண்களைத் திறந்து பார்த்தபோதும் அவளால் அதைச் சரியாக உணர்ந்துகொள்ள முடியவில்லை. அம்மம்மா தெளிவான உணர்வுகளுடன் இருந்திருப்பாள் என்றால் அம்மாவை அப்படியே தனது கரங்களில் தூக்கி அறைக்கு வெளியே வீசி இருப்பாள்.

எனது கண்களை அம்மாவில் இருந்து என்னால் திருப்ப முடியவில்லை. மெல்லிய தோல்நிறத்தைக் கொண்ட அழகான பெண். மாமியின் வட்டமான முகம் போன்று இல்லாமல் அம்மாவின் முகம் நீள்வட்டமாக இருந்தது. அம்மம்மாவின் முகமும் அப்படித்தான். அம்மாவின் கழுத்தானது என்னை ஈன்ற வாத்தின் கழுத்துப் போன்று நீண்டிருந்தது.

நான் பிற்பகலில் எனது அறைக்குத் திரும்பியபோது அம்மா அங்கே இருந்தாள். ஆனால் அம்மம்மா அவளோடு கதைப்பதற்கும், அம்மாவின் பெயரை உச்சரிப்பதற்கும் தடை விதித்திருந்தமையினால் நான் அவளோடு பேசவில்லை. அவளைப் பார்த்துக்கொண்டு மட்டும் நின்றேன். எனது கையைப் பிடித்து இழுத்தவள், அவளது இருக்கையில் என்னையும் அமர்த்திக் கொண்டாள். எனது தலையில் போடப்பட்டிருந்த பின்னலைக் குலைத்துவிட்டு முடியை வாரத் தொடங்கினாள். “அன்மி! நீ என் கெட்டிக்கார மகள்” என்று இரகசியம் ஒன்றைச் சொல்வதுபோல் மெல்லிய குரலில் சொன்னாள். அப்போது அவளில் அர்த்தமுள்ள சிரிப்பொன்றையும் என்னால் அவதானிக்க முடிந்தது. அவளை நான் குற்றமற்றவளாகவே பார்த்தேன். ஆனால் அதற்கிடையில் அந்தச் சிறுமி ஒருத்தியின் வயிற்றுக்குள் இருந்த வெள்ளரிப் பழத்தின் ஞாபகம் எனக்கு வந்தது.

“அன்மி! நான் யாரென்று உனக்குத் தெரியுமா?” அம்மா என்னைக் கேட்டாள். இப்போது அவள்மீது எனக்கிருந்த பயம் குறைந்திருந்தது. இப்போது அவளது அன்றைய நினைவுகள் திரும்பியிருக்கவேண்டும். முடியை வாரிய கைகளை அப்படியே விட்டுவிட்டு அவள் அழத் தொடங்கினாள். பின்னர் தனது கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

எனக்கு நான்கு வயதாக இருக்கும்போது ஒருநாள் நாங்கள் சாப்பிடுவதற்காக அமர்ந்திருந்தோம். ‘சூப்பு’ தயாராக இருந்தது. திடீரென



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அம்மம்மா அம்மாவை ஏன் வீட்டைவிட்டு வெளியேற்றினாள் என்பது எனக்குத் தெரியும். அம்மா Wu Tsingஐத் திருமணம் செய்ததும் எனக்குத் தெரியும். இந்த நிலையில்தான் நான் அம்மாவை நேசித்தேன். அவள் எனது உணர்வுகளில் ஒரு பகுதியாக இருந்தாள். எனது உள்ளுணர்வு இதைச் சொல்லிக்கொண்டே இருந்தது.**

மாமி அகன்று செல்வதைக் கண்ட மற்றையவர்களும் கதவை நோக்கி ஓடினர். அங்கு ஒரு பெண் நின்றிருந்தாள்.

"அம்மா....!" என்று அழைத்த நான் அவளை நோக்கி ஓடிச் செல்ல நினைத்தேன். மாமியோ என்னைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தது மட்டுமன்றி, நான் செல்லாதவாறும் பிடித்துக் கொண்டாள். அங்கு சென்றவர்கள் அழும் சத்தம் எனக்குக் கேட்டது. அப்போது அம்மா என்னை "அன்மீ.... அன்மீ" என்று என் பெயரைச் சொல்லி அழைப்பதும் எனக்குக் கேட்டது. "நீ உனது மகளைக் கூட்டிச் செல்ல விரும்பினால் அத்தோடு எமது உறவு முடிகின்றது. நீ உனது சுயமுகத்தை இழந்தவளாய்...." என்று எல்லோரது குரலையும் விஞ்சும் வண்ணம் அம்மம்மா உரத்த குரலில் அன்று கூறினாள்.

அம்மா தொடர்ந்தும் என்னை அழைப்பது எனக்குக் கேட்டது. அவளது அழைப்புக் குரல் என்னில் ஒலித்துக் கொண்டிருந்தது. "அன்மீ.... அன்மீ.... அன்மீ...." அம்மா அழைத்தாள். எனக்கருகில் மேசையில் கொதித்துக் கொண்டிருந்த சூப்புச் சட்டி கவிழ்ந்து கொட்டுண்டபோது எனது கழுத்தில் பட்டதனால் எனக்கு பெரும் வேதனையாக இருந்தது.

அந்த வேதனை ஒரு பிள்ளையைப் பொறுத்தவரை அதிகமானது எனினும் நான் அதனைத் தாங்கிக் கொண்டேன். கழுத்தில் ஏற்பட்ட எரிகாயம் காரணமாக நான் அழுதேன். அந்த நேரம் அம்மா, அம்மம்மா, மாமி எல்லோரும் அழுது புலம்புவது எனக்குக் கேட்டது. பின்னர் அம்மாவின் அழுகுரல் மெல்ல மெல்லத் தூரத்தில் ஒலிப்பது எனக்குக் கேட்டது.

அன்றிரவு அம்மம்மா என்னோடு பேசினாள். "அன்மீ நான் சொல்வதைக் கேள்" என்று எனக்கு ஏசிய அதே குரலினால் சொன்னாள். 'நாங்கள் உனது மரண உடுப்பையும் சப்பாத்தையும் பருத்தித் துணியில் தைத்துள்ளோம்' என்று அவள் என்னிடம் கூறிய போது என்னை அச்சம் ஆட்கொண்டது. "அன்மீ..." அவளது உதடுகள் தொடர்ந்தும் முணுமுணுத்தன.



'உனது மரணச் சடங்கானது பெரிதாக இடம் பெறாது. ஏனெனில் நீ இன்னும் ஒரு பிள்ளைதானே. நீ இறந்தால் உனது வாழ்க்கை மிகவும் குறுகியது. அத்தோடு இந்தக் குடும்பத்திற்கு ஒரு கடனாகத்தான் நீ இருந்திருக்கிறாய். இதனால் நீ சாதாரணமாகவே அடக்கம் செய்யப்படுவாய். உனக்கான எங்கள் துக்க அனுட்டானங்கள்கூட குறுகியதாகத்தான் இருக்கும்.'

அம்மம்மாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது கழுத்துப் புண்ணினால் ஏற்பட்ட எரிவையும் விடவும் மிகவும் பெரிய வேதனை எனக்கு ஏற்பட்டது.

"உனது தாய் அவளது அழுகையைத் தானாக நிறுத்திக்கொண்டு இங்கிருந்து போய்விட்டாள். நீ விரைவில் குணமடையாவிட்டால் அவள் உன்னை மறந்துவிடுவாள்" என்று சூப்புச் சுட்டதனால் ஏற்பட்ட புண்ணினால் நான் இறந்துவிடுவேன், நான் படுநோயாளியாக மாறிவிட்டேன் என்னும் தோரணையில் அம்மம்மா பேசினாள்.

நான் இந்த இவர்களின் நரகத்தில் இருந்து வெளியுலகத்திற்கு வர விரும்பினேன். எனது அம்மாவைச் சந்திக்கவும் விருப்பப்பட்டேன். எனது கண்களும் என் கழுத்துப் போன்று வேதனையைத் தரும்வரையும் ஒவ்வொரு இரவும் அழுது தள்ளினேன்.

எனக்கருகில் அமர்ந்திருந்த அம்மம்மா ஒரு பழச் சாற்றினால் எனக்கு ஒத்தடமிட்டாள். நான் நித்திரையில் ஆழ்ந்தபோது சூப்புச் சுட்ட காயங்களில் இருந்த அழிந்த தோலின் பாகங்களை அகற்றி அவள் புண்களைத் துப்பரவு செய்தாள்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு என் அம்மாவின் நினைவு போன்றே இந்தத் தழும்பும் எனக்கு ஒரு நினைவாக இருந்தது. இப்படித்தான் காயங்களும் ஆறுகின்றன. அவை தாமாகவே மூடிக் கொள்கின்றன. அவை மூடப்பட்டால் அதற்குள் எத்தனை கொடுமைகள், வேதனைகள், விரும்பத்தகாத நினைவுகள் இருந்தன என்பது எவருக்கும் தெரியாது.

எனது தாய் ஒரு கனவுத் தோற்றத்தைக் கொண்டவள். தற்போது அம்மம்மாவின் கட்டிலில் உட்கார்ந்து இருக்கும் பெண் எனது நினைவிற்கெட்டியபடி எனது தாய்தானா? என்று எண்ணத் தோன்றுகிறது. எனினும் நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவளை நேசித்தேன். அவள் திரும்பி வந்தது ஒன்றே எனக்குப் போதும் போன்று இருந்தது. நடந்த சம்பவங்களை அவள் எனக்கு விளக்க வேண்டியதில்லை. அம்மம்மா அம்மாவை ஏன் வீட்டைவிட்டு வெளியேற்றினாள் என்பது எனக்குத் தெரியும். அம்மா Wu Tsingஐத் திருமணம் செய்ததும் எனக்குத் தெரியும்.

இந்த நிலையில்தான் நான் அம்மாவை நேசித்தேன். அவள் எனது உணர்வுகளில் ஒரு பகுதியாக இருந்தாள். எனது உள்ளுணர்வு இதைச் சொல்லிக்கொண்டே இருந்தது.

நான் அம்மம்மாவின் அறைக்கு அன்றிரவு அழைக்கப்பட்டபோது பிந்திவிட்டது. அம்மம்மாவின் இறுதிநேரம் வந்துவிட்டது. அம்மம்மா எந்தநேரத்திலும் மரணிக்கலாம் என மாமி எனக்குச் சொன்னாள். இதனால் நான் அம்மம்மாமீது கொண்டுள்ள மதிப்பையும் மரியாதையையும் காட்டவேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் அவள் சொன்னாள். நான் தூய உடையொன்றை **அணிந்துகொண்டு** அம்மம்மாவின் கட்டிலின் கால்மாட்டில் நின்றிருந்தேன்.

எனக்கு ஒருபுறம் மாமியும் மறுபுறம் மாமாவும் நின்றிருந்தார்கள். நான் கொஞ்சமாக அழுதேன். ஆனால் வாய்விட்டுச் சத்தமாக அழவில்லை. அறையின் அடுத்தமூலையில் அம்மா நின்றிருந்தாள். அவள் அசையாமல் அமைதியாக ஆனால் துக்கம் நிறைந்தவளாகக் காணப்பட்டாள்.

ஒரு சட்டியில் இருந்து ஆவி வந்து கொண்டிருந்தது. அதற்குள் பல்வேறு இலை, குழைகளையும் மூலிகைகளையும் போட்டு அவிய விட்டிருந்தார்கள். நான் அம்மாவை அவதானித்தேன். அவள் தனது கையொன்றை உயர்த்திப் பிடித்தபடி மறு கையில் கூர்மையான கத்தி ஒன்றினை எடுத்து உயர்த்திய கையின் கீழ்ப்புற சதைப்பகுதியில் ஒரு துண்டை வெட்டினாள். நான் என் கண்களை மூட முயற்சித்தேன். ஆனால் முடியவில்லை. அம்மா தனது கையில் இருந்து ஒரு துண்டு இறைச்சியை வெட்டி **எடுத்தாள். அவளது கண்களில்** கண்ணீர் பனித்தது. கையில் இருந்து பீறிட்ட இரத்தம் அறைக்குள் நிலத்தில் சிந்தியது.

அம்மா தனது கையினாலேயே தனது இறைச்சியை கொதித்துக் கொண்டிருக்கும் அந்த இலை, குழை, மூலிகைச் சூப்புச் சட்டிக்குள் இட்டாள். இதன்மூலம் மிகவும் பழைமை வாய்ந்த நம்பிக்கை ஒன்றை அவள் நிறைவேற்றியுள்ளாள்.

**என் அம்மாவின் நினைவு போன்றே இந்தத் தழும்பும் எனக்கு ஒரு நினைவாக இருந்தது. இப்படித்தான் காயங்களும் ஆறுகின்றன. அவை தாமாகவே மூடிக் கொள்கின்றன. அவை மூடப்பட்டால் அதற்குள் எத்தனை கொடுமைகள், வேதனைகள், விரும்பத்தகாத நினைவுகள் இருந்தன என்பது எவருக்கும் தெரியாது.**

மரணப் படுக்கையில் உள்ள தாயைக் காப்பாற்ற ஒவ்வொரு மகளும் எடுக்கும் கடைசி முயற்சியும் கடைசி மருந்தும் இதுதான். இதனால் குணப்படுத்த முடியவில்லை என்றால் அடுத்தது மரணம்தான்.

அம்மம்மாவின் வாயை மிகவும் கஷ்டப்பட்டுத் திறந்த அம்மா அந்தச் சூப்பினை கொஞ்சம் கொஞ்சமாக வாயில் இட்டாள். எனினும் அம்மம்மா இன்றிரவு இறப்பதை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. நான் இளவயதுப் பெண்ணாக இருந்தபோதும் இதனால் ஏற்படும் வலியையும் அந்த வலியின் பெறுமதியையும் விளங்கிக் கொண்டேன்.

இதுதான் மகள் தாயொருத்திக்குச் செய்யும் இறுதிக் கடமை. இறுதி மரியாதை. இதன் மூலமான வலியானது இங்கு கணக்கெடுக்கப்படுவதில்லை. நீ வலியைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது. சில வேளைகளில் உன்னை நினைவு கூர்வதற்குள்ள ஒரே ஒரு வாய்ப்பு இதுதான். உனது அம்மாவும் உனது அம்மாவின் அம்மாவும்கூட இதையே செய்ய வேண்டி இருந்தது என்பதுதான் அந்தச் சமூகத்தின் நம்பிக்கை.



**அங்கு எவருமே இல்லை என்றால் தழும்பும் இல்லை தோலும் இல்லை இறைச்சியும் இல்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமார்க்ஸ் என்கிற அமாகாத்மாவிற்கு

பிரேம் : ரமேஷ்

திரு. அ. மார்க்ஸ் அவர்களுடன் ஷோபாசக்தி அவர்கள் மேற்கொண்ட நேர்காணலில் (அ. மார்க்ஸ் ஓர் இடைமறிப்பு; எக்ஸில், ஏப்.-அக். 2000, பக்கம் 88-89) அ. மார்க்ஸ் எங்களைப்பற்றி (பிரேம்: ரமேஷ்) குறிப்பிட்டிருந்த விமர்சனத்திற்கு பதிலாக கீழ்க்காணும் எழுத்துக்கள் அமைகின்றன.

**1.** ஷோபாசக்தி: இந்தியாடுடே ஜெயமோகன் பற்றி 'பின்நவீன இலக்கியவாதி' என்று குறிப்பிட்டுள்ளது. இந்தக் குறிப்பு வெளியாகி 24 மணி நேரத்திற்குள் சாருநிவேதிதா, ரமேஷ்:பிரேம் போன்றோர் நஞ்சருந்தி தற்கொலை செய்திருக்க வேண்டாமா?

**பதில்:** அன்பிற்குரிய ஷோபாசக்திக்கு,

ஒரு சிறுகதையும் ஒரு பக்கத்தில் நூல் மதிப்புரையும் வருவதாக அறிகிறோம். இதுவரை, இந்தியாடுடே இதழை நாங்கள் புரட்டிப் பார்த்த தருணங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். எனவே, இந்தியாடுடே என்கிற வஸ்து அல்லது நிகழ்வு என்பது எங்களுக்கு அப்பாற்பட்டது மட்டுமல்ல அர்ப்பமானதுமாகும்.

இந்தியாடுடேயில் இதுவரை எங்களைப்பற்றியோ எங்களுடைய நூல்களைப்பற்றியோ சிறுகுறிப்புக் கூட வந்ததில்லை. எனவே இந்தியாடுடே ஜெயமோகனை 'பின்நவீன இலக்கியவாதி' எனச் சொன்னதற்கு நாங்கள் தற்கொலை செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. மாறாக செயல்வீரர்களான அ. மார்க்ஸோ அல்லது சாருநிவேதிதாவோ தான் தற்கொலை செய்துகொள்ளவேண்டும். ஏன்?

அ. மார்க்ஸ் இந்தியாடுடேவால் மலம் துடைத்தார். பிறகு அதனாலேயே தன் முகம் துடைத்தார். ஏதோவொரு ஆண்டின் இலக்கியமலரை மலம் துடைத்துப் பரபரப்பை ஏற்படுத்திய இவர்; அந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் அதைத் தொடர்ந்த ஆண்டின் மலரில் தலித் எழுத்தாளர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டதால் புல்லரித்துப்போய் பட்டி தொட்டியெல்லாம் பாராட்டுக் கூட்டம் போட்டு அந்த மலரை சேரிப்பகுதிகள் தோறும் விளம்பரம் செய்தார். இந்தியாடுடேயிற்கு ஒரு இலக்கிய அறிவார்ந்த அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்தார்.

> **சுமார் 12 ஆண்டுகளாக எங்களுடைய கதைகள், காவியங்கள், குறுநாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள், நாவல் என எவ்வளவோ வெளிவந்திருக்கின்றன. இவைபற்றி நீங்கள் இதுவரை வாய் திறந்ததில்லை. பிரேம்: ரமேஷ் என்ற இரு எழுத்தாளர்கள் தமிழில் இருக்கிறார்கள் என்பதே உங்களுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் சமீபத்தில் நாங்கள் ஜெயமோகன், சு.ரா. பின்னாடி சென்று கொண்டிருப்பது மட்டும் உங்கள் பார்வைக்குப் பட்டுவிட்டதே!**

உங்களுடைய கேள்வியிலிருந்து எங்களை நீங்கள் 'பின்நவீன இலக்கியவாதிகள்' என்று அடையாளம் கண்டதற்கு நன்றி. ஆனால், சிறு திருத்தம் உள்ளது. நாங்கள் 'பின்நவீன இலக்கியவாதிகள்' அல்லர். நாங்கள் பின்நவீனத்துவ இலக்கியவாதிகள்.

இந்தியாடுடே இதழ் ஜெயமோகனை 'பின்நவீன இலக்கியவாதி' என்று குறிப்பிட்டதை நாங்கள் இதுவரை பார்க்கவில்லை. மேலும், இந்தியாடுடே ஓர் இலக்கிய இதழ் அல்ல. அதில் மூன்று பக்கங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதுச்சேரியில் தலித் கலைவிழாவில் அந்த மலரை விற்பதற்கு - அந்த மலராலேயே பந்தலை (விற்பனைக்கூடம்) எழுப்பி அட்டகாசமாகக் கூவிக் கூவி விற்றார். எனவே இவருக்கும் இந்தியாடுடே யிற்கும் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது. எனவே இந்தியாடுடேயில் ஜெயமோகனைப்பற்றி இப்படி எழுதியதற்காக இவர் வேண்டுமானால் அந்த நிறுவனத்தின் வாசலில் நின்று தீக்குளிக்கலாம்.

அடுத்தது சாருநிவேதிதா: இவர் ஓர் இந்தியா டுடே எழுத்தாளர். இவருடைய கதைகள், பேட்டிகள், விவாதங்கள், வண்ணப்புகைப்படங்கள், துணுக்கு கள் என வழங்கி இந்தியாடுடேயை தொடர்ந்து அலங்கரித்து வருபவர். இவர் இந்தியாடுடேயில் தொடர்ந்து இடம்பெறவும், அதன் ஆசிரியருக்கு அணுக்கத் தொண்டனாகவும் இருக்கவேண்டி மேற்கொண்ட காரியங்கள் யாவும் இலக்கிய வாழ்வியலுக்கு அப்பாற்பட்டவை. எங்களுக்குத் தெரிந்தவரையில் இவர் வாஸந்தி வீட்டு வளர்ப்பு நாய். இப்படி நாயாக மாறுவதற்கு பெரும் எழுத் தாளர் கூட்டம் போட்டி போடுகிறது. சாருநிவேதிதா இந்தத் தகுதியை அடைய மேற்கொண்ட செயல் களை எழுதிக்கொண்டு போனால் ஒரு நூறு பக்கங் களைத் தாண்டும். எனவே சாருநிவேதிதா இந்தியா டுடேயைக் கண்டித்துத் தன்னை மாயத்துக் கொள்ளமாட்டார். மாறாக ஜெயமோகனுக்கு வாழ்த்துக் கடிதம் எழுதுவார்; எழுதி இருக்கிறார். இவைபற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதுகிறோம். தற்சமயம் இவர் 'காலச்சுவடு' சென்னை அலுவலகத்தின் சம்பளம் வாங்காத 'ஆபீஸ்பாய்' என்பது உங்களுக்குத் தெரியாதா? பாரீஸ் வந்தபோது அ. மார்க்ஸ் சொல்லவில்லையா?

**2.** அ. மார்க்ஸ்: சாருநிவேதிதாவைப் பொறுத்த மட்டில் அவர் நிச்சயம் இந்தக்கூற்றை ஏற்கமாட்டார் என உறுதியாகச் சொல்லமுடியும். பிரேம்:ரமேஷ் பற்றி சொல்லமுடியாது. அவர்கள் எந்த நேரத்தில் என்ன கருத்தைச் சொல்வார்கள், யார் பின்னாடி போவார்கள் என்று சொல்லமுடியாது. சமீபமாக அவர்கள் ஜெயமோகன் பின்னாடியும் சுந்தர ராமசாமி பின்னாடியும் சுத்திக் கொண்டிருக்கி றார்கள்.

**பதில்:** எங்கள் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தோழர் அ. மார்க்ஸ் அவர்களுக்கு, சாரு நிவேதிதாமீது நீங்கள் கொண்ட உறுதிக்கு நன்றி. ஆனால், சாருநிவேதிதா மிகச் சமீபத்தில் ('விஷ்ணு புரம்' விமர்சனக்கூட்டத்தில் நீங்கள் (சென்னையில்) பேசிய பிறகு) ஜெயமோகனுக்கு வாரம் ஒரு கடிதம் வீதம் எழுதி ஒரு நூலாகப் போடும் அளவிற்கு உங் களை 'வாங்கு வாங்கு' என்று வாங்கியிருக்கிறாரே தெரியுமா? அந்தக் கடிதங்களில் ஏதாவது ஒன்றை ஜெயமோகன் பிரசுரித்தால் போதும், சாருநிவேதிதா வுக்கும் உங்களுக்குமான கூட்டணி பணாலாகி விடும். சாருநிவேதிதா மட்டுமல்ல; நீங்களும் ஒரு காரியவாதி, சந்தர்ப்பவாதி என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

சாருநிவேதிதா தினமலரில் உங்களையும் உங்க ளுடைய நிறப்பிரிகைத் தோழர்களையும் அசிங்கப் படுத்தி தொடர்ந்து சிறுகதைகளை எழுதி வந்ததை மறந்துவிட்டீர்களா? உதாரணம்: ப.கல்யா ணியைப்பற்றி 'மீனாட்சி' என்ற கதை, 'ரவிக் குமாரைப் பற்றி 'சிதைவு' என்ற கதை. கோ. சுகுமாரன் (இவர் PUCL செயலாளர், வீரப் பனிடமிருந்து கல்யா ணியுடன் சேர்ந்து ராஜ்குமாரை மீட்டு வந்தவர்) குறித்து 'தொழில்' என்ற கதை. எதிர்கலாச்சார நடவ டிக்கையாக நீங்கள் மாட்டு மாமிசம் தின்று புரட்சி செய்ததைக் கிண்டலடித்து 'எனது முதல் ஆங்கிலக்கடிதம்' என்ற கதை (பார்க்க : 'நேநோ' சிறுகதைத் தொகுப்பு) எனப் பலப்பல கதைகளும் ஜோல்னாப் பையன், கல்லுளிமங்கன் என்ற பெயர்களில் ஏகப்பட்ட துணுக் குகளும் எழுதி தமிழ்நாட்டையே கலக்கினாரே மறந்துவிட்டீரா? அப்போது சாருநிவேதிதாவைப் பழி தீர்க்க நீங்கள் என்ன செய்தீர்கள்? மறந்து விட்டீரா? சரி, ஞாபகப்படுத்துகிறோம். 'நிறப்பிரிகை' இலக்கிய இணைப்பில் ரவிக்குமாரை விட்டுக் கதை எழுத வைத்தீர்கள். சாருநிவேதிதாவின் அந்தரங்க வாழ்க்கையின் குரூரத்தை 'குல்ஃபி' என்று கதை யாக எழுதி ரவிக்குமார் பழி தீர்த்ததை இவ்வளவு சுலபமாக மறந்துவிட்டீரா? மறதி என்பது மூன்றாம்தர அரசியல்வாதிகளுக்குச் சகஜம்தான் என்கிறீர் களா? அந்த 'குல்ஃபி' கதையைத் தூக்கிக்கொண்டு சாருநிவேதிதாவுக்கு எதிராக ஓர் இயக்கத்தையே கட்டினீர் தோழரே! திருச்சி 'நிறப்பிரிகை' தோழர் கிராமியனைக் கேட்டால் கதை கதையாகச் சொல்லுவார்.

ஆக, நீங்கள் இன்று பின்நவீனக் கலகக் கலைஞனாக தூக்கிக் கொண்டாடும் சாருநிவேதி

**தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழ் மரபை, தமிழ் இலக்கியப்பரப்பை ஒன்றானதாக பொதுவான தாகப் பார்க்கவில்லை. எங்கள் பரப்பு தனித்து உள்ள ஒன்று. தனித்த அடையாளத்தோடு பிறவற்றை அணுகுகிறோம். பொதுக்களத்தில் வருபவற்றை பகுப்பாய்வு செய்கிறோம். எல்லா பிரதிக்கும் வெளியில் நின்றே முதலில் தொடங்குகிறோம். இது பின்நவீனத்துவத்தின் முதல் கட்ட அற அழகியல் நிலை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாவை உறுதியாக நம்பலாம். அவர் ஜெய மோகனை பின்நவீன இலக்கியவாதி என்று சொல்ல மாட்டார். ஆனால், "தமிழில் நீங்களும் (ஜெய மோகன்) நானும்தான் முதன்மையான எழுத்தா ளர்கள்" என கடிதம் எழுதுவார்; எழுதி இருக்கிறார்.

"சமீப காலமாக ஜெயமோகன் பின்னாடியும் சுந்தரராமசாமி பின்னாடியும் சுத்திக் கொண்டிருக்கி றார்கள்" என்று எங்களைப் பற்றிய மேலான தகவலை பாரீசிற்குச் சென்று வழங்கியிருக் கிறீர்கள்; நன்றி. சுமார் 12 ஆண்டுகளாக எங்களு டைய கதைகள், காவியங்கள், குறுநாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள், நாவல் என எவ்வளவோ வெளிவந்திருக்கின்றன; இவைபற்றி நீங்கள் இதுவரை வாய் திறந்ததில்லை. பிரேம்: ரமேஷ் என்ற இரு எழுத்தாளர்கள் தமிழில் இருக்கி றார்கள் என்பதே உங்களுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் சமீபத்தில் நாங்கள் ஜெய மோகன், சு.ரா. பின்னாடி சென்று கொண்டிருப்பது மட்டும் உங்கள் பார்வைக்குப் பட்டுவிட்டதே! இது எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம்! எவ்வளவு எழுதியும் எங்களைக் கண்டு கொள்ளாத நீங்கள், மேற்படி இருவரின் பின்னால் போவதை மட்டும் கண்டு போய் பாரீசுப் பட்டணத்திற்குச் சொல்வது - ஆஹா! என்னே அறிவின் முதிர்ச்சி! பெருந்தன்மை!

***

சுமார் கடந்த 20 ஆண்டுகாலமாக தமிழ்ச் சூழலில் 'நவீன சிந்தனைகளை' அறிமுகப்படுத்தி பரவலான விவாதங்களை ஏற்படுத்தி வருபவர்களுள் குறிப்பிடத்தக்கவரான பேராசிரியர் அ. மார்க்ஸுக்கு படைப்பிலக்கியவாதிகளிடையே உரையாடல் என்பதே பின்னால் சுத்திக்கொண்டிருக்கும் விஷய மாக மட்டுமே தோன்றுவது என்பது அனுபவத்தின் அடிப்படையில் வந்த அறிவு என்பதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது.

நான்கைந்து நூல்களை கையில் - பிரிக்காமல் பத்திரமாக வைத்துக் கொண்டு பின்னாலேயே சுத்த சில தொண்டர் அடிப்பொடிகளை உருவாக்குவ தையே தனது வாழ்நாள் பணியாகக் கொண்டு செயல்படும் இந்தப் பேராசிரியருக்கு வேறு எப்படியும் இந்த இலக்கிய உரையாடல்களைப் புரிந்துகொள்ள முடியாதுதான்.

ஜெயமோகன், சுந்தர ராமசாமி மட்டுமல்ல; படைப்பிலக்கியத்தில் ஈடுபடும் அனைவரோடும் எங்களுக்கு உரையாடல் தேவை. ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட பார்வையும் அணுகுமுறையும் இருக்கும் நிலையில் நாங்கள் எங்கள் அணுகு முறையை முன்வைக்கிறோம். பிறகு அது உரையாட லாகவும் விவாதமாகவும் தொடர்கிறது. இலக்கியம் என்பது தீர்ப்புகளைத் தள்ளிப்போடும் இடம், முடிவுகளைக் கலைத்துப் போடும் களம். மிகக் கூர்மையான கருத்து வேறுபாடுகளுடன் நாங்கள் முன்வைக்கும் அணுகுமுறைகளுக்கு பதிலாகவோ, மாற்றாகவோ கருத்துக்களை முன்வைப்பவர் களுடன்தான் இந்த உரையாடல் சாத்தியப் படுகிறது.

சு.ரா. வின் கருத்தியல் அணுகல்முறை இலக்கி யத்திற்கு முரணாக உள்ளது என்ற விமர்சனத்துடன் 'காற்றில் கலந்த பேரோசை' தொகுதியை அணுகி; அதில், இரட்டை முரண்களைக் கொண்டு கட்டப் படும் தர்க்கமே செயல்படுகிறது என்று நாங்கள் விளக்கிய பிறகும், சு.ரா. எங்களுடன் உரையாட லைத் தொடர்கிறார்.

ஜெயமோகனின் இலக்கிய ஆக்கங்களை விளக்கக்கூட, அவர் கட்டும் கோட்பாட்டு வகைமை கள் ஆற்றலற்றவை என்பதையும்; இந்திய தத்துவ/ இலக்கிய மரபுபற்றி அவர் விளக்குபவையும், கவிதை யியல்பற்றி அவர் விளக்க முனைபவையும் பன்முகத் தன்மைக்கு எதிராக உள்ளது என்பதையும் நாங்கள் விவாதமாக வைத்த பிறகும்; இலக்கியம் சார்ந்து வேறு முரண்களைப் பேசுவதாக எங்கள் விவாதம் தொடர்கிறது என்பதும்தான் எங்களுக்கு முக்கி யமே தவிர - உங்களைப்போல் அரசியலை அதன் பாசிசவெறியோடு மைய அதிகாரத்தில் வைக்க வேண்டிய தேவை எங்களுக்குக் கிடையாது. இது நவீனத்துவ வன்முறை. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர். உலக அளவிலான தத்துவக் கேள்வி களையும் இலக்கியப் பன்மைகளையும் உரையா டலில் வைக்க முனைந்து கொண்டிருக்கும் ஓரப்பகுதி படைப்பிலக்கியவாதிகள்.

'ஆசிரியன் செத்துவிட்டான்' என்பதைக் காதால் கேட்கக்கூட சகியாத authorityஐ நேசிக்கக்கூடிய ஒரு அரசியல் அடிப்படைவாதிதான், இலக்கியத்தில் உரையாடலே சாத்தியமில்லை என்பதைச் சட்ட மாக வைத்துக் கண்காணிக்கிறவனாக செயல் படுகிறான்.

அம்பேத்கர் மற்றும் புத்தமதம் பற்றி கருத்துக் களை உதிர்த்துக் கொண்டிருக்கவேண்டிய தேவை எங்களுக்குக் கிடையாது. இத்தனை ஆண்டுகளாக, ஒரு கருத்தை முன்வைப்பது என்பதே பிறரது கவனத்தை ஈர்ப்பது, எதிர்ப்பது என்பதற்காகத்தான் என்று அ. மார்க்ஸ் நினைத்துச் செயல்பட்டு வருவது ஆச்சரியமளிக்கக்கூடியதாக இல்லை. (இந்தியா டுடேவை மலந்துடைத்து தமிழகத்தின் புரட்சியாளர் ஆனவர் ஆயிற்றே) ஆனால், அம்பேத்கரை நாங்கள் விளக்கும் வகையிலும் புத்தத் தத்துவத்தை நாங்கள் வகுக்கும் வகையிலும் இங்கு கவனத்தைக் கவர சூழல் இல்லை. இவைபற்றி நாங்கள் எழுதி வருபவைகளைப் படித்த ஒருவருக்குத்தான் இதைப்பற்றி எல்லாம் கருத்துக் கூற அருகதை உண்டே தவிர, "பிரேம்:ரமேஷ் பற்றிச் சொல்ல முடியாது" என்று கூறிவிட்டு, ஆனால் மிக மிக உறுதியாகவும் அதிகார மமதையோடும் எங்களைப் பற்றிய தன்முனைப்பு யூகங்களைச் சொல்லும் ஒருவருக்கு - எந்தத் தகுதியும் கிடையாது.

'பின் தொடரும் நிழலின் குரல்' நாவல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பிரேம் பேச்சைக் கேட்ட அ. மார்க்ஸ் கூறுகிறார்: அது எதையும் தெளிவாகச் சொல்லாத சத்தற்ற பேச்சு அது. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர், நவீனத்துவ பாசிஸ்டுகளோ, ஸ்டாலினிஸ் டுகளோ அல்ல. எதையும் தெளிவாகத், தெள்ளத் தெளிவாகச் சொல்ல, அதுவும் சத்தாகச் சொல்ல,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் கலைந்த சில தொடர்களை இடையீடாக நினைவு கூர்ந்து முற்றுறுதியைக் கலைப்பவர்கள் அவ்வளவே. தெளிவாகவும் சத்தாகவும் (வீரம், பேராற்றல்) பேச மறைமலை அடிகளிலிருந்து அ. மார்க்ஸ் வரை தொழில்முறைக் கலைஞர்கள்/ சிந்தனாவாதிகள் தமிழில் இருந்துகொண்டே இருக்கிறார்கள். அது அவர்களின் வேலை. ஒரு குறிப்பான மையத்தைச் சுற்றி இறுக்கமாக ஒழுங் கமைக்கப்பட்ட வடிவக்கூறுகளை அ. மார்க்ஸ் தனது பேச்சுகளில் பரப்பிக் கொண்டிருப்பது அவரது உரிமை. அதை எங்களிடம் எதிர் பார்ப்பது மற்றமைகளின் இருப்பைப் பற்றி தீர்ப்புச் சொல்லும் மடமை ஆகும்.

"ஜெயமோகனைப் பின்நவீனத்துவவாதிகள் எனச் சொல்கிறவர்கள் எந்த அடிப்படையில் அப்படிச் சொல்கிறார்கள் என்பதை விளக்கினால் நல்லது" என்று அ. மார்க்ஸ் கேட்கிறார். அப்படிச் சொன்னவர்கள் யார் என்று அவர் விளக்கினால் நல்லது.

மேலும், "இருவரும் எப்படி 'விஷ்ணுபுரம்' நாவலை சிலாகிக்க முடிகிறது? எப்படி 'விஷ்ணுபுரம்' நாவல் அம்பேத்கர், புத்தமதத்துடன் இணைந்து நிற்கிறது. அல்லது அம்பேத்கர், புத்தமதச் சிந்தனைகளுக்கு விரோதமானாலும் எப்படி மகா இலக்கியமாகிறது என்பதைப் பதிவு செய்தால் நல்லது" என்றெல்லாம் மூச்சு முட்ட கூவுகிறார். இவற்றைப்பற்றி தற்போது விளக்கிவிடத் தான் வேண்டும்.

**எந்த எழுத்துக்கும் மையம் இருக்க முடியாது. அதை ஆக்கியவர்களும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. இது ரொலான் பாத் தனது மாணவர்களுக்குச் சொல்லித் தந்தது. பின்நவீனத்துவம் இதையும் கவனத்தில் கொண்டே பிரதிகளை வாசிக்கிறது.**

முதலில், நாங்கள் விஷ்ணுபுரம் நாவலைப்பற்றி பெரிய கூட்டங்களை ஏற்பாடு செய்து பேசிக் கொண்டிருக்கவில்லை. அதைப்பற்றி இரண்டு ஆண்டுகளாகத் தினந்தோறும் கடல்கடந்து போனாலும் விவாதிக்கவில்லை. தொலைபேசியிலும் கடிதத்திலும் அதைப்பற்றி மட்டுமே கத்திக் கொண்டிருக்கவில்லை. 'காலச்சுவடு' நேர்காணலில் "தமிழின் குறிப்பிடப்படவேண்டிய நாவலான விஷ்ணுபுரம்" என்று மட்டுமே பதிவு செய்திருக்கிறோம். மற்றவை அனைத்தும் இவர்களே மனப் பிரமையில் தடுமாறிக் கொட்டும் தகவல்கள்.

'விஷ்ணுபுரம்' ஒரு நவீன ஆக்கம். அது Metafictionஐ அதற்கு எதிர்த்திசையில் நகர வைத்து ஆக்கப்பட்ட ஒரு எழுத்து. இலக்கியத்தோடு எந்தப் பரிச்சயமோ, பயிற்சியோ, வாசிப்போ இல்லாத அ. மார்க்ஸ் போன்றவர்களுக்கு Material Author, Author of Book, Narrator, Narrative Machine என்பதை எல்லாம் விளக்கிக் கொண்டிருக்க முடியாது.

எந்த எழுத்துக்கும் மையம் இருக்க முடியாது. அதை ஆக்கியவர்களும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. இது ரொலான் பாத் தனது மாணவர்களுக்குச் சொல்லித் தந்தது. பின்நவீனத்துவம் இதையும் கவனத்தில் கொண்டே பிரதிகளை வாசிக்கிறது. ஆனால் அ. மார்க்ஸ் 'விஷ்ணுபுர'த்தின் மையம் 'இந்துக் கலாச்சாரம்'என முழுமையாகப் படித்து உணர்ந்து கூறுகிறார். இது அப்பட்டமான நவீனத்துவ சத்துடைய தெளிவான பார்வை.

இந்நாவல், இந்துக் கலாச்சாரம் என்று ஒன்றுமில்லை, இந்துத் தத்துவம் என்று ஒன்றுமில்லை, ஏன் விஷ்ணுபுரம் என்ற ஒன்றே இல்லை என்பதைச் சொல்லிச் செல்கிறது. கோவிலை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு பெரு நகரம் - அங்கே திருவிழாவும், சதிகளும், பெண்களுக்கெதிரான வன்முறைகளும், பல்வேறு பிரதேச மக்களின் ஊடாட்டங்களும், யாராலும் புரிந்து கொள்ள முடியாத வகையில் கலந்து கிடக்கிறது. அது சிற்ப சாஸ்திரிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பொறியா? ஒரு காவிய கர்த்தாவால் புகுத்தப்பட்ட கற்பனையா என்றெல்லாம் யூகங்களைப் பதிவு செய்து நகர்கிறது. ஒன்றை அழித்து இன்னொன்றாய் உருவான அதிகாரங்களின், தந்திரங்களின் போர்க்களம் அது. அங்கே எது தர்க்கம், எது அறம், எது உண்மை என்ற கேள்வி தொடர்கிறது. நீட்ஷேயின் Geneology of Moralஐயும் தேவி ப்ரசாத் சட்டோபாத்தியாவின் Lokayataவையும் அம்பேத்கர் இந்திய வரலாறுபற்றி - வைதீக மரபுபற்றி எழுதியவற்றையும் ஒரு முறை படித்துவிட்டு விஷ்ணுபுரத்தை வாசித்தால் இது ஒரு நாத்திக நாவல் என்பது தெரியவரும். அ. மார்க்ஸ் மிகவும் கஷ்டப்பட்டு எடுத்துத் தந்திருக்கும் உதாரணத்தையே அவருக்கு விளக்குவோம். விஷ்ணுபுரம் நாவலில் வரும் கணிகைகள் - அந் நகரின் இறைமையத்தைக் கேள்விக்குள்ளாக்குபவர்கள். அரசதிகாரத்தால், படையதிகாரத்தால் துன்பப்படுபவர்கள். அந்நகரின் இருப்புக்காக துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள். அப்படியெனில் விஷ்ணுவின் பேரருள் என்ன ஆனது? ஆழ்வார் ஒருவர் எப்படி உருவாகிறார்? கணிகைப் பெண் ஒருத்தியின் தூக்கிய காலைப் பார்த்து மிகையாக மைதூனம் கொண்டு அவர் ஆன்மீக பீடமாக மாறுகிறார். பாலியலுக்கும் இந்திய துறவு, ஆன்மீகம் என்பதற்குமுள்ள நகைப்பிற்குரிய உறவை-கலைத்துப் போட்டு விளையாட இது ஒரு தீவிரமான களம். இதில் புனிதங்களுக்கு இடம் ஏது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் விளக்கிக் கொண்டே போகலாம். நாவலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் இழையிழையாகப் பிரித்துப் போட்டு வாசித்துக் கொண்டே போகலாம். இவை தற்போது தேவையில்லை. எல்லாவற்றையும் நேர்கோட்டில் வாசித்து மையத்தைத் தேடிக் கண்டு பிடித்து அரசியல் நடத்தும் அ. மார்க்ஸ் போன்றவர்களுக்கு இலக்கியத்தை விளக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குக் கிடையாது. விஷ்ணுபுரத்தை முன் வைத்து, ஒரு இலக்கியப் பிரதியை வாசித்தல் எங்ஙனம் என்று பாலபாடத்திலிருந்து ஆரம்பித்து வகுப்பெடுக்க நாங்கள் தயார். அ. மார்க்ஸ் போன்றவர்கள் விண்ணப்பித்துக் கலந்து கொள்ளலாம்.

***

நாங்கள் திரும்பத் திரும்ப நினைவூட்டவேண்டிய ஒன்று: தமிழ்க்கலாச்சாரத்தை, தமிழ் மரபை, தமிழ் இலக்கியப் பரப்பை ஒன்றானதாக பொதுவானதாகப் பார்க்கவில்லை. எங்கள் பரப்பு தனித்து உள்ள ஒன்று. தனித்த அடையாளத்தோடு பிறவற்றை அணுகுகிறோம். பொதுக்களத்தில் வருபவற்றை பகுப்பாய்வு செய்கிறோம். எல்லா பிரதிக்கும் வெளியில் நின்றே முதலில் தொடங்குகிறோம். இது பின்நவீனத்துவத்தின் முதல் கட்ட அற அழகியல் நிலை. தமிழ் இந்திய மரபுகளில் மறைக்கப்பட்ட, உப கலாச்சாரங்களின் ஆக்கபூர்வமான கூறுகளைத் தேடுவதோடு; முற்றிலும் வேறுபடும் படைப்புச் சார்ந்த உரிமையை எங்களுடைய எழுத்துக்கள் மூலம் தொடர்ந்து நிகழ்வாக்கிக் கொண்டிருக்கி றோம். இதில் அ. மார்க்ஸ் போன்ற whole sale பின்நவீன வாதிகளுடன் எங்களுக்கு உடன்படவோ, முரண்படவோ என்ன இருக்கிறது?

'நிறப்பிரிகை' சார்ந்த தளத்தில் சில உரையாடல்களை முன் வைத்ததற்காகவும், படைப்பிலக்கியத்திற்கான முக்கியத்துவத்தை தொடர்ந்து நாங்கள் நினைவூட்டியதற்காகவும் அ. மார்க்ஸ் மற்றும் 'நிறப்பிரிகை'க் குழுவினர் ஒரு இயக்கமே கட்டி எங்களை நேரடியாகத் தாக்க வந்தார்கள். எழுத்துக்காக முழுநேரத்தையும் செலவிடும் எங்களுக்கு சிறு வருமானத்திற்காக ஒரு வேலையில் அமர எத்தனித்தபோது அதைத் தடுத்து நிறுத்தவும் எங்களைத் தொடர்ந்து எழுதவிடாமல் செய்வதற்கான குறுக்குவழி சதிகளையும் செய்து வந்தார்கள். நாங்கள் முன்வைக்கும் எந்த ஒரு கருத்தையும் முதலில் கொஞ்சக்காலம் எதிர்த்தும் வசைபாடியும் இருந்துவிட்டு, அதையே பின் தமதாகத் தூக்கி வைத்துக்கொண்டு திரிபவர்கள். இதன்மூலம் உருவான இவர்களின் 'குற்ற உணர்வை' மறைக்க பல்வேறு வதந்திகளை, அவதூறுகளை பரப்பித் திரிகிறவர்கள்.

இவர்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உள் அடிதடிகளையும் பேரங்களையும் ஒப்பந்தங்களையும் மறைக்க ஏதாவது கற்பனை எதிரிகளை உருவாக்கி reactive commondoக்களாக அணி வகுப்பு நடத்துபவர்கள். அ. மார்க்ஸ் போன்றவர்களின் இந்தவகை முயற்சிகள் எங்களிடம் தோல்வி அடைந்ததின் கோபம் அவ்வப்போது பல்வேறு வகைகளில் வெளிப்படும். தனது மகளுக்கு குமுதத்தில் வேலை கிடைத்ததும் "குமுதத்தைப் பொறுத்த மட்டில் பல்வேறு மாற்றங்கள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன" எனக்கூறி தனது குடும்ப நலனுக்காக உரையாடலில் ஈடுபட்டு அதையும் 'பின்நவீனத்துவப் புனிதச் செயலாக' விளக்கம் தருவார் அ. மார்க்ஸ்.

இந்த 'இடைமறிப்பில்' எங்களைப்பற்றி தனது ஞான உரையைத் தொடங்குமுன் அவர் சிலவற்றை யோசித்து இருக்கவேண்டும். ரமேஷ்:பிரேம் எழுத்துக்களைப் படித்திருக்கிறோமா? அவர்களின் எழுத்துக்களில் என்ன கூறி வருகிறார்கள்? அவர்கள் 'விஷ்ணுபுரம்' நாவலை பின்நவீனத்துவ எழுத்து என்று எங்காவது குறிப்பிட்டிருக்கிறார்களா? எதுவும் தோணவில்லை. இப்படி பொய்களையும் வதந்திகளையும் வைத்துக்கொண்டு இங்கு இலக்கிய தத்துவ விவாதங்களை நடத்துவதென்றால் நாங்கள் எத்தனையோ தொகுதிகளை எழுதிச் செல்லமுடியுமே!

"ரெஸ்ரோரண்டுகளில் அடுப்பிலும் நெருப்பிலும் வெந்து கண்ணீரும் சோறும் தின்று கொண்டிருக்கும் எங்களுடைய செலவில் வருடம் இரண்டு முறை பிரான்சுக்கு வந்து வீட்டிலுள்ளவர்களுக்கு மருத்துவச் செலவு என்று கூறி பணம் திரட்டி வீடு கட்டவும் வாகனங்கள் வாங்கவும் பயன்படுத்துகிறாரே அ.மா. இது என்ன எதிர்க்கலாச்சாரம்" என்று புலம்பெயர்ந்த நண்பர்களில் சிலர் எங்களிடம் கேட்டபோது; எங்களுக்குத் தெரியாததைப்பற்றி கருத்துக் கூறமுடியாது என்றுதான் நாங்கள் தெரிவித்தோம். தவிர, எல்லாம் தெரிந்ததுபோல் பேட்டிகளில் விரிவாக விளக்கிக்கொண்டிருக்கவில்லை. இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம்கூட, யாரும் எதைப் பற்றியும் வதந்திகளைப் பரப்பி அதை இலக்கிய உரையாடல் என்று காட்டமுடியும் என்பதை விளக்குவதற்காகத்தான்.

இவர்களுடைய எதிர்கலாச்சார நாயகர் சாரு நிவேதிதா, எப்படியும் அ.மா. வைப்போல ஃபிரான்ஸுக்கு சென்றே தீருவேன் என்ன செய்தாவது என்று சூளுரைத்து எடுத்து வரும் "நாடோடித் தன்மையான வேர்களற்ற போஸ்ட் மாடர்னிச" முயற்சிகளைப்பற்றி அ. மார்க்ஸ் விரிவாக விளக்கவேண்டிய தேவை இருக்கிறது. ( 'ஸீரோ டிகிரி' நாவலைப்பற்றி முதலில் பேசியவர், பிறகு மௌனம் காப்பது ஏன்? அதைப் பற்றிய கட்டுரையை ஏன் வெளியிடவில்லை. அதைப் பற்றி ரமேஷ்:பிரேதன் முன்வைத்த கருத்துக்களை இதுவரை ஏன் எதிர்கொள்ளவில்லை?) பத்திரிகை நடத்தக்கூடிய புலம்பெயர்ந்த தமிழர்களை அவர் படும் கஷ்டங்களை, கடுழியங்களை "நேரில் சென்று பார்க்க" இவருடன், இவருடைய பக்தர்கள் நடத்தும் அடிதடி புதுச்சேரியில் நண்பர்கள் வீடுவரை தொடர்வதையும்கூட நான்லீனியராகவாவது இவர் விளக்கினால் நல்லது. இவை எல்லாம்தான் இலக்கிய தத்துவ உரையாடல்கள் என்று இவர் நம்பும் பட்சத்தில், சமீபத்திய நிறப்பிரிகை தமிழினி 2000 சிறப்புமலரைப் பார்த்தவர்களுக்கு இந்தவகைக் கேள்விகள் வரவே செய்யும்.

****



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சனதருமபோதினி
## வெளியீடும் அறிமுகமும்

### மயக்கம் தெளிந்த பார்வையில்...

சு. கருணாநிதி

பிரான்ஸில் ஒரு புத்தக வெளியீட்டிற்கு அழைக் கப்பட்டிருந்தேன். சென்றேன்; தண்ணி அடித்தேன்; சாப்பிட்டேன்; வந்தேன். பின்னொரு நாளில் வெறி இல்லாத நேரம் என் மனம் புத்தக வெளியீட்டிற்குப் போயிருந்தது.

வைபவ ஆரம்பத்திலே, 'இந்தா பிடி', 'குடி' என்ற கட்டாய தமிழ்ப் பண்பாட்டிலில்லாத விரும்பியவர் விரும்பியதை எடுக்கலாம் என்றது. பியரும் விஸ்கியும்.

சிலர் எடுக்கவில்லை.

பலர் எடுத்தனர்.

நானும் எடுத்தேன். எனக்கு ஒத்துப் போகக் கூடியதை எனக்களவாக. தண்ணி அடித்தால்தான் எனக்கு கதைவரும். சிந்தனையை ஒரு இடத்தில் கட்டிவைக்க முடியும். இதற்காக தண்ணியடிப்பது நீண்டகாலமாக. 'கோமா' நிலைக்கு தண்ணியடிப் பதில்லை. உற்சாக சந்தோஷ எழுநிலைவரை அளவாகக் குடிப்பேன்.

புத்தக வெளியீடும் அறிமுகமும் நடந்து தண்ணிக்கு முன் தயாரிக்கப்பட்ட தீர்மானத்திற்காக தண்ணியில் ஒப்புதல் கையொப்பமிட்டேன், வெள் ளைத்தாளில். பின்னர் வெள்ளைத்தாளில் என்ன எழுதப்பட்டதோ எனக்குத் தெரியாது. ஆனால் எடுத்த தீர்மானம் மிகத் தேவையானது.

சத்திரசிகிச்சை செய்யும்போது வேதனை தெரி யாமல் மனித உணர், உடல் நிலையை மயக்க வைப்பது இயல்பு. அது போலல்ல; ஆயினும் மதுவெறி; கொஞ்சம் மயக்கத்தை நோக்கிய 'மந்தநிலை', 'கொதிநிலை'. கொதிநிலையினதும் மந்தநிலையினதும் தாக்க இயக்கத்தின் பெறுபேறு ஒன்றுதான். கலந்து, உரை, ஆடல் உடன் கூடிய சுவையாகவே இருந்தது நிகழ்வு. செயற்கைச் சேர்க்கையிலான தண்ணியின் மயக்க நிலையில் எடுக்கப்படும் முடிவுகளும் தீர்மானங்களும் ஒப்பந்தங்களும் திட்டங்களும் செல்லுபடியற்றவை யாகிவிடும் சந்தர்ப்பமுண்டு. நிகழ்வின்பின் தண்ணியையும் சாப்பாட்டையும் கொடுத்து முயற்சியையும் செலவையும் நன்மைக்கு ஏதுவாகி யிருக்கலாம்.

சனதருமபோதினியில் தலித்துகளின் அவலங் கள், கொடுமைப்படுத்தல்கள், பிரச்சினைகள், போராட்டங்கள் பயன்படுவகையில் நல்லமுறையில் தொகுக்கப்பட்டிருந்தது. பின்னட்டைப்படம் சூரிய னுக்குப் பக்கத்தில் பிரசுரிக்கவேண்டிய படம். அகிலமும் அறியச்செய்யவேண்டிய அற்புதமான கருத்தமைப்பு.

கிணற்றினுள் பாம்பு விழுந்து செத்தால், செத்த இடத்தைத் தவிர்த்து விட்டு மற்றைய பகுதி நீரைப் பாவனைக்கெடுக்கலாமா? அதுபோல், 'உன்னத சங்கீதம்' என்ற கதையாடலால் சனதருமபோதினி கவனிக்கப்படாமல் போகலாம். இதைக் கதையாடல் என்று சாருநிவேதிதா என்ற பிரகிருதி எழுதி இருந்தார். இந்தக் கதையாடலை அன்றைய நிகழ்வில் சி. புஸ்பராஜா வெளிப்படையாக விமர்சித் துக் கண்டித்திருந்தார். இது ஒரு 69 கதை. சிற்றின்ப சிலிர்ப்புகளை பெருங்கொதிநிலையில் அனுபவிக்க எங்கும் கிடைக்காத சனதருமபோதினியைப் படியுங் கள். தமிழகத்திலிருந்து வரும் காமக் கிளர்ச்சிச் சஞ்சிகைகள் பலதை முன்பு படித்திருக்கிறேன் படங்களுடன். இதில் படமில்லை. 69 சுகம் உண்டு. இந்தக் கடுப்பெடுக்கும் கதை தலித்துகளின் போர்க்குரலினுள் அவலக்குரல்களிடை ஏன் வந்தது?

எழுதியவனில் குற்றம் இல்லை. எழுதுபவன் தன் அனுபவங்களையும் அறிவையும் வாழிடச் சூழலை யுமே வெளிப்படுத்துவான். அதைப் பிரசுரிப்பவர்கள், அதை வாசித்துப் பார்த்திருக்கலாமல்லவா? அந்தக் கதையில் வந்த சிறுமிக்கு 13 வயது. இதை வைத்து சட்ட நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் உண்டென்பது தொகுப்பாளர்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. இது தலித்துகள் மேல் பிரயோகிக்கும் மேட்டுக்குடி யின் வதையல்ல; அல்லது ஆணாதிக்கத்திற்குட் பட்ட பெண்ணின்மீதான வதையல்ல; குறைந்த பட்ச மதிப்பீடுகளை வைத்துக் கவனத்தில் எடுத்தாலும் இரண்டாவது வகையைச் சேர்ந்த கதையாடலைச் சொல்லலாம். அதை வாசிக்கக்கூடிய தமிழில் எழுதலாம். இந்தக் கதையில் எதுவும் சொல்லப்பட வில்லை. வெறும் மாமிசப்பசி. இந்தக் கதையைப் படிக்கும்போது 'சாரு'வையும் 'நிவேதிதா' மற்றும் பலருடனும் ஏதேதோ....

தேவ ஆவியின் நிமித்தம்

நிவேதாவே எங்களை எழுப்பாதேயும்.

சாத்தானின் கட்டளையின் நிமித்தம் எங்களுக் குள் இறங்காதேயும்

எழும்புதலைச் செய்யாதேயும் சாத்தானே!

உன்னதத்தின் உன்னதமாய் தேவஆவியால் கேட்கிறேன்

எழும்பிப் பிரகாசிக்காதேயும்

வேதாகமத்தின் சங்கீதத்தில் தேவனுக்கு 72 நாமங்கள் இருக்கின்றன.

அந்தச் சங்கீதங்களின் உன்னதங்களால் உன்னத சங்கீதங்களால் எம்மை ஆசீர்வதிக் காதேயும்.

ஆமென்.

அரகரோஹரா

உன்னத சங்கீதத்தால் தொகுப்பாளர்கள் இலட்சோப இலட்சம் தலித்துகளின் கண்ணீரை அவலத்தை ஒடுக்குமுறையை உரிமையை பகிடிக்கிடமாக்கி கேலி செய்திருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போதை கழற்றிய போர்வை

லக்ஷ்மி

சனதருமபோதினி அறிமுக நிகழ்வில் (04.02.2001, பிரான்ஸ்) பலரும் தமது உரையாடல்களின்போது பாலியல் நிந்தனைச் சொற்களைப் (தூஷண வார்த்தை களைப்) பாவித்தார்கள் எனக் கூட்டத்தில் பங்கு கொண்டவர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு பலரும் மோசமான போதைநிலையில் இருந்தார்கள் என சமாதானம் வேறு சொல்லப்படுகின்றது.

இந்தச் சமாதானங்களுக்கு அப்பால், பாலியல் நிந்தனைச் சொல்லாடல்கள் யாரையாவது நோக்கியோ அல்லது பொதுவாகவோ பாவிக்கப்பட்டாலும் அச்சொற்கள் பெண்களை அடிமைப்படுத்தும், (பாலியல் பண்டமாக பெண் காலம்காலமாக கருதப்பட்டுக்கொண்டு வருவதன் அடிப்படையில் இருந்து) பெண்களை இழிவுபடுத்தும் - பாலியல் இழிவாக்கும் ஆணாதிக்க மனோபாவத்தின் சொற்றொடர்களே என்பது பலருக்கும் தெரிந்த விடயம். இவர்களில் யாரும் இதன் சூத்திரத்தைத் தெரியாதவர்களல்ல.

புகலிடத்தின் விளிம்புநிலை மக்களின் போர்க்குரல்களாக தம்மைப் போலியாக அறிமுகம் செய்யும் சிலரின் தொடர்ச்சியான பல நிகழ்வுகளிலும் (அண்மைக் காலங்களாக) இப்படி நிகழ்ந்து வருகின்றது. இந்தப் பெண்கள்....? பெண்ணடிமைத்தனம்....? என்பன இவர்களின் விளிம்புநிலைக்குள் வராமல் விளிம்பில்தான் இன்னும் நிற்கின்றதோ தெரியவில்லை.

மேற்படி நிகழ்வுக்கு ஒரு பெண் தலைமை தாங்கியதும் (அதுவும் பெண் பாலியல் கவர்ச்சி (முதலாளித்துவத்தின் விளம்பர வெற்றி(?) அல்லது பெண்ணிய (தத்துவார்த்த) போலிக் கவர்ச்சி நோக்கிலோ...?) இன்னும் சில பெண்களும் கூட்டத்தில் பங்கேற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் (பெண்ணியவாதிகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்பவர்களும்கூட) எவரும் இது குறித்துக் கேள்வி எழுப்பவில்லை. போதாதற்கு இவர்கள் தங்களைப் பெண்ணியவாதிகள் என்றும் அறிமுகம் செய்து வருகிறார்கள். அதற்கு என்ன விலை (?) கொடுக்கவும் தயாராக இருக்கின்றார்கள்.

மொத்தத்தில் பெண்களாயினும் ஆண்களாயினும் இவை குறித்துக் கேள்விகள் எழுப்பாது மௌனமாக அங்கீகாரம் வழங்கிய அனைவரும், போதையில் பாலியல் நிந்தனை செய்தோரும், பாலியல் நிந்தனையூடு போதை ஏற்றியோரும் தங்களை ஆணாதிக்கவாதிகள் என்று மீண்டும் ஒருமுறை பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

**அடிக்குறிப்பு:**
மேற்படி கூட்டத்திற்கு உயிர்நிழல் சஞ்சிகைக்கு விசேடமாக அழைப்பு மறுக்கப்பட்டது.

---


## இலங்கையின் அரசியல் யாப்புகள்



சி. அ. யோதிலிங்கம்

இன்று இலங்கை யாப்பு மாற்றங்களை வேண்டி நிற்கின்ற காலத்திலிருப்பதால் அரசறிவியல் கற்கும் மாணவர்கள் மட்டுமன்றி அரசியல்வாதிகள், சாதாரண பொதுமக்கள் என்போரும் இலங்கையின் யாப்புகளை அறிந்திருக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் உள்ளது. இந்த வகையில் இந்நூல் மாணவர்களை மட்டுமல்ல அரசியல் யாப்பு அறிவின் தேவையை வேண்டி நிற்கின்ற அனைவருக்கும் உதவும்.

(பின் அட்டை குறிப்பு)

**வெளியீடு:**
**குமரன் புத்தக இல்லம்**
**210, டாம் வீதி, கொழும்பு—12**
**இலங்கை**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆன் பிராங்க்

## இருபதாம் நூற்றாண்டு மானுடம் : இனவதையின் ஒரு மனத்துளி 7

### தமிழில்: குயிலி



**செவ்வாய்க்கிழமை**
**29.09.1942**

அன்புடன் கிட்டிக்கு

மறைவாக வாழச் செல்பவர்களுக்கு அசாதாரணமான விஷயங்கள் நடக்க முடியும். கற்பனை பண்ணிப்பார், குளியற்தொட்டி இல்லாதபோது நாங்கள் கழுவும் தொட்டியைப் பாவிக்கிறோம். அலுவலகத்தில் (இங்கு நான் குறிப்பிடுவது என்னவென்றால் முழுக் கீழ்மாடியையும்தான்) சுடுநீர் இருப்பதனால் நாங்கள் ஏழு பேரும் இந்த செல்வ சௌகரியத்தை பயன்படுத்துவதற்காக முறைகள் வாரியாக அதைப் பாவிக்கிறோம்.

ஆனால், நாங்கள் எல்லாரும் எவ்வளவோ வித்தியாசமானவர்கள் சிலர் மற்றவர்களைவிடக் கூடப் பணிவானவர்கள். குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் இதனை நடத்துவதற்கு தனித்தனியே ஒவ்வொரு சொந்த இடத்தைக் கண்டு பிடித்தனர். பீற்றர் குசினியைப் பயன்படுத்துவான், அதற்குக் கண்ணாடிக் கதவு இருந்தபோதும். அவன் குளிக்கப் போகும்போது எங்கள் ஒவ்வொருவரிடமும் வந்து அரை மணித்தியாலத்துக்கு ஒருவரும் குசினியைக் கடந்து போகக் கூடாது என்று சொல்லுவான். அவன் நினைத்தான் இது போதுமென்று. திரு வான்டான் நேரே மேல்மாடிக்குப் போய்விடுவார். அவ்வளவு தூரத்திற்கு சுடுநீரைக் காவிச் சென்றாலும் அது அவருக்கு பயனுள்ளதுதான், தன்னுடைய அறையின் ஏகாந்தத்திலிருப்பதற்கு. திருமதி வான்டான் இந்த நாட்களில் குளிப்பதே இல்லை. அவர் எது நல்ல இடம் என்று தெரிவு செய்வதற்கு இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்பா தன்னுடைய பிரத்தியேக அலுவலறையிலேயே குளியலை முடித்துவிடுவார். அம்மா குசினியில் உள்ள மறைவு ஒன்றைப் பாவிப்பா. நானும் மார்கொட்டும் எங்களுடைய காக்காக் குளியலுக்கு அலுவலகத்தின் முன்பக்கத்தைத் தேர்ந்தெடுத்தோம். சனிக்கிழமை பின்னேரங்களில் அங்கிருக்கும் திரைச்சீலைகள் மூடப்பட்டிருக்கும். ஆகவே நாங்கள் அரை இருட்டில்தான் குளிப்போம்.

என்னவோ, எனக்கு இனியும் இந்த இடம் பிடிக்கவில்லை. போன கிழமை தொடக்கம் இதைவிட வசதியான ஒரு இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன். பெரிய அலுவலகத்தின் கழிப்பறையைப் பாவிக்கும்படி பீற்றர் எனக்கு ஒரு ஐடியா தந்தான். அதற்குள் நான் இருக்கலாம்; வெளிச்சத்தைப் போடலாம்; கதவைப் பூட்டலாம்; என்னுடைய குளித்த தண்ணியை வெளியே ஊற்றலாம்; துருவிப் பார்க்கும் கண்களில் இருந்து பாதுகாப்பாக இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னுடைய அழகான குளியலறையை நான் ஞாயிற்றுக்கிழமை முதன்முதலாக பரீட்சார்த்தமாக பாவித்துப் பார்த்தேன். இது ஒரு மொக்குத்தனமாகத் தோன்றினாலும் நான் நினைக்கிறேன் இதுதான் எல்லா இடத்தையும் விடச் சிறந்ததென்று. போன கிழமை கீழ்மாடியில் குழாய்கள் திருத்துபவர், வடிகால்களையும் தண்ணீர்க் குழாய்களையும் அலுவலகக் கழிப்பறையில் இருந்து வெளியில் பாதைவரையும் கொண்டு செல்வதற்காக வேலை செய்து கொண்டிருந்தார். இந்த முன்னேற்பாடு எல்லாம் குளிருக்குக் கெட்டியாகப்போகும் தண்ணீர்க் குழாய்களிற்காகத்தான் . ஒரு வேளை நாங்கள் மிகக்குளிரான குளிர்காலத்தை கடக்கநேர்ந்தால். குழாய்கள் திருத்துபவர் வேலைசெய்ய வந்தது என்பது எங்கள் எல்லாருக்கும் சந்தோஷமே இல்லாத விஷயம். நாங்கள் அன்று முழுக்கத் தண்ணீர் இல்லாது இருந்தோம் என்பது மட்டுமல்ல எங்களால் அன்று முழுக்க கழிப்பறைக்கும் போக முடியவில்லை. எவ்வாறு நாங்கள் இந்தக் கஷ்ட த்தைக் கடந்தோம் என்று இப்போது உனக்குச் சொல்வது அவ்வளவு சரியில்லை. என்ன இருந்தாலும் நான் அப்படியான விஷயங்களைக் கதைக்கிறேல்லை என்று அவதானமாய் இருக்கிறமாதிரி நடிக்கிற ஆளில்லை இப்படியான விஷயங்களைப்பற்றிக் கதைக்காமல் இருக்க.

இங்கு வந்த அன்றே நானும் அப்பாவும் எங்களுக்கு ஒரு சிறு கழிப்பான் வைத்திருந்தோம். ஒரு நல்ல ஏந்தியை வைத்திருக்காமல் நாங்கள் இதற்காக ஒரு இறுக்கமாக மூடிய கண்ணாடிச் சாடியைப் பயன்படுத்தினோம். குழாய்கள் திருத்தவேலை செய்பவர் வந்த அன்று நாங்கள் எங்களுடைய இயற்கையின் அழைப்புகளை இந்தச் சாடிகளினுள்ளே இட்டு பகலில் இருப்பறையில் வைத்தோம். நான் நினைக்கவில்லை, நாள் முழுவதும் அசையாமல் ஒன்றும் கதைக்காமல் இருப்பதைப்போல் இது ஒன்றும் மோசமானது என்று. இந்த தொணதொணப்பாத்தைக்கு இது எப்படியான பரீட்சை என்பதைக் கற்பனை செய்து பார்க்கக்கூட உன்னால் முடியாது.

சாதாரண நாட்களில் நான் குசுகுசுத்துத்தான் கதைக்கவேண்டும்; ஆனால் கதைக்க முடியாமல் அல்லது அசைய முடியாமல் இருப்பதென்பது அதைவிடப் பத்து மடங்கு மோசமானது. மூன்று நாட்களாக ஒரேயடியாக இருந்ததனால் என்னுடைய பிஷ்டம் விறைத்துப் போய் நொந்தது. படுக்கை நேரத்தில் சில பயிற்சிகள் உதவின.

❦❦❦

## வியாழக்கிழமை

## 01.10.1942

அன்புடன் கிட்டிக்கு

நேற்று நான் மிக மோசமான அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டேன். திடீரென எட்டு மணிக்கு மிகவும் பலத்த சத்தமாக மணி அடித்தது. நிச்சயமாக நான் நினைத்தேன் யாரோ வந்துவிட்டார்கள் என்று. உன்னால் கண்டு பிடிக்க முடியும் நான் யாரைக் கருதுகிறேன் என்று. ஆனால், ஒவ்வொருவரும் அது சில விஷமக்காரர்களாக அல்லது சிலவேளை தபாற்காரனாக இருக்கலாம் என்று சொன்னபொழுது நான் கொஞ்சம் அமைதியாக இருந்தேன்.

இங்கு நாட்கள் மிகவும் அமைதியாகிக் கொண்டிருக்கின்றன. லெவின், மருந்துக் கலவை செய்யும் ஒரு சிறிய யூதர் திரு. கிராளருக்காக குசினிக்குள் வேலை செய்கிறார். அவருக்கு முழுக்கட்டிடமும் தெரியும். அதனால் எப்பொழுதும் பயந்து கொண்டிருந்தோம், பழைய பரிசோதனைக் கூடத்திற்குள் எட்டிப்பார்க்க அவர் நினைத்தாலும் என்று. எலிகளைப் போல் மிகவும் அமைதியாக இருந்தோம். மூன்றுமாதங்களுக்கு முன்பு யார் நினைத்தார்கள் தன்னிஷ்டத்துக்குப் பாதரசம்போல் அசைந்து திரியும் ஆன் இப்படி மணித்தியாலக் கணக்காக அசையாமல் உட்கார்ந்திருக்கவேண்டும் என்று. இனியும் என்ன நடக்கவேண்டும்.

29ம் திகதி திருமதி வான்டானின் பிறந்தநாள். பெரிய அளவில் கொண்டாடப்பட முடியாவிட்டாலும் அவவைக் கௌரவப்படுத்தும் முகமாக நாங்கள் ஒரு சிறிய விருந்தை ஏற்பாடு செய்ய முடிந்தது. விசேஷமான ஒரு நல்ல சாப்பாடு. அவவிற்கு சில சிறிய பரிசுப் பொருட்களும் பூக்களும் கிடைத்தன. அவவுடைய கணவனிடமிருந்து சிவப்புக் கார்னேஷன்கள் கிடைத்தன. அது ஒரு குடும்ப சம்பிரதாயமாம். திருமதி வான்டானின் விஷயத்தில் ஒரு கணம் நிற்பாட்டி, நான் உனக்கு அவ எங்கடை அப்பாவிலை ஒரு கண் வைத்திருந்ததைப் பற்றி/ அவரை மயக்குவதற்கு எடுத்த முயற்சிகள் என்னைத் தொடர்ந்து நச்சரித்துக் கொண்டிருப்பதற்கான ஒரு மூலமாக இருக்கிறது என்பதைப்பற்றி உனக்கு சொல்லத்தான் வேணும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ அவருடைய கன்னத்தைத் தடவுவா. அவருடைய தலைமயிரைத் தொடுவா. தன்னுடைய பாவாடையைக் கொஞ்சம் உயர்த்துவா. இப்படியான சேட்டைகள் எல்லாம் செய்வா பிம் இன் கவனத்தைக் கவருவதற்காக. பிம். நல்ல வேளையாக, அவவை ஒரு ஏர்ப்புக்குரியவராகவோ அல்லது புதுமையானவராகவோ கருதவில்லை. எனவே அவர் இந்தச் சேட்டைகளுக்கெல்லாம் இடம் கொடுக்கவில்லை. என்னுடைய அம்மா இப்படி எல்லாம் திரு வான்டானுக்கு முன்னால் செய்வதில்லையே என்று நான் திருமதி வான்டானின் முகத்துக்கு நேராகவே சொன்னேன்.

அவ்வப்பொழுதுகளில் இருந்திருந்துவிட்டு பீற்றர் தன்னுடைய கூட்டை விட்டு வெளியில் வருவான். மிக ஜாலியாக இருக்கும். எங்களுக்கிடையில் ஒரு விடயத்தில் ஒற்றுமை உள்ளது. அதையொட்டி எல்லோரும் மிகத் தமாஷாக இருப்போம். எங்கள் இருவருக்கும் ஆடைகள் கட்டுவது ரொம்பப் பிடிக்கும். அவன் திருமதி வான்டானின் மிகவும் ஒடுக்கமான ஆடைகளில் ஒன்றைப் போட்டான். நான் அவனுடைய உடுப்பைப் போட்டேன். அவன் ஒரு தொப்பியைப் போட்டான். நான் ஒரு தொப்பியைப் போட்டேன். பெரியவர்கள் இரட்டிப்பாகச் சிரித்தார்கள். நாங்களும் அவர்களைப் போலவே மிக நன்றாக அனுபவித்தோம். எலி எனக்கும் மார்கொட்டுக்கும் புதுப்பாவாடைகள் பிஜோங்கர்வில் வேண்டிக்கொண்டு வந்தார். சாக்கு மாதிரி ஒரு துணி. பார்த்தால் பழசு மாதிரி. ஆனால் ஒவ்வொன்றும் முறையே 24 பிளோரின்*களும் 7.50 பிளோரின்களும். யுத்தத்திற்கு முன்பிருந்ததுடன் ஒப்பிடும்போது எவ்வளவு வித்தியாசம்!

இன்னொரு முக்கியமான மகிழ்ச்சியான விஷயம். எலி ஏதோ ஒரு பாடசாலை ஒன்றுக்கு கடிதம் எழுதி தபால்மூலம் நானும் பீற்றரும் மார்கொட்டும் சுருக்கெழுத்துக் கற்பதற்கு ஒழுங்கு செய்திருக்கிறார். இருந்து பார்! நாங்கள் எப்படி நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக அடுத்த வருஷம் இருப்போம் என்பதை. எப்படி இருப்பினும் இரகசிய மொழி ஒன்றில் எழுதத் தெரிந்திருப்பது மிகவும் முக்கியம்.

உன்னுடைய
ஆன்.



## சனிக்கிழமை
## 03.10.1942

அன்புடன் கிட்டிக்கு,

நேற்று எல்லாரும் என்னை ஒரே பகிடிபண்ணிக் கொண்டிருந்தார்கள், நான் திரு வான்டானுக்குப் பக்கத்தில் அவருடைய கட்டிலில் படுத்திருந்தேன் என்று. இவ்வளவு சின்னனாய். என்ன வெட்கம்! இந்த வகையான வேறு பிரதிபலிப்புகளும் இருந்தன. ஒரு பொசிப்புக் கதைக்காகத் தான் இப்படி. திரு வான்டானுடன் எப்போதும் நான் படுக்க விரும்ப மாட்டேன், மற்றவர்கள் சாதாரணமாகச் சொல்லும் அர்த்தத்தில்.

நேற்று ஒரு புதுச் சண்டை நடந்தது. அம்மா ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோலம் கொண்டுதான் நின்றா. என்னுடைய குழப்படிகள் எல்லாத்தையும் அப்பாவுக்குச் சொல்லிப் பெரிதாக ஆர்ப்பாட்டம் போட்டு அழுதா. நானும் கூடத்தான் கொஞ்சம் ரென்சன் ஆகிவிட்டேன். எனக்கும் ஏற்கனவே சரியான தலையிடியாக இருந்தது. கடைசியில் நான் அப்பாவுக்குச் சொன்னேன், எனக்கு அம்மாவை விட அவரைத்தான் அதிகமாகப் பிடிக்கிறது என்று. அதற்கு அவர் சொன்னார், நான் அதிலிருந்து மீண்டு விடுவேன் என்று. ஆனால் நான் அதை நம்பவில்லை. எனக்கு அம்மாவுடன் கொஞ்சம்கூட சமாளித்து நடக்கமுடியவில்லை. அவளைத் தொடர்ந்து சமாளிப்பதற்கு நான் ஒன்றும் பேசாது அமைதியாக இருக்கவேண்டும். எனக்குச் சில சமயங்களில் அவளுக்கு கன்னத்தைப் பொத்தி அறைய வேண்டும் போல் வருகிறது. அவளுடன் ஏன் நான் இவ்வளவு வெறுப்பாக இருக்கிறேன் என்று எனக்கு விளங்கவில்லை. அம்மாவுக்கு தலையிடியாக அல்லது சிறிது சுகயீனமாக இருக்கும்போது நானாக அம்மாவுக்கு முன்வந்து உதவி செய்ய வேண்டும் என்று அப்பா விரும்புகிறார் . ஆனால் என்னால் செய்ய இயலாது ஏனென்றால் எனக்கு அவளைப் பிடிக்கவில்லை. எனது மனத்தில் இருந்து அது வரவில்லை. அம்மா ஒரு நாளைக்கு இறந்து போவா என்பதனை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஆனால் அப்பா இறந்து போக வேண்டுமென்றால் என்னால் அதை ஜீரணிக்கவே முடியாது. நான் இப்படி நினைப்பது மிகவும் மோசமான விஷயம்தான். ஆனால் நான் அப்படித்தான் உணர்கிறேன். அம்மா இதையும், இன்னும் மிகுதியையும் கூட எப்போதும் வாசிக்கமாட்டா என்றுதான் நான் நினைக்கிறேன்.

இப்போ கொஞ்ச நாட்களாக வய்து வந்தவர் களுக்கான பெரும்பாலான புத்தகங்களை வாசிக்க என்னை அனுமதித்திருக்கிறார்கள். நான் இப்பொழுது Nico Van Suchtelen இன் L'Enfance d'Eva வாசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு இந்தப் புத்தகத்திற்கும் இளம் பெண்பிள்ளை களுக்கான கதைப்புத்தகங்களுக்கும் பெரிய வித்தியாசம் தெரியவில்லை.

ஆப்பிள் மரங்களில் ஆப்பிள் காய்ப்பது போல குழந்தைகளும் மரத்தில் காய்ப்பதாக ஈவா நம்புகிறாள். அவைகள் முற்றியதும் நாரைகள் அவற்றைப் பறித்துத் தாய்மார்களிடம் காவிக்கொண்டு வருகின்றன என்று எண்ணு கிறாள். ஆனால் அவளுடைய சிநேகிதியின் வீட்டில் உள்ள பூனை குட்டிகள் போட்டது. அவை அதனுடைய வயிற்றில் இருந்துதான் வந்தன. எனவே அவள் நினைத்தாள் பூனையும் கோழி மாதிரி முட்டை இட்டு அடைகாக்கிறது என்று. பிள்ளைப் பெறப்போகும் அம்மாமாரும் கொஞ்ச நாளைக்கு முன்பாக மேலே போய் முட்டை இட்டு பின்பு அடைகாப்பர். பிள்ளை பிறந்ததும் தாய்மார்கள் இன்னும் கொஞ்சம் பலவீனமாக இருப்பார்கள், அவ்வளவுகாலமும் குந்திக் கொண்டிருந்ததனால். ஈவா தனக்கும் ஒரு குழந்தை வேண்டுமென நினைத்தாள். அவள் ஒரு கம்பளித் துணியாலான சால்வைத் துண்டொன்றை எடுத்து நிலத்தில் விரித்தாள், கீழே முட்டை விழுவதற்காக. பிறகு அவள் குந்திக் கொண்டிருந்து நன்றாக முக்கினாள். அவள் கொக்கரிக்கத் தொடங்கினாள். ஆனால் முட்டை இல்லை. கடைசியாக நீண்ட நேரம் காத்திருந்த பிறகு ஏதோ வெளியே வந்தது. ஆனால் முட்டையில்லை, ஒரு நீளமான சாமான். ஓ! அவளுக்கு எவ்வளவோ வெட்கமாகப் போய்விட்டது. அந்த மொக்குப் பிள்ளை நினைத்தாள் தான் உடல்நலமில்லாமல் இருக்கிறேன் என்று. இது பகிடி, இல்லையா? L'enfance d'Evaஇல் குறுகிய ஒழுங்கைகளில் வைத்து ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்திற்கு பெண்களின் உடல்களை விற்கும் விடயங்களும் கேள்வியாக இருந்தது. இந்தத் தன்மையான விடயமாக இருந்தால் அந்த இடத்திலேயே உயிரை விட்டுச் செத்திருப்பேன். அத்தோடு ஈவாவிற்கு முதலாவது மாதவிடாய் வந்தது பற்றியும் புத்தகம் சொல்கிறது. நான் உண்மையில் அதை விரைவாக அடைய விரும்புகிறேன். குறைந்த பட்சம் நான் வயது வந்தவளாகவாவது இருப்பேன். அப்பா திரும்பவும் கத்தத் தொடங்குகிறார். என்னுடைய டயறியை பறித்து விடப்போவதாக பயமுறுத்திக் கொண்டிருக்கிறார். ஓ! இது தாங்க முடியாத தொல்லையாப் போச்சுது. இபபொழுது தொடக்கம் நான் என்னுடைய டயறியை ஒழித்து வைக்கப் போகிறேன். நான் என்னுடைய பிரெஞ்சுப் பாடத்தில் கஷ்டப்பட்டுப் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் இப்பொழுது La Belle Nivernaise வாசித்துக் கொண்டிருக்கிறேன்.



உன்னுடைய
ஆன்

●●●

## வெள்ளிக்கிழமை
## 09.10.1942

அன்புடன் கிட்டிக்கு,

இன்றைக்கு உனக்கு கவலையான மன உளைச்சல் தரும் செய்திகள்தான் என்னிடம் உண்டு. எங்களுடைய பல யூத நண்பர்கள் டசின் கணக்காக அள்ளிச் செல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் 'கெஸ்டப்போ' (நாசிகால ஜேர்மனிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரகசிய பொலிஸ்) வினால் இஞ்சிகூட விநயம் இல்லாமல் நடத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மந்தைகளை ஏற்றிச் செல்லும் ட்ரக்குகளில் ஏற்றப்பட்டு ட்ரென்டிலுள்ள (Drente) வெஸ்டபோக் (Westerbork)என்னும் பெரிய யூத முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். வெஸ்டபோக் மிகக் கொடுமையானது: நூறு பேருக்கு ஒரு கழுவல்கூடம். தேவையான அளவைவிட மிகக்குறைவான கழிப்பறைகள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று விததியாசமில்லாமல் எலலோரும் ஒரே இடத்திலேயே அடைக்கப்பட்டார்கள். இதனால் எத்தனையோ ஒழுக்கமின்மைகள் இருப்பதாக கேள்விப்படுகிறோம். எத்தனையோ பெண்கள், பெண்பிள்ளைகளும் கூட, எவ்வளவு காலம் இருந்தாலும் கர்ப்பிணியாக இருக்கிறார்கள்.

தப்புவதென்பது முடியாதது. முகாமில் உள்ள அநேகமானவர்கள் மொட்டை வழித்த தலையாலும் இன்னும் பலர் அவர்களுடைய யூத தோற்றத்தாலும் அங்கு வசிப்பவர்களில் ஒருவராக முத்திரை குத்தப்பட்டார்கள்.



ஒல்லாந்திலேயே நிலைமை இப்படி என்றால் இவர்கள் காட்டுமிராண்டித்தனமான பிரதேசங்களுக்கு தூர அனுப்பப்பட்டால் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? அவர்களில் பலர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். ஆங்கில வானொலி அவர்கள் விஷவாயுவால் சாகடிக்கப்பட்டார்கள் என்று சொல்கிறது.

ஒருவேளை அது இறப்பதற்கு மிகவும் விரைவான வழியாக இருக்கலாம். நான் மிகவும் குழம்பிப் போயுள்ளேன். இந்தப் பயங்கரக் கதைகளை மியப் எனக்குச் சொல்லும்போது கண்ணீர் வழிவதை என்னால் தவிர்க்கமுடியவில்லை. அவளும் என்னைப் போலவே மிகவும் காயப்பட்டிருந்தாள் இதற்காக. உதாரணத்துக்கு மிகவும் அண்மையில் ஒரு வயதான முடக்குவாதமான யூதக் கிழவி ஒருத்தி தன்வீட்டு வாசற்படியில் உட்கார்ந்திருந்தாள். கெஸ்டப்போ வந்து அவளை அங்கு காத்திருக்கச் சொல்லிவிட்டுப் போனான். அவன் ஒரு காரை எடுத்து வரப்போய்விட்டான். அந்த மனிசி பாவம், தலைக்கு மேலால் பறந்துகொண்டிருக்கும் பிரித்தானிய விமானங்களை நோக்கிப் பொழியும் குண்டுகளினாலும் தேடல்விளக்குகளிலிருந்து வரும் ஒளிக்கற்றைகளினாலும் மிகவும் பயந்துபோனாள். ஆனால் மியப் ஒன்றையும் கணக்கில் எடுக்காது அவளை உள்ளுக்குக் கூட்டிக்கொண்டு போனாள். வேறு ஒருவரும் இப்படியான அபாயமான வேலையை துணிந்து செய்திருக்கமாட்டார்கள். ஜேர்மனியர்கள் கொஞசம்கூட இரக்கம் காட்டாமல் அடிப்பார்கள். எலிகூட மிகவும் அமைதியாக இருந்தாள். அவளுடைய சிநேகிதன் ஜேர்மனிக்குப் போகவேண்டும். அவளுக்குப் பயமாக இருந்தது அவளுடைய வீட்டுக்கு மேலால் பறந்து செல்லும் விமானத்தில் செல்லுபவர்கள் தனது வீட்டுக்கு மேல், அநேகமாக ஒரு மில்லியன் எடையுடைய குண்டைப் போடலாம் என்று, டேர்க்கின் தலையில். "அவனுக்கு ஒரு மில்லியன் கிடைக்கக்கூடிய ஆளில்லை" "அது ஆக ஒரு குண்டை மட்டும் தான் எடுக்கும்" இப்படியான பகிடிகளும் இருந்தன. அவை அவ்வளவு உவப்பானவையானவையல்ல. நிச்சயமாக டேர்க் மட்டும் தான் அங்கு போகப்போகும் ஒரே ஒரு ஆளல்ல. எத்தனையோ புகைவண்டிகள் நிறைந்த பையன்கள் ஒவ்வொரு நாளும் செல்கிறார்கள். போகும் வழியில் ஒரு சிறிய தரிப்புநிலையத்தில் அவர்கள் நிற்பாட்டினால் சிலவேளைகளில் சிலர் அவர்களுக்குத் தெரியாதவாறு இறங்கித் தப்பியோடிவிடுகிறார்கள். ஒருவேளை மிகச்சிலர் இப்படிச் செய்திருக்கலாம். இது எப்படியும் எனது கெட்ட செய்திகளின் இறுதியல்ல. நீ எப்பவாவது பணயக்கைதிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? விஷமிகளுக்கான தண்டனைகளில் இப்பொழுது அதுதான் கடைசியானது. இவ்வளவு பயங்கரமான ஒன்றை உன்னால் கற்பனைசெய்து பார்க்க முடியுமா?

கண்ணுக்குத் தெரியும் உயர்பீட நகரவாசிகள் - அப்பாவி மக்கள் - சிறைக்கூடங்களுக்குள் வீசப்பட்டுள்ளார்கள் தங்களுடைய விதியைக் காத்துக்கொண்டிருப்பதற்கு. சதிகாரன் கண்டுபிடிக்கப்படாவிட்டால் கெஸ்டப்போ மிகவும் இலகுவாக ஒரு ஐந்து பணயக்கைதிகளை மதில்களோடு நிற்கவைத்துப் போடுவார்கள். இவர்களுடைய மரணம் பற்றிய அறிவித்தல்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளியாகும். இந் நிகழ்வுகள் 'விதியின் விபத்துக்கள்' என்று விபரிக்கப்படும். ஜேர்மனியர்கள் நல்லவர்கள்! இப்படி நினைப்பதற்கு ஒரு காலத்தில் நானும் அவர்களில் ஒருத்தியாக இருந்திருக்கிறேன்! இல்லை, ஹிட்லர் எப்போதோ எங்களுடைய தேசிய உரிமையை எடுத்துவிட்டான். ஜேர்மனியர்களும் யூதர்களும் உலகத்தில் மிகப் பெரிய எதிரிகள்.

உன்னுடைய

ஆன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலஸ்தீனிய உண்மைக்கான புத்திஜீவி சயிட்டும்

# நம் மத்தியில் உலவும் முதுகெலும்பற்ற புத்திஜீவ பரதேசிகளும்

# ஓர் ஒப்பு நோக்கு



## தேசபக்தன்

## Speak the truth to power
### அதிகாரத்தின் முன் உண்மை விளம்பல்

Said remains combative in keeping his often lonely mission to "Speak the truth to power"

அதிகாரத்தின் முன் எது சரி, எது பிழை எனத் துணிந்து கூறுதல் ஒரு மேதாவியின் கடமையாகும். ஆனால், எம் மத்தியிலுள்ள அநேகமான புத்தி ஜீவிகள் நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறனு மற்று, அறிவுமற்று பச்சோந்திகளாய் வாழ்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. தமிழ்மக்களின் தேசவிடுதலைப் போராட்டத்தின் தலைமையை சைவ வேளாள சித்தாந்தம் கைப்பற்றியதோடு மக்களின் ஜனநாயகம் உள்நாட்டிலும் உலகிலும் முற்றாக மறுக்கப்பட்ட நிலைக்குத் துணை போனவர்களும் இன்றும் அதற்காக வக்காலத்து வாங்குபவர்களும் எம் மத்தியிலுள்ள பெரும்பாலான புத்திஜீவிகளே.

சரி இப்போது எமதும், உலக மக்களின் மதிப்பிற்கும் பெரு்மைக்குமுரிய பலஸ்தீனியரும் தற்போது அமெரிக்காவில் வாழ்பவருமான பேராசிரியர் எட்வர்ட் சயிட் (Edward Said)இன் வாழ்வு பற்றியும் அஞ்சா நெஞ்சுடன் அவர் பலஸ்தீனிய மக்களின் நலனிற்காகக் குரல் கொடுப்பதையும் செவிமடுப்போம். சயிட் பலஸ்தீனத்தில் ஜெருசலேமில் பிறந்தபோதும் கல்வி கற்றது கெய்ரோவில். ஆனால் பிற்பாடு அவரது குடும்பம் முற்று முழுதாக பலஸ்தீனத்திலிருந்து இடம் பெயர்ந்து விட்டது. பின்னர் அவர் Harvard பலகலைக் கழகத்தில் கல்வி பயின்றார். 1986இல் இருந்து சயிட் கொலம்பியா (அமெரிக்கா) பல்கலைக்கழகத்தில் Comparative literature பிரிவுப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார். இன்றைய உலகில் சயிட் மிக முன்னேறிய ஒரு பலஸ்தீனியச் சிந்தனையாளராக கருதப்படுகின்றார். இன்னொரு வகையில் கூறுவதாயின் பலஸ்தீனத்தின் முன்னேறிய சிந்தனையின் ஒரு குறியீடாகவே சயிட் அமெரிக்காவில் தன்னைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே. உச்சிமீது வான் இடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!" என முழக்கமிட்ட பாரதியின் முன்னேறிய தேசியச் சிந்தனையுடன் சயிட்டின் உணர்வுகளையும் ஒரே சமாந்தரமாக இங்கு ஒப்பு நோக்கலாம் அல்லவா?

பலஸ்தீன மக்களின் தேசவிடுதலை, சுயநிர்ணய உரிமை, ஜனநாயக சுதந்திரம் அரபாத் கும்பலால் காட்டிக் கொடுக்கப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும் அதன் கூட்டாளிகளாலும் எவ்வாறு காலில் போட்டு மிதிக்கப்படுகின்றதென்பதையும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் எவ்வாறு மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதையும் மிகத்தெளிவாகவே எடுத்துக் கூறியுள்ளார்.

அவர் பின்வரும் ஐந்து விடயங்கள் சம்பந்தமாக தனது கருத்தை மிகத் தெளிவாக முன்வைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றார்.

## I. சமாதானப் பேச்சுவார்த்தை (The peace process)

1993இல் இஸ்ரேலியர்களும் பலஸ்தீனிய அரசியல்வாதிகளும் இரகசியமாகச் சந்தித்ததன் விளைவுதான் சமாதானம் என்ற மாய (பொய்)மான். இதன்மூலம் இஸ்ரேலியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் பலஸ்தீனியர்களுக்கு கிடைத்ததென்னவோ சிறு துண்டு நிலங்கள்தான். அவையும் பெரும்அளவில் வனாந்தரத் துண்டுகளே. உண்மையில் இஸ்ரேலியர்களின் இந்த நடவடிக்கை ஒரு ஏமாற்றே. ஏனெனில், UNO தீர்மானத்தின்படி இஸ்ரவேல் உண்மையில் ஆக்கிரமிக்கப்பட்ட முழு இடத்திலிருந்தும் வாபஸ் பெற்றாக வேண்டும். எனவே, அதைத் தவிர்க்கவே அரபாத்துடன் தந்திரமான ஒப்பந்தத்தை செய்துகொண்டு எந்தவித அதிகாரமுமற்ற எல்லைகள் குறிக்கப்படாத ஒரு கற்பனைப் பலஸ்தீனமே இஸ்ரேலிய ஆளும் வர்க்கத்தால் அரபாத் கும்பலிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## II. யாசீர் அரபாத் (Yasser Arafat)

பலஸ்தீனிய மக்களின் அதிகாரத் தலைமையை கைப்பற்றிக் கொண்டுள்ள அரபாத் இன்று இஸ்ரவேலியரின் ஒரு கைதி.

இவர் எந்த விதமான அரசமைப்பிற்கோ அல்லது சட்டத்திற்குட்பட்டதோ அல்லது சொல்லப் போனால் எவ்வித முறையான அதிகாரமும் வழங்கப்படாத நிலத்திற்கு அதிபராகத் தன்னை நினைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றார். உண்மையில் எந்த நிமிடமும் இவர் இஸ்ரேலியர்களால் உதைத்துத் தள்ளப்படலாம். ஆனால் இந்தத் துரோகியோ அதிகாரமில்லாத அதிகாரத்தை வைத்துக்கொண்டும் தனது சொந்த மக்களைத் தொடர்ச்சியான பயங்கர அடக்குமுறைக்குள் வைத்துள்ளார்.

“அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே. உச்சிமீது வான் இடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே” என முழக்கமிட்ட பாரதியின் முன்னேறிய தேசியச் சிந்தனையுடன் சயிட்டின் உணர்வுகளையும் ஒரே சமாந்தரமாக இங்கு ஒப்பு நோக்கலாம் அல்லவா?

## III. மனித உரிமைகள் (Human Rights)

உலகில் பல மீட்பர்களும் மனித உரிமைகளிற்காக உரத்துக் குரல் கொடுக்கிறார்கள். ஆனால் பலஸ்தீனியர்களுக்கு மாத்திரம் குரல் கொடுக்க எவருமில்லை. இது மனித இனத்தின் தார்மீக மோசடியை அல்லவா வெளிப்படுத்துகிறது.



**IV.** அண்மைய எதிர்காலம் பற்றி Said அவர்கள் நம்பிக்கையற்றவராகவே (pessimistic) உள்ளார். ஏனெனில் அவரது பார்வைப்படி தற்போதுள்ள சந்ததி நம்பிக்கை இழந்தது (the current generartion is hopeless). ஆனால் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் மிகவும் நம்பிக்கையோடு எதிர்காலச் சந்ததியை முக்கியமாக இஸ்ரேலிய புதிய சந்ததி பலஸ்தீன மக்கள் சார்பாக செயல்படும் என எதிர்பார்க்கின்றார். ஏனெனில் முன்னர் ஒரு காலத்தில் பலஸ்தீனிய யூத சமூகம் மிகவும் அந்நியோன்னியமாக ஒற்றுமையோடு ஒன்றாக வாழ்ந்தவர்களல்லவா? இங்கே அவர் மாறுதலைச் சுட்டிக்காட்ட வருவது பாடசாலைக் கல்வியில் புகுத்தப்பட்ட வழமையான சியோனிசச் சார்பான கதையாடல்கள் மாறுவதுடன் சில மகிழ்ச்சிகரமற்ற உண்மைகளையும் கூட பாடங்களில் இப்போது கூறுகின்றார்கள்.

1948இல் பலஸ்தீனத்திலிருந்து கலைக்கப்பட்டதும் மேலும் அன்றைய போரில் யூதர்களின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த அரேபியப் போர்வீரர்களிலும் பார்க்க எண்ணிக்கையில் யூதப்படை அதிகமாக இருந்த செய்தியும் அப்போது அப்பாவி பாலஸ்தீனியர்கள் யூதவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டதும் இப்போது மாணவர்களிற்கு சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. ஆனால், முன்னர் இதற்கு மாறான பொய்யான செய்திகளே யூத மாணவர்களுக்கு ஊட்டப்பட்டன. இதை எமது இலங்கையில் சிங்கள சோவினிஸ்டுகளின் இட்டுக்கட்டுகளை தமிழ் சிங்கள மாணவர்களின் புத்தகங்களில் புகுத்திய அதேவேளை தமிழ் மாணவர்களின் பாடசாலைப் புத்தகங்களில் பல செய்திகள் மாற்றப்பட்டும் புனையப்பட்டும் தப்பும் தவறுமாக அரசு வெளியிடுவதைக் காண்கிறோமல்லவா? சிங்கள பெருந் தேசியவாதிகள் இன்னும் உண்மையை உணரவில்லை. ஆனாலும் வரலாறு அவர்களிற்கும் கல்வியூட்டும். அதுவரையான இழப்புகளை, அழிவுகளை எவ்வாறு தவிர்ப்பதென்பதே. இன்று இலங்கை மக்கள் முன் உள்ள தீர்க்க முடியாத கேள்வியாகும்.

மேலும் ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்திற்கு எதிரான பலஸ்தீன கவிஞர் (Mohmed Darwich) மொகமட் தார்விஷ் இன் கவிதைகளையும் கூட இன்றைய இஸ்ரேலிய மாணவர்கள் கற்கும் வாசிக்கும் வாய்ப்புள்ளதல்லவா? இதேபோல் இன்றைய நமது கதைகளையும் கவிதைகளையும் சிங்கள முஸ்லிம் மாணவர்கள், இளைஞர்கள் கற்பது ஒரு மாற்றத்திற்கு உதவுமல்லவா?

மேலும் இஸ்ரவேலியப் பொதுமக்கள் வட அமெரிக்க (புலம்பெயர்ந்த) யூதர்களைவிட தார்மீக வளர்ச்சியில் மிகவும் முன்னேறியுள்ளார்கள் என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்ட் அவர்களின் வாதமாகும். இது நம்மவர்க்கும் பொருந்தும் அல்லவா? புலம்பெயர்ந்த நாட்டிலுள்ள நமது மக்களில் பெரும்பான்மையோர் ஒரு 50 வருடங்களுக்கு பின்னான காலத்திற்கு அவர்களது சிந்தனையும் செயல்களும் பின்தள்ளப்பட்டுள்ளதைக் கட்டியம் கூறுவதுபோல் இங்குள்ள (temple shop) கோவில் கடைகள் பத்திரிகை வானொலி மாபியாக்களின் செய்திகள் செயற்பாடுகள் உள்ளதல்லவா? அதே வேளை யாழ்ப்பாணத்திலோ இல்லை ஏனைய பகுதிகளிலோ வாழுகின்ற மக்கள் ஓரளவு முன்னேறிய சிந்தனையோடு விடயங்களை அலசுவதை நாம் காணுகிறோம்.

**தமிழர்களாகிய நம் மத்தியிலும் சைவ வேளாள சிந்தனைவயப்பட்ட வலதுசாரி பிழைப்புவாதிகள் முன்னேறிய சிந்தனையை மழுங்கடிக்க மிக இலகுவாக துரோகிகள் என்று முத்திரை குத்துவதன்மூலம் அல்லது அதையும் மீறிய வேளையில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதன்மூலம் மிக மிக முன்னேறிய சிந்தனையாளர்களைக் கடந்த காலத்தில் அழித்து வந்துள்ளார்கள்.**

சயிட்டின் 17வது புத்தகமான Out of Placeஇன் ஹிப்ரு (Hebrew) மொழிபெயர்ப்பு இஸ்ரேலிய பத்திரிகையான Ha'aretzஇல் தொடர்ச்சியாக வெளிவருகின்றது. ஆனால், அதிதீவிர வலது சாரி சியோனிசவாதிகள் சயிட்டிற்கு எதிரான மோசமான உண்மைகளற்ற பிரச்சாரமிருந்தும்கூட சயிட்டின் புத்தகத்தை இஸ்ரேலிய மக்களின் வாசிப்பிற்கு ஓர் ஊக்கியாகவே பயன்படுகின்றது. இவ்வாறு அவருக்கு எதிராக ஈனத்தனமான தந்திரோபாயங்களை எதிரிகள் பயன்படுத்துவது போலவே தமிழர்களாகிய நம் மத்தியிலும் சைவ வேளாள சிந்தனை வயப்பட்ட வலதுசாரி பிழைப்புவாதிகள் முன்னேறிய சிந்தனையை மழுங்கடிக்க மிக இலகுவாக துரோகிகள் என்று முத்திரை குத்துவதன்மூலம் அல்லது அதையும் மீறிய வேளையில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதன்மூலம் மிக மிக முன்னேறிய சிந்தனையாளர்களைக் கடந்த காலத்தில் அழித்து வந்துள்ளார்கள்.

இனிமேலாவது தங்கள் மடைமையையும் சுயநல வேட்கையையும் கொளுத்துவதன்மூலம் சயிட் போன்ற உரத்த சிந்தனையாளரின் முன் வருகைக்குத் துணை நிற்பார்களா? இல்லை அழித்து அழிந்து போவார்களா?

எவ்வாறு நோம் சோம்ஸ்கியை அமெரிக்க மக்களின் நியாயத்தின் குரலாக உண்மையின் குரலாக உலக மக்கள் கணிப்பிடுகின்றார்களோ அதேபோல் பலஸ்தீன மக்களின் நியாயத்தின் குரலாக சயிட் (அமெரிக்காவில்) கணிக்கப்படுகின்றார். ஆனால், தமிழர்களாக எங்கள் மத்தியில் இன்று இவ்வாறான வீரியமுள்ள சிந்தனையாளரைக் காண முடியவில்லை என்பது பிழையான அரசியல் தலைமையின் செயல்பாடென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் சமூகச் சிந்தனையுள்ள நேர்மையான புத்திஜீவிகள் பலரும் கடந்த காலங்களில் வேட்டையாடப்பட்டே வந்துள்ளார்கள். மேலும் பல புத்திஜீவிகளும் சிறந்த போராளிகளும் இயக்க உள்வெளி களையெடுப்புகளினால் அழிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது எஞ்சியிருப்பதென்னவோ சந்தர்ப்பவாதிகளும் சுயநலவாதிகளும் சுயமரியாதையற்றவர்களுமே. எதிர்காலத்திலாவது நமது மத்தியில் சிறந்த சிந்தனையாளர்கள் உருவாகுவார்கள் என நம்புவோம்.



நம்மவர்கள் இன்றைய நிலையில் பலஸ்தீனியர்களிற்கு சார்பாகக் கதைத்தபோதும் அவர்களது சிந்தனை என்னவோ யூத சிந்தனைதான்.

கடைசியாக, பின்வரும் செய்தியைக் குறிப்பிடுவதன்மூலம் இஸ்ரேலிய ஆளும் கும்பலின் உண்மை முகத்தையும் அதனதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் கபடத்தன்மையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். செய்தி இதுதான். இன்றைய இஸ்ரேலிய பிரதமரின் இல்லம் அமைந்திருப்பது பறிக்கப்பட்ட ஒரு பலஸ்தீனியரின் நிலத்திலாகும். (1948இன் முன்) அப் பலஸ்தீனியரின் பெயர் முஸ்தபா தாவுத் (Mustapha Daoud - 84 வயது) மேற்படி நிலமும் அதனுடன் சேர்ந்த 24 hectare நிலம் 1948இன் முன் அபகரிக்கப்பட்டு இஸ்ரேலிய நகரான Cochav Yair உருவாக்கப்பட்டது. அவ்வாறு அபகரிக்கப்பட்ட 24 hectare நிலத்தில்தான் இன்றைய பிரதமர் ப்ராக்கின் இல்லமும் ஏனையோரின் இல்லங்களும் அமைந்துள்ளன. ஆமி ரேடியோ செய்தியின்படி மேற்படி நிலத்தின் உரிமையைக் கோருவதற்கான ஆவணங்களும் டாவுத்திடம் உள்ளது. இதன் பிறகும் பலஸ்தீனியர்களுக்கு சுதந்திரநாடு கிடைத்து சமாதானம் வந்து விட்டதாக பொய் கூற முடியுமா? உண்மையில் பலஸ்தீனிய மக்கள் இழந்ததோ அவர்களது ஜனநாயக சுதந்திர கோரிக்கையான சுயநிர்ணய உரிமையை. ஆனால் அரபாத்தும் அவரது அடிவருடிகளும் பெற்றுக்கொண்டதோ சில எலும்புத் துண்டுகளை மட்டுமே.


**கிரணம்**

பின்நவீனத்துவ சொல்லாடலுக்கான இதழ்

**www.geocoties.com/Kiranam_pon**

ஆசிரியர்: ரமேஷ்

ஆசிரியர் குழு: மாலதி, பிரேம்

தொடர்புகளுக்கு:

**e-mail: premramesh@yahoo.com**

**malathymaitri@caltiger.com**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தற்கொலை

**கலையரசன்**

பல நாட்களாக.... இல்லை மாதங்களாக..... இல்லை வருடக் கணக்கில் யோசித்த பின்பே இந்த முடிவுக்கு வந்தேன். நான் எடுத்த இந்த முடிவு பலரைத் திடுக்கிட வைக்கலாம். சிலரைத் திட்ட வைக்கலாம். ஆனால் இதைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதில் எனக்கென்ன கவலை. நான்தான் சாகப் போகிறேனே. ஆமாம் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக உத்தேசம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தற்கொலை செய்து கொள்வது கோழைத்தனம் என்று சொல்வீர்கள். ஆமாம், கோழைத்தனம்தான் எனக்கும் தெரியும். நானும் அப்படித்தான் கூறி வந்தேன். எல்லோரும் விரக்தியின் விளிம்பில் நின்றுதான் தற்கொலை செய்து கொள்வார்கள் என்றில்லை. நாட்டுப் பற்றுக்காகவும் தற்கொலை செய்துள்ளார்கள். சரி, அவர்கள்தான் பொது நோக்கத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என ஒப்புக் கொள்கிறோம். அப்படி அர்ப்பணம் செய்யும் மனம் உனக்கிருந்தால் அதை அங்கேயல்லவா சாதித்திருக்க வேண்டும்? என்று நீங்கள் திட்டுவதும் எனக்கு கேட்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் தற்கொலை செய்பவர்களில் மூன்று வகை இருக்கிறார்கள். ஒன்று விரக்தியின் விளிம்பில் நிற்பவர்கள். இரண்டு பொது நலத்திற்காக தம் உயிரை அர்ப்பணம் செய்பவர்கள். மூன்று அதைத்தான் இப்போது சொல்லப் போகிறேன்....

கொஞ்சம் பொறுங்கள்....

'டொக் டொக் டொக்'

வாசல்கதவை யாரோ தட்டுகிறார்கள்.

"யாரது?"



"எமதர்மராஜன்"

"ஓஹோ, நீங்களும் வந்துவிட்டீர்களா?"

"நீதானே, மாதங்களாக, வருடங்களாக யோசித்து இந்த முடிவுக்கு வந்தாய். உனது முடிவில் எனது வேலை ஆரம்பம். மற்றவர்களுக்கு லெக்சர் அடிப்பதை நிறுத்திவிட்டு சீக்கிரமாக வேலையை முடிப்பாயா, மானிடனே?"

"கொஞ்சம் பொறுங்களேன். நான் இருக்கும்வரைதான் என்னை யாரும் மதிக்கவில்லை. இறந்த பின்பாவது நான்குபேர்கள் பேசும்படி வைக்க வேண்டாமா?"

எரிச்சல் அடைந்த எமதர்மன் தான் கொண்டு வந்த பாசக் கயிறை வீசிவிட்டு திரும்பிப் போய் விட்டான். இந்த எமகாதகப் பேர்வழிதான் மனிதர்களின் (அப்போ விலங்குகளின், அதையும்தான்) உயிர்களை எடுப்பானாமே? இந்த எமனையே ஒழித்துவிட்டால் அந்த வேலையைச் செய்வதற்கு ஆளே இருக்காது. நாம் சாகாவரம் பெற்ற நித்திய வாழ்வை அடைவோம். ஆனால் எனக்கு அது வேண்டாம். ஏன்! இருக்கிற கொஞ்சக் காலத்திற்குள்ளேயே பட்ட கஷ்டங்கள் துன்பங்கள் போதாதா? இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரக்கணக்கான வருடங்கள் அனுபவிக்க வேண்டுமா? முதலில் உலகம் முழுவதும் துயரப்படுபவர்களே இல்லை என்ற நிலை உருவாகட்டும். அதன்பின்பு 'நித்திய வாழ்வு' எமக்குத் தேவையா தேவையில்லையா என்பது பற்றிப் பட்டிமன்றம் நடத்தலாம்.

ஐரோப்பியரால் சொர்க்கம் என வியக்கப்படும் இலங்கைத் தீவில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு சிற்றூரில் உள்ள ஏழைத் தாய்க்கும் ஏழைத் தந்தைக்கும் புதல்வனாக அவதரித்தேன். எனது தாய்க்கும் தந்தைக்கும் 'படைத்தவன் படியளப்பான்' என்ற எண்ணம் போலும் அல்லது எந்தச் செல்வம் இல்லா விட்டாலும் பிள்ளைச் செல்வம் போதும் என நினைத்தார்களோ என்னவோ எனக்கு முதல் மூன்று அக்காமார்களையும் எனக்குப் பின்பு இரண்டு தங்கச்சிகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து எமது இனத்தைப் பெருக்கும் கடமையை நிறைவேற்றிக் கொண்டார்கள். இதில் ஒரு பக்கம் மதப் பற்றாளர்களுக்கும் மகிழ்ச்சி, தமது மதம் பல்கிப் பெருகுவதாக. ஆனால் எனக்கு மட்டும் மகிழ்ச்சியே இல்லை. தந்தைக்கு அடுத்ததாக குடும்பப் பாரத்தை தனயன் அல்லவா சுமக்கவேண்டும். நல்லவேளை, எமது நாட்டில் 'பெண் சிசுக் கொலைச் சமாச்சாரம்' இல்லாத படியால் தப்பிப் பிழைத்த 5 பெண்பிள்ளைகள் வேறு. பாரமோ பாரம். அந்த ஏழ்மை நிலையிலும் கூலிவேலை செய்து சம்பாதித்து குடும்பம் நடத்திய எனது தந்தை ஒரு மாதிரி மூத்த அக்காவை கரைசேர்த்து விட்டார், ஏதோ கொஞ்சக் காசை சீதனமாகக் கட்டி. மிச்ச நான்கு பெண்பிள்ளைகளையும் கரைசேர்க்க எனது உதவியும் அவசியம் தேவை. பதினாறு வயதிலேயே பாடசாலைப் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போக ஆரம்பித்தேன். எமது குடிசையில் நாம் சில நாட்கள் வெறும் சோறு மட்டும் தான் சாப்பிட்டிருப்போம். ஆனாலும் இரண்டாவது அக்காவின் திருமணம் நடக்க வேண்டுமே. எப்படியோ பணத்தை மிச்சம் பிடித்து சீதனம் கொடுத்து இரண்டாவது அக்காவையும் கரை சேர்த்து விட்டேன். குடும்பப் பொறுப்பு இல்லாதிருந்தால் நான் சிறு வயதில் வேலைக்குப் போயிருக்க மாட்டேன். சீதனம் கொடுக்கும் வழக்கம் இல்லாதிருந்தால் நமது குடும்பம் நன்றாகச் சாப்பிட்டு ஆரோக்கியத்துடன்



இருந்திருக்கும். எமது வறுமை நிலை சிறிது மேம்பட்டிருக்கும். ஆனால் ஏழைகள் தலைநிமிரக் கூடாது என்று சிலர் எண்ணியதாலோ என்னவோ இந்தச் சீதனம் கொடுக்கும் 'கலாசாரத்தை' உருவாக்கி விட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் ஒருவன் மாற்றமுடியுமா? முதன்முதலாக ஒரு பலம் மிக்க இராட்சதன் போல் நின்றிருந்த கலாச்சாரத்திற்கு முன்னால் நான் ஒரு பலவீனமான எறும்பு போல் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

எமக்கொரு மாமா இருந்தார். ஒன்றும் நெருங்கிய சொந்தம் கிடையாது. ஆனால் எமது குடும்பம்மீது பாசம் வைத்திருந்தார். அவர் ஒரு வாயுள்ள பிள்ளை. அதனால் வங்காளம் வரை மட்டுமல்ல, அதையும் தாண்டி ஜேர்மனி போய்விட்டார். ஜேர்மனியில் என்ன வேலை செய்தாலும் அல்லது சும்மா இருந்தாலும் இலட்சக் கணக்கில் சம்பாதிக்கலாமாமே? அப்படியே அவரது குடும்பமும் எமது ஊரில் இருந்த புதுப் பணக்காரர்களது பட்டியலில் சேர்ந்து கொண்டது.

தமது வறுமை நிலையைப் போக்க இப்படியொரு வழி இருப்பதை அறிந்துகொண்ட இன்னும் பலர் ஜேர்மனி போய்ச் சேர்ந்தனர். முன்பு சிலகாலம் மத்திய கிழக்கு நாடுகள் எனப் போய்க் கொண்டிருந்தார்கள். இப்போது ஐரோப்பா கனடா என்று போகிறார்கள். இவ்வாறாக எமது ஊரில் 'பரம்பரைப் பணக்காரரை' விட 'திடீர்ப் பணக்காரரும்' உருவாகினர். இப்படியே போனால் அந்நிய செலாவணியின் தயவில் எமது நாடும் பணக்கார நாடாகி விடும் எனச் சிலர் பேசிக் கொண்டனர். ஒருவேளை வருங்காலத்தில் மத்திய கிழக்கில் எண்ணை வளம் குறைந்தாலோ அல்லது செல்வந்த மேற்கு நாடுகளில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலோ திடீர் பணக்காரரைப் போல திடீர் ஏழைகளும் உருவாகுவார்களே என்பதை யாரும் நினைத்துப் பார்க்கவில்லை. அதைப்பற்றி இப்போது கவலை ஏன்? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்கிறார்கள்.

பல வருடங்களாக அவ்வளவாக தொடர்பற்றிருந்த ஜேர்மன் மாமா அண்மையில் தொடர்பு கொண்டார். எம்மீது கழிவிரக்கம் கொண்டு எமது குடும்ப கஷ்டத்தைப் போக்குவதாக உறுதியளித்தார். அதற்காக என்னை ஜேர்மனி கூப்பிட்டு விடுவதாக கூறினார். எனது அப்பா அம்மாவுக்கும் எந்தவொரு ஆட்சேபனையும் இருக்கவில்லை. அப்பா எனக்கு பாஸ்போட் எடுக்கும் அலுவல்களில் இறங்கினார். எல்லாம் சரி வந்து எனது சகோதரிகளும் அம்மாவும் விம்மி விம்மியழுது வழியனுப்பி வைக்க நான் கொழும்பு வந்து சேர்ந்தேன். கொழும்பில் எனது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாமா ஒழுங்கு செய்த ஏஜென்சி எனக்காகக் காத்திருந்தான். இப்போது ஜேர்மனி போவதற்கான பாதைகள் யாவும் சரியான இறுக் கமாம். ஆனால் ஹொலண்டில் போய் இறங்குவது இப்போது சாத்தியமாம் என்று சொன்ன ஏஜென்சி எனது சம்மதத்தையும் கேட்டான். நான் சரி என்று சொல் லவே என்னை இன்னும் சிலருடன் சேர்த்து கென்யாவிற்கு அனுப்பி வைத்தான். அங்கே இரு வாரங் கள் இருந்திருப்போம். அங்கிருந்து ஹொலண்டில் ட்ரான்ஸிட்டில் இறங்கக் கூடியதாக ஒழுங்கு செய்து ஒரு விமானத்தில் எம்மை அனுப்பி வைத்தான்.

ஆம்ஸ்ரடாம், ஸ்கிப்பொல் விமான நிலையத்தில் வந்திறங் கிய பின்புதான் தெரிந்தது, சோதனைக் காலம் ஆரம்பித்து விட்டது என்று. விமான நிலைய மிலிட்டரி பொலிஸினால் விசார ணைக்கு அழைத்துச் செல்லப் பட்டேன். அங்கே என்னவெல்லாம் சொல்லவேண்டும் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என ஏஜென்சி முதலே என்னிடம் சொல்லி இருந்தான். அவன் சொன்னபடியே ஒரு கதையை தயாரித்துக் கொடுத்தேன். ஆரம்பமே சரி யில்லை. ஏதோ கிரிமினலைப் பிடித்து வந்ததைப் போல கை ரேகை, போட்டோ எல்லாம் எடுத்தார்கள். பைகளை சோத னையிட்டார்கள். விசாரணை நிலையத்தைச் சுற்றி நான்கு பக்கத்திலும் மதில்கள் கட்டப் பட்டிருந்தன. 48 மணி நேரத்திற் குப் பின்பு, ஒரு கைதியை நீதிமன் றத்தில் ஆஜர் செய்வதுபோல, என்னை மற்ற அகதிகளோடு சேர்த்து அகதி முகாமிற்கு அனுப்பி வைத்தார்கள். அகதி முகாமிலும் கெடுபிடி தொடர்ந் தது. பிணையில் விடுவிக்கப்பட்ட கைதி வாராவாரம் பொலிஸ் நிலையத்திற்கு வந்து பதிவு செய்வதைப்போல, நாம் ஒவ் வொரு நாளும் எம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் அகதிமுகாம் இருக்கும் இடத்தைத் தவிர அல்லது அயல் கிராமத்தைத் தவிர வேறு எங்கேயும் போகக்கூடாது எனக் கட்டுப்பாடு. முகாமைச் சுற்றி வேலி அடைக்கப்பட்டு வாசலில் 'தனியார் பொலிஸ்' காவல் போடப்பட்டிருந்தது.

வெளிநாட்டிற்கென புறப்படு வதற்கு முன்பு இங்குள்ள அகதி முகாம்களில் எல்லாம் இலங்கைத் தமிழர்கள் மட்டும்தான் இருப்பார் கள் என நினைத்திருந்தேன். ஆனால் இங்கே வந்து உலகின் பல பாகங்களில் இருந்தும் வந்த அகதிகளைப் பார்த்த பின்புதான் தெரிந்தது, இலங்கை மட்டுமல்ல வேறு பல நாடுகளும் அகதிகளை உற்பத்திசெய்து அனுப்பிக்



கொண்டிருக்கின்றன என்பது. பிறநாட்டு அகதிகளைச் சந்தித்த பின்புதான் தெரிந்தது அவர்கள் நாடுகளிலும் யுத்தங்கள் நடக் கின்றன பிரச்சினைகள் இருக்கின் றன என்பது . நாட்டுக்கு நாடு வாசல்படிதான் போலிருக்கிறது. இதிலே இன்னுமொரு மனதை நெருடும் விஷயம் அரசியல் அகதியா, பொருளாதார அகதியா என்பது. ஒரு சிலர் அரசியலில் ஈடுபட்டவர்களாகவும் பிரச்சனைக் குரியவர்களாகவும் இருந்தனர். அவர்கள் அடைக்கலம் புகுந்த நாட்டிலும் அரசியல் பேசினர். இன்னும் பலர் யுத்தத்தின் பயங்க ரத்துக்கு முகம் கொடுக்க முடியா மல் ஓடி ஒளிப்பதற்காக இங்கே வந்திருந்தனர். இவை எதிலும் பாதிக்கப்படாத மேலும் பலர் ஒரு செல்வந்த நாட்டிற்குள் வந்து விட்டால் தமது பொருளாதார நிலை மேம்படும் என நம்பி வந்தவர்கள். இந்தக் கடைசி ரகத்தைச் சேர்ந்தவர்கள் கூட தாம் "மண்ணுக்காக, இனத்துக் காக, மொழிக்காக, மதத்துக்காக போராடினோம்; தோள் கொடுத் தோம்; பொருள் கொடுத்தோம். ஆனால் உயிரை மட்டும் பிடித்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந் தோம்"என நெதர்லாந்து அரசு அதிகாரிகளுக்கு வாக்குமூலம் கொடுத்தவர்கள்தான். இதிலே குறிப்பிடத்தக்க விடயம் என்ன வென்றால், இந்த மொழி உரிமைக் காக போராடியவர்களின் பிள்ளை கள் இங்கே வந்து நாளடைவில் தமது தாய்மொழியை மறந்து அந்நிய மொழி பேசுவதுதான். என்னே பரிதாபம். இவையெல்லா வற்றையும் விட இந்த கடைசி ரகத்தை (நான் உட்படத்தான், ஐயா, என் பூர்வீகத்தைத் தெரியாமல் முன்பே சொல்லித் தொலைத்து விட்டேன்.) சேர்ந்த வர்கள் மொழி, இன, மதப் பிரச்சினைகளைவிட பணப் பிரச்சி னைதான் முக்கியம் என்று சொல் கின்றார்கள். பொருளாதார நெருக்கடிதான் நம்மை இங்கே உந்தித் தள்ளியது எனச் சொல்கிறார்கள். பொருளாதாரப் பிரச்சனைதான் காரணமென்றால் தத்தமது நாடுகளில் அதனைத் தீர்க்கும் வழிகளை ஆராய்ந் திருக்க வேண்டாமா? அதற்காகப் போராடி இருக்கவேண்டாமா? நாடோடிகளைப் போல் நாடுவிட்டு நாடு ஓடுவதுதான் இதற்கு ஒரே யொரு தீர்வா? இந்த விடயம் எல்லாம் எனக்குக்கூட இப்போது தான் உறைக்க ஆரம்பித்தி ருக்கிறது.

இப்போதெல்லாம் செல்வந்த நாடுகளுக்கு செல்வம் தேடி ஓடி வருபவர்களின் தொகை பல்கிப் பெருகிவிட்டதாம். சொந்த நாட்டி னருக்கே வேலையில்லாத பட்சத் தில் பிற நாட்டவர் இங்கே வேண்டா விருந்தாளிகள் என இங்குள்ள அரசியல்வாதிகளும் மக்களும் பேசிக்கொள்கிறார்கள். நம்மைப் போன்ற வேண்டா விருந்தாளிகளை நாட்டுக்குள் வரவிடாமல் தடுப்பது எப்படி என்பதைப் பற்றி பாராளுமன் றத்திலும் விவாதம் செய்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உண்மையில் அகதிகளை கிரிமினல் மயப்படுத்தும் முயற்சி அண்மைக்காலமாக எல்லா மேற்கைரோப்பிய அரசுகளாலும் எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக புதிய பல சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்கு நெதர்லாந்து அரசும் விதிவிலக்கல்ல. சட்டத்தின் முன்பு எல்லோரும் சமன் என அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முதலாம் அதிகாரம் கூறுகின்றது. இந்நாட்டுப் பிரசை நீதிமன்ற தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்யலாம். ஆனால் அகதிக்கு அந்த உரிமை இல்லை. தற்போது தஞ்ச மனு நிராகரிப்புக்கெதிராக இரண்டாம் முறை அப்பீல் செய்ய முடியாது என சட்டம் வந்துள்ளது. அத்தோடு தஞ்ச மனு முற்றாக நிராகரிக்கப்பட்டவர்கள் மேற்கொண்டு அகதிமுகாமில் வசிக்கமுடியாது. அவர்களின் கொடுப்பனவுகள் யாவும் இரத்துச் செய்யப்படும். இப்படியான நிலைக்குள்ளாகும் அகதிகள் தெருவிலே வாழ வேண்டிய பரிதாபம். காப்புறுதியில்லாவிட்டால் மருத்துவ சிகிச்சைகூட மறுக்கப்படும் இந்த நாட்டில் கையில் காசின்றி உயிர் வாழ்வது எப்படி? சமூகத்தின் விளிம்புநிலைக்கு தள்ளப்பட்ட அவர்கள் களவு போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவர். சில பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடும் அவலநிலைக்கும் தள்ளப்படலாம். இவை எதிர்கால எச்சரிக்கைகள்.

நெதர்லாந்தில் வடபகுதியில் இருக்கும் குரோனிங்கன் நகரின் நகரபிதா வெளியிட்ட பத்திரிகைகளுக்கான அறிக்கையொன்று தற்போது நாடளாவிய அரசியல் சர்ச்சையை கிளப்பியுள்ளதுடன், அடைக்கலம் கோரிய அகதிகளை தமது எதிர்காலம் குறித்து கிலி கொள்ளவும் வைத்துள்ளது. "அகதிகளின் கிரிமினல் நடத்தைகள் அதிகரித்து வருகின்றன. இந்த அகதிக் கிரிமினல்களின் தொகை நெதர்லாந்து கிரிமினல்களின் தொகையை விட மூன்று மடங்கு அதிகம். இவ்வாறு கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அகதிகளை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும்" இவையே குரோனிங்கன் நகரபிதா உதிர்த்த பொன்மொழிகள். நெதர்லாந்தில் அதிகளவில் விற்பனையாகும், முன்னொரு காலத்தில் ஹிட்லரை ஆதரித்த, வெகுஜனப் பத்திரிகை இந்தச் செய்தியை முன் பக்கத்தில் 'அகதிகள் கிரிமினல்கள்' என கொட்டை எழுத்துகளில் பிரசுரித்து தனது நிறவெறியை கக்கியது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ சங்கடம். இது குறித்து மேலும் விளக்கம் தேவை. நாடளாவிய விசாரணை அறிக்கை தேவை என வழக்கம் போலக் கூறி நழுவி விட்டனர். ஒரு சில நகரபிதாக்கள்மட்டும் முன்வந்து 'எங்கள் பகுதியில் அகதிகள் நல்ல பிள்ளைகளாக இருக்கின்றனர்' என சான்று பகன்றனர். பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் குரோனிங்கன் நகரபிதாவை அணுகி இது சம்பந்தமான அறிக்கையை பகிரங்கப்படுத்தக் கூறியபோது, அவர் அதை மறுத்துவிட்டார். இது தனக்கும் காவல்துறைக்கும் மட்டுமே தெரியவேண்டிய இரகசிய அறிக்கை என மூடி மறைத்தார். சளைக்காது மேலும் துருவியபோது அகதிமுகாம்களில் நடக்கும் சிறு சச்சரவுகளை காவல்துறை பாரதூரமான குற்றங்களாகப் பதிவு செய்திருந்தது தெரிய வந்தது.

இதையறிந்து அதிர்ச்சியடைந்த பலர் தமது கண்டனங்களை தெரிவித்தனர். குறிப்பாக மனநிலை பாதிக்கப்பட்ட அகதிகளைப் பராமரிக்கும் மருத்துவ அமைப்பு கூறிய கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை. போர்ச்சூழலால் பாதிக்கப்பட்ட அகதிகள் இங்கே வந்து தஞ்சம் கோரிய பின்பும் வருடக்கணக்காக அகதிமுகாம்களில் நிச்சயமற்ற வாழ்வை வாழ்கின்றனர். இதனால் விரக்தியடையும் அவர்கள் சில அத்துமீறல்களை செய்வது எதிர்பார்க்கக்கூடியதே. இவை குற்றங்களல்ல. உண்மையில் கடுமையான அகதிச் சட்டங்களை இயற்றிய அரசாங்கம் இவற்றிற்கு பொறுப்பேற்கவேண்டும். மேற்குறிப்பிட்ட கருத்துகள் சிலரை சிந்திக்க வைக்கலாம். ஆனால் அரசாங்கம் வளைந்து கொடுக்கப் போவதில்லை.

ஐக்கியநாடுகளின் செயலாளர் கோபி அனன்கூட 'ஐரோப்பிய நாடுகள் அகதிகளின்மீது கடுமையான சட்டங்களைப் பிரயோகிக்கின்றது. இது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது.' என விமர்சித்துள்ளார். அகதிகளின்மீது வன்முறையைப் பிரயோகித்து பலவந்தமாக நாடு கடத்துவது தற்போது சர்வசாதாரணமாகிவிட்ட நிகழ்வுகள். பெல்ஜியத்தில் பொலிசாரால் விமானத்தில் பலவந்தமாக ஏற்றப்பட்ட அகதிப் பெண்ணொருத்தி தலையணையை வைத்து அழுத்தியதால் மூச்சுத் திணறி இறந்துபோனாள். அவளின் மரணத்திற்கு காரணமான பொலிஸ் அதிகாரிகளுக்கு இதுவரை எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை. ஏனெனில் இது அரசின் நலன்கருதி நடந்த கொலை.

இந்த நாடுகளில் தஞ்ச மனு நிராகரிக்கப்பட்ட அகதிகள் - தொடர்ந்தும் இங்கே தங்கி இருந்தால் - அவர்கள் சட்ட விரோதிகள் என அழைக்கப்படுகிறார்கள். சகல உரிமைகளும் பறிக்கப்பட்ட இவர்களை காவல்துறை குற்றவாளிகளாக நடத்துகின்றது. இப்படித்தான் சாதாரண அகதிகள் சட்ட விரோதிகளாக்கப்படுகின்றனர். பின்னர் குற்றவாளிகளாக்கப் படுகின்றனர்

ஐரோப்பாவில் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் இடம்பெற்ற தொழிற்புரட்சியால் ஏற்பட்ட சமுதாய மாற்றத்தினால் உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் உருவானது. இந்த வர்க்கம் வறுமையில் வாடியதால் சிலர் குற்றச்செயல்களில் ஈடுபட்டனர். நாட்டில் பெருகிய குற்றங்களை அடக்க காவல்துறை உருவாக்கப்பட்டது. அன்று ஸ்தாபிக்கப்பட்ட அதே அரசு இன்று வெளிநாட்டு அகதிகளை குற்றவாளிகளாக்குகின்றது. குற்றங்களும் குற்றவாளிகளும் சமத்துவமற்ற சமுதாயத்தின் மறுபக்கத்தை பிரதிபலிக்கின்றன. யாரும் குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இதில் கணிசமான பங்கு அரசுக்கும் உண்டு என்பதைப் பொதுமக்கள் உணரவேண்டும்.

**கலையரசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றார்கள். அகதிகளின் சலுகைகளைக் குறைப்பது, அவர்களை ஆண்டுக் கணக்காக முகாம்களிலேயே முடக்கி வைப்பது என்ற முடிவுகள் நடைமுறைக்கு வந்தன. இதனால் முடிவுகளை எதிர்பார்த்து, நான்கைந்து வருடங்களாக முகாம்களில் நிச்சயமற்ற வாழ்க்கை வாழும் அகதிகளின் எண்ணிக்கை பெருகி விட்டது.

இங்குள்ள மோசமான நிலை குறித்து ஜேர்மனியில் உள்ள மாமாவுடன் தொலைபேசியில் உரையாடினேன். அவர் எதையும் காதிலே போடாது, கடன் காசை திருப்பி செலுத்துமாறு வலியுறுத்தினார். ஊரில் இருந்து வரும் கடிதங்களும் பணம் அனுப்பும்படி கேட்டுத்தான் வந்தன. அவர்களில் யாரும் எனது நிலையைப் பற்றி யோசித்ததாகத் தெரியவில்லை. இங்கே எங்கேயோ பணம் காய்க்கும் மரம் இருப்பதாக, பழம் பிடுங்குவதைப்போல் நான் அதில் பணம் பிடுங்கி அனுப்புவேன் என்றும் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அப்படியே இங்கே பணம் காய்க்கும் மரம் இருந்தாலும் அது யாரோ ஒருவரின் தனியுடைமையாக இருக்குமேயன்றி பொதுவுடைமையாக இருக்காது என்பதை அவர்கள் பாவம் அறியவில்லை.

இவ்வளவு காலம் பட்ட கஷ்டங்கள் போதாதென்று, அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை அமைந்தது. சொத்துக்களை வைத்திருந்தோர் சொந்த ஊரிலேயே தங்கிவிட, இழப்பதற்கு எதுவுமற்ற ஏழைகள் வன்னிக்கு இடம் பெயர்ந்தனர். அப்படி இடம் பெயர்ந்தவர்களில் எமது குடும்பமும் ஒன்று. அவர்கள் இப்போது வசிக்கும் இடம் வேறாக இருந்தாலும் துன்பம், துயரம் குறையவில்லை. இன்னல்கள் அங்கேயும் தொடர்ந்தன. அங்கே போன பின்பு குடும்பத்திற்கு பாரமாகவிருப்பதைவிட, நாட்டின் விடுதலைக்கு உயிர் கொடுப்பது மேல் என நினைத்த கடைசித் தங்கை இயக்கத்தில் போய்ச் சேர்ந்து விட்டாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இதைப்பற்றிக் கவலைப்படுவதா அல்லது பெருமைப்படுவதா என்று தெரியாத நிலை. வேறு வழியின்றி தங்கையின் முடிவை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். என்னோடு முகாமில் இருக்கும் குர்திஷ் நண்பன் சொன்னான்: தங்கள் குடும்பங்களில் இப்படி யாராவது இயக்கத்தில் போய்ச் சேர்ந்தால் அதை மகிழ்ச்சியோடு கொண்டாடுவர்களாம் ஒரு போராளியை பெற்றெடுத்ததற்காக அந்தக் குடும்பம் பெருமைப்பட்டுக் கொள்ளுமாம். அந்த குர்திஷ் நண்பன் மூலமாக குர்திஸ்தான் விடுதலைப் போராட்டம்பற்றி நிறைய அறிந்து கொண்டேன். துருக்கியில் வாழும் குர்திஷ் இனத்தவர் தமது தாய்மொழியை பேசவோ பாடசாலையில் கற்பிக்கவோ முடியாதாம். துருக்கி இராணுவத்தால் வீடுகள் மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான கிராமங்களே அழிக்கப்பட்டுள்ளதாம். பல ஐரோப்பிய நாடுகளில் பல குர்திய அகதிகள் அரசியல் நடவடிக்கை காரணமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். நெதர்லாந்தில் உள்ள பல அகதிமுகாம்களில் வசிக்கும் சில குர்திய அகதிகள் நீண்டகாலமாக தமக்கு எந்த முடிவும் வராமல் தஞ்சக்கோரிக்கை மனு புறக்கணிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவும், மேலும் சிலர் தஞ்ச மனு நிராகரிக்கப்பட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் நிலையில் இருப்பதாலும் தமது வாய்களைத் தாமே கம்பியால் கட்டிக்கொண்டு உண்ணாவிரதம் இருந்தார்கள். பல நாட்களாக அசைந்து கொடுக்காத அரசாங்கம் இறுதியில் அவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்தது. எனக்கு முதன்முதலாக ஒரு உண்மை தெரிய வந்தது. வாழ்க்கை என்பது சினிமாவில் வரும் கனவுக் காட்சியல்ல. அது போராட்டங்கள் நிறைந்தது.



STEVE M. FALK/NYT PICTURES

குர்திய விடுதலை இயக்கத் தலைவர் கைது செய்யப்பட்டு விட்ட செய்தி காட்டுத்தீபோல் உலகெங்கும் பரவியது. ஐரோப்பிய நாடுகளில் குர்திஷ் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். சிலர் தீக்குளித்தனர். இலண்டனில் அப்படியான ஒரு தற்கொலை முயற்சியில் இறங்கிய ஒரு இளம் பெண் ஐரோப்பாவில் வளர்ந்த இரண்டாவது சந்ததியைச் சேர்ந்தவள். தற்கொலை முயற்சி தோல்வியடைந்ததும், அவள் பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டியில் சொன்னவை இன்னும் என் காதில் ஒலிக்கின்றன: "நாம் சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக இங்கே வரவில்லை. எமது இனத்தின் விடுதலைக்காக எங்கேயும் எப்போதும் எமது உயிரைக் கொடுக்கத் தயாராகவிருக்கிறோம்"

அடைக்கலம் புகுந்த நாட்டில் அடுத்தடுத்து இடம்பெற்ற சம்பவங்கள் என் மனதை மாற்றின. தற்கொலை என்பது உலகில் பலவீனமான மக்கள் கூட்டத்தின் எதிர்ப்பு ஆயுதமாக பயன்படுத்தப்படுவதை உணர்ந்து கொண்டேன். அதன் பிறகுதான் எனக்கும் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் வந்தது. அகதிகளை வேண்டா விருந்தாளிகளாக நடத்தும், அவர்களை தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் வருடக் கணக்கில் காத்திருக்க வைக்கும், இவ்வாறு பல மன நோயாளிகளை உருவாக்கிய இந்நாட்டு அரசுக்கு பாடம் புகட்டுவதற்காக என்னாலியன்ற ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக தற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொலையைத் தேர்ந்தெடுத்தேன். இந்த நடவடிக்கையால் வேறு யாருடைய உயிரோ உடைமையோ பாதிக்கப்படப் போவதில்லை. எனது தற்கொலை மரணம் அமைதியான இந்த நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தும். பல உள்ளூர் மக்கள் சிந்திக்க ஆரம்பிப்பார்கள். அரசு இயந்திரம் அசைக்கப்படும். இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். ஆகவே யாரும் பதற வேண்டாம். இருந்து ஆழமாக சில நிமிடங்கள் சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு எனது செயலின் நியாயம் புரியும். அடுத்ததாக தற்கொலை எங்கே, எப்படி, எந்த நேரம் செய்வது என்று திட்டமிடுவதைப்பற்றிய சிந்தனைகளுடன் இன்று உறங்கப் போகிறேன்.

விடிந்தது. முகாம் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டது. பலர் கத்தியபடி அங்கேயும் இங்கேயும் ஓடித் திரிந்தார்கள். திடுக்கிட்டு எழுந்த நான் சத்தம் வந்த திசைக்கு ஓடினேன். எனது முகாமில் வசிக்கும் குடும்பகாரரான விநாயகமூர்த்தி நேற்றிரவு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்திருந்தார். அவரது உயிரற்ற உடலைச் சுற்றிப் பலர் அழுது கொண்டிருந்தார்கள். விநாயகமூர்த்தி நான்கு பிள்ளைகளின் தந்தை. அவரது மனைவி பிள்ளைகள் இன்னமும் இலங்கையில் வசிக்கின்றனர். மற்றப்படி அவருக்கும் எனக்குமிடையில் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. குடும்பத்தின் வறுமைநிலை, கடன் சுமை போன்ற பல. அவர் என்னை முந்திவிட்டார்.

பத்திரிகை நிருபர்கள் வந்தார்கள். முகாம் நிர்வாகிகள், அகதிகள் என்று பலரைப் பேட்டி எடுத்தார்கள். அநேகமாக எல்லா அகதிகளும் விநாயகமூர்த்தியை இந்த நிலைக்குத் தள்ளிய இந்த அரசையும், உதவி மனப்பான்மையற்ற மனித இயந்திரங்களான நிர்வாகத்தினரையும் குற்றஞ் சாட்டினார்கள். நிர்வாகத்தினரோ தாம் மேலிடத்து உத்தரவுகளை மட்டுமே அமுல்படுத்துவதாகவும் மற்றும்படி தங்கள் கையில் எதுவுமே இல்லை எனக் கைவிரித்தார்கள். கிட்டத்தட்ட மனநோயாளியாகி விட்டிருந்த விநாயகமூர்த்தி முன்பொரு தடவை நிர்வாகியிடம் சில உதவிகளைக் கேட்டுக் கிடைக்காது ஏமாற்றமடைந்திருந்தார். இதனால் சில அகதிகள் நிர்வாகியின் அலுவலகத்தை முற்றுகையிடவே, நிர்வாகி பின்புற ஜன்னல் வழியாக வெளியேறிவிட்டார். பிற்பகல் ஆரம்பித்த சவ ஊர்வலம் நகரசபை நோக்கி சென்றது. நகர பிதாவிடம் மனு கையளிக்கப்பட்டது.

நாடு முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்தச் செய்தி பாராளுமன்றத்தை அடைந்தது. சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காரசாரமாக விவாதம் செய்தார்கள். அகதிகளை மனிதாபிமான மற்ற முறையில் நடத்துவதாக ஆளும் கட்சிகளின்மீது குற்றச்சாட்டுகள் வீசப்பட்டன. அகதிகளை மனிதாபிமான முறையில் நடத்துவதாகவும், பலவந்தமாக திருப்பியனுப்பப்படுவது நிறுத்தப்படும் எனவும் சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுதியளித்தார்.

தொடர்ந்து சில மாதங்கள் அகதிகள் யாரும் திருப்பியனுப்பப்படவில்லை. சில பேருக்கு விரைவில் முடிவுகள் வந்தன. சிலர் அரசால் அகதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அல்லது நிரந்தர வதிவிட அனுமதி அளிக்கப்பட்டு முகாமை விட்டு வீடுகளுக்குச் சென்றனர். மற்ற அகதிகளின் மத்தியில் இந்த மாற்றம் நம்பிக்கையைத் தோற்றுவித்தது. பலர் தமக்கும் விரைவில் நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்த்தனர். இந்த மாற்றமெல்லாம் ஒரு சில மாதங்களே நீடித்தன. எல்லோரும் தற்கொலை செய்து கொண்டவனை மறந்துவிட்டதாலும், இதற்கிடையில் அரசு நல்ல பெயர் எடுத்துவிட்டதாலும், நிலைமை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதை யாரும் கவனிக்கவில்லை. விக்கிரமாதித்தனின் கடும் முயற்சியினால் கட்டியிழுத்து வரப்பட்ட வேதாளம் மீண்டும் ஓடிப்போய் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. நானும் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். ☯


"இன்று இந்நூல் பொருத்தமான நேரத்தில் வெளியாகின்றது. இந் நூலின் பலமே அதன் காலப்பொருத்தம் தான். மேலும் இதன் வெற்றிக்கு முக்கிய காரணம் யோதிலிங்கம் அவர்களுக்கு இருந்த தேசிய மற்றும் மார்க்சிய புரிதலும், அவற்றுடனான நேரடியாக இருந்த நடைமுறை அனுபவங்களும் தான். தேசிய விடுதலைப் போராட்டத்துடன் அவர்கொண்டிருந்த நேரடி ஈடுபாடு மற்றும் மாக்சிய புரிதலும் சமூகவியல் பார்வையுமாக இவருக்கு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய பரந்துபட்ட பார்வையை வழங்கியிருக்கிறது. அதன் வெளிப்பாடுகளாகத்தான் இந்நூல் அமைந்திருக்கிறது."

(செப்டம்பர் மாதம் 2000, கொழும்பில் இடம்பெற்ற வெளியீட்டு விழாவில் என்.சரவணனின் நூல் விமர்சன உரையிலிருந்து)

**இலங்கையின்**
**இனக் குழும**
**அரசியல்**




**சி.அ.யோதிலிங்கம்**

இந்நூலில் உள்ள கட்டுரைகளை யோதிலிங்கத்தின் http://members.fortunecity.com/sothilingam1 இணையத்தளத்திலும் பார்க்கலாம்.

**வெளியீடு :**

**மூன்றாவது மனிதன் வெளியீட்டகம்**

ஏக விநியோகஸ்தர்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை

340,செட்டியார்தெரு,

கொழும்பு-11

இலங்கை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Paris Connection



# அ. மார்க்ஸ்...

**ஸ்பாட்டகஸ்தாசன்**

அன்பே அன்ரனி!

இந்தியாவில் போய் இறங்கியதும் 'வென்று வந்துள்ளேன் தலைவா' என்று உடைவாளை உருவி சர்கசம் காட்டலாம் என்ற முஸ்த்தீபுடன் 'உயிர் நிழலி'ல் அ. மார்க்ஸுக்கு நான் எழுதிய கடிதத் திற்குத் தாங்கள் 'அம்மா'வில் பதில் எழுதியுள் ளீர்கள் போல் தெரிகிறது.

இதோ பாருங்கள் அன்ரனி, குருவுடன் deal பண்ணுவதைவிட சிஷ்யர்களுடன் deal பண்ணுவது மிகவும் கஷ்டம். ஏனெனில் சிஷ்யர்கள் குருவையும் விளங்கமாட்டார்கள்; அவர்மீதான விமர்சனத் தையும் விளங்கியிருக்கமாட்டார்கள். 'அம்மா'வில் உங்கள் கடிதத்தைப் பார்த்ததும் மேற்படி ஞாபகமே எனக்கு வந்தது.

மேலும், 'தமிழினி 2000' த்தை defend பண்ணுவது எனது நோக்கமாக என்றும் இருந்ததில்லை. அது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாகவும் நான் கருத வில்லை. அத்துடன், அதற்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் நான் கொடுக்கவில்லை. நீங்கள் கதையோடு கதையாக என்னிடம் அ. மார்க்ஸின் 'தமிழ் இனி 2000' கும்பமேளா பிரசுரத்திற்கு பதில் எழுதச் சொன்ன நண்ப - நண்பிகள் யாரெனக் கேட்டி ருந்தீர்கள். உங்களுடன் ஒரே தொல்லையாகிப் போய்விட்டது. மீண்டும் பாருங்கள், பட்டியலையே கேட்கிறீர்கள். அதன்மீது உங்களுக்கு என்ன மோகமோ? அவர்களின் பெயரைக் கூறுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், உங்களின் கடந்த-நிகழ்கால வரலாற்றை பாரிஸிலிருந்து வெளியான 'ஜன்னலைத் திறவுங்கள்' பிரசுரத்தில் வாசித்து அறிந்திருந்த அந்த நண்பி-நண்பர்கள் தங்களின் பெயர்களைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டாமென மன்றாடுகிறார்கள், நான் என்ன செய்ய.

தோழர் அ. மார்க்ஸ் அவர்கள் எனக்கு அரசியல் இல்லை என்று கூறியதனால்தான் நான் எனது கடந்தகால அரசியல் வரலாற்றை எழுதினேன்; வீரப் பிரதாப நோக்கத்திற்காக அல்ல, அப்படி எழுது வதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை. மேலும் அ. மார்க்ஸ் தனது புகலிட பட்டியலாளர்களை புரட்சிக் கொழுந்துகளாகக் காட்டியதினாலேயே நான் "சாதாரண (போலிஸ் அடிதடியற்ற)" மேதின ஊர்வ லத்தில்கூட தலைகாட்டாதவர்கள் அவர்களென எழுதியிருந்தேன். ஆனால் நீங்களோ, மேதின ஊர் வலத்தில் கலந்து கொள்வதைவிட எம். ஜி. ஆரின் படங்களை மீண்டும் பார்ப்பது மேலாந்ததென எழுதி யுள்ளீர்கள். இது உங்கள் குட்டி முதலாளித்துவ, தொழிலாள விரோதத்தன்மையையே காட்டுகிறது.

மேதின ஊர்வலங்கள் பற்றி எனக்கும் விமர்சனம் உள்ளது. அதனாலேயேதான் மேதினத்தில் கூடக் கலந்து கொள்ளாதவர்கள் எனக் குறிப்பிட்டேன். தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த ஊர்வலத் தைத்தானும் செய்யாவிடில் முதலாளிகள் தாம் விரும்பியபடி வேலை நேரத்தைக்கூட்டியும் ஊதியத் தைக் குறைத்தும் ஆட்களைத் தம் விருப்பப்படி வேலைநீக்கம் செய்தும் ஆட்டிப் படைப்பார்கள். அப்போது உங்களுக்கு புரட்சித் தலைவரின் வீடியோக்களை பார்க்கக்கூட நேரம் கிடைக்காது. தொழிலாளர்களின் போராட்டத்தினால்தான் உங்க ளுக்கு இந்த வீடியோவைப் பார்க்கக்கூட நேரம் கிடைக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

மேலும், 1995 ஜேர்மனியில் டுசில்டொவ் (Dusseldorf) நகரில் நடந்த மேதின ஊர்வலத்தில் பத்திரிகை விநியோகித்துக் கொண்டிருந்த நான்காம் அகிலத்தினர், தேசிய வெறியர்களினால் தாக்கப்பட்டபோது எந்த ஒரு தொழிற்சங்கமும் தோழர்களைக் காப்பாற்ற முன்வரவில்லை என எழுதியிருந்தீர்கள். அந்தத் தேசிய வெறியர்கள் புலிகள்தான் என்று சொல்ல முடியாத உங்கள் நேர்மையற்றதனத்தைவிட அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட பல்வேறு இனத் தோழிகள், தோழர்கள் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர் களிடையே ஏற்பட்ட கலகத்தில் யார் வலதுசாரிகள் யார் இடதுசாரிகள் என்று தெரியாமல் திகைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நின்றது ஒன்றும் துரோகத்தனமில்லை.

மேலும், "நான் தலித்தில்லை" என்று கூறுவதில் என்ன தலித் விரோதத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களென கேட்கிறீர்கள். அன்பே அன்ரனி! சாதியத்தின் உள்ளார்ந்த mechanism அதுதானே. என். கே. ரகுநாதனின் 'நிலவிலே பேசுவோம்' என்ற சிறுகதையைப் படியுங்கள் புரியும்.

மேலும் இது தொடர்பான இன்னும் ஒரு பிரச்சனைக்கு வருவோம். டொமினிக் ஜீவா அவர்கள் தாம் எழுதத் தொடங்கிய காலத்தில் 'உயர்'சாதியினர் அவரைப் பார்த்து "நீங்களும் எழுதத் தொடங்கிவிட்டீர்களா?" என்று ஏளனமாக கேட்பார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இது இப்படி இருக்க, பிராங்போட்டில் நடந்த 24வது இலக்கியச் சந்திப்பில் டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள்மீதான விமர்சனத்தின்போது "டொமினிக் ஜீவாவுக்கு எழுதத் தெரியாது" என நீங்கள் கூறினீர்கள். மேற்குறிப்பிட்ட இரண்டையும் உடன்பாடுபடுத்த முடியுமல்லவா? ஆனால் அப்படியான ஒரு முடிவுக்கு நான் வரவில்லை.

நான் தலித்தியக் கோட்பாடு போராட்ட வடிவம் எடுக்காமல் தனிப்பட்ட விரோதங்களுக்கு பாவிக்கப்படும் ஒரு கருவியாக அமைந்துவிட்டதையே விமர்சித்தேன். அத்துடன், ஆண்திமிர்வாதிகள் பெண்ணியம் பேசத் தொடங்க பெண்கள் எப்படிச் சங்கடப்பட்டார்களோ அதுபோல் தலித்துக்களும் மேல்நிலைச் சாதிகள் தலித்தியம் பேசும்போது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்ததைப் பார்த்தேன். 'இதுதான் தலித்தியம்'என பல்வேறுபட்ட விழுமியங்களைத் திணித்தபோது வேதனைப்பட்டதைப் பார்த்தவன் நான். இதற்காகவே நான் விமர்சனம் எழுதினேன்.

இனி, புகலிடத்தில் சாதி பற்றிய எனது கூற்றுக்கு வருவோம். "புகலிடத்தில் சாதிவேறுபாடு இலங்கையைவிட அதிகமென்று கூறமுடியாது" என்ற எனது கூற்றை "புகலிடத்தில் சாதி வேறுபாடு குறைவு" என நீங்கள் விளங்கியுள்ளீர்கள். எனது இக்கருத்துடன் டொமினிக் ஜீவாவும் முரண்படுவதாகத் தெரியவில்லை. மாறாக புகலிட இளஞ் சந்ததியினரிடையே சாதி வேறுபாடு இல்லையென்ற எனது கூற்று controversial ஆனதே. ஜேர்மனியில் இளைய தலைமுறையினர் பற்றிய எனது கருத்து அனைத்துப் புகலிட நாடுகளுக்கும் பொருந்தாது என்பது உண்மை. ஜேர்மனியிலும்கூட அது controversial ஆனதே. மேலும் சாதியம், தேசியம் இன்னோரன்ன எல்லாமே ஒரு கற்பிதம்தான்.

'பொது' என்பது ஒன்றும் பிற்போக்கானது அல்ல. 'பொது'வை உருவாக்குவது தேவைகளும் நிலைமைகளும் அதிகாரமுமே. 'தலித்' என்பதும் ஒரு 'பொது' தான். 'பொது' இல்லாமல் போராட்டம் இல்லை எனலாம்(?).

இதை தோழர் அ. மார்க்ஸிடமிருந்தாவது கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தியாவில் நடப்பது இலங்கையில் நடந்தது/நடப்பது போன்ற சாதி ஒழிப்புப் போராட்டமல்ல, சாதிச்சமநிலைக்கான போராட்டமே என நான் குறிப்பிட்டு இருந்ததை நீங்கள் பிழையாக விளங்கி யுள்ளீர்கள்.

சாதிச் சமநிலைக்கான போராட்டமாக நான் குறிப்பிட்டிருந்தது என்னவெனில் நிற வாத ஒழிப்புக்கு நிறங்களிடையே ஏற்றத் தாழ்வுகள் இல்லை என்ற கருத்தியல் கட்டுமானம் முதல் படியாக அமைவது போலவும் ஆணாதிக்கத்தை ஒழிப்பதற்கு பெண்கள் குழந்தைகள், ஆண்கள் அனைவரும் சரி சமம் என்ற கருத்தியல் கட்டுமானம் முன் நிபந்தனையாய் அமைவது போலவுமாகும். இரு வேறு தேசங்களின் சாதி எதிர்ப்புப் போராட்டம் இரு வேறு பாதைகளை எடுத்தன என்பதையே நான் சுட்டிக்காட்டி இருந்தேன். இதில் எது சரி, எது பிழை என நான் கூறவில்லை. எனது பார்வை சரியெனவும் நான் கூறவில்லை. இது எனது கணிப்பீடு அவ்வளவே.

இந்தியாவில் சாதி எதிர்ப்புப் போராட்டம் தோழர் கிராம்சியின் பாதையையும் இலங்கையில் இது லெனினிச அல்லது மாவோயிச பாதையையும் எடுத்தது என்பது எனது கருத்து. இந்தியா போன்ற நாடுகளுக்கு அது எடுத்துக் கொண்ட பாதைதான் சரி என எண்ணுகிறேன். போராட்டங்களில் அக்கறையும் கரிசனையும் இருந்தால்தான் இது விளங்கும்.

மேலும் நீங்கள் 'பொது' அல்லது 'பொதுமை'பற்றி எழுதி இவ்வளவு பக்கங்களை வீணடித்து இருக்கத் தேவையில்லை. ஏனெனில் "பொதுவானது, நிலையானது, முழுமையானது" பற்றி நான் எப்பொழுதுமே கேள்வி எழுப்பிக் கொண்டிருப்பவன். ஆனால், 'பொது' என்பது ஒன்றும் பிற்போக்கானது அல்ல. 'பொது'வை உருவாக்குவது தேவைகளும் நிலைமைகளும் அதிகாரமுமே. 'தலித்' என்பதும் ஒரு 'பொது' தான். 'பொது' இல்லாமல் போராட்டம் இல்லை எனலாம்(?). உதாரணமாக 'பொது' என்பது பற்றி பல்வேறு விமர்சனங்களை வைக்கும் அ. மார்க்ஸ் அவர்கள் தமிழகத்தில் மரண தண்டனையை எதிர்த்துப் பல்வேறு குழுக்கள் சேர்ந்து எதிர்ப்புத் தெரிவித்தபோது "இப்படி ஒரு பொதுவான" விடயத்திற்கு அனைவரும் ஒன்று சேர்வது மகிழ்ச்சி தருவது எனக் குறிப்பிட்டார். போராட்டத்திற்கு 'பொது' முக்கியம். ஆனால் 'பொது'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கப்படும் கட்டுமானம் பற்றி நாம் கேள்வி எழுப்ப வேண்டியது தேவைதான்.

உங்கள் கடிதத்தில் 'எக்ஸில்' சஞ்சிகையினர் பற்றி "கடந்தகாலத்தில் மையங்களுக்கு எதிராக" இவர்கள் போராடியவர்களெனை எழுதியிருக்கி றீர்கள்; இது சரியாக இருக்கலாம். ஏனெனில், மையம் பன்மையாக (மையங்களாக) இருப்பதை அவர்கள் விரும்பவில்லைத்தான்; ஒற்றையாக/தமதாக இருப் பதே அவர்கள் விருப்பம். பெயர்பற்றிய அவர்களது மிரட்டல் இதையே காட்டுகின்றது.

மேலும், "அ. மார்க்ஸினுடைய பிராமண எதிர்ப் பில் ஒரு பாசிசத் தன்மையுள்ளது" என நான் கூறியதை நீங்கள் "அ. மார்க்ஸ் ஒரு பாசிஸ்ட்" என எழுதியுள்ளீர்கள். இதற்கு அ. மார்க்ஸ்தான் உங்க ளுக்குத் தண்டனை வழங்கவேண்டும்.

மேலும் பார்ப்பனம், பிராமணம் என்ற semantic விவாதத்திற்குள் நுழைய எனக்கு விருப்பமில்லை.

அ. மார்க்ஸ் ஐரோப்பா வருவதற்காகத்தான் புகலிடத்திலுள்ளோர்களை தாஜா* பண்ணி எழுதி யுள்ளார் என நான் எழுதியதற்கு 27வது இலக்கியச் சந்திப்பில் சாருநிவேதிதா பதில் கூறியபோது நான் மௌனம் சாதித்ததாக கூறியிருந்தீர்கள். இலக்கி யச்சந்திப்பில் சாருநிவேதிதா, "அ. மார்க்ஸ் அவர் கள் ஐரோப்பாவிற்கு ஒரு முறையல்ல ஆறு முறை வரக்கூடிய தகுதி படைத்தவர்" என்று ரஜனி பாணியில் (ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி) கூறினார். அ. மார்க்ஸை defend பண்ணுபவர்களுடைய அறிவுத்திறன் இப்படி இருப்பது அவரின் துர்ப்பாக்கியமே. மேலும் நான் சாருநிவேதிதாவிடம் "உங்கள் ஆண்குறியை எங்களுக்குக் காட்டுவீர்களா?" என சின்னத் தனமாக அவரைக் கேலி செய்ததாக உங்கள் பெருந்தனப் பாணியில் எழுதி இருந்தீர்கள். சின்னத் தனமென்று நீங்கள் கூறியது பிராமண வேளாள மேலாண்மைக் கருத்தல்லவா? உங்க ளுக்கு ஒரு சிறு தகவல்; எனது பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்காத சாருநிவேதிதா கூட்டம் முடிந்ததும் என்னிடம் வந்து "ச்சே! உங்களிடம் தோற்று விட்டேன்" என்றார்.

மேலும் சேரனையோ, பத்மநாபஜயர் பற்றியோ பரிந்து பேசவேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆனால் நீங்கள் ஷோபாசக்தி என்ற பெயரை வைத்துக்கொண்டு சிவசக்தி என சேரன் கூறியது இந்துத்துவம் என கூறுகிறீர்கள். அது மாத்திரமல்ல பாரிஸில் இருந்து வெளிவரும் ஈழமுரசில் யமுனா ராஜேந்திரனு டைய கட்டுரை தொடர் பாக சிவசக்தி என்ற பெயரில் கடிதம் எழுதினீர்களே! இதை இந்துத்துவம் என்று சொல்ல முடியாதா? நல்ல வேளை சிவகாமியிடம் 'சிவ'த்தை எடுக்கச் சொல் லியோ அல்லது உங்கள் பத்திரிகையில் சிறுகதை எழுதிய முத்துலிங்கத்திடம் 'லிங்க'த்தை அகற்றவோ கூறமாட்டீர்கள் என நினைக்கிறேன்.

*இதை நான் சிலேடையாகவே குறிப்பிட்டேன்.

Paris Connection

பத்மநாப ஐயருக்கும் அதுவே பெயராக அமையுமா னால் என் செய்வது.

சமயப் பெயர் களை சாதா ரணமாகப் பாவிப பவர்கள் எல்லோரை யும் இந்துத்துவ வாதிகள் அல்லது பாசிஸ் டுகள் என்று முத்திரை குத்தலாமா? உங்கள் சுற்றாடலைப் பாருங்கள், எத்தனை பேருக்கு சமயப் பெயர்கள் உண்டென்று. சமயம் பற்றிய பயர்பாக்கின் கருத்தைப் படியுங்கள் புரியும். சமயச் சடங்குகளில் எல்லாம் சென்று சல்லாபம் அடித்துவிட்டு, பத்மநாப ஐயரிடம் 'ஐயர்' உள்ளது எனக் கேள்வி கேட்பது வேடிக்கையானது. இதில் இன்னும் ஒரு வேடிக்கை, இந்தியாவில் உள்ளது போல் இலங்கையில் பிராமணர் இல்லை. ஆனால், இலங்கையில் 'உயர்' சாதியினர் சேர்ந்து ஐயரைக் கேள்வி கேட்பதுதான் அது.

டொமினிக் ஜீவா அவர்களின் கூற்றுப்பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை.

'நதியின் மரணம்' வீடியோ கசற்பற்றி பல்வேறு கதைகள் அடிபடுகின்றன. தங்களின் பதில் நேர்மை யானதாகவும் சரியாகவும் இருக்கும் பட்சத்தில் எனது குற்றச்சாட்டை வாபஸ் வாங்கலாம் என எண்ணினேன். ஆனால், நீங்கள் உங்கள் சார்பு நியாயத்திற்காக குறிப்பிட்டவர்களே உங்களிட மிருந்து முரண்பாடான versionஐத்தான் சொல்கி றார்கள். பந்து உங்கள் பக்கத்தில்தான். மேலும் இப்படுகொலையை உங்கள் பிரச்சனையாக்கி அதைக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை.

இறுதியாக, சுந்தர ராமசாமி, பிரசன்னா ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, அம்பை, அ. மங்கை ஆகியோர் புகலிடத்திற்கு வந்தபோது மௌனமாக இருந்ததாக ஒரு கண்டுபிடிப்புச் செய்துள்ளீர்கள். எனது விமர்சனம் அ. மார்க்ஸின் பிரசுரம் பற்றியதும் அவரின் புகலிடப் புரிதல்கள் பற்றியதுமே. விடுத்து நான் ஒரு கலாச்சாரக் கண்காணிப்பு அதிகாரியல்ல. அ. மார்க்ஸ் அவர்களை முதன்முதல் பிராங்போட் (Frankfurt)டுக்கு அழைத்து நாங்கள் கருத்தரங்கு நடத்தினோம். அவர் இன்னும் பலமுறை வருவாரா னாலும் மிகவும் சந்தோஷப்படுவோம்.

ஆனால், தவறான கருத்துக்களை யார் வைத்தாலும் அதைச் சுட்டிக்காட்டுவது எனது இயல்பு.

இன்னும் சொல்லப்போனால், ஜோதிலால் பூலே, அம்பேத்கர், அயோத்திதாச பண்டிதர், பெரியார் போன்றவர்கள் தங்கள் பெயர்கள் உங்கள் கைக ளில் தவிப்பதைப் பார்த்தால் உங்களைத் துவையல் தான் செய்வார்கள். இறந்தவர்களைத் துணைக் கழைத்திருப்பது உங்களது சாமர்த்தியம்தான்.

இப்பிரச்சினையைத் தொடர்ந்து எழுதி காடு களை அழித்தவன் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாக விரும்பாமல் இத்துடன் முடிக்கலாமென நினைக் கிறேன்.

ஸ்பாட்டகஸ்தாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திர அடிமைகள்

வித்யா



முகம் மறைத்து நிறம் பூசி
முழுவதுமாய் வேஷம் கட்டி
புன்னகையால் போர்வையிட்டு
பொய்களையே வடித்தெடுத்து
போகாத ஊருக்கு வழி சொல்லும்
போலி இலக்கியவாதிப் பெண்ணல்ல நான்.

எங்கோ உருவாகி
எதற்கெதற்கோ உருமாறி
எழுதுவதற்காய் பிறர்காலை
உடைத்து ஊன்றுகோலாக்கி
நடைபோட்டு வந்தவளுமல்ல நான்.

எழுத்தைக் களவாடி
ஏட்டில் பதிவாக்கி
வளத்தைப் பெருக்கி வாழும்
வாய்ச் சொல்லில் வீரியுமல்ல நான்.

என் உள்ளத்தில் உருவாகி
கற்பனை செய்யாமல் கருவாகி
வெளியாகி வரும் எண்ணம் குமுறலை
கவிதையாக்கி தருகின்ற சராசரிப் பெண் நான்.

இருள் போர்த்த பூமியிலே,
இடைக்கிடை தலைகாட்டும்
சூரியனும் தொலைந்து போக
சுதந்திரம் பெற்றதாய் எண்ணி - இந்த
சூனியத்துள் வீழ்ந்த என்
சகோதரிகளுள் ஒருத்தி நான்.

எங்கோ நெடுந் தொலைவில்
என் உறவுகள் இருந்து அழ
இங்கோ முகம் தொலைத்து
வாழ்பவருள் ஒருத்தியானேன்.

பனி கொட்டிக்குளிர் வாட்டும்
பாழ்வெளியில் கரைந்துபோக,
கரையொதுங்கிக் கரையொதுங்கி,
கண்காணாத் தொலைவொதுங்கி
காணாமல் போன எங்கள்
கருவறைச் செல்வங்களே - உங்கள்
கனவுகளைக் கௌரவிக்கிறேன்.

உங்களுக்குப் புகழ்மாலை
சூடவரும் இந் நாளில்
புழுவாய் நெளியும் எம்
புலம்பெயர்ந்த புத்திரரின்
ஆசைகளையும், அவர்தம்
மனஓசைகளையும்
கொஞ்சம் அலசுவதற்கு முயல்கிறேன்.

வேலணை ம.ம.வி. ப.மா.ச. வருடாந்தவிழாவின்போது (28/01/2001) ‘சுதந்திர அடிமைகள்’ எனும் கவியரங்கில் படிக்கப்பட்ட கவிதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரந்த பூமியின்
எல்லைகளற்ற வானத்தில்
பறந்து வந்து பறந்து வந்து
வந்த இடங்களிலும்
எல்லைகள் போட்டு
கோடு கிழித்து கதிகால்கள் இட்டு
இரும்புக் கோட்டைக்குள்
பெண்களை இருத்தி
சுற்றி நின்று சுற்றி நின்று
காவல் காக்கும் எங்கள்
பண்பாட்டின் கனவான்களே!
உங்கள் முகங்களையெல்லாம்
மூடியிருக்கும்
முற்போக்கு முகமூடிகளைக் கொஞ்சம்
முழுவதுமாய் களைந்தெறிவது எப்போது?
நீங்கள், சராசரி என்று சொல்லி
சாதாரண மனிதனைத் தராசில் நிறுத்தி
தத்துவம் பேசுவீர்கள்,
காரசாரமாய் இலக்கியக்
கருத்துக்கள் உதிர்ப்பீர்கள்
மனிதம், சமத்துவம், நேசம்
மனிதாபிமானம் மார்க்சியம்
பெண்ணியம், தலித்தியம் என்று....
இப்படி இன்னும்.... இன்னும்....

என்னவெல்லாமோ எழும்
உங்கள் திருவாயிலிருந்து,
கேட்போர் வியப்பர் - உங்களைப்
படிப்போரும் இருப்பர்
ஆனால் இவைகளெல்லாம்
உங்களைப்பற்றி நீங்களே தம்பட்டமடித்து
விளம்பரம் தேடத்தான் என்பதெல்லாம்
இங்கே எத்தனை பேருக்குத் தெரியும்?

எரிதணல் நாவிலிருக்க
எறிகணையாய் உங்கள் வார்த்தையிருக்கும்,
அரிதினும் அரிதாக உம்மிடமிருந்த
மனித நேசமெல்லாம் பொசுங்கிப் போக
பெரிதாக இலக்கியச் சர்ச்சையிருக்கும்
பெண்ணியம் பற்றி மணிக்கணக்காகப்
பேச்சு, எழுத்து, கவிதை.....
அப்பப்பா.....
பாரதி தோற்றான் போங்கள்
நல்ல காலம் - அவன்
முப்பத்தொன்பது வயதிலேயே
மூச்சை விட்டான்.
நீங்களோ இருக்கிறீர்கள்
மற்றவர்கள் மூச்சை நிறுத்த,
நால்வகைக் குணங்களும்
கற்பு, ஒழுக்கம், பண்பாடும்
பெண்களுக்கு யாரிட்ட
விலங்குகள் என்று
என்னமாய்க் கதைப்பீர்கள்,



பெண்களே வியக்கும் வண்ணம்.
பேச்சிலே, எழுத்திலே அவர்களுக்காய்
வக்காலத்து வேறு,
ஆனால் உங்களை மிஞ்சி
ஒரு பெண் எழுந்தாலோ போச்சு
எல்லாம் போச்சு
உங்கள் பெண்ணியமும்
பேசிய நெறிகளும், எல்லாம் போச்சு,
எங்கே அடித்தால் அவள் விழுவாள் என்ற
ரகசியமெல்லாம் உங்களுக்குத்தானே
தெரியும்,
அன்றிலிருந்து அவளை
அடக்குவதற்கென்றே
உங்கள் கைவசம்
அற்புதமாய் பல
ஆயுதங்கள் உண்டல்லவா!
அதில் ஒன்று போதுமே
அவளை விழுத்தி உங்கள் ஆதிக்கத்தை
நிலைநிறுத்த.

வேலிப்பொட்டுக்குள்
வேவுபார்க்கும் உங்கள்
சனாதனக் கண்களோடு
உங்களின் ஆசைகளுக்கு
வடிகாலாய் ஓசை எழுப்பி
சஞ்சிகை வேறு நடத்துகின்றீர்கள்,
சங்கங்கள் அமைத்து
சமத்துவம் குறித்துச்
சர்ச்சைகள் செய்கிறீர்கள்.
சாதி ஒழிகவென்று
கோசம் வேறு போடுகின்றீர்கள்
ஆனால், உங்கள் ஆதிமூலம் பற்றி
கொஞ்சம் திரும்பிப் பார்ப்போமா?

வயசுக் கோளாறினால் உங்களுக்கு
ஒரு பெண்ணில் சபலம் எழும்
காதல் என்று முலாம் பூசுவீர்கள்
அவள் வரலாறோ, அதன்பின்தான்
தெரியவரும்.
வாசல்படியில்கூட - ஊரில்
அண்டவிடாத - குறைந்த சாதியாய்
இருக்கின்றாள் என்றறிவீர்கள்.

பிறகென்ன,
குலம் பார்த்து, கோத்திரம் பார்த்து
சாத்திரத்தோடு சர்வமும் பெற்று
சர்வமங்கலமாய் ஒருத்தியை
உங்கள் அம்மா ஏற்றுமதி செய்துவிட
அல்லது உங்கள் உடன் பிறப்புக்கள்
பார்த்து வைக்க,
நீங்கள் அவளை வருத்தி,
மூலையிலே இருத்தி,
ஆண்டுக்கொன்றாக வாரிசைப் பெருக்கி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்க்கு ருசியாக சமைத்துப் போடும்
இயந்திரமாக மாற்றி வைப்பீர்கள்,
இயந்திரத்தின் சாவியோ - உங்கள்
இடுப்பினில் இருக்கும்
இல்லாளின் கனவுகளோ
அடுப்பினில் பொசுங்கும்.



படித்தவளாயிருந்தாலென்ன - ஊரில்
படிப்பித்தவளாயிருந்தாலென்ன, பட்டம்
பெற்றவளாயிருந்தாலென்ன - அவள்
ஆளுமைகள் எல்லாமே உங்கள்
அருகாமையில் அள்ளுண்டு போக,
நீங்களோ அழகாகக் கருத்தியல்வரைவீர்கள்.
புத்தகம் விடுவீர்கள்.
இலக்கியம் பேசவென்று மேடைகளில்
ஏறுவீர்கள்.
சற்று மதுவையும் அருந்திவிட்டு
மதிமயங்கி கதையளப்பீர்கள்
பேச்சுக்கும் எழுத்துக்கும் மாறாயிருக்கும்
உங்கள் நடத்தையைப்
பிறர் அறியாதிருக்க
சஞ்சிகை, பத்திரிகை போன்றவற்றினுள்ளே
ஓசைப்படாமல்
முகத்தை மறைப்பீர்கள்.
கிடுகுவேலிகளை மூளைக்குள் திணித்து
மூளைசாலிகளாய் வலம் வரும்
எங்கள் புண்ணியக் கனவான்களே
உம் வீடுகள் தாம் இங்கே
சிறைக் கூடங்கள் அறிவீர்
உங்கள் பத்தினிகள் எல்லாம் அங்கே
சுதந்திர அடிமைகள்.

உங்கள் இலக்கியத் திறவுகோல்களால்
அவர்களை விடுதலை செய்யமுடியுமா?

உங்கள் வெறிதீர்க்கவும்
பசிபோக்கவும்
வாரிசுக்காகவும்
'அலக்கேசனு'க்காகவும்
எண்ணிக்கையில் இரண்டோ மூன்றோ
பெத்துப் போடவும்,
ஏழுகடல் தாண்டி
ஆகாய மார்க்கமாய்
பறந்து வந்தவளின்
சிறகை முறித்து
முடமாக்கிப் போட்ட - உங்கள்
இலக்கிய முகமூடிகளை நீங்கள்
முழுவதுமாய் களைந்தெறிவது எப்போது?

பெண்களையே கேலி செய்து
பொறுக்கித்தனமாய் பொய்களை அடுக்கி
தன் மனைவி பத்தினி
மாற்றான் மனைவி நடத்தை கெட்டவள் என்று



பாமரன்கூட இன்று மறந்து
போனதை
தத்துவம் படித்தவராய் காட்டி
நிற்கின்ற
நீங்களே உரைக்கும், உங்கள்
நனவிலி
மனத்திலெல்லாம்,
ஊறிப்போய்க் கிடக்கும்
சாக்கடையை
சுத்தம் செய்துவிட்டு
வாருங்கள்
நிஜம் எதுவென்று புரியாமல்
நிழலிலே உழலுகின்ற
கனவான்களே
உங்கள் முகத்திரையை
கிழியுங்கள்
உண்மை புரியும்
சுதந்திரம் படர்ந்த தேசத்தில்
சுதந்திர அடிமைகளாய்
யாருளர் என்று.

அதன்பின் பேசுவோம்
இலக்கியம்பற்றி
தத்துவம்பற்றி
தலித்தியம் பற்றி
பெண்ணியம் பற்றி

அதுவரை உங்கள்
சுதந்திர அடிமைகள்
மூச்சுவிடுவதற்காய்
என்றாலும் கொஞ்சம்
உங்கள் முகமூடிகளை
கழற்றி வைப்பீர்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீட்சேயும்...




# நீட்சேயும்...

## வாசுதேவன்

ஐரோப்பியத் தத்துவாசிரியரின் பெயர்களை அடுக்கடுக்காக எடுத்தெறிவதும், குறிப்பாக நீட்சேயின் பெயரைத் தாரக மந்திரமாய் உச்சரிப்பதும் இப்போது பாணியாகிவிட்டது. "திட்டவட்டமான ஒரு தத்துவ வெளிப்பாட்டை நீட்சே முன்வைத்ததால், நாம் அவரை அழுத்தம் திருத்தமாகப் புரிந்துகொண்டோம் அதன் பின்புதான் நாம் எம்மையும் புரிந்து கொண்டோம்" என்று முழங்குவதும் இப்போதெல்லாம் எடுப்பாய்த் தோன்றுகிறது. ஆயிரம் முகம் கொண்ட நீட்சேயின் எந்த முகத்தில் இவர்கள் தங்களை அடையாளம் கண்டார்கள் என்று கேட்டால் மௌனம் நீடிக்கிறது. நீட்சேயைத் தெளிவாக ஆராய்ந்து தீர்ப்புக் கூறிய பின்பே அவரைப் பின் தொடரலாம் என்று நான் கூறவில்லை. ஆனால் நீட்சேயின் பல்நோக்குகளையும் எல்லோருக்கும் காட்டலும் அதன்பின் நீட்சேயின் மீதான ஒரு விவாதத்தை முன்னெடுத்தலுமே ஆரோக்கியமான போக்காக இருக்குமென எண்ணுகிறேன். நீட்சேயின் பல்முகங்களைப் படம் பிடிப்பதொன்றும் அத்தனை இலகுவானதல்ல. சிக்கல்களும், வளைவு சுழிவுகளும் நிறைந்த நீட்சேயின் கூற்றுக்கள் புரிதற் சக்திக்கு விளையாட்டுக் காட்டுபவை. 'புரிந்து கொண்டேன்' என்று புளுகுபவர்களைப் பார்த்து எள்ளி நகையாடுபவை. அறிவியல் வியூகம் அமைத்துச் சுற்றி வளைத்து 'இதோ பார்! நீட்சேயை அகப்படுத்திக் கொண்டேன்' என்று ஓலமிடுபவர்கள் தமது அறியாமையின் பலத்தை அம்பலப்படுத்துபவர்கள்.

*****

தொடர்வாக....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழில்: வாசுதேவன்
## மூலம்: நீட்சே

### துண்டம் 332 (அதிகார விருப்பு):

அடக்கியாளும் வர்க்கத்தின் மத்தியில் பிறந்த உறுதிப்பாடுடைய ஒரு ஆரியமதம் மனுநீதியைப் போன்றது. (பலத்தை தெய்வீக நிலைப்படுத்தும் இம் மனோநிலை ஷத்திரிய வம்சத்திடமிருந்து பிராமணர்களிடம் கைமாறியது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய ஒன்று)

அடக்கியாளும் வர்க்கத்தில் பிறந்த, உறுதிப்பாடுடைய ஒரு செமிட்டிக் மதம்: முகமதுவின் இஸ்லாம், பழைய ஏற்பாட்டின் ஆரம்ப காலப் பகுதிகள். (ஆண்மை மிக்க இஸ்லாம் கழிவிரக்கமும், கயமையும் கொண்ட கிறிஸ்தவத்தை எள்ளுகின்றது. அதன் சிந்தனையில் கிறிஸ்தவம் ஒரு பெண்ணின் மதம்)

ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் மத்தியில் பிறந்த, பின்னடைவான செமிட்டிக் மதம் கிறிஸ்தவம் (இந்து-ஐரோப்பியக் கோட்பாடுகளின்படி ஒரு சண்டாள மதம்). அடக்கியாளும் வர்க்கத்தின் மத்தியில் வளர்ந்த பின்னடைவான ஆரியமதம் பௌத்தம். அடக்கப்பட்ட ஆரிய இனத்தின் மதம் என்று ஒன்று இல்லாதிருப்பது மிகவும் இயல்பானதே. ஏனெனில் அது முரண்பாடான ஒன்று: ஆண்டார்களின் இனம் அடக்கியாளும் அன்றில் அழியும்.

***

### துண்டம் 562 (அதிகார விருப்பு):

யுத்த விரும்பிகளும், சாத்வீகவாதிகளும்: போர்க் குணத்தை உனது இயற்கைச் சுபாவத்தில் கொண்டுள்ள மனிதனா நீ? அவ்வாறெனில், இதோ உன்னிடத்தில் இன்னுமோர் இரண்டாவது கேள்வி: உன் போர்ச் சுபாவம் தற்காப்பானதா? அல்லது முன்னெடுப்பானதா?

சுபாவத்தில் போர்க்குணமற்ற மிகுதி மனிதர்கள் எல்லோரும் வேண்டுவது சமாதானம், அமைதி, 'சுதந்திரம்', 'சமநீதி' எனப் பல்வேறு பெயர்கள் கொண்ட ஒரே விடயத்தையே.

தற்பாதுகாப்பிற்காகப் போராடவேண்டி ஏற்பட்டால், அதிருப்தியடைந்து, தன்னைப் பாதுகாக்கவேண்டிய அவசியமில்லாத இடத்திற்குப் போய்விடும் இம் மனிதர்கள் விரும்புவதெல்லாம் யுத்தமில்லா நாடொன்றை உருவாக்குவதே. போனால் போகட்டு மென்று அடங்கிப் போவதையும், அடிபணிவதையும், கட்டளைக்குட்படுவதையும்கூட இவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். யுத்தத்தைவிட அனைத்தும் இவர்களுக்கு மேன்மையானது. கிறிஸ்தவ இயற் சுபாவமும் இவ்வாறுதான் ஆலோசனை வழங்கு கின்றது. பிறப்பால் போர்க்குணம் கொண்டவர்தம் நடத்தையில், அவர்கள் வாழும் பிரதேசத்தின் தெரிவில், அவர்களின் புலன் வளர்ச்சிகளில் எல்லாமே ஒரு போர்க்களையிருக்கும். இவ்வாறானவர்களிடம் அதிக அபிவிருத்தியடைந்திருப்பது ஆயுதங்கள். மற்றவர் களிடம் உள்ளதோ தற்பாதுகாப்புக் கருவிகளே. ஆயுதமுமற்று, பாதுகாப்புமற்றவர்களிடம் அறவியலி ருக்கின்றது, ஒரு நாள் வெற்றி கொள்ள எண்ணி.

***

### துண்டம் 564 (அதிகார விருப்பு):

தனது பலத்தை வளர்ப்பதும், விஸ்தரிப்பதும் அதன் பயனாய் புதிய சக்திகளைத் தன்னுள் உள் வாங்குவதும் உயிரியின் இயல்புநிலை.

அறவியற் போதையில் அதிகமாய் மூழ்கி தனிமனித தற்பாதுகாப்புரிமை பற்றிப் பேசப்படுகின்றது. அதே கோணத்திலேயே, அடுத்தவரைத் தாக்கும் உரிமை பற்றியும் பேசவேண்டியுள்ளது. ஏனெனில் முதலாவது உரிமையைப் போன்று குறிப்பாக இரண்டாவது உரிமையும் உயிரியின் அத்தியாவசியமான தேவையே. சுயத்தைப் பாதுகாப்பதும், சுயத்திற்காய் அடுத்ததைத் தாக்குவதும் தெரிவொன்றால் தீர்மானிக்கப்படக் கூடியவையல்ல. இவை வாழ்வின் நிர்ப்பந்தங்கள்.

தனிமனிதனையோ அல்லது வளர்ந்து வரும் ஒரு சமூகத்தையோ கருத்திலெடுத்துக் கொண்டால் தண்டிக்கும் உரிமை (அல்லது தன்னைப் பாதுகாக்கும் உரிமை) என்பது உண்மையில் ஒரு உரிமையில்லை. உரிமை என்பது ஒப்பந்தத்தின்மூலம் பெறப்படுவது. தற்பாதுகாப்பு என்பது ஒரு ஒப்பந்தமல்ல.

இவ்வகையில்தான், ஆயுதபலத்தாலோ வியாபாரத் தாலோ அன்றில் சுரண்டித்துவத்தாலோ ஒரு மக்கள் கூட்டம் தன் பலங் கொள்ளும் வேட்கையையும் தனது உரிமை என்று உறுதி செய்து கொள்ள முடியும்.

தனது சுபாவத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, போரையும் படையெடுப்புகளையும் தட்டிக் கழிக்கும் சமூகம் ஒரு சீரழியும் சமூகம். இவ்வாறான சமூகம் ஜனநாயகத்திற்கும் வியாபார அரசாட்சிக்கும் மட்டுமே பொருத்தமானது.

இச் சமூகங்களில், சமாதான உறுதிப்பாடானது போதையூட்டியல்லாது வேறொன்றல்ல.

***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசித்தலும் எழுதுதலும் பற்றி....

(அவ்வாறுரைத்தான் ஸரத்தூஸ்த்ரா)

எழுதப்பட்டவையனைத்திலும் உதிரத்தால் எழுதப்பட்டவையே எனக்குவப்பானவை. உதிரத்தால் எழுது, உதிரம் உயிரென உணர்வாய்.

அடுத்தவனின் உதிரத்தை உற்றுணர்வதென்பது அத்தனை இலகுவானதல்ல. அருவருப்பிற்கும் ஆத்திரத்திற்குமுரியவர்கள். சோம்பேறி வாசகர்கள்.

வாசகனை அறிந்தவன் எவனோ, அவன் வாசகனுக்காய் எதையும் ஆற்றான். இன்னுமோர் நூற்றாண்டு வாசகநிலை இவ்வாறேயாகுமெனில், நாற்றமெடுக்கும் நல்லுளமும்கூடவே.

வாசக உரிமை அனைவருக்குமெனில், காலப் போக்கில் அழியப்போவது எழுத்து மட்டுமல்ல, சிந்தனையுமே.

முன்னொருகால், உள்ளம் இறைவனென்றாகியிருந்தது. பின்னர் மனிதனென்றாகியது. இப்போதோ பாமரராகிக் கொண்டிருக்கின்றது.

உதிரத்தாலும் உயர்மொழியாலும் எழுதுபவன் வேண்டுவது வாசிப்பையல்ல. உள்ளத்தால் உள்வாங்கும் மனப்பாடத்தையே.

மலைகளில், குறுகிய பாதை என்பது முகட்டிலிருந்து முகட்டிற்கானது. தாண்டுவதற்கு வேண்டியதோ நீண்ட கால்கள்.

உச்சிமுகடாகட்டும் உயர்மொழி, உயர்ந்தோராகவும் பெருமையுற்றோராகவும் இருக்கட்டும் அம்மொழியைக் கேட்போர்.

அரியதெனினும் தூய வாயு, அருகிலெல்லாம் ஆபத்துகள், துடுக்கு நிறைந்த மகிழ்வுள்ளம்: உச்சி முகட்டில் இவையனைத்தும் ஒன்றோடொன்று இசையும் வேடிக்கை.

துணிவுள்ளோன் என்பதனால் எனைச் சுற்றித் துடுக்கர்களை வேண்டுகிறேன். பேய்கள் கண்டே அஞ்சியோடும் என் துணிவு தனக்காகப் படைக்கிறது துடுக்கர்களை.

வீரியம் நகைக்க விரும்புகின்றது.

உங்களுடன் இருப்பதாய் எனக்கு உணர்வில்லை, உங்களுடன் நானில்லை. உச்சியில் நான் நின்று கீழ் காணும், எனக்கு நகைப்பூட்டும் சுமை கொண்ட இக் கருமுகில்தான் உங்கள் புயற்படிவுகள்.

உயர்விலே ஆசை கொண்டு மேலே பார்க்கிறீர்கள். நானோ உச்சிமுகடுகளில் நின்று கீழ் நோக்கிப் பார்க்கிறேன்.

உச்சிமுகட்டில் நின்று சிரிக்கத் தெரிந்தவர்கள் உங்களில் யார்?

துன்பியற் சம்பவங்களையும், நாடகங்களையும் கண்டு சிரிப்பவன் பல உயர் மலைகளைத் தாண்டியவன்.

வீரியமானவராகவும் துன்பநிலையற்றவராகவும் நகைப்பாளராகவும் குருட்டுப்பலம் கொண்டோராகவும் இருமின் என்று நம்மை வேண்டி நிற்கிறது நல்லறிவு. நல்லறிவு ஒரு பெண்ணைப் போன்றது. அது ஒரு போராளியைத் தவிர வேறு யாரையும் நேசிப்பதில்லை.

காவக் கனமானது வாழ்க்கையென்று கூறுகிறீரகளே, மதியத்தில் சவாலும் மாலையில் பணிவும் பின் எதற்காக?

வாழ்க்கை காவக் கனமானதெனில் மென்மையானவர்களாக ஏன் இருக்கிறீர்கள்? இருக்கும் வரையும் உறுதியான இருப்புடைய பாரம் சுமக்கும் கழுதைகளாகவேதானே நாம் இருக்கிறோம்.

ஒரு துளிப்பனி விழ உடல் நடுங்கும் ரோஜா மொட்டிற்கும் எமக்குமிடையில் ஏது பொதுமையுண்டு?

வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப் போனதாலல்ல, வாழ்க்கையில் நேசிக்கப் பழகியதால் தான் அதை நாம் நேசிக்கிறோம்.

அன்பு செலுத்துவதில் எப்போதுமே கொஞ்சம் அறிவின்மை இருக்கின்றது. அறிவின்மையில் எப்போதும் சிறிது அறிவுள்ளதும் உண்மையே.

வண்ணத்துப்பூச்சியைப் போன்றும் சவர்க்காரக் குமிழியைப் போன்றும் வாழும் மனிதர்களே இன்புணர்வை நன்குணர்ந்தோர் என வாழ்வில் பிடிப்புள்ள எனக்குப் படுகின்றது.

எளிமை நிரம்பிய, பைத்தியக்காரத்தனமான, கம்பீரமாக அசைந்து கொண்டேயிருக்கும் இச் சிற்றாத்மாக்களைப் பறப்பதைப் பார்க்கையில் ஸரத்தூஸ்ரா ஆனந்தக் கண்ணீருடன் பாடல் இசைக்கிறான்:

*நடனமிடச் சம்மதிக்கும் ஒரு தெய்வத்திடமே*
*நான் நம்பிக்கை கொள்கிறேன்.*
*தீரமான. துல்லியமான. ஆழமான அக்கறை*
*கொண்ட சிந்தனையில் மூழ்கியிருந்த என்*
*சாத்தானைக் கண்டபோதுணர்ந்தேன் அது*
*சுமை கொண்ட உளமென்று.*
*கொல்லுதல் சினத்தினாலல்ல. சிரிப்பினால்.*
*துணிவு கொள்வோம். சுமை கொண்ட*
*உள்ளத்தைச் சிரிப்பினால் கொல்வோம்.*
*நானாக நடக்கக் கற்றதில் இருந்து*
*ஓடுகிறேன்.*
*முன்னோக்கிப் பறக்கக் கற்றதில் இருந்து*
*யாரும் என்னைப் பின்னிருந்து*
*உந்தத்தேவையில்லை.*
*இப்போ நான் சுமையிழந்து*
*இலகுவாகிவிட்டேன்.*
*இப்போ நான் பறக்கிறேன்.*
*எனக்குக் கீழே என்னைப் பார்க்கிறேன்.*
*என்னூடாக இப்போ ஒரு இறைவன்*
*நடனமிடுகிறான்.*

அவ்வாறுரைத்தான் ஸரத்தூஸ்ரா! **(.......)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்தை இலையான்கள்

தமிழில்: வாசுதேவன்
மூலம்: நீட்சே

நன்றி: இனியும் சூல் கொள்

உனது தனிமைக்குள் தப்பியோடிவிடு நண்பனே!

புன்மைகளின் ஊசிமுனையால் புண்பட்டும், பெரு மனிதர் பேரிரைச்சலில் செவிடாகியுமல்லவா நான் உன்னைக் காண்கிறேன்.

மலைகளும் மரங்களும் உன்னுடன் கூடி மௌன மாகும் திறன் கொண்டவை. பரந்த கிளைகளுடன் கடலின்மேல் பரந்து, நிசப்தமாக, செவிகளைத் தீட்டி நிற்கும் நீ நேசிக்கும் அந்த மரத்தைப்போல் மாறு.

தனிமை முடியும் இடத்தில் ஆரம்பமாவது சந்தை. சந்தை ஆரம்பிக்கும் இடத்தில் ஆரம்பிப் பதோ பெரு நடிகர்களின் கூப்பாடுகளும், நச்சிலை யான்களின் பேரிரைச்சல்களுமே!

மேடையேற்றுக்காரன் இல்லாவிட்டால் இவ்வு லகில் உயர்ந்தவைகள் எனப்படுபவை எவ்விதப் பெறுமானமும் அற்றவையாகின்றன. இவ்வகை மேடையேற்றுக்காரர்களுக்கு மக்கள் பெரிய மனிதர் கள் என்று நாமம் சூட்டுகின்றார்கள். படைப்பாளி தான் மூலாதாரம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாது மேடையேற்றுக்காரர்களின்பாலும், உயர் நோக்கப் பாசாங்கு நடிகர்களின் பாலுமே கவனம் செலுத்துகிறார்கள்.

ஆனால் நவீன பெறுமானங்களைப் படைப்பவர் களைச் சுற்றியே உலகம் அநாமதேயமாகச் சுழல் கின்றது.

ஜனங்களோ, நடிகர்களையும் புகழையும் சுற்றி வலம் வருகின்றார்கள். இவ்வாறு தான் சுழல்கிறது உலகநியதி.

நடிகனிடம் உளக் கூர்மையுண்டு. ஆனால் அவ னின் பிரக்ஞையில் அறன் இல்லை. தனது நம்பிக் கையை ஆணித்தரமாகத் திணிப்பதற்கு அனுமதி யளிக்கும் அனைத்தையும் அவன் நம்புகிறான். அவன் தன்னை மட்டுமே நம்புகிறான்.

நாளை ஒரு புதிய விடயத்தை அவன் நம்புவான், மறுநாள் இன்னொன்றையும், அதன் பின்னர் புதிதாக இன்னொன்றையும் அவன் நம்புவான். எப்போதும் மாறத் தயாராயிருப்பது அவனுள்ளம். சனக்கூட்டத் தைப் போன்று அவனின் உளநிலையும் உறுதி யற்றது.

ஆதாரப்படுத்த முனையும் போதெல்லாம் அவன் ஆற்றி முடிப்பது குழப்பங்களையே. உணர்த்துவ தாகக் கூறி அவன் உள்ளங்களில் விதைப்பதோ பைத்தியக்காரத்தனங்களன்றி வேறெவையுமல்ல. அனைத்து நியாயங்களிலும் உயர்ந்ததென அவன் கருதுவது குருதியை மட்டும்தான்.

கூர்மையான செவிகளுக்குள் மட்டும் புகக்கூடிய உண்மைக்கு அவன் பொய்யென்றும், வெறுமை யென்றும் நாமமூட்டுகிறான். உலகெங்கும் பேரிரைச் சலிடுபவர்களின்பால் மட்டுமே அவன் உண்மையான விசுவாசம் கொள்கிறான்.

எடுப்பான கோமாளிகள் ஏராளமாகக் கூடி நிற்கும் சந்தைவெளியில் சனங்கள் பெரிய மனிதர்களுக்குப் புகழ் பாடிக் கொண்டிருக்கி றார்கள். இவர்கள்தான் அவர்களின் தற்காலிகத் தலைவர்கள்.

காலம் அவர்களைத் துரத்துகின்றது. ஆகவே தான் அவர்கள் உன்னைத் துரத்துகின்றார்கள். நீ ஆமென்று கூறுகின்றாயா, அன்றி இல்லை என்று கூறுகின்றாயா என்பதையறிவது மட்டுமே அவர்க ளின் நோக்கம். ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் இடை யிலா உன் இருக்கையைப் போடப் போகின்றாய்? அவதானம் கொள்!

உண்மையை நேசிப்பவனே! உன்னைத் துரிதப் படுத்தும் இந்தப் பிடிவாதக்காரர்களின்மீது சினம் கொள்ளாதே. எந்த உண்மையும் இதுவரையும் ஒரு பிடிவாதக்காரனின் கையில் சிக்கிக்கொண்ட தில்லை.

அவசரப்புத்திகளின் பிடியிலிருந்து தப்பியோடி, உன் தனிமைக்குள் சென்று விடு. சந்தையில் தரித்து நின்றால் "ஆம்"களினாலும் "இல்லை"களினாலும் துன்புறுத்தப்படுவாய்.

ஆழமான கிணறுகள் தமது அனுபவங்களைத் தாமதித்தே உள்வாங்குகின்றன. ஏனெனில், அவற் றின் அடிமட்டத்தில் வந்து விழுபவற்றை அறிய ஆழம் காரணமாக அவர்களுக்கு அதிகநேரம் தேவைப்படுகின்றது.

சந்தைகளிலிருந்தும், புகழாசைகளிலிருந்தும் விலகிய தூரத்தில்தான் அனைத்துப் பெருமை யுடைய படைப்புகள் உருவாகின்றன. ஆம், சந்தை வெளியிலிருந்தும், புகழாசைகளிலிருந்தும் விலகிய தூரத்தில் தான் நவீன பெறுமானங்களை ஜனனித் தோர் வாழ்ந்தார்கள்.

நண்பனே! உன் தனிமைக்குள் தப்பியோடு. நச்சிலையான்கள் உன்னைச் சூழ்வதை நான் பார்க்கிறேன். வேகமாகவும், பலமாகவும் வீசும் உன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனிமைக் காற்றுக்குள் தப்பியோடிவிடு.

உன் தனிமைக்குள் தப்பியோடிவிடு. சிறுமை நிரம்பியோர்களிடையேயும், இரக்கத்திற்குரியவர் களிடையேயும் நீண்ட காலம் தரித்து நின்று விட்டாய். கண்ணுக்குப் புலப்படாத அவர்களின் வஞ்சகங்களிலிருந்து தப்பியோடு. உனக்கெதிராக அவர்களால் முடிந்தது வஞ்சகங்கள் மட்டுமே.

அவர்களுக்கெதிராக உன் கையை உயர்த் தாதே. எண்ணிக்கையில் அவர்கள் நிறைந்தவர்கள். அதுமட்டுமல்லாது இலையான் வேட்டையாடுவது உன் தலைவிதியல்ல.

சிறுமை நிரம்பியவர்களும், இரக்கத்திற்குரியவர் களும் எண்ணிக்கையில் அதிகமானவர்கள்.

நச்சுப்புல்லுகளும் மழைத்துளிகளும் கூட உயர்ந்த, உறுதியான கட்டடங்களைத் தகர்த்து விட வல்லன என்பதை மறந்துவிடாதே.

நச்சிலையான்களால் நீ களைப்புற்றிருப்பது எனக்குத் தெரிகின்றது. உன் தோலெங்கும் துளை யுண்டு குருதி கசிகின்றது. உனது உயர்பெருமை இதைக் கண்டு சினம்கூடக் கொள்ளவில்லை.

மிக அப்பாவித்தனமாக அவர்கள் உன்னிடம் கேட்பது உனது குருதியை. இரத்தமின்றி வெழுத்த அவர்களின் ஆத்மா இரத்தத்தாகம் கொண் டுள்ளது. அதனால்தான் அப்பாவித்தனமாக உன் நாடிகளைத் துளைக்கின்றார்கள்.

ஆனால், ஆழம் மிகுந்தவனே! சிறு காயங்கள் கூட உன் வேதனையை அதிகரிக்கின்றது. வேதனையிலிருந்து விடுபடு முன்னரே, நச்சுப்புழு மீண்டும் உன் கரங்களில் ஊர்கின்றது.

இவ்வழுக்குப் புழுக்களைக் கொன்றொழிப்பது உன் பெருமைக்கிழுக்கென நீ எண்ணுகிறாய்.

ஆனால், அவற்றின் பகை நிரம்பிய அநீதியைத் தாங்கி அனுபவிப்பதால் உனக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதை மறந்து விடாதே.

உன்னைச் சுற்றிப் புகழ் பாடி அவை இரைச்சலிடு கின்றன. உன் தோலை அண்மிப்பதுவும் உன் குருதியை உறிஞ்சுவதுமே அவற்றின் உள்நோக்கு.

உன்னைத் தெய்வம் என்றோ அன்றில் பேய் என்றோ அவர்கள் புகழக்கூடும்.

தெய்வத்தின் முன்னால் நிற்பது போன்றோ, அன்றி பேய் முன்னால் நிற்பது போன்றோ அவர்கள் கதறக்கூடும். அதனால் என்ன? பந்தம் பிடிக்கவும், பைத்தியமாய் அலறவும் மட்டும்தானே அவர்களுக் குத் தெரியும்.

அடிக்கடி உன்னுடன் அவர்கள் அன்பு நிறைந்த வர்கள் போல் காண்பிப்பார்கள். கோழைகளின் தந்திரத்திலிதுவுமொன்று. ஆம்! கோழைகள் வஞ்சம் நிறைந்தவர்கள்.

அவர்களின் ஒடுங்கிய ஆத்மாவில் உன்னைப் பற்றிய சிந்தனை அதிகம் எழுகின்றது. நீ நிரந்தர மாகவே அவர்களின் சந்தேகப்பிராணி. எதுபற்றி அதிகமாகச் சிந்திக்கப்படுகின்றதோ, அது சந்தே கத்திற்குரியதாகி விடுகின்றது.

உன் தவறுகளையும் தோல்விகளையும் எப்போது வேண்டுமானாலும் அவர்கள் மன்னிக்க லாம். ஆனால் உனது உயர் அற ஒழுக்கங்களை அவர்கள் மன்னிக்க மாட்டார்கள்.

உனது ஆத்ம தூய்மையாலும், அன்பாலும் "அவர்களின் சிறுமை வாழ்க்கைபற்றி அவர்கள் அறியாமை கொண்டுள்ளார்கள்" என்று நீ கூறுகின் றாய். ஆனால் சிறுமை நிரம்பிய அவர்களோ "பெருமையுடன் இருப்பது குற்றவாளித்தனமானது" எனக் கருதுகின்றார்கள்.

நீ அவர்களுடன் தூய்மையாகப் பழகினாலும், அவர்கள் உன்னை இழிவுபடுத்துபவனாகவே கருதுகிறார்கள். உனக்கு வஞ்சகமே பதிலாகக் கிடைக்கின்றது.

உனது அடக்கமான ஊமைப்பெருமை அவர்க ளின் சுவைக்கு முரணானது. உன்நிலை தாழ்ந்து வரட்டுப் பெருமை காட்டினால் அவர்கள் எத்தனை மகிழ்வுறுகின்றார்கள்!

உன் முன்னால் அவர்களின் சிறுமை அவர்களுக் குப் புலப்படுகின்றது. அவர்கள் புன்மையினால் நாணுகின்றார்கள். அவர்களின் குருட்டுப் பழியு ணர்வு சுடர்விட்டெரிகின்றது.

அணையும் சுடரிலிருந்து கிளம்பி மறையும் புகை யைப்போன்று அவர்களின் பலமும் நீ அவர்களை அண்மிக்கும்போது போய்விடுகின்றது. அவர்கள் உன் பிரசன்னத்தில் மௌனமாகி விடுகின்றார்கள்.

ஆம், நண்பனே! என்னைச் சூழ்ந்து நிற்பவர் களின் பிரக்ஞையில் நீ தோற்றுவிப்பது குற்ற உணர்வையே. ஏனெனில் உன் முன்னால் அவர்கள் யோக்கியதையற்றவர்களாகி விடுகிறார்கள். அதன் காரணமாகவே அவர்களை உன்னை வெறுக்கவும், உன் குருதியை உறிஞ்சவும் செய்கின்றார்கள்.

நச்சிலையான்கள் எப்போதும் உன்னைச் சூழ்ந்திருக்கும். உனது பெருமை அவர்களிடம் நஞ்சை அதிகரிக்கும்.

தப்பியோடு நண்பனே! உன் தனிமைக்குள் தப்பியோடு! வேகமாகவும் பலமாகவும் வீசும் உன் தனிமைக் காற்றுக்குள் தப்பியோடு!

இலையான் வேட்டையாடுவது ஒன்றும் உனது தலைவிதியல்ல.

**இவ்வாறு கூறினான் ஸரத்துஸ்த்ரா!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்முறையும் இலக்கியமும்:



## நாவலாசிரியை திலகவதியுடன் யமுனா ராஜேந்திரன் உரையாடல்:

இறுதிப்பகுதி

**யமுனா:**

பொதுவான முறையில, காவற்துறை என்கிறது வந்து ஒடுக்குமுறை அமைப்பினுடைய ஒரு உறுப்பாக இருக்கிறதனாலை வந்து இப்பிடிப் பார்க்கிறாங்கன்னு சொல்லலாம். தனிப்பட்டமுறையில வந்து உங்களாலை அப்பிடி ஏதாச்சும் சொல்லமுடியுமா? அதாவது வந்து நீங்க ரொம்ப வயலண்டாக நடந்து கொண்டீங்கள் அல்லது காரண காரியமில்லாம பல வேறு சந்தர்ப்பங்களில் அப்படி நடந்து கொண்டீர்கள் என்று அப்படி ஏதாவது குறிப்பிட்ட சம்பவங்கள் ஏதேனும் இருக்கிறதா?

**திலகவதி:**

அப்படீன்னு சொல்லவே முடியாது. அப்பிடி யாரும் சொன்னதே கிடையாது. அப்படி ஒரு செய்தி என் காதுக்கு வந்ததே கிடையாது. பொதுவாக காவல் துறையில அவங்க இருக்காங்களே, காவல் துறையில் உள்ளவங்களுக்கு இதயமே கிடையாது. இதயமில்லாதவர்கள் எப்படி இலக்கியம் செய்ய முடியும் என்று இப்படியான ஒரு வாதத்தில் இருந்தும் இவங்களுக்கு காவல்துறையில் இருக்கும்போது எப்படி நேரம் கிடைக்கும்? மற்றது, இவங்க வெகுஜனப் பத்திரிகையில எழுதிறதனால அந்தப் பத்திரிகையினுடைய பக்க அளவுகளை எல்லாம் பார்த்து கதை பண்ணுகிறவளாக இருப்பாங்க அப்படியான விமர்சனங்கள்தான்....

**யமுனா:**

ஆனா இப்ப உதாரணமா ரொம்ப முக்கியமான விஷயம் என்னன்னா காவல்துறை எழுத்து என்கிறது காவல்துறை சார்ந்தவர்கள் எழுதுகிற எழுத்துன்னு இதுவரை வந்திருக்கிறதைப் பார்த்தீங்கன்னா பரமகுரு எம்.ஜி.ஆர். சம்பந்தமா எழுதியிருக்கிறார். அதேமாதிரி வைகுந்த் என்று ஒரு நிர்வாகத் துறை அதிகாரி எழுதியிருக்கிறார் அரசியல் சம்பந்தமா, அதிலை பெரிய வாதப் பிரதிவாதமெல்லாம் வந்தது இப்ப அண்மையில. வந்து அவங்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதுவாங்க.காவல்துறை எழுத்து என்கிறதைப் பார்த்தீங்கன்னா, அதாவது காவல்துறையில இருந்தவங்க. அதிகாரிங்க இவங்க எழுதுறத்தைப் பாரத்தீங்கன்னா ஒண்ணு வந்து குற்றக் கதைகள் அல்லது அரசியல் தலைவர்களோடை தங்களுக்கு இருந்த ரகசியங்களை எழுதுவாங்க. மற்றப்படி சமூகத்திலை ஏற்பட்ட பல்வேறு அனுபவங்கள் மற்றது காவல்துறைக்குள்ளேயே ஏற்பட்ட அனுபவங்கள்... உதாரணமாக, உங்களுடைய எழுத்திலை பார்த்தீங்கன்னா உங்களுடைய துறைக்குள்ளேயே இருந்த அநியாயங்களையும் பல்வேறு விஷயங்களையும் பற்றி நீங்க சொல்லி இருக்கிறீங்க. அப்பிடியான விஷயங்கள் வந்து பெரும்பாலும் அந்த அமைப்புக்குள் இருந்து வர்றதுதான். அப்படி வரும்போது அது பாஸிடிவ் ஆன விமர்சனம் என்றுதான் நான் பார்க்கிறன். மற்றது இன்னொண்ணு நீங்கள் சொல்லுகிறமாதிரி பல்வேறு அமைப்புக்கள், காவல்துறை இருக்கு, கல்லூரிகள், இன்னும் பல்வேறு அதிகாரமயமான அமைப்புக்கள் இருக்கு. இந்த அமைப்புக்கள் எல்லாத்திலையும் இருக்கிறவங்க எல்லாமே அந்தந்த அமைப்புகளுக்கு சேவகம் செய்யும்போது வெகுமக்களுக்கு சந்தோஷமான விஷயத்தைத்தான் செய்யிறாங்க என்று இல்லை. ஆனால் அதே சமயத்திலை வந்து தொழில் என்கிற அளவிலை தங்களுடைய வாழ்க்கையை ஜீவிதத்தைக் கொண்டு கொண்டு போகவேணும் என்கிற அளவிலை அதைச் செய்துகொண்டு இருக்கிறாங்க. இந்தச் சந்தர்ப்பத்திலை இந்த மாதிரி வேலை செய்யிறவங்க வந்து தங்கடை மனச்சாட்சியைக் காப்பாற்றிக் கொள்றத்துக்கு ஒன்றே ஒன்று தான் செய்யலாம். அந்தந்தத் துறையிலை இருக்கும்போது தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமான விஷயங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்குத் துணை போகாம இருக்கனும். மற்றப்படி வேறு தளங்கள் சார்ந்த நடவடிக்கைகளிலை ரொம்பச் சந்தோஷமான விருப்பமான ஈடுபாடுள்ள சமூகப் பொறுப்புள்ள விஷயங்களைச் செய்யலாம். இது ஒன்றுதான் அவங்களுக்கு முன்னால இருக்கிற ஒரே மாற்றுவழின்னு நினைக்கிறேன்.

**திலகவதி:**
நீங்க வந்து உலகம் முழுவதையும் தலை கீழாகப் புரட்டிப் போடமுடியாது. அப்பிடியான நம்பிக்கை எனக்குக் கிடையாது. ஆனா அப்படியான ஒரு மாற்றம் ஆரம்பிக்கவேணும் என்றால் அதை நீங்கள் உங்களிடத்தில் இருந்து ஆரம்பிக்க வேணும். நான் முதல்ல வந்து இந்த உலகம் பூராவும் ஒரு ஊழலற்ற சமூகம் அமையவேண்டும் என்று நினைக்கிறேன். உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் அடுத்தவனை அன்பாகவும் சமமாகவும் நடத்தவேண்டும் என்று நான் நினைக்கிறேன். நான் வந்து அப்படி நடந்துக்கலாம் அவ்வளவுதான். அதுதான் என்னாலை முடிஞ்சது. அதைத்தான் காவல்துறையிலை செஞ்சுக்கிட்டிருக்கேன் நான்.

**யமுனா:**
நீங்க தமிழ்நாட்டின் முதல் பெண் ஐ. பி. எஸ். ஆபீசர். உங்களுடைய தலைமையின்கீழ்தான் முதல்ல வந்து பெண்கள் இயங்கக்கூடிய காவல்துறை இயங்கத் தொடங்கியது. ஆனால் ஒரு பிரச்சினை ஒன்றிருக்கு, ஆண்கள் நடத்துற காவல்நிலையங்களில் மோசமான மிருகத்தனமான வன்முறை என்கிறது ரொம்ப இயல்பான விஷயமாய் இருக்குது. அவங்களுடைய பார்வையில இருந்து, அதுக்கு நியாயமும் சொல்வாங்கள். உங்களைத் தனிப்பட்ட முறையிலே எடுத்தீங்கன்னா நீங்க இந்த வன்முறையை உங்களளவில் செய்யாமல் தவிர்க்கமுடியுமே தவிர ஒரு துறை என்றளவிலை இந்தமாதிரி விஷயங்களை உங்களாலை தவிர்க்க முடியாது என்றுதான் நான் நினைக்கிறன். அப்பிடிப் பார்க்கும்போது பெண்கள் காவல் துறை சம்பந்தமாகவும் அப்படிப்பட்ட விமர்சனம் ஒன்றிருக்கு. ஆண்களுடைய பார்வை இருக்குத்தானே. ஆண்கள் என்னமாதிரி நடந்து கொள்றாங்கள், என்னமாதிரி டிரெயின் பண்ணப் படுகிறாங்களோ, அதேமாதிரித்தான் இந்தப் பெண்களுக்குமான டிரெயினிங் எல்லாம் இருக்கறதனாலை ஆண்களினுடைய பார்வையிலைதான் அவங்களும் நடந்துக்கிறாங்க என்று சொல்கிறாங்க. இது சம்பந்தமா நீங்க என்ன சொல்றீங்க? பெண்களே மட்டும் இருக்கிற காவல் நிலையத்திலை என்ன positive action இருக்கமுடியும்?



திலகவதி தமிழகத்தின் அறியப்பட்ட நாவலாசிரியர், சிறுகதையாளர், கவிஞர். இவரது நாலான "பத்தினிப் பெண்" இயக்குனர் சக்தியால் அதே பெயரில் திரைப்படமாகி இருக்கிறது. "கடைத் தெருவில் ஞானி" என்கிற இவரது மொழி பெயர்ப்புத் தொகுப்பும் "எட்டுத் திசைகளி லிருந்து ஏழு கதைகள்" எனும் இவரது, நோபல் பரிசு பெற்ற படைப்பாளிகளின், மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்க நூல்கள். "தேயுமோ சூரியன்" இவருடைய முதல் சிறுகதைத்தொகுப்பு. "அலை புரளும் கரையோரம்" இவரது முதல் கவிதைத் தொகுப்பு. தமிழகத்தின் முதல் பெண் ஐ.பி.எஸ். (Indian Police Services) அதிகாரி. தமிழக பெண் காவல்நிலையங்களை உருவாக்கியதில் முன்னோடியானவர். வெகுஜனக் கலைக்கும் தீவிரக் கலைக்குமான எல்லையை இவர் எழுத்துக்கள் கடந்து செல்கின்றன. இவரது அதிகமான நாவல்களும் சிறுகதைகளும் தமிழகத்தின் வெகுஜனப் பத்திரிகைகளில் வெளியானவை. ஜோதிர்லதா கிரிஜா, ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி போன்ற பெண் எழுத்தாளர்களின் வரிசையில் வருகிறவர் திலகவதி. இந்த உரையாடலில் தனது வெகுஜனப் பத்திரிகை அனுபவங்களையும் தான் தொழிலாகத் தேர்ந்திருக்கும் வன்முறை அமைப்பான காவல்துறைக்கும் மானுடத்தின் தார்மீக அறத்தைப் பேசும் தனது ஈடுபாடான இலக்கியத்திற்கும் இடையில் நிலவும் பதட்டம் குறித்துப் பேசுகிறார். தன்னை உருவாக்கிய சமூக, இலக்கிய, குடும்ப, அரசியல் சூழல் குறித்தும் பகிர்ந்து கொள்கிறார். திலகவதி ஆரம்பத்தில் பணியாற்றிய காவல்துறையின் குற்றப்பிரிவில் இருந்து மாறி, தற்போது இரயில்வே காவல்துறையில் பணியாற்றி வருகிறார். அவர் காவல்துறையில் ஐ.ஜி.பி. யாகப் பதவி வகிக்கின்றார். சமூக அக்கறை யுள்ள இலக்கியவாதி எனும் அளவில் தொடங் கும் இவ்வுரையாடல் வன்முறைக்கும் இலக்கியத் திற்குமான உறவை அவரது அனுபவங்க ளினூடே விவாதிக்க முயன்றிருக்கிறது. 2000ம் ஆண்டு செப்டம்பர் மாதமளவில் இலண்டனுக்கு அவர் தனிப்பட்ட முறையில் வருகை தந்திருந்த போது ஈழத்து நாவலாசிரியர் எஸ். பொ. வின் நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் "பெண் எழுத்து இனி" எனும் தலைப்பில் திலகவதி உரை யாற்றிய நிகழ்வுக்கு அடுத்தநாள் (16.09.2000) அவரது பால்ய சிநேகிதி பாரிஜாதம் அவர்களின், இலண்டன் மனோர் பார்க், வீட்டில் இவ்வுரையாடல் மேற் கொள்ளப்பட்டது. இவ்வுரையாடலின் முதற்பகுதி உயிர்நிழலின் நவம்பர்-டிசம்பர் 2000 இதழில் வெளிவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தனிப்பட்டமுறையில வன்முறை வந்து மனிதத்தன்மையான விஷயமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கொல்வதோ அல்லது இன்னொரு மனிதனுக்குத் திட்டமிட்டுத் துன்பம் விளைவிப்பதோ இதெல்லாம் வந்து ரொம்ப அராஜகமான ஒரு போக்கு என்றுதான் நான் நினைக்கிறேன்.**

**திலகவதி:**

பெண்கள் பயிற்சி வந்து முதல்முறையாக, இது வந்து காவல்துறையைப் பொறுத்த அளவிலையும் பல விஷயங்களுக்கு முன்னோடியாக இருக்கு. இந்திய காவல்துறை அல்லது உலக காவல்துறையைப் பொறுத்த அளவிலும்கூட பல சமாச்சாரங்களை அறிமுகப்படுத்துகிற பரிசோதனை முயற்சியில் ஈடுபடுகிற முதல் தளமாக தமிழகக் காவல்துறைதான் இருக்கு. ஆனா பெண்களைப் பொறுத்த அளவில பெண்களைக் காவல்துறையில பயன்படுத்துவதைப் பொறுத்த அளவில தமிழகம் வந்து மிகவும் பின்தங்கி இருக்கு. 1972ம் ஆண்டுதான் முதலிலை பெண்களை அறிமுகப்படுத்தினாங்க. ரொம்பக் கலாச்சாரம் சம்பந்தப்பட்ட விஷயம். ரொம்ப முக்கியமான விஷயம். இதை வந்து மேலோட்டமாகப் பார்க்கக்கூடாது. இதிலை வந்து தமிழர் பண்பாடு அது இதுமாதிரி ஏராளமான சங்கதிகள் இதில் பின்னணியில் இருக்கக்கூடும். இத நீங்க சிந்திக்கலாம்.

ஏன்னா ஐதராபாத்திலை நிசாம் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறபோதுகூட நிசாம் மன்னர் வந்து பெண்களைக் காவல்துறையில பணிக்கு அமர்த்தி இருக்கிறார். ஆனா நம்ப தமிழ்நாட்டில வந்து 72வரைக்கும் அந்த முயற்சியில ஈடுபடவே இல்லை. காஷ்மீரில பண்ணிட்டாங்க. வேறு பல மாநிலங்களில பண்ணிட்டாங்க. உலகத்தில பல நாடுகளில பண்ணிட்டாங்க. ஆனா தமிழகம் வந்து இந்த ஒரு விஷயத்தில ரொம்பக் காலம் கடந்துதான் 72வது வருஷத்தில இதைப் பண்ணினாங்க. அப்புறம் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்தில இதை ஈடுகட்டுவது மாதிரியாக, நம்ம காவல்துறையில பெண்கள் மிகவும் குறைவாக இருக்கிறாங்க. அதனால அதை அதிகப்படுத்துவதற்காக ஒரேயடியாக ஒரு 700பேரை பயிற்சிக்கு அனுப்பிச்சாங்க. அந்தப் பயிற்சியை நடத்திறத்தில நிறையச் சிக்கல் இருந்தது. இன்னிக்கு அது வந்து ரொம்பப் பழகின விஷயமாய் இருந்தாக்கூட, அன்னிக்கு முதல்முறையாக பாதை போடுகிறவர்களுடைய சிரமத்தை நான் அனுபவிக்க வேண்டியதாக இருந்தது.

பல்வேறு விதமான ஏராளமான ஊர்லருந்து வந்தவங்க, ரொம்பப் பின் தங்கியவங்க, ரொம்ப வறுமையில இருந்தவங்க, இப்படியான குடும்பங்களில இருந்து வந்தவங்க. அவங்களுக்கு அவங்களுடைய மனநிலை அமைப்பை- mental make-up- எல்லாத்தையும் ஒரு மாதிரி மாத்தி.... அது ரொம்பக் கஷ்டமான வேலையாத்தான் இருந்துது. அதை ஓரளவுக்கு எந்தவிதமான சிக்கலும் வராமல் சரியானபடிக்கு அதை நான் செய்து முடித்தேன். அதை ஒரு ரொம்பத் திருப்தியான விஷயமா நான் நினைக்கிறேன். ஆனா பின்னாலை தனித்து பெண்கள் மட்டுமே இயங்குகிற காவல்நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம் அப்படி எல்லாம் ஆரம்பிக்கறதா வேண்டாமா என்கிறதைப் பற்றி சபாநாயகம் அவர்களும் டாக்டர் ராஜகோபால் அவர்களும் தமிழ்நாடு போலிஸ் கமிஷன்ல வந்து விவாதம் நடத்தினாங்க. அப்போது அது குறித்துக் கருத்துச் சொல்வதற்காக அன்றைக்கு பணியில் இருந்த பல்வேறு காவல்துறைப் பெண்களைக் கூப்பிட்டு அவங்க எங்களுடைய கருத்துக்களைக் கேட்டாங்க. அந்தக் கருத்துகளைக் கேட்டபோது அந்தக் கருத்துச் சொல்வதற்காக வந்திருந்த பல நிலைகளில் இருந்த பெண்கள் அந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்துவது நல்லதுதான். அப்படீங்கறது மாதிரியான கருத்தைத்தான் சொன்னாங்க.



நான் வந்து அதற்கு எதிர்க்கருத்துச் சொன்னேன். அது வந்து இன்னிக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று. ஏன்னு கேட்டா retired sectionஇல இருக்கிற சபாநாயகரும் டாக்டர் ராஜகோபாலும் அனைத்து மகளிர் காவல்நிலையம் தேவை என்ற எண்ணம் உடையவர்களாக இருந்ததாலேயே அதை ஒட்டியே எல்லாரும் கருத்துச் சொன்னாங்க. நான் ஒரே ஒருத்தி மட்டும் அதை எதிர்த்துக் கருத்துச் சொன்னேன். என்னுடைய கருத்து என்னவாக இருந்ததுன்னா, சமூகம் என்பது ஆண்களும் பெண்களும் இணைந்து இயங்குகிற ஒரு அமைப்பு. இந்த அமைப்புக்கு, இதை monitor பண்றத்துக்கோ இதுக்கு உதவி செய்யிறத்துக்கோ காவல்துறை இருக்குதுன்னு சொன்னா அந்தக் காவல்துறையும் ஆண்களும் பெண்களும் இணைந்த ஒரு அமைப்பாக செயற்படுவதுதான் சரியானதாக இருக்கமுடியும்.

அதுமாதிரி இல்லாம நீங்க தனியாக பெண்களைமட்டும் கொண்டு வந்து ஒரு இடத்தில வச்சீங்கன்னா அங்க பெண்கள் மட்டும்தான் புகார் கொடுக்க வரணும்னு நீங்க சொன்னீங்கன்னா அதன் மூலம் என்னத்தைத் தெரிவிக்க விரும்புறீங்க. பொதுவான காவல்நிலையங்கள் பெண்களுக்கு பாதுகாப்பற்றவை அப்படிங்கிறதை நீங்க ஒத்துக்கிறீங்களா? அல்லது பொதுவான காவல்நிலையங்களில் பணிபுரிகிற காவலர்கள் அணுகத் தகாதவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்ள் என்று சொல்ல வர்றீங்களா? அல்லது அந்தக் காவலர்களுடைய உதவியே இல்லாமல் இந்தப் பெண் காவல்நிலையங்கள் இயங்கிவிட முடியுமா?

ஒரு பெண் வந்து காவல்நிலையத்துக்கு வந்து புகார் கொடுத்திட்டுப் போறா. ஆனா அந்த விசாரணைக்குப் போகும்போது அந்த விசாரணையைச் செய்கிற பெண் யார்? அந்த விசாரணை கொடுக்க வருகிற பெண்ணோட சகோதரிதான். அதாவது, இந்தப் புகார் கொடுக்கிற பொண்ணு அவளுடைய கலாச்சாரச்சூழல் என்னவோ, கல்வி நிலைமை என்னவோ, அவளுடைய மதிப்பீடு என்னவோ அதே

**யமுனா:**



இதிலை நீங்க சொல்றது காரெக்ட். நீங்க வந்து ஒரு மாற்று வழி சொல்றீங்க. எனக்கு இங்க ஆச்சரியமான விஷயம் என்னென்றால் இப்படிப் பிரிஞ்சிருக்கவேணும் என்று

***காவல்துறையிலை இருக்கிறவங்களை இவ்வளவு நெருக்கத்திலை அறியக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைச்சிருக்கும் என்று நான் நினைக்கலை. அங்கை இருக்கக்கூடியவங்க அனுபவிக்கிற துன்பங்களும் அவங்களுடைய சொந்தங்க அவங்களை எப்படி நடத்துறாங்க அவங்க எவ்வளத்துக்கு ஓவர் வொர்க்ட் ஆக இருக்கிறாங்க. அவங்களுடைய சொந்த வாழ்க்கையிலே ஏற்படுகிற பாதிப்புகளாலே எவ்வளவு தூரத்திற்கு இயந்திரமாய் இருக்கிறாங்க. இப்படியான விடயங்கள் எல்லாம் ரொம்பப் பரிதாபத்திற்குரியதாய்த்தான் எனக்கு மனசிலை படுகுது.***

மதிப்பீடுகளை உடைய இன்னொரு பெண்தான் யூனிபார்முக்குள்ளை இருக்கிறா. அப்போ இவ விசாரணை செய்வதற்காகப் போகும்போது நிச்சயமாக அவளுடைய கணவனை வரதட்சணைக் கொடுமைக்காக விசாரிக்க வேணும். அந்த மாமனாரை விசாரிக்கணும். அதை மட்டும் இந்தப் பொண்ணு செய்யணும்னு எப்படி எதிர்பார்க்கிறீங்க.

அதாவது ஒரு பெண்வந்து தன்னுடைய கணவர் தன்னை அடிச்சிட்டார்னு புகார் கொடுக்கிறத்துக்கு வருவா. அதுக்கு காவல்நிலையத்திலை இருக்கிற இந்தப் பொண்ணு என்ன சொல்லுவா தெரியுமா? அதே கலாச்சார மட்டம்தான் இவங்களுக்கும் இருக்குது.

அப்போ ஒரு பெண் வந்து ஆண்களைச் சந்திக்க ஏலாது அப்படிங்கறத்துக்கு பெண்களை அப்படியே தனிமைப்பட வைத்து -isolate- பண்ணி அவங்களைத் தனியே கொண்டு வந்து பெண்கள் விஷயத்தைப் பெண்களே விசாரிக்கட்டும் என்று விடும் பட்சத்திலை விசாரிக்கப் போகிற பெண்கள் மட்டும் எப்படி ஆண்களை அணுகலாம்?

ஆனால் ஆண்களை அணுகாமல் எப்படி அவங்க விசாரணையை முடிக்க முடியும். நிச்சமாகவே ஒரு பெண் வந்து தனக்கு நேர்ந்த ஒரு துன்பத்தைச் சொல்லும்போது அது பெரும்பாலும் என்னவாக இருக்குதுன்னா எங்க அனுபவத்திலை குடும்பத்துக்குள் நடக்கிற வன்முறை, கணவன் அடிக்கிறது, மாமியார் கொடுமைப்படுத்திறது அல்லது மச்சினர் அவகிட்ட முறை கேடா நடந்து கொள்றது அல்லது மாமனார் அவளைப் பலாத்காரப்படுத்தப் பார்க்கிறது என இந்த மாதிரியான விஷயங்கள்தான் பெரும்பாலான சமாச்சாரங்களாக இருக்கிறது.

So, இந்த விஷயங்களை விசாரிக்கிறத்துக்கு ஒரு பெண் அதிகாரி போவா. அவ அப்படிப் போகும்பொழுது அந்தவீட்டு ஆண்களோடு இருக்கவும், விசாரிக்கவும்தானே வேண்டி இருக்கிறது.

சொல்றாங்கதானே. அவங்க குறைந்த பட்சம் என்ன காரணம் சொல்றாங்க?

**திலகவதி:**

அவங்க சொல்ற காரணம் நல்ல காரணம்தான். இந்த காரணம்தான் முதன்முதலில் அனைத்து மகளிர் காவல் நிலையம், மட்றாஸ் ஆயிரம் விளக்குப் பகுதியில, ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலை கட்டினாங்க. அது திறந்த அன்னிக்கு ஒரு நோட்டுப் புத்தகம் ஒண்ணு திறந்து வைத்து அந்த அம்மா சொல்லப்பட்ட காரணத்தைத்தான் எழுதினாங்க. அது என்னன்னா பெண்கள் வந்து தங்களுடைய உரிமைகளைக் கோரவும் அதைக் கோருவதற்காக தைரியத்தோடு காவல்நிலையங்களை அணுகவும் இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் இத்தகைய நிலையங்களை நான் திறந்து வைக்கிறேன். அப்படித்தான் அந்தம்மா முதல் வரியை எழுதினாங்க. அந்த நோக்கத்தோடைதான் அதை வந்து ஆரம்பிச்சாங்க. ஏன்னா காவல்துறையின்மீது சரியாக/தவறாக பழி சுமத்தப்பட்டிருக்கிறது. அப்புறம் காவல்துறையில் பணி புரிபவங்க எல்லாரும் கற்பழிப்புக்காக ஏதோ காத்துக்கிட்டிருக்கிறவங்க என்கிறமாதிரி ஒரு விம்பத்தை நம்முடைய வெகுஜனப் பத்திரிகைகள் உருவாக்கி வைத்திருக்கிறது. நம்முடைய திரைப்படங்கள் இந்த விஷயத்தை வந்து தங்கடை வியபார நோக்கத்தக்காக வைத்திருப்பாங்க. இதையே திருப்பித் திருப்பிச் சொல்றத்தாலை காவல்துறையில பெண்கள் கற்பழிக்கப்பட்டதே இல்லை என்று நான் சொல்ல வரலை. கற்பழிக்கப்பட்டிருக்காங்க. உதாரணமாக குறிப்பிட்ட இடத்தில ஒரு பெண் கற்பழிக்கப்பட்டிருந்தால், அதை ஆயிரம் பத்திரிகைகள் திரும்பத் திரும்பச் சொல்வதன்மூலமாக, வானொலி ஆயிரம் முறை திரும்பத் திரும்பச் சொல்வதன்மூலமாக ஆயிரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்கள் கற்பழிக்கப் பட்டது மாதிரியான ஒரு மாயையைத் தோற்றுவித்து அந்தக் காவல்துறைப் பக்கமே நல்ல குடும்பத்துப் பெண்களோ கௌரவமான பெண்களோ போகக்கூடாது என்கிற மாதிரியான ஒரு எண்ணத்தை ஏற்படுத்து கிறார்கள். அப்போ அந்தப் பெண்கள் வீட்டிலை அடிபட்டாலும் உதைபட்டாலும் அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டாலும் அவங்களுக்கு சட்ட உதவிகள் மறுக்கப்பட்டாலும் என்ன நடந்தாலும் அதற்கான ஒரு நிவாரணத்தைக் கோருவதற்காக காவற்துறை என்கிற அமைப்பை அணுகுவதற்கான தைரியமே அற்றுப்போய் விடுகிறது. அப்படி இருக்கிறவங்களை வெளியிலை கொண்டு வந்து உங்களை மாதிரிப் பொம்பளைங்கதான இங்கையும் இருக்கிறாங்க. அவங்கள் உங்கட சகோதரிகள். நீங்க அவங்க கிட்ட எதையும் சொல்லலாம். அப்படீங்கிற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறதுக் காகத்தான் இந்த மாதிரிக் காவல்நிலையங்களை ஆரம்பிச்சாங்க.

மனரீதியான சில மதிப்பீடுகள் இருக்குது பார்த்தீங்களா! அந்தக் கலாச்சார மதிப்பீடுகளிலை இருந்து மனம் மாறாதவையாக இருக்குது என்பது ஒண்ணு. இரண்டாவது அந்தப் பெண்களுக்குத் தங்களுடைய வேலை செய்கிற விதத்திலை அவங்களுக்கு அவங்க அறியாமலேகூட அவங்க மனசுக்குள்ளை சில மாடல்கள் உருவாகும்.

ஒரு நல்ல பொலிஸ் அதிகாரி அப்படீன்னா எப்படி இருக்கணும் என்று அவங்களுக்கு ஒரு மனச் சித்திரம் ஒண்ணு உருவாகிறது. அந்த மனச் சித்திரம் யாருடைய மனச்சித்திரமாக இருக்கிற தென்று கேட்டீங்கன்னா, ஒரு கடுமையான கர்ண கடூரமான பார்த்தாலே அச்சத்தை விளைவிக்கக் கூடிய வகையில் பேசவும் நடந்து கொள்ளவும் தலைப்படுகிற ஒரு ஆண் அதிகாரிதான் அவங்களுடைய ஆதர்சமாக இருக்குது. அதனாலை அவங்க வந்து தங்களை காவல்துறை அதிகாரிகளாக நிலை நிறுத்துறத்துக்கு தாங்களும் அதே மாதிரியான ஒரு நடத்தையைத் தொடரவேண்டும் என்கிற மாதிரியான ஒரு மனப்பதிவு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகின்றது. இதனாலை அவங்க அதேமாதிரி நடந்துகொள்ளத் தலைப்படு றாங்க. இன்னைக்கு வெளிவருகிற விமர்சனம் இதுதான்.

இதுபற்றி நாங்க நிறையச் சிந்திச்சிருக்கிறோம். இதுபற்றி நிறைய விவாதங்கள் செஞ்சிருக்கிறோம். அதிலையும் முக்கியமாக நான்வந்து இதை என்னுடைய சொந்தவிடயமாகவே எடுத்துக்கிட்டு பெண்கள் தன்னார்வக் குழுவைச் சேர்ந்த பெண்கள் -வாசுகி மற்றும் ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள், சில கல்லூரிப் பேராசிரியைகள், சில மனோதத்துவ அறிஞர்கள், பெண்நல மருத்துவர்கள் இந்த மாதிரியாக ஒரு ஐம்பது பேரைச் சேர்த்து நானே வந்து ஒரு கூட்டம் போட்டு அதிலை வந்து ரொம்ப நாள் சர்வீஸ் பண்ணின காவல்துறை பெண் அதிகாரிகள் மாவட்டக் காவல்துறை அதிகாரி - கான்ஸ்டபிள், இன்ஸ்பெக்டர் இப்படியானவங்களைக் கூப்பிட்டு என்னுடைய சுயமுயற்சியால அவங்ககிட்டப் பேசியும் அப்புறம் மகாராஷ்ராவில வந்து ஒரு புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறாங்க, பெண் காவல்துறை அதிகாரிகளுக்கு. அந்தப் பாடத்திட்டத்தை அமைச்சரோடை கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நான் வந்து அதிகாரிகளுக்கும் காவல்துறைப்பயிற்சியாளர் களுக்கும் நானே தனிப்பட்ட கடிதம் எழுதி இன்னென்ன விஷயங்களிலை இந்தப் பெண்கள் பேசுறாங்க. இந்த 25 வருட காலத்திலை ஜெயலலிதா இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தை ஆரம்பித்து 7 வருடங்களாகுது.

இந்த ஏழாண்டு காலத்தில இந்த அனைத்து மகளிர் காவல்நிலையங்களின் செயற்பாடுகள்பற்றி வந்திருக்கக்கூடிய விமர்சனங்களைப் பார்க்கிற பொழுது நாங்கள் என்னென்ன விஷயத்தை அறிமுகப்படுத்தலாம் நாங்கள் எந்தெந்த விஷயங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம் என்பது பற்றி ஒரு பெரிய அறிக்கை கொடுத்திருக்கிறேன். நல்ல விஷயம் என்னென்னாக்கா அந்த அறிக்கை உடனடியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதன் படி இப்ப அந்தப் பயிற்சி முறைகளில் எல்லாம் மாறுதல்கள் ஏற்படுத்தி இருக்காங்க. ஆனா இந்த விஷயத்தையும் புதிதாக ஆரம்பிக்கும்போது நாம ஒரு மாறுதல் காலகட்டத்தில் இருப்போம். அப்புறம் இந்த மாதிரியான விஷயங்களை செய்து பார்த்துப் பழகி விழுந்து எழுந்து கற்றுக்கொள்ள வேண்டிய தாய்த்தான் இருக்குது. இது வந்து சமூக வளர்ச்சி யிலை தவிர்க்கமுடியாத விஷயமாகவும் இருக்குது. ஆனா நிச்சயமாக மாறுதல் வரும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு.

## யமுனா:

சமூக மாற்றத்திலையும் அல்லது தனிமனித உறவுகள் என்பதிலையும் சரி ஒரு சமநிலை கொண்ட சமூகத்தை அமைக்கிறதிலையும் சரி வன்முறையின் இடம் -violence part- என்னவாக இருக்கிறது?

## திலகவதி:

இது ரொம்பச் சிக்கலான கேள்விதான். இந்த வன்முறையை உபயோகப்படுத்திறவங்ககிட்ட இது பற்றிக் கேட்டிருக்கிறன். பேசிப்பார்க்கும்பொழுது அவங்க என்ன சொல்றாங்கன்னா எந்த ஒரு மொழிக் காரரோடும் நீங்க பேசும்போது அவங்களுக்கு புரிகிற மொழியிலைதான் நீங்க பேசணும். வன்முறைதான் ஒருவருக்கு புரியிற மொழியாய் இருக்கும் பட்சத்திலை அவர் எதிரிலை போய் நின்னு வீணை வாசித்து என்னத்தைச் சொல்லித் தரப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போறீங்க அவருக்கு. அவங்ககிட்ட நீங்க வன்முறையாகத்தான் நீங்க பேசமுடியும் அப்படீன்னு சொல்றாங்க. இரண்டாவது இந்த வன்முறையைக் கைக்கொள்றவங்க என்ன ஒரு சமாதானத்தைச் சொல்றாங்கன்னு கேட்டீங்கன்னா, பகத்சிங் கூட இதைத்தான் எல்லா சுவரிலையும் எழுதி இருந்தாரு. மனித இரத்தம் சிந்தப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் மக்களுடைய கவனத்தை இதன்பால் ஈர்ப்பதற்கு எங்களிற்கு இதைவிட வேறுவழி தெரியவில்லை என்று சமாதானம் சொல்றாங்க. தனிப்பட்ட முறையில வன்முறை வந்து மனிதத்தன்மையான விஷயமாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கொல்வதோ அல்லது இன்னொரு மனிதனுக்குத் திட்டமிட்டுத் துன்பம் விளைவிப்பதோ இதெல்லாம் வந்து ரொம்ப அராஜகமான ஒரு போக்கு என்றுதான் நான் நினைக்கிறேன். அதிலையும் இன்னிக்கு இருக்கக்கூடிய இந்தமாதிரியான விஞ்ஞான முன்னேற்றத்தைக் கணக்கில் எடுத்துப் பார்க்கும்பொழுது இவங்க செயற்படுத்துகிற இந்த வன்முறை என்கிறது இடைக் காலத்தில நடந்த வன்முறை மாதிரி இல்ல. கருத்து வேறுபாடு கொண்டிருந்தா படிப்படியாகக் கட்டம் கட்டமாகப் பேசி ஒரு விஷயத்தைத் தீர்ப்பது கிடையாது. நீங்களும் நானும் ஒரு கருத்து முரண்பாடு கொண்டிருக்கிறோம்னா உடனே ஆளுக்கொரு கத்தியை வீசிறது. இந்த வாள் போரிலை நீங்க ஜெயிச்சுக்கிட்டீங்கன்னு வைச்சுக்குங்க அப்போ உங்க கருத்தை நான் ஒத்துக்கணும். அப்படீங்கறது மாதிரியான ஒரு முறை இடைக்காலத்தில கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதையாவது ஒரு மாதிரி மன்னிக்கலாம்னு தோணுது. இப்ப பார்த்தீங்கன்னா இங்க வன்முறை பண்ணுகிறோம்னுட்டு ஒரு பாவமும் அறியாத அப்பாவி ஜனங்க மேலை கொண்டுபோய் குண்டைப் போடறாங்க. இப்ப பம்பாயில குண்டு வெடிச்சுதுங்களே. சுப்பர் மார்க்கெட்டிலை குண்டு வெடிச்சுதுங்க. சினிமாத் தியேட்டர்லை குண்டு வெடிக்குது. ஓடிக்கொண்டிருக்கிற ட்ரெயின்ல குண்டு வெடிக்குது. சினிமாத் தியேட்டர்ல குண்டு வெடிக்குது. யாரைக் கொன்று எந்த வேறுபட்ட கருத்தையும் அழிச்சு என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வரப்போறாங்க. இந்த வன்முறையை ஒருபோதும் என்னாலை ஒத்துக்கொள்ள முடியலை.

**யமுனா:**
மற்றது இந்த சிறை எழுத்துக்கள். தாஸ்தாவ்ஸ்கி எழுத்துக்களை எடுக்கலாம். ஜேனேயின் எழுத்துக்களையும் எடுக்கலாம். குற்றம் செய்கிற சமூகத்தைச் சார்ந்தவர்கள் அடிப்படையிலை பைத்தியகாரத்தனமாக குற்றவாளிகளா வருகிறவங்க இல்லை. இவங்களைப்பற்றி நிறைய விளங்கிக் கொள்கிறத்துக்கு சிறை எழுத்துக்கள் ரொம்ப ஆதாரங்களா இருக்கு. இப்ப சிறை எழுத்துக்கள் சம்பந்தமாக கோட்பாட்டு ரீதியில்கூட நிறைய எழுதப்பட்டிருக்கு. உங்களுக்கு கைதிகளுடன் பழகுகிற சந்தர்ப்பங்கள் நிறைய இருந்திருக்கிறதா?



**பெண்களுக்கு மனரீதியான சில மதிப்பீடுகள் இருக்குது பார்த்தீங்களா அந்தக் கலாச்சார மதிப்பீடுகளிலை இருந்து மனம் மாறாதவையாக இருக்குது என்பது ஒண்ணு. இரண்டாவது அந்தப் பெண்களுக்குத் தங்களுடைய வேலை செய்கிற விதத்திலை அவங்களுக்கு அவங்க அறியாமலேகூட அவங்க மனசுக்குள்ளை சில மாடல்கள் உருவாகும்.**

**திலகவதி:**
சிறைத்துறை என்கிறது வேறு காவல்துறை என்பது வேறு. இரண்டு பேருக்கும் தொடர்பு கிடையாது. உண்மையைச் சொல்லப் போனா விஷயம் என்ன தெரியுங்களா. நீங்க ஒரு சாதாரண குடிமகன் என்ற அளவிலை சிறைக்குள்ளே போகக்கூடும். ஆனால் என்னை ஒருபோதும் அனுமதிக்கமாட்டாங்க.

காவல் துறை அதிகாரி சிறைச்சாலைக்குள்ளே போகவே முடியாது. இதைச் சிறைச்சாலை விதிகளிலேயே ஒண்ணா வைச்சிருக்காங்க. இது ஏன் இப்படி விதி வைச்சிருக்காங்கன்னு நான் கேட்டேன். ஏன்னா நான் வந்து ஒரு இலக்கியவாதி, ஒரு பேச்சாளர் என்கின்ற வகையில் வேலூர்ல அதிகாரியாக இருந்தபோது சிறையில் அதிகாரியாக இருந்த குணசேகரன் என்னை ஒரு நிகழ்ச்சிக்கு கூப்பிட்டிருந்தாரு. நானும் போயிட்டேன். போயிட்டு வந்தப்புறம் தான் இந்த விதியை நான் தெரிஞ்சுக்கிட்டேன். நிகழ்ச்சிக்குப் போனேன். நிகழ்ச்சியைக் கேட்பதற்காக சிறைக்கைதிங்க எல்லாரும் நிலத்தில உட்கார்ந்திருந்தாங்க. அதில இருந்த ஒரு ஆளு என்னை நோக்கித் தாவி பாய்ஞ்சு ஓடி வந்திருச்சு. கொஞ்சம் ஏமாந்திருந்தா என் கழுத்தை நெரிச்சு கொன்றிருக்கும் போலத்தான் இருந்தது. அது வந்த வேகத்தைப் பார்த்தாக்க. ஆனா அவ்வளவு வேகமா வந்து என்ன பண்ணிச்சின்னா, கீழே உட்கார்ந்து என் இரண்டு காலையும் கட்டிப் பிடிச்சிட்டு என்னை எப்படியாவது இங்கிருந்து மீட்டிடுங்க என்று பயங்கரமாக் கத்திச்சு. நுழையும்போது நடந்த இந்த விஷயத்தைப்பற்றி நான் அவங்க கிட்ட கேட்டேன். அவங்க சொன்னாங்க சில கைதிங்க வந்து இந்தப் பொலிஸ் காரங்க நம்பளைப் பிடிச்சுக் குடுத்ததனாலதான் நீதிபதி தண்டனை விதிச்சு நம்பளை ஜெயிலுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுப்பிச்சாரு. அப்படீன்னு திடமாக நம்பறாங்க. அந்த ஆக்ரோஷத்தில இருக்கறதனால காவற்துறை அதிகாரிக்கு ஆபத்து நேரலாம் என்பது ஒன்று. இரண்டாவது காவல்துறை அதிகாரி குற்றத்தை விசாரிப்பதற்கு இறங்கி நிற்கும் போது குற்றவாளிக்கும் காவல்துறை அதிகாரிக்கும் ஒரு உறவே ஏற்பட்டுவிடுகிறது. அது வெறுப்பாக இருக்கலாம். அன்பாகக்கூட இருக்கலாம். இந்த உறவு சிறைச்சாலைவரைக்கும் தொடர்வது அவ்வளவு நல்லதில்லை என்று அரசாங்கம் நினைக்கிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகத்தான் போலிஸ் துறையைச் சார்ந்த அதிகாரிகள் சிறைக்குள் நுழைவதற்கு அனுமதி கிடையாது. ஆனால் நீங்கள் சொல்கிற சிறையில் எழுதப்பட்ட எழுத்துகள் என்கிறது - ஒரு பெரிய revelation கொடுக்கிற எழுத்துக்கள் - கூகிவா தியாங்கோ இனுடைய எழுத்துக்களைப் பார்த்துப் பிரமித்துப் போனதுதான். அவர் வந்து மலம் துடைக்கும் தாளிலை எழுதினார்னு சொல்றாங்க. அதுவும் மூன்று முறை திரும்பத் திரும்ப எழுதினார்னு சொல்றாங்க. ரொம்ப ஆச்சரியமாய் இருக்கு.

குற்றவாளிகள் என்று சொன்னாக்க குற்றவாளிகளில் பல பிரிவுகள் இருக்கு. நீங்க சொல்வது மாதிரியாக மனிதன் ஏன் குற்றவாளியாகிறான் அப்படீங்கிறதைப்பற்றி பல்வேறு theoryகள் இருக்குது. வறுமையின் காரணமாக, சமூகம் அவனைக் குற்றவாளி ஆக்குகிறது, இன்னும் பேராசை அவனைக் குற்றவாளி ஆக்குகிறது. இன்னும் ஒண்ணு - உயிர்ப்பற்று அடிப்படையிலும் -genetical- ஆகவும் சில பேர் அப்படி இருக்கிறாங்க என்கிறதும் நிரூபிக்கப்பட்ட ஒரு விடயமாக இருக்கிறது. இது போக குற்றங்களிலும் பலவகை உண்டு.

1. உடல் சார்ந்த குற்றங்கள்
2. பொருள் சார்ந்த குற்றங்கள்
3. அரசியல் குற்றங்கள்
4. கொள்கைக்கான குற்றங்கள்

இதிலை கூகிவா தியாங்கோவைப போன்றவர்கள் ஒரு கருத்து நிலைப்பாடு சார்ந்து அவர்கள் நின்ற காரணத்தினாலே அதனை ஏற்றுக்கொள்ள முடியாத அரசு அவர்களைச் சிறைப்படுத்துகிறது. இவர்கள் அரசியற் குற்றவாளிகள். நேருவுக்கு அப்படித்தான் நடந்தது. மகாத்மா காந்திக்கும் அப்படித்தான். பம்பாயிலை போய்ப் பார்த்தீங்கன்னாக்க மகாத்மா காந்தி சிறையில் இருந்து எழுதியவையும் சிறையில் இருந்து படித்ததுமான புத்தகங்களை மட்டும் வைச்சு மணிபவன்ல ஒரு கண்காட்சியே நடந்துது. வெளியில் இருந்தாலும் எழுதி இருப்பாங்க. அப்ப ஏன் அவங்க அங்கை போயிருந்து எழுதிறாங்க. அது வேற விஷயம். ஆனா சாதாரணமாக பொருளாதாரக் குற்றங்களைச் செய்கிற சாதாரணமான பிக்பாக்கற் ஒருத்தன் எழுதியிருக்கிறானா இதுவரைக்கும். யாராவது எழுதி இருப்பாங்க. எனக்குத் தெரியல்லை. ஏன்னா இன்னிக்குத் தமிழ் நாட்டிலை மோந்து பார்த்தீங்கன்னா ஆச்சரியப்பட்டுப் போவீங்க. அன்னிக்கு நான் திருப்பூர்ல ஒரு கூட்டத்திலை இருந்தபோது ஆட்டோ ட்ரைவர் ஒரு கவிதைத்தொகுதி வெளியிட்டிருக்கிறாரு. என்கிட்டக் கொடுத்தாரு. அந்தக் கவிதைத்தொகுதிக்குப் பெயராக அவருடைய ஆட்டோ எண்ணைத் தான் வைச்சிருக்காரு. இது என்னுடைய படைப்பு எனது நேசத்திற்குரியது. இதற்கு எனக்கு மிகவும் நேசத்திற்குரியதும் பிரியமானதுமான ஒரு விஷயத்தைத் தான் தலைப்பாக வைக்கணும்னு நெனைச்சேன். அதனாலைதான் ஆட்டோ எண்ணைத் தலைப்பாக வைச்சேன் என்று சொல்லிட்டுக் குடுக்கிறாரு. இந்த மாதிரி இடங்கள்ல இருக்கிறவங்களும் எழுதிறாங்க இது ரொம்பச் சந்தோஷமாக இருக்கு. நீங்க பார்த்தீங்கன்னா லண்டன்ல இந்த புக்கர் பரிசுக்குக் கடந்த இரண்டு மூன்று வருடங்களாகவே இந்த ஊர் பஸ் ஓட்டுநர் ஒருவருடைய புத்தகம் கடைசி செலக்ஷன் சுற்றுவரைக்கும் போனது.

**யமுனா:**

நீங்க சொல்றமாதிரி எழுத்துக்கள் அமெரிக்காவில இருந்து நிறைய வருகுது. எல்மோர் லியனார்ட் என்று ஒருத்தருடைய எழுத்துக்கள். நிறைய சினிமாக்கள் ஆக வந்திருக்கு. அவருடைய எழுத்துக்கள் பெரும்பாலும் அதுதான். அதுமாதிரி ஜான் கிங் என்று ஒரு வெகுஜன எழுத்தாளர்தான் என்றாலும் இதிலெல்லாம் இலக்கியத் தன்மைகள் இருக்கிறதைப் பார்க்கலாம்.

**நிலைவதி:**

அப்படியான எழுத்துக்கள் தமிழ்நாட்டிலை ரொம்ப அருகித்தான் இருக்கு. அதோடு மிகச் சரியாகச் சொல்றதுன்னா உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அப்புறம் பொருளாதார நிலையில் ஓரளவுக்கு அடிமட்டத்தில் இருக்கிறவங்க எழுதுகிறது. எழுத்தாளர்கள் என்று உழைப்பாளர்கள் என்று வைச்சுக்காம உழைப்பாளர்களே எழுதுகிறது. இப்ப வந்து ஒரு கொத்தனார் எழுதுகிறது. ஹோட்டல் சமையல்காரர் எழுதுகிறது போன்ற படைப்புகள் நமக்கு கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கு.

**யமுனா:**

ஏதாவது அரசியல் அபிப்பிராயங்கள் சித்தாந்தரீதியில் உண்டா? நான் சொல்றது சித்தாந்தரீதியாகச் சிலது எங்களை பாதிக்கும்தானே. தத்துவார்த்தரீதியில் சிலபேர் நம்மை பாதிப்பார்கள். நான் சொன்ன சித்தாந்தம் என்பது அரசியல் சித்தாந்தம் – கட்சி சார்ந்த சித்தாந்தம் என்று நான் அர்த்தம் கொள்ளவில்லை– அவ்வாறாக உங்களைப் பாதித்த சித்தாந்தம் ஏதேனும் உண்டா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**திலகவதி:**
இப்பிடிச் சொல்லட்டுமா? எனக்கு வந்து சேகுவாராவை ரொம்ப நல்லாப்பிடிக்குது. நான் நினைக்கிறேன் யாராவது ஒருவர் மனிதராக வாழுவதென்றால் சேகுவாராவைப் போலத்தான் வாழவேணும். பகத்சிங் வந்து என்னைச் சிறுவயதில் ரொம்பவும் ஈர்த்த ஒரு மனிதர். அதேபோலவே வந்து சுபாஸ் சந்திரபோஸ்ஜயும் சொல்லுவேன். சேகுவேராவை ஏன் பிடிக்குதென்னாக்க அவர் தொடர்ந்து ஒரு போராளியாகவே இருக்கிறாரு. சமீபத்தில நைஜீரியாவிலா தூக்கில போட்டாங்களே கென்சரவேவா. அதுமாதிரியான ஆட்களைத்தான் ரொம்பப் பிடிக்குது. அதுதான் என்னுடைய மன இயல்பாக இருக்குது.

**யமுனா:**
நான் நினைக்கிறன் இவங்க எல்லாரும் ஏதோ ஒரு வகையிலை வந்து ஒரு வன்முறைச் சூழலுக்குள்ள இருக்கிறாங்க. ஒரு கொதி நிலைக்குள்ள இருக்கிறாங்க. நான் நினைக்கிறன். உங்களுடைய மனோநிலை இருக்குத்தானே. காவற்துறை என்கிறது உண்மையிலேயே அது ஒரு வன்முறைச்சூழல், ஒரு மோதல் களம், கொதி நிலை அமைப்புதான். அதுக்குள்ளை நீங்கள் இருக்கிறீங்கள். அதுக்குள்ளை ஒரு வகையிலை நீங்கள்- in a sense- ஒரு அர்த்தத்தில்- revolting- கிளர்ச்சி செய்பவரா இருக்கவேணும் என்று நினைக்கிறீங்கன்னு சொல்கிறேன். இப்ப பகத்சிங்கைப் பார்த்தீங்கன்னாக்க. அவரும் வன்முறையை நம்பியவர் கிளர்ச்சியாளர். நீங்கள் சொல்ற யாரை எடுத்தாலும் எல்லாருமே கிளர்ச்சயான வன்முறையாளர்களாகத்தான் இருந்திருக்காங்க. சேகுவாரா வன்முறைச் சூழலில்தான் செத்தார். கென்சரவேவாவும் வன்முறையிலான முறையில்தான் கொல்லப்பட்டார். பகத்சிங்கும் அப்படித்தான். இப்ப பாரத்தீங்கன்னா வன்முறைச்சூழலுக்குள்ளதான் அவங்கள் இருக்கிறாங்கள். மற்றது கிளர்ச்சி ஆளுமைகள் - இப்ப பார்த்தீங்கன்னா நீங்க வன்முறை அமைப்புக்குள்ள அல்லது சூழலுக்குள்ள இருக்கிறதனாலை உங்களுக்கு அப்படி ஒரு மனநிலை இருக்கலாம்..

**திலகவதி:**
ஆனா எனக்கு பள்ளியில படிக்கும்போதே பகத்சிங்கை பிடிக்குதே? எனக்கு ஒரு ஒன்பது அல்லது பத்து வயது இருக்கும்போது எங்கம்மா வந்து மகாத்மா காந்தி பற்றிச் சொல்லிக் கொடுத்தாங்க. மகாத்மா காந்தி தேசபிதா அப்படீன்னு சொன்னாக்க. நாங்க சுபாஸ் சந்திரபோஸைப்பற்றிப் பேசிக்கிறதே இல்லை. ஆனா சுபாஸ் சந்திர போஸைத்தான் எனக்குப் பிடிக்குது. பகத்சிங் கைப்பற்றி நான் எழுத்திலை படித்தது ரொம்பப் பின்னாடிதான். பகத்சிங்கை எனக்கு 10, 12 வயதில் இருந்தே பிடிக்கிறது. சேகுவாராவை ரொம்பப் பின்னாடிதான் வாசித்தேன் நான் நினைக்கிறேன்,

**யமுனா:**
உங்களுடைய குடும்பச்சூழல் எப்படி?

**திலகவதி:**
அம்மா ஒரு ஸ்கூல் டீச்சரு. அப்பா ஒரு தொழிற்சங்கவாதி.

**யமுனா:**
அவர் எந்த அரசியல்?

**திலகவதி:**
கம்யூனிஸ்ட்.

**யமுனா:**
அதுதானே பார்த்தேன். சூழல் இருக்குத்தானே. உங்களுக்கு சேகுவேராவை பகத்சிங்கை கென்சரோவேவாவைப் பிடிக்கிறதற்கான விதைகள் அங்குதான் இருக்கிறது.

**திலகவதி:**
ஆமா ஆமா. எனக்கு ஆரம்பத்திலை இருந்து, ஸ்டுடன்டா இருந்தபோது தி.மு.க.விலிருந்து பின்னாடி மார்க்சிய அரசியலை சக்ஸ் பண்ணிட்டன். எங்க அப்பாவும் கம்யூனிஸ்ட் கட்சியிலதான் இருந்தாரு. அம்மா ஸ்கூல் டீச்சர். பார்த்தீங்கன்னா அவர்களுடைய முதல் விஷயம் டிசிப்ளின். வம்பு தும்புக்குப் போகாதது. தொழிற்சங்கவாதியாக அப்பா இருந்ததனாலை எனக்கு....

**யமுனா:**
இப்ப நீங்க எப்படி உணர்றீங்க? நீங்க பல விஷயங்களை வாசிக்கிறீங்கள். தாஸ்தாவ்ஸ்கியில் இருந்து கார்சியா மார்க்குயூசில் இருந்து எல்லாரையும்பற்றி அபிப்பிராயம் சொல்றீங்க. இப்ப நாங்கள் விரும்புகிறோமோ விரும்பேல்லையோ உலக முதலாளித்துவம் இருக்கு. கம்யுனிசம் இருக்கு. சோசலிசம் இருக்கு.
மற்றது சித்தாந்த ரீதியில் பல்வேறு விஷயங்கள் தாக்கம் பண்ணி இருக்கு சேகுவேரா இன்ஸ்பயர் பண்ணி இருக்கிறார். அதேமாதிரி எத்தனையோ தத்துவவாதிகள் எல்லாரும் இன்ஸ்பயர் பண்ணி இருப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இடத்தை அடையலாம் என்பது தான் நோக்கமாக இருக்கலாம். கைலாசபதியையும் சிவத் தம்பியையும் தாக்குவதன்மூலம் தன்னை முன்னிறுத்துகிற முயற்சி என்று நான் கருதுகிறன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

கருத்துச் சொல்கிறது வேறை, தாக்கிறது வேறை. இவர் என்ன நினைக்கிறார் என்றால் கைலாசபதி, சிவத்தம்பிக்கு எதிரான ஒரு கோஷ்டி இருக்கு பல்வேறு மட்டங்களிலை - கல்வி மட்டங்களிலை, பேராசிரியர் மட்டங்களிலை இப்படி. இதில் இந்தியப் பிராமணியம் முக்கியமான பங்களிப்புச் செய்யுது. இவர் அப்பிடித் தாக்கிற தாலை என்ன செய்கிறார் என்றால் அவையின்ரை எடுபிடிகளாய் மாறுகிறார். அவை என்ன செய்யினம் எண்டால் கை தட்டி ஆஹா! ஓஹோ! என்று சொல்லுகினம். இவருக்கு அது தேவையாக இருக்குது ஏனென்றால் அவங்களைவிடத் தான் பெரிது என்று காட்டிறத்துக்கு.

**புலம்பெயர் சூழலில் வேளாள சமூகம் பற்றிய எந்த ஒரு அக்க றையும் இல்லாமல், இன்றைய இலங்கை சாதியப் பிரச்சினை தொடர்பாக பூரணமாக உணர்ந்து கொள்ளாமல் பிராமணியத் தைத்தான் முன்னிலைப்படுத்தி இங்கு சாதியத்தை முன்னெடுப் பதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

இங்கு எங்களுக்கு எதிரி யார்? யாழ்ப்பாணத் திலை பிராமணிகூட நளவன், பள்ளன், அம்பட்டன் மாதிரி ஒரு சமூகத் தேவையாளனே தவிர அவன் ஒரு ஆதிக்கசக்தி அல்ல. அவன் கோயிலுக்குப் பூசை வைக்கிறத்துக்கு, கலியாணம் வந்தால் தாலி கட்டுவிப்பதற்கு என்று. அவரும் ஒரு எடுபிடிதான். ஐஞ்சு குடிமக்களோடை ஆறாவதாக.... அப்ப வந்து உண்மையான எங்கடை வர்க்க எதிரி யார்? யாழ்ப்பாணச் சூழலிலை உண்மையாய் எங்களுக்கு எதிர்முகாமிலை உள்ளவன் ஆ.ரெண்டு பார்க்க



வேணுமே தவிர பிராமணன் என்று சொல்லிப்போட்டு....? அவன் எங்கடை நேச சக்தி யெல்லே. அவன் பிராமணன் என்று சொல்லலாம். ஆனால், அந்த வர்க்கநிலையில் அவன் பிராமண னாகவா இருக்கி றான்? ஆதிக்க சக்தியாகவா இருக்கி றான்? அது பாரு ங்கோ, அதை எப்பிடிச் சொல்லலாமென்றால் இந்தத் தென்னிந் தியக் கருத்து, தென் னிந்தியத் தாக்கம் என்றுதான். அப்பிடிச் சொல்லுறதாலைதான் தாங்கள் தலித்துக் கள் என்று மறைமுக மான ஒன்றைக் கொண்டு வரப்பார்க் கினம். ஆனால், தமிழ நாட்டு அல்லது கேரள அல்லது ஆந்திர மராட்டியத் தலித்துக்களும் நாங்களும் ஒன்றல்ல. அதேமாதிரி இங்குள்ள பிராமணன் அங்குள்ள பிராமணன் அல்ல. இங்கே ஆதிக்க சக்திகள் யார் என்றால் சைவ வேளாளர். எனவே எங்கடை கோஷம் சைவ வேளாளனுக்கு எதிராக வைக்கப்படவேணுமே தவிர சும்மா இங்கே இருக்கிற அப்பாவிப் பிராமணனுக் கெதிராக வைக்கிறதிலை இல்லை. வேணும் என்றால் திருப்திப்படலாம்; இப்படிச் சொல்கிறோம் என்பதிலை சந்தோஷப்படலாம்; அது ஒரு சரியான பார்வை அல்ல. நாங்கள் ஆதிக்கசக்தி எது என்று தெரிந்துகொள்ள வேணும். அப்பதான் எதிரியை இனம் கண்டு பிடிக்கலாம். சும்மா இருட்டோடை நின்று சண்டை பிடிச்சுக் கொண்டிருக்க முடியாது.

> மற்றது யார் போராடினார்கள் என்கிறது அல்ல முக்கியம். என்ன வெற்றி பெற்றார்கள் என்பது தான் அங்கு முக்கியம்.

**புலம்பெயர் சூழலிலை ஆரோக்கி யமான தலித்திய சிந்தனைகள் இருக்கிறமாதிரி உங்களுக்குத் தெரிகிறதா?**

இந்தக் கூட்டங்களுக்கு வந்தாப்பிறகு எனக்கு ஒன்று தெரியுது. அங்கை இருந்து அனுபவிக்காத, பெறாத அல்லது அங்கை இருந்து ஒடுக்கப்பட்ட ஏதோ ஒரு குழுவினர் தத்துவார்த்தரீதியாக, சும்மா வெறும் சாதிரீதியாக அல்ல, நாங்கள் ஒடுக்கப்பட்ட னாங்கள் இங்கை நிமிர்ந்து நிற்கிறம் என்ற குரல் பரவலாய் இருக்கு. நான் இப்ப கொஞ்சக் காலமாய் யோசிச்சன், என்னடா இப்பிடி ஒரு குரல் வருகுது, இப்பிடி ஒரு வீச்சு வருகுது என்று என்ன காரணம் என்று பார்த்தால் அவன் வாயை மூடிட்டான். இஞ்சை வந்தவன் ஏன் நிமிர்கிறான் என்றால், அதைச் சொன்னால் என்ன, அவனுக்குச் சமூக நெருக்கு வாரம் இல்லை. ஊரல்ல இங்கு. மற்றவர்களிடம் தங்கி இருக்கிறதல்ல இங்கு. அவனைவிட நல்லாய் இருக்கிறோம் என்ற மேம்பாட்டு உணர்வுதான் இந்தக் கருத்தை வைக்குதோ என்றுகூட நான் யோசிக்கிறன். இப்பதான் எனக்குத் தெரியுது முந்தி நசுக்கிடாமல் நெளிஞ்சு மெல்லமாகச் சொல்லிக் கொண்டிருந்தவை எல்லாம் இப்ப துணிஞ்சு தைரிய மாகத் தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள். அது ஒரு பெரிய விஷயம்தான்.

கிருஷ்ணப் பறையனார் என்று சொல்லி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுமதிச்சதுக்கு இன்னொரு விசாரணை. வக்கீல் நோட்டீசு கவர்மெண்ட்டுக்கு அனுப்பிச்சாங்க. PGக்கு கடிதம் போய் எனக்கொரு கடிதம் அனுப்பி இருந்தாரு. அதற்கு நான் உடனடியாக ஒன்றிரண்டு வரிகளிலை பதில் போட்டேன்.

திலகவதி என்னும் பெயருக்கு நான் காபி ரைட் எதுவும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. ஆகையால் அந்தப் பெயரை யாரும் பாவிப்பதைத் தடை செய்ய முடியாது. படம் எடுப்பதற்கு முதலீடு செய்வதற்கு என்னிடம் பணவசதியும் கிடையாது. நீங்கள் மேற்கொண்டு விசாரணைகளைச் செய்து கொள்ளலாம். அதற்கு அப்புறம் எனக்கு பதில் எதுவும் வரலை. அப்புறம் 'நாற்காலியும் நான்கு தலைமுறைகளும்' அப்படின்னு ஒரு கதை எழுதினேன். ஒரு பெண், அவளுடைய மூன்று தலைமுறையைப்பற்றி பல வேதனைகளை அனுபவிச்சு கடைசியாக நாலாவது தலைமுறையாக வருகிற தன் பேத்தியைப் பார்த்து ஒரு நம்பிக்கை கொள்வதாக இந்தக் கதையைத்தான் எழுதினேன். உடனே இந்த 'நாற்காலி' என்ற பதத்தைப் பார்த்தவுடனேயே ஏதோ அரசியல் சம்பந்தப்பட்டது என்று நினைச்சிட்டாங்க போல் இருக்கு. அதனாலை விசாரணைக்கு மேல் விசாரணை நடத்தினாங்க. இப்படியான வேடிக்கை எல்லாம்கூட நடக்கும். நான் சொன்னேனே என்னுடைய முதல் சிறுகதைத்தொகுதி சிறந்த சிறுகதை எழுத்தாளருக்கான தமிழக அரசின் விருதை அது எனக்குப் பெற்றுத் தந்தது.

அதற்கு அடுத்து, இரண்டாவதாக வந்த சிறுகதைத் தொகுதி 'அரசிகள் அழுவதில்லை' அது நீங்க மிகச் சரியாகச் சொன்னீங்கள் தங்களுடைய வாழ்க்கை அனுபவங்கள்தான் முதல் கதைகளாக வரும்னு. அதேபோல நான் வாழ்ந்த தர்மபுரியிலை எங்க தெருவிலை வசித்த சின்னக் கடைகளுக்கு தண்ணீர் சுமந்து ஊற்றுகிற ஒரு வயதான பெண்மணி. அந்தப் பெண்மணியுடைய ஆளுமை. அதனுடைய சுயமரியாதை, அதனுடைய ஒரு வீச்சும். அதைத்தான் ஒரு கதையாக ஆக்கி இருந்தேன். அதைத்தான் கதைத்தொகுதிக்குத் தலைப்பாகவும் வைத்திருந்தேன். தமிழக அரசினுடைய இரண்டாவது பரிசு எனது இரண்டாவது தொகுதிக்குக் கிடைத்தது. அப்போது கலைஞர்தான் ஆட்சியிலை இருந்தாரு. அந்தப் பரிசை நான் போய் ஜனவரி மாசம் 17ம் திகதி அவர் கையில் இருந்து வாங்கிட்டு வந்திட்டேன். அன்னிக்கு திருவள்ளுவர் தினம். அதுக்கு முதல் பொங்கல் நாலு நாள் லீவு வரும். பொங்கல் அன்னிக்குத்தான் நமக்கு telegram வரும். அதற்கப்புறம் ஆபீஸ் கிடையாது. 20ம் திகதி நான் ஆபீசுக்குப்போனா எனக்கொரு மெமோ வந்திருக்குது. என்னன்னா ஒரு அரசு அதிகாரியாக இருக்கிற நீங்கள் எப்படி பணமதிப்புள்ள ஒரு பரிசை அரசின் முன் அனுமதி இல்லாமல் பெறலாம். விளக்கம் கூறுக. ஹோம் செகரட்டரி நாகராஜன் ஒரு கடிதம் எழுதிப் போட்டிருந்தாரு. அரசுதான் பரிசையே தருகிறது.

நான் எப்பவுமே பணச் சிக்கலிலைதான் இருப்பேன். ஆனா அதற்குப் பிறகு எனக்குச் சில அமைப்புகள் வந்து விருதுகள் எல்லாம் தந்திருக்கின்றன தானே. அதோடைகூட ஏதாவது 1000/2000 ரூபா பணம் குடுப்பாங்க. நான் உடனேயே பெரிய வள்ளல் மாதிரி உடனேயே யாருக்காவது கொடுத்திடுவேன். ஏன்னா அடிப்படையிலே பயம்தான். 2000ரூபா கிடைத்தா அது சமயத்தில உதவும் அப்படிங்கிற எண்ணம் உண்டுதான். ஆனா அதை வாங்கிக்கிட்டு நீங்க பதில் சொல்லமுடியாது பாருங்க. அதனாலை நான் பெரிய வள்ளல்மாதிரி அந்த அமைப்பாளர்களிடம் சொல்லிவிடுவேன், நீங்க அந்தப் பரிசுப் பட்டயத்தை தபாலில அனுப்பிடுங்க. இந்த ரூபாயை வந்து ஏதாவது அநாதை விடுதிக்குக் கொடுத்திடுங்க அப்படீன்னு.

**யமுனா:**

வெகுஜனப் பத்திரிகையில. எழுதிறவங்களிலிருந்து உங்களை வித்தியாசப்படுத்திப் பார்க்க முடியுது. வெகுஜனப் பத்திரிகைகளில் ஜெயகாந்தன் எழுதினாலும்கூட தன்னுடைய தீவிரமான தன்மையை ஒரு காலமும். கொம்பரமைஸ் பண்ணி இருப்பாரென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இப்போது எழுதுகிற பல்வேறு non-fictions வந்து அப்படிக் காத்திரமா இருக்குதான்னு தெரியலை. அவருக்குப் பல்வேறு நெருக்கடிகள் பிற்பாடு வந்திருக்கலாம். உங்களுக்கும் அப்படி வெகுஜனப் பத்திரிகைகளுக்கு எழுதும்போது நெருக்கடிகள் ஏதாவது வந்ததா?

உதாரணமாக ஒரு நாவல் எழுதி முடிச்சு அது பத்து வாரத்திலை வெளிவரவேணும்.

***ஒரு நல்ல பொலிஸ் அதிகாரி அப்படீன்னா எப்படி இருக்கனும் என்று பெண் அதிகாரிகளுக்கு ஒரு மனச் சித்திரம் ஒண்னு உருவாகிறது. அந்த மனச் சித்திரம் யாருடைய மனச்சித்திரமாக இருக்கிறதென்று கேட்டீங்கன்னா ஒரு கடுமையான கர்ணகடூரமான பார்த்தாலே அச்சத்தை விளைவிக்கக்கூடிய வகையில் பேசவும் நடந்து கொள்ளவும் தலைப்படுகிற ஒரு ஆண் அதிகாரிதான் அவங்களுடைய ஆதர்சமாக இருக்குது.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவங்க நீங்க வந்து இன்னும் ஒரு ஆறு வாரத்திற்கு தொடர்ந்து எழுதவேணும். என்கிற மாதிரி?

**திலகவதி:**
இல்லை. இல்லை. நீங்க சொல்றத்துக்கு எதிர்விதத்துக்குதான் அப்படி நடந்திருக்கு. என்ன அப்படி எதிரா நடந்திச்சுன்னு கேட்டீங்கன்னாக்க, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணியை மனசிலை வைச்சுக்கிட்டு ஒரு 60 ஆண்டுகாலத் தமிழக வாழ்க்கை சுற்றிச் சுழன்று வந்து ஆரம்பிச்ச இடத்திலையேதான் நிக்குது. மறுபடியும் இந்த அந்த ஜாதி அரசியல், அந்த ஊழல், அந்த வாரிசு அரசியல் இப்படியான பல விஷயங்களிலை நாம் 60 வருஷங்களுக்கு முதலில எப்பிடி இருந்தோமோ அதே இடத்திலைதான் நாம மறுபடியும் வந்து நின்னுட்டோம், அப்படீங்கிறது மாதிரியான விஷயத்தை ஒரு நாவலின் மூலமாக சொல்லணும்னு எனக்குத் தோணிச்சு. அது ஏன் தோணிச்சுன்னாக்க இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டு கொண்டாடிக் கிட்டிருந்தாங்க. அந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டின்போது அவங்க எழுப்பின கூச்சலைப் பார்த்தபோது அதற்கு எதிரான கருத்துத்தான் எனக்குத் தோன்றிச்சு. அதுதான் இது. பொன்விழா ஆண்டுக்கு நாங்கள் வந்திருப்பது உண்மைதான். ஆனால் இது ஒரு பொற்காலமான வாழ்க்கையா நமக்கு வாய்த்திருக்குது. இல்லையே. இன்னும் சொல்லப் போனா பின்னடைவைத்தானே நாம் அடைஞ்சிருக்கிறோம். அப்படீன்னு சொல்லணும்னு நினைச்சேன். இந்த விஷயத்தை மனசிலை போட்டு இதற்காக நிறைய ஆராய்ச்சிகள் செய்து, archivesக்கெல்லாம் போய் நிறைய விஷயங்களைச் சேகரித்து பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு பண்ணி கிட்டத்தட்ட இந்த ரூமில அரைவாசிக்கு புத்தகங்கள் எல்லாம் வாங்கி ரொம்ப தயார் பண்ணி வைச்சிருந்தேன். இதை எழுதலாம்னு நினைக்கும்போது இந்த விஷயம் இப்படித் தள்ளித் தள்ளிப் போய்கிட்டே இருந்தது. அந்த நேரத்திலை குமுதத்தில மாலன் ஆசிரியராக இருந்தாரு. அவர் வந்து என்கிட்ட ஒரு தொடர் எழுதித் தரச் சொல்லிக் கேட்டாரு. அப்ப நான் அவர்கிட்ட சொன்னேன், தொடர் எழுதிறதாக இருந்தா இதைத்தான் எழுதப் போகிறேன் என்று. அப்ப அவர் சொன்னாரு இல்லை, நீங்க வந்து, 25 வாரங்களுக்கு உரியதாக தலைமுறை இடைவெளி பற்றிப் பேசுவதாக ஒரு தொடர் எழுதினா நல்லாக இருக்கும் அப்படின்னு சொன்னாரு. அது எனக்கு மிகவும் சரியாகப் படலை. அவருடைய offerஐ நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போ கலைமகள்ல இருந்து ரமணி ஆசிரியர் வந்தார். அவர் வந்து என்கிட்ட தொடர்கதை எழுதணும்ன கேட்டப்ப நான் இதைச் சொன்னேன். ஆனா நீங்க வந்து எனக்கு விதிமுறையெல்லாம் வைக்கக்கூடாது. இப்படி எழுத்து இத்தனை பக்கம் அப்படி எல்லாம்.... நான் அப்படி எல்லாம் சொல்ல மாட்டேங்க. நீங்க உங்க விருப்பம் போல எழுதுங்க. முழு சுதந்திரமும் எனக்குக் குடுக்கிறேன்னு சொன்னாரு. அதனாலை நான் கலைமகள்ல எழுத ஆரம்பிச்சேன். அப்பகூட எனக்குத் தெரிஞ்சவங்க கனபேர் சொன்னாங்க ஏங்க கலைமகள்ல எழுது றீங்க. கலைமகளை எல்லாம் யார் படிக்கிறாங்க. குமுதம் எல்லாம் எவ்வளவு circulation ஆகுது? இருந்தாலும் அவங்க நான் சொன்னதுக்கு ஒத்துக் கிட்டதாலை எழுத ஆரம்பிச்சேன். கொஞ்ச நாள்ல வந்து பார்த்தா ரமணி பத்திரிகை ஆசிரியர் பதவியிலிருந்து விலகிட்டார். அப்புறம் இன்னொருத்தர் வந்தார். அவர் வந்து இரண்டாவது இதழிலேயே மேடம் இந்தக் கதை இன்னும் எத்தனை நாளைக்கு வரும் என்று கேட்டார். முதல்ல நான் ரமணிகிட்ட பேசிக்கிட்ட எல்லா விஷயத்தையும் அவர்கிட்ட சொன்னேன். எல்லாத்தையும் கேட்டாரு. அதுக்கு அடுத்த இதழுக்கு அனுப்பிய அந்த அத்தியாயத்தையே இரண்டாகப் பிளந்து இரண்டு வாரங்களுக்குப் போட்டாரு. அது எனக்கு சரிப்படலை. ஏன் இப்படி செஞ்சீங்க அப்படீன்னு கேக்கிறத்துக்காக அவருகிட்ட போன் பண்ணினப்ப, அவர் பதிலுக்கு என்னைக் கேட்டாரு சரி நீங்க என்னைக்கு இந்தக் கதையை முடிப்பீங்கன்னு கேட்டாரு. சமயத்திலை எனக்கு ரொம்பக் கடுமையான கோபம் வரும். நான் ரொம்பக் கோபமான மனுஷி. எனக்கு அந்த சமயத்திலை அப்பிடி ஒரு கோபம் வந்தது. என்ன கேட்டீங்க? அந்தக் கதையை எப்ப முடிப்பேன்னு தானே. அந்தக் கதையை இந்த நிமிஷத்தில முடிக்கிறேன். இனிமேல் என் கதை வராது. அதோடை 19வது அத்தியாயத்தோடை அந்தக் கதை நின்று போயிடுச்சு.

இது கலைமகளோடை நடந்த கதை.

இதேமாதிரி ஒரு அனுபவம் எனக்கு ராஜம் பத்திரிகையிலும் ஏற்பட்டது. 'நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ? என்று ஒரு தொடர் எட்டு வாரங்களாக வெளிவந்தது. நான் ஏற்கனவே சொன்ன மாதிரி என்னுடைய விரோதிங்க இருக்கிறாங்க தானே. அவங்க வந்து இந்த ராஜம் பத்திரிகையை மிரட்ட ஆரம்பிச்சாங்க. நீங்க எப்பிடி எல்லாம் இந்தக் கதையை வெளியிடுறீங்க அப்பிடி இப்பிடி என்று ஏதோ சொன்னாங்களாம். உடனே அவங்க எங்களுக்கு வருமான வரிப்பிரச்சனை அது இது எல்லாம் வந்திடும். அந்தமாதிரி எல்லாம் எங்களை மிரட்டுறாங்க. அதாலை நீங்க இந்தக் கதையைக் கொஞ்சம் சீக்கிரம் முடிச்சிட்டீங்கன்னா நல்லது. இதில கதையை எப்படி முடிக்கிறது. இந்தக் கதாபாத்திரங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு டூர் போய் பஸ் ஆக்ஸிடெண்ட ஆகி எல்லாரும் செத்துட்டாங்க அப்படீன்னு சொல்றதா?

எப்படி நான் கதையை நிறுத்த முடியும். கதையை நாங்க நிறுத்திட்டோம் அப்படீன்னு நீ போடு. நீ போட்ட கதையை நீயே நிறுத்திட்டேன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படின்னு போடு. நினைச்ச மாதிரி வளைச்சு வளைச்சு கதையை முடிக்க எனக்குத் தெரியாது. என்னாலை அது முடியாதுன்னு சொல்லிட்டேன். இதுமாதிரி அனுபவங்களெல்லாம் நடக்கும். இதுகள் எல்லாத்திலையும் கொடுமையான அனுபவங்கள் என்ன தெரியுமா? பத்திரிகைக்காரங்களோட பேட்டி தான். இந்தப் பத்திரிகைப் பேட்டிக்கு வந்தவங்க பெரும்பாலும் இளைஞர்களாக இருப்பாங்க. பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தா அவங்களுக்கு ஏதோ ஒரு சிறிய வருமானம் கிடைக்கும். ரொம்பத் திறமைசாலிகளா இருப்பாங்க நல்ல கவிஞர்களா இருப்பாங்க. சினிமாக் கனவுகளோடை சென்னைக்கு வந்தவர்களாக இருப்பாங்க. ஜீவிதத்துக்காக இந்தப் பத்திரிகைக்கு free lance பண்ணுவான். மேடம் நீங்க பேட்டி குடுத்தீங்கன்னாக்க எங்களுக்கு ஏதோ ஒரு வருமானம் இருக்கும். நாம குடுப்போம். நாங்க ஒரு கருத்தைச் சொன்னா அவங்க இன்னொரு கருத்தை எழுதிடுவாரு. ரொம்ப தர்மசங்கடமான ஒரு நிலைமையாயிடும் பாருங்க அது. எப்படி தர்மசங்கடம்னு கேட்டீங்கன்னா அந்தப் பத்திரிகையில வந்த பேட்டி தவறுன்னு சொன்னா திருப்பி அவருக்கு அந்தப் பத்திரிகையில வந்த பேட்டி தவறுன்னு சொன்னா திருப்பி அவருக்கு அந்தப் பத்திரிகையில எழுதுறத்துக்கு வாய்ப்புக் குடுப்பாங்களோ என்னவோ? ஒரு தடவை பத்திரிகையில் வந்ததை அப்படி ஒன்றும் பெரிய கல்வெட்டு மாதிரி மனசிலை வைச்சுக்கிட்டிருக்கப் போறது கிடையாது. அதனாலை நாங்க சீறிப் பாய்ஞ்சு பத்திரிகை ஆசிரியருக்கு மறுப்புக் கடிதம் எழுதி எழுதிய இளைஞருக்கு சங்கடம் வந்திடக் கூடாது பாருங்க. இதற்காக அந்த விஷயத்தைப் பொருட்படுத்தாம நான் விட்டுவிடுவேன். ஆனால் அது ஒரு சுற்று போய்க் கிட்டிருக்கும்.

இப்படிச் சொன்னாங்களாம் அந்தம்மா! இப்படிச் சொன்னாங்களாம் அந்தம்மா! என்று. அந்த அம்மா அப்படிச் சொல்லியே இருக்க மாட்டாங்க. அது எனக்கும் தெரியும். அதை வெளியிட்டவருக்கும் தெரியும். அவர் தனிப்பட்ட முறையில எனக்கு போன் பண்ணி நான் இப்படி எழுதிட்டேன் மேடம். பத்திரிகை லே அவுட்ல ஒரு வரியை எடுத்திட்டாங்க மேடம். அது இப்படி அர்த்தம் ஆயிடுச்சு மேடம். இப்பிடி ஏதாவது ஒரு விளக்கத்தை அவர் எனக்குச் சொல்வாரு. இப்படியான சிக்கல்கள் வரும் ஒரு புறம்.

**யமுனா:**

ஒரு அரசியல் கேள்வி. உங்க அப்பா ஒரு தொழிற்சங்கவாதி கம்யூனிஸ்ட் என்கிற அளவில நீங்கள் போலீஸ் வேலைக்குப் போனது பற்றி என்ன அபிப்ராயம் கொண்டிருந்தார்?

**திலகவதி:**

ஏன்னா அப்பாக்கு தொழிற்சங்கவாதி என்ற அளவிலை ஒரு அனுபவம் இருந்திருக்கும். அவரு, எங்கப்பா வந்து ஒரு மாதிரியாக அதிகப் படிப்பில்லாதவராக இருந்தபோதிலும்கூட இந்த தனிமனிதர்களுக்கான ஸ்பேஸ் என்று ஒன்றிருக்குத் தானே. அதை அதிகமாக அனுமதிச்சாரு. என்னுடைய முடிவுகள்ல தலையிடல்ல. ஆனா அவர் எனக்குக் குடுத்த அட்வைஸ் என்னன்னா நான் சட்டம் படிச்சு ஒரு வக்கீலாக ஆகணும்.



அப்படீன்னு விரும்பினாரு. நீதியை நிலை நாட்டுகிற ஒரு மனுஷியாக நான் இருக்கணும்னு விரும்பினார். அப்பாவினுடைய விருப்பத்துக்கு விரோதமாகத் தான் நான் காவல்துறை அதிகாரியாக ஆனேன். காவல்துறை அதிகாரியானத்துக்குப் பதிலாக நான் நீதித்துறைக்குப் போயிருந்தேன்னாக்க அவரு ரொம்ப சந்தோஷப் பட்டிருப்பாரு.

**யமுனா:**

லெனின் சொன்ன மாதிரி. இந்த அரசு இயந்திரத்தினுடைய திருகாணியாக இருந்து கொண்டு அதிகமாக என்னதான் செய்யமுடியும்?

**திலகவதி:**

அப்படீன்னு சொல்லிக்கிட்டு ஒரு inadequate ஆக நான் feel பண்ணுகிறேன். இனி அப்புறம் எழுதிற தின்னு வந்திட்ட பிறகும் கூட பார்த்தீங்கன்னா பழைய காலத்தில பாட்டிங்க வந்து, காலகாலமாக எங்க பாட்டியே வந்து எங்களுக்கு கதை சொன்னாங்க. என் மகளுக்கு கதை சொன்னாங்க. எங்களுடைய பேரன் பேத்திகளுக்கும் அவங்க கதை சொல்லுவாங்க. அவங்களுடைய கதைகளில் 100க்கு 99 சதவீதமான கதைகள் ஒரு ஊரிலை ஒரு ராஜா இருந்தாரு, அப்படித்தான் தொடங்கும். அதேபோலத்தான் இன்னிக்கு கதை எழுதறவங்க ஏதோ உத்தியில மாறுபாடு, மாந்திரீகம், தாந்திரீகம் அப்படி எல்லாம் வித்தைகள் எல்லாம் செய்யிறாங்களே தவிர, இவங்களிடம் இருக்கிற எழுத்தாற்றலை இவர்கள் மக்களிடம் காட்டி அவர்கள் அதைக் கண்டு பிரமிப்பதன்மூலமாக தங்களுடைய மனஅரிப்பைத் திருப்தி செய்து கொள்கிறார்கள். இதுக்கு வேறுவிதமான சமூகப் பயன்பாடு இல்லையே அப்படீங்கிறது மாதிரி எனக்குத் தோன்றுகிறது. அதுக்காக எழுதின மாதிரியே எழுதிக் கிட்டே இருந்தால் அதுமட்டும் ஒரு பெரிய விஷயமா? ஏதாகிலும் ஒரு மாறுதல் வேணும்தானே, புதுமை வேணும்தானே. அதனாலை இப்படி எல்லாம் எழுத வேண்டித்தானே இருக்கு அப்படீன்னு தோணுது. ஆக மொத்தத்திலை இன்றைக்கு வந்து எழுதறதன் மூலமா சமூக மாறுதலைக் கொண்டு வரமுடியுமா அப்படீங்கிற பெரியதொரு கேள்வி எனக்குள்ளாற எழுந்திருக்கு. இரண்டாவது வேறு எதுவும் செய்ய முடியாத ஒரு காலகட்டத்திலைதான் நாம எழுதுறதை வந்து கைக்கொண்டிருக்கோம். அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதிறதையாவது நாம் வந்து தீர்க்கமாக தீர்மானமாக, ஒரு கூர்மையாக சரியான படி செய்து கொண்டிருக்கிறோமா? எனக்கும் என்னுடைய சமகால எழுத்தாளர்களுக்காகவும் சேர்த்தே இந்தக் கேள்வியை நான் எனக்கு முன்னால் வைத்துக் கொள்கிறேன். இந்தக் கேள்விக்கான விடையை நான் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறேன்.

இளமையில் படிக்கிறவங்க எல்லாருமே பொழுது போக்குக்குத்தான் படிக்கிறாங்களே தவிர, யாரிடத்தில் மாறுதல் வரணும்னு நாம நினைக்கிறோமோ அவங்க இதெல்லாத்தையும் படிக்கிறதே கிடையாது. யார் மனதில் மாறுதல் வரணும்னா இப்ப வந்து அரசியல் சம்பந்தமான விஷயங்கள் இருக்குண்ணு வைச்சுக்குவோம். அரசியல் தலைவர்கள்தான் தேசத்தின் போக்கைத் தீர்மானிக்கிற வீட்டினுடைய அடுப்பு எரிவதைத் தீர்மானிக்கிற ஒரு மனிதன் எத்தனை குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிற இப்படியான முடிவுகளை அரசியல்வாதிங்கதான் எடுக்கிறாங்க. அந்த அரசியலை வெகுஜனமக்கள் என்பவர்கள் தீர்மானிக்கிறார்கள். அந்த வெகுஜனமக்களுக்கு அரசியல் உணர்வென்கிறதே இல்லாமல் இருக்கிறது. இந்த விஷயங்களை அவங்க கிட்ட நம்மளுடைய இந்த மாந்திரீக தாந்திரீக எதார்த்தவாத பழமைவாத புதுமைவாத மிதவாத கற்பனைவாத எழுத்துக்களின் மூலம் சாதிக்க முடியுமா? எழுத்தினால் எதையும் சாதிக்க முடியாதுங்க? எழுத்தினால influence பண்ண முடியுமே தவிர வேறெதுவும் செய்ய முடியாதுங்க.

எழுத்தினுடைய பயன்பாடு என்ன தெரியுமா? இந்த பிரக்ஞை வந்து ஒரு material force ஆகுகிறது. நாங்கள் சொல்லிக்கொண்டே இருக்க அது வந்து எங்களுடைய அடிமனப் பிரக்ஞையில் போய் நிற்கும். ஆனால் எங்களுடைய வாழ்க்கை அனுபவம், மற்ற விஷயங்கள் எங்களை உந்தித் தள்ளும்போது அதுக்கு ரியாக்ட் பண்ணி எதிர்ப்பு மனநிலையைக் கொடுக்கக்கூடிய ஒரு உந்து தலைத்தான் எழுத்து கொடுக்கும். உடனடியான விளைவுகளை ஒருநாளுமே உருவாக்காது. இன்னும் சொன்னா எழுத்தாளன்ர வாழ்க்கையை ரொம்ப நுணுகி ஆராயப் போனா அந்த எழுத்துக்குரிய மரியாதை எல்லாமே போகுது. எங்க சமூகத்தைப் பொறுத்த அளவிலை எழுத்து என்பது ஒரு அலங்காரமாத்தான்- சொகுசாகத்தான்- இருக்குது. இது ஒரு மாதிரி ஐந்தாவது சக்கரம், ஆறாவது சக்கரம் அப்படீங்கிறது மாதிரியாக இருக்குது. இந்த எழுத்துங்கறது. ஒரு லேஸ், ஒரு மாதிரி அலங்காரம். இது ஒரு ஆடையாக இல்லாமல் அங்க வஸ்திரமாக இருக்கிறமாதிரித்தான் தோணுது.

**யமுனா:**

இப்பதான் நீங்க தர்மபுரியில் இருந்து வந்த ஒரு தொழிற்சங்கவாதியினுடைய மகள் மாதிரிப் பேசுறீங்க?

**திலகவதி:**

இப்ப நான் வந்து வெறும் சுத்த சுயம்புவான இலக்கியவாதியாக மட்டும் இருக்கணும்கிற நோக்கங்களோடு எழுதுறத்துக்கு வந்தவ இல்லை. ஏதோ என்னுடைய எழுத்திலை நான் வந்து சில கருத்துக்களைச் சொல்லி அதைச் சிலபேர் படித்து அதைப் பற்றி அவர்கள் சிந்தித்து அதன்மூலமாக ஒரு மாறுதல் அவர்களுக்குள் ஏற்பட்டு இப்படியான ஒரு சமூக மாறுதலுக்கு எப்படியாயினும் ஏதாவது ஒரு விதத்திலை என்னுடைய பங்களிப்பை நாங்க செய்யணும். அப்படியான எண்ணங்கள் எல்லாம் எனக்கு இருந்தது. நான் ஏற்கனவே சொன்னது மாதிரி ரொம்பவும் ஒரு கனவு மயமான பெரிய இலட்சியமான உலகம் வந்து என்னுடைய மனசுக்குள்ள இருக்குது. அத்தகைய ஒரு உலகத்தைச் சமைப்பதற்கான என்னுடைய கை மணலாக என்னுடைய எழுத்தை உபயோகிக்கிறேன். ஆனா இன்னிக்கு வந்து திரும்பிப் பார்க்கும்போது இந்த முயற்சிக்கும் இந்த எண்ணத்துக்கும் உட்கார்ந்த இடத்திலை இருந்து எழுதிக்கிட்டிருந்தா போதுமா. அப்படீங்கிற ஒரு அடிப்படையான கேள்வி எனக்கும் சிலகாலமாக எழுந்துகிட்டே இருக்குது. நல்ல கேள்வி.ஆனா அதுக்கு வேலையெல்லாம் விட்டுட்டு வந்துதான் அதெல்லாம் செய்யலாம். உண்மையிலேயே சமூக மாறுதலைக் கோருபவர்களாக இருந்தால் தரையிறங்கி களத்தில் இறங்கி மனிதர்களை நேருக்கு நேராகச் சந்திச்சு அவர்களோடு பேசி அவர்களோடு கலந்து பழகி அத்தகைய மாறுதலுக்கு நாம நம்மளுடைய பங்களிப்பை வந்து செய்யணும்.

நாமபாட்டுக்கு சௌகரியமாக ஒரு அறையில உட்கார்ந்துகிட்டு ஏர்கன்டிசனும் போட்டுவிட்டு பேனும் போட்டுகிட்டு நம்மட மூணுவேளைச் சாப்பாட்டுக்கு உத்தரவாதமான ஒரு தொழிலையும் செய்துகிட்டு சமூக மாறுதலைப்பற்றியும் புரட்சிகரமான விஷயங்களையும் சேகுவாரா போன்ற மனிதர்களைப்பற்றியும் அப்பப்ப சிந்திச்சுக்கிட்டு இருந்தால் மட்டும் போதுமா?

**பகத்சிங் கூட வன்முறைபற்றி இதைத்தான் எல்லா சுவரிலையும் எழுதி இருந்தாரு. மனித இரத்தம் சிந்தப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் மக்களுடைய கவனத்தை இதன்பால் ஈர்ப்பதற்கு எங்களிற்கு இதைவிட வேறுவழி தெரியவில்லை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எதிர்வினை



**எதிர்வினையின் விளைவாய்....**

உயிர்நிழல் 14வது இதழில் கனடாவில் இருந்து அக்கினிக்குஞ்சு எழுதிய எதிர்வினையினுள் தெளிவு படும் அவரது சில அறியாமைகளை எடுத்துச் சொல்ல நினைக்கிறேன். நமக்கேன் வம்பு என்று சும்மா விடலா மென்று நினைத்தாலும் இந்தத் தமிழ் மனத்தின் தமிழ்த் தனம் விடமாட்டேன் என்கிறது. அவர் கட்டுரையூடாக பல விடயங்களை நானும் தெரிந்துகொண்டேன்.

✹ அக்கினிக் குஞ்சின் சிறுமை

'பழமை வேலணை'

அவரது ஊரும் எனது ஊருமான இந்த ஊர் எரிந்தும் இடிந்தும் குறையாகக் கிடக்கும் வீடுகள் தெருக்களும், பாதியாய் பனை, தென்னைகளும்கூட முறிந்தும் மிகப் பழமையடைந்து கிடக்கின்றது. ஈழத்தில் மற்றைய ஊர்களெல்லாம் நவீனமயப்பட்டு முன்னேற்றமடைந்தி ருக்கிறதென அக்கினிக்குஞ்சு நினைக்கின்றாரா? எனது பாட்டி எண்பதைத் தாண்டியும் இன்னும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றா. அவ இன்னும் முன்னேற்ற மடையாமல் பழமைவாதியாகவே இருக்கின்றா என்பது உண்மை. அவவையும் ஐரோப்பாவிற்கு அழைத்து பழமைவாதத்தைக் களைந்து மாற்றலாமென நினைக் கிறேன். ஆனால் முடியவில்லை. வேலணையூரவர்கள் பழமைவாதிகளெனக் கொண்டால் ஈழத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் ஐரோப்பிய அமெரிக்க நாடுக ளுக்கு வந்துவிட்ட நாம் புதியவர்களாகி விட்டோமா?

இங்கு வந்து தலைக்கு எண்ணை வைக்காமல் விட்டது மட்டுமே புதிய மாற்றம். பிரான்சிற்கு வந்து 14 வருடங்கள். தற்போது பிரஜா உரிமையில் 'பிலிப் சுந்தரம்'எனப் பெயர் மாற்றிக் கொண்ட என்னாலும் பழமையை விடமுடியவில்லை. புதியவனாக(?) வேண்டு மென்று விரும்புகிறேன். ஆனால், தமிழகத்து தமிழ் வீடியோப் படங்களையும் அப்படங்களைத் தியேட்டர் களிலும் பார்க்கிறேன். ஒரு கலியாண வீட்டை மூன்று முறை செய்ய, மூன்று முறையும் விஜயம் செய்கிறேன். என்வலப் கொடுக்கிறேன். கலியாணத்திற்கு ஒத்திகை நடத்தும் (பூப்புனித நீராட்டு விழா) வைபவங்களுக்குப் போகிறேன். "என் மகள் பாலுறவிற்குத் தயாராகி விட்டா. யாரும் வரலாம்" என பறையறையும் சாமத்தியச் சடங்கு களுக்கும் போய் அவள் பெற்றோர்களுக்கு கை கொடுத்து குலவிவிட்டு வருகிறேன். சீட்டுப் போடுகி றேன்; வங்கியில் சேமிப்புக் கணக்கும் இருக்கு; வட்டிக்கு எடுக்கிறேன்; வங்கியில் லோனும் எடுக்கிறேன். பெயரை மாற்றிவிட்டு பாரிஸில் இருந்து 50 கிலோமீற்றர் தூரத்தில் வீட்டை வாங்கிப்போட்டு பிரெஞ்சு பேசித் திரியும் தமிழன்(தோல் நிறம்)ஆல் புதியதை கற்கவும் தேடவும் முடியாமல் இருக்கின்றது.

✹ அக்கினிக்குஞ்சின் அறியாமை.

"இலங்கையில் ஏழை மக்களின் வரிப்பணத்தில் தங்கள் பாடசாலை பல்கலைக்கழகக் கல்வியை கற்ற பின்..."

நானும் அவரும் O/L, A/L வரையும் படித்தது, அவரின் கருத்துப்படி, மக்களின் வரிப்பணத்தில் தான். பிரான்சில் நானும் நீண்டகாலம் பிரெஞ்சு படித்திருக்கிறேன். அரசாங்கம்தான் எனக்குப் பணம் தந்தது. (மக்களின் வரிப்பணம்) வட்டிக்கு அல்ல. ஜீவிதத்திற்குத் தந்தது. இந்த முறை ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் உண்டு. அமெரிக்காவில் காசு கொடுத்துப் படிக்கின்றார்களாம். மூன்றாம் மண்டல நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கி மானியம் வழங்குகின்றது. இந்த விடயம் பல் கலைக்கழகம் போய்ப் படித்தவர்களில் பலருக்கும் தெரியாது. அவர்களில் அக்கினிக்குஞ்சும் நானும் உள்ளடக்கம். மக்களின் வரிப்பணத்தில் படித்த அக்கினிக்குஞ்சும் இந்த பிலிப் சுந்தரமும் வெள்ளை யனுக்குச் சேவை செய்கின்றோம், அழையா விருந்தின ராய் இப்போ.

தற்போது பல்கலைக்கழக மாணவர்களிடம் குறைந்த அளவில் கட்டணம் அறவிடும் திட்டம் ஒன்றை உலக வங்கி இலங்கை அரசாங்கத்திற்கு ஒப்புவித்தி ருக்கின்றது. கொள்கையளவில் இலங்கை அரசு அத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இப்படி இந்த பொது விடயங்களை, சமூகவியல், உலகவியல் தெரியா தவர்கள் எப்படி எழுத முடியும்? தமிழ் எழுதத் தெரிந் தால் எழுத வேண்டியதுதானா? உலகத் தமிழர் பிரச்சி னைகளைத் தனதாக்கி தீர்வு காண முயல்வது இயல்பு. தன்தலையில் போட்டு தான் தனியக்குத்தி முறிவது அவரது பேடிமைத்தனம், அறியாமை.

✹ அக்கினிக் குஞ்சின் புரிதல்

"...இங்கே பாடசாலைக்குப் பல சங்கங்கள், ஊருக் குப் பலபிரிவுகள், அமைக்கின்றார்கள்? எல்லோரும் ஒற்று மையாக ஐக்கியமாக இருந்தால் என்ன?"

நியாயமான இந்தக் கேள்வியை நானும் கேட்கி றேன். இந்தக் கேள்வி மனித உரிமையை மதிக்கிற, மனிதாபிமானமிக்க மக்கள் வாழுகின்ற சனநாயக ஆட்சி, மக்கள் மேம்பாட்டைப் பேணி வளர்க்கிற அமைச்சுகளும் சீரான நிர்வாகம் நிலவும் ஒரு நாட்டில் நின்று கேட்பது நியாயம். கனடாவிலும் பிரான்சிலும் நின்று கேட்கலாம்.

இலங்கையில் நின்று கேட்கலாம் அந்தப் பெண் ணைப்போல. நானும் பல வருடங்களுக்கு முன் இப்படிக் கேட்டேன். பின்னர்தான் புரிதல் வந்து தெரிந்து கொண் டேன். பெண் கேட்டது சரி. அதற்கு விளக்கம் பதில் கொடுத்தவரும் அதுபற்றி மேற் கோள் காட்டி எழுதிய அக்கினிக்குஞ்சும் 'மாபியா' தான்.

இலங்கையில் மக்களாட்சி நடந்தால், சிவில் நிர்வாகம் சீராக இருந்தால் மக்கள் பயமின்றி பசியின்றி நிம்மதியாக வாழ்ந்தால், மனிதம் மதிக்கப்பட்டு மனித மேம்பாடுகள் பேணப்பட்டி ருந்தால், அமைதியும் சமாதானமும் இருந்தால் - ஒரு ஆட்சி, ஒரு சங்கம், ஒரு நிர்வாகம், ஒரு புனரமைப்பு, ஒரு திட்டம் எங்கும் சாத்தியமாகும்.

சு. இராசமணி (பிலிப் சுந்தரம்), பிரான்ஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிவருகின்றது!

அசை...

சமூக அசைவியக்கத்திற்கான ஓர் எழுத்தியக்கம்

- **மறுபடியும் மார்க்சிடம்**
  எலன் மீக்ஸின்ஸ் வுட்
- **புரட்சிகர மாற்றின் தேவை**
  இஸ்த்வான் மெஸ்ராசுடன் உரையாடல்
- **மார்க்சியம் இன்று**
  இஸ்த்வான் மெஸ்ராசுடன் உரையாடல்
- **ஆண் சமப்பாலுறவு இலக்கியத்தின் வரலாறு**
  காம் டால்பின்
- **மனு அதிமனிதன் நீட்ஷே**
  அம்பேத்கர்
- **கருத்தியலின் வலிமை**
  மைக் பரீமன்
- **மூலதனத்துக்கு அப்பால்**
  நிக் பீம்ஸ்
- **மார்க்ஸ் எனும் மானுடன்**
  ஜென்னி டிஸ்க்கி
- **போர்னோகிராபி பற்றிய விவாதம்**
  ஜேர்மின் கிரீர்
  ஜேனட் வின்டல்ஸன்
- **நான் பின்நவீனத்துவ நாடோடி அல்ல**
  ஸ்டுவர்ட்ஹால் நேர்முகம்
- **நான் ஏன் மார்க்சிஸ்டாக இருக்கிறேன்?**
  எரிக் ஹாப்ஸ்டாம் நேர்முகம்
- **இலக்கியம் சித்தாந்தம் பின்நவீனத்துவம்**
  டெரி ஈகிள்டன் நேர்முகம்
- **ஸ்டாலினும் சினிமாவும்**
  பெட் வுல்லன்
- **தமிழ்ச்சூழலில் பின் நவீனத்துவமும் அறிவுத்துறைச் சோம்பேறிகளும்**
  அதர்மன்
- **ஆட்டோமான்களும் தோற்றமும் வளர்ச்சியும்**
  தமிழரசன்
- **மலையக தலித்துக்கள், சில புரிதல்கள், விடுதலைநேசிகளின் கடமைகள்**
  என். சரவணன்
- **கம்யூனிசம் கனவல்ல**
  இஸ்த்வான் மெஸ்ராஸ்

இன்னும் பலரின்
எழுத்துக்களோடும்
மொழிபெயர்ப்புக்களுடனும்
மே மாதம் 2001 இல்
முதலாவது இதழ்
வெளிவருகின்றது.
200 பக்கங்களுடன்....

தொடர்புகளுக்கு: ASSAIE
45 Rue Davy
75017 Paris
FRANCE.

**மின்னஞ்சல்: Assaie@hotmail.com**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**நல்ல இலக்கிய வாசிப்பற்ற சொக்கனுக்கு வாதவூரானின் மீள்—உபதேசம்...**

நேற்று முன்தினம்தான் உயிர்நிழல் சமீபத்திய இரு இதழ்கள் கிடைத்தது. எனது 'செந்தட்டி' கருத்துரைக்கு கண்ணனின் எதிர்வினை படித்தேன். அந்தக் கதை குறித்த மற்றைய விமர்சனங்கள் எதுவும் எனக்கு தெரியாது. கண்ணன் இன்னும்கூட அதனை ஒரு 'முற்போக்கு கதை' (எனக்கு ஒரு காலத்தில் இருந்த முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்குகளில் எல்லாம் நம்பிக்கை இல்லை இப்பொழுது) என்று நம்புகிறார் போலிருக்கிறது. அவரே கூறுவதுபோல், இந்தக் கதைக்கு இவ்வளவு தேவையா? என்பதும் கூட, இதை எழுதுமுன் ஒரு கணம் வந்துபோகிறது. இருந்தாலும், விவாதம் பலவற்றிற்கு அல்லது அவர் சொல்வதுபோல் சம்பந்தமில்லாத அணுஆயுதம், பாசிசம்... போன்ற 'அவசியமற்ற'(?) அரசியல் கூறுகளுக்கு நேர விரயத்துடன் நம்மைத் தள்ளிச் செல்லலாம் என்பதால்...

கண்ணனின் இதர கதைகளை படித்ததில்லை. இருப்பினும், அவரே முன்னுக்குபின் முரணாக எழுதுகிறார். முதலில் அந்த நகை முரண்கள் பற்றி...

முரண்-1: டேட்டிங் பாலியல் பகிர்தலுக்கு இட்டுச் செல்வதாககூறுபவர், இக்கதையில் பாலியல்ரீதியாக என்ன பகிர்தலை காட்டினார்.

முரண்-2: கணையாழி எந்தக் காலத்தில் முற்போக்கு இலக்கியத்தை தரித்தது.

முரண்-3: உயிர்நிழல் போட்டுவிட்டு உதைபடுவதாக கூறுகிறார். இந்த வரிக்கு முதல்வரி, தமிழ் இலக்கிய ஆச்சார உலகம் என்கிறார். ஆக கண்ணனுக்கு இது ஒரு எதிர்-ஆச்சார இலக்கியமாக தெரிகிறது. எனது கருத்துரையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் ஒரு விஷயம் - கண்ணனின் இக்கதை ஆச்சாரத்திற்கு எதிரானதாக மேற்கத்திய பார்வையில் சொல்லப்பட்டுள்ளது என்பதுதான். இக்கதை ஒருவித சிலிர்ப்பின் அடிப்படையை படைப்பின் அடிப்படையாக கற்பித்துக் கொண்டு எழுதப்பட்டது என்பதும், அப்படி எழுதப்பட்டதிலும்கூட பாத்திர அமைப்புகளில் சரிவுகளுடன், கதைக்கான அடிப்படை தொழில் நுட்பத்தில் கூட கவனம் செலுத்தாமல் எழுதப்பட்டிருக்கிறது.

முரண்-4: தற்சமயம் வருடத்திற்கு ஒரு மாதம் தவிர்த்து, நான் தமிழ்நாட்டில் இல்லை. அப்படியே இருந்தாலும், இக்கதைகளை வெகுசனபத்திரிக்கைகள் போடாததற்கு ஆய்வு செய்யவோ, பரிந்துரை செய்யவோ கூடிய நிலையில் நான் இல்லை. என்ன சொல்ல முயல்கிறார் கண்ணன்? பாலியல் கதையை போடுவதா? வேண்டாமா? என்பதல்ல பிரச்சனை. கதையாக பார்த்து அதன் அரசியல் புரிதலுடன் போடுங்கள் என்பதுதான்.

முரண்-5: இந்தியனுக்கு அதிலும் குறிப்பாக தமிழனுக்கு எள்ளளவும் செக்ஸ் அறிவு இல்லை என்கிற திட்டவட்டமான முடிவிற்கு வந்துவிட்ட கண்ணன், திருமண-முன்பாலுறவு பற்றி இந்தியாவிலேயே விவாதிக்க முடியும் என்று கூறுகிறார். இந்த மனப்பக்குவம் 'ஏதாச்சும்' செய்யும் பாலியல் அறிவுடன் முரண்பட்டதில்லையா? அவருக்கே வெளிச்சம்.

முரண்-6: த்ரில் என்கிற உணர்வுபற்றி அதிகம் இங்கு பிரஸ்தாபிக்க வேண்டாம். கண்ணன் வெளிப்படையாக இந்த கதையை ஒரு த்ரில் கதை என்று ஒத்துக் கொண்டு விட்டார். இந்த த்ரில் புஷ்பா தங்கதுரை பாணி த்ரில் என்று வைத்துக் கொள்ளலாம். நமது பிரச்சனை த்ரில் என்கிற உணர்விற்கும் பகிர்தலுக்கும் உள்ள வித்தியாசம் பற்றியது. கட்டுரையை மீள வாசித்தால் புரியும்.

முரண்-7: இக்கதை நிகழ்வதற்கான சாத்தியம் உண்டா? இல்லையா? என்பது எனது மையமில்லை. என்ன சொல்ல வருகிறார், இது உண்மைக்கதை என்றா? இருந்துவிட்டுப் போகட்டுமே. கதை சொல்லப்பட்ட விதம் பற்றியதே விமர்சனம். கதையின் கரு பற்றியதல்ல. அப்படியெல்லாம் கருமுட்டை வைத்து கதை எழுத முடியாது. குஞ்சுதான் பொரிக்கலாம், ஏதாவது கோழிப்பண்ணை வைத்து.

ஒரு உண்மையை ஒத்துக் கொள்ளலாம். கண்ணன் போன்ற 'நல்ல ஆங்கிலப் பரிச்சயம் உள்ள இலக்கிய வாசிப்பு' எனக்கு இல்லை. நான் அதிகம் வாசிப்பது எல்லோரும் மூன்றாம், நான்காம் தரம் என்று சொல்லும் விஷயங்கள்தான். அதிகம் பழைய சரோஜாதேவிதான். இப்படியான எனக்கே ஏனோ 'சொகுசாக கிச்சுக்கிச்சு மூட்டவில்லை' இந்த 'அதற்குமேல் ஒன்றுமில்லை' என்கிற 'நகைச்சுவை' கதை. கொஞ்சம் கண்ணனின் மறு உபதேசத்தை உள்ளே போய் பார்க்கலாம்.

**1.** 'ஆசிரியன் இறந்து விட்டதான' பார்த்தின் கருத்தாக்கம், வாசகனிடமிருந்து படைப்பாளி தப்பிச் செல்வதற்கான உத்தியாகிவிடாது. படைப்புடன் ஆசிரியன் இறந்துவிட்டதை நம்பும் கண்ணன், இறந்த பின் எழுந்து வந்து ஆவியாக ஏன்தான் எழுதிய கதைக்கு உருவான வரலாற்றைச் சொல்லி கச்சை கட்டுகிறார். கண்ணன் ஒரு வாசகராக, இக்கதைக்கு உரிமை கொண்டாடாமல் அல்லவா எழுதியிருக்க வேண்டும். அது சாத்தியமா? படைப்புடன் உயிர் பெற்று படைப்புடன் இறந்துவிடும் ஆசிரியன், வாசிப்பின் வழியாக மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறான், ஆசிரியன் படைப்பின் ஒரு நிலையான புள்ளி இல்லை, படைப்பினூடே வந்து வந்து மறைபவன் என்பதாகத் தான் இதனை நான் புரிந்து கொள்கிறேன். இந்த ஆசிரியன் ஒரு எழுத்துருதான் (word-being), அல்லது படைப்புடன் மறைந்திருக்கும் ஒரு பாத்திரம் அல்லது கண்ணன் கூறுவது போல ஒரு பிம்பம் (அல்லது அடுக்கு பிம்பம் அல்லது அடுக்கடுக்கு பிம்பம்). இந்த பிம்பம் வாசகனால் கட்டமைக்கப்படுவது. எனது வாசிப்பில் கட்டமைக்கப்பட்ட பிம்பம்தான் ஐரோப்பிய முதல்வாத ஆரிய கண்ணன். இதனை அந்த கதையைக் கொண்டே துல்லியப்படுத்த முடியும். அது முட்டையில் மயிர் பிடுங்கும் வேலை.

**2.** கண்ணனின் இச் சிறுகதை படைப்பின் செல்நெறிகள் பற்றி ஜனரஞ்சக அளவில்கூட அறிந்து வெற்றி பெறவில்லை, இந்தக் கதையை பொறுத்தவரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொக்கனின் மரத்தடி உபதேசம் திரும்ப வாதவூரானால் சொக்கனுக்கே உபதேசிக்கப்பட்டுள்ளது. கீழ்க் கண்டவாறு...

அ) அவருக்காக நான் ஜெர்மனிவந்து 9 மணிக்கு மேல் நீலப்படங்கள் பார்க்க முடியாது.

ஆ) எனக்கு டேட்டிங் பற்றி எதுவும் தெரியாது. அனுபவமும் இல்லை. அது 90-களுக்கு பின்பான ஒரு நிகழ்வு, சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே. அதனை இனி அனுபவித்து புரிந்து, பகிர்ந்து கொள்ள வாய்ப்பும் இல்லை, வயதும் இல்லை. டேட்டிங் அனுபவ நண்பர்களிடம் பிரத்யேகமாக, இக்கதைக்காக விசாரித்து அறிந்து கொண்டவையே எனது புரிதல்கள். அதற்கு தனிவகுப்புகள் கண்ணன் போன்ற நண்பர்கள் நடத்தினால் அறிந்து கொள்ளலாம்.

இ) எனக்கு ஆங்கில அறிவு மிகவும் குறைவு. பரிச்சயம் இல்லை என்றே சொல்லலாம். ஒரு சிறுகதையோ, நாவலோகூட நான் ஆங்கிலத்தில் படித்தது இல்லை. தத்துவம், அரசியல், விஞ்ஞான, உளவியல் சிந்தனைகள் மட்டுமே என்னால் ஓரளவு ஆங்கிலத்தில் சிரமப்பட்டு படித்து புரிந்து கொள்ள முடியும். நான் ஒரு அறிவியல் மாணவன். இலக்கிய பரிச்சயம் அரசியல் ஊடாகவும், தமிழ் படைப்புகள் வழியாகவும் வந்தவை தான்.

ஈ) இனிதான் பூகோளவியல் படிக்க வேண்டும் நான் கண்ணனுக்காக. நிற்க.

**3.** 'தண்ணீர் அவ்வூர் மக்களைப் போலவே கருத்திருந்தது' என்று எழுதுகிறார். இது என்ன? இந்த உவமைக்கும் கிளேசியருக்கும் என்ன சம்பந்தமோ? வர்ணனைகளே கதையின் சொல்லப்படாத மௌனிக்கும் பகுதிகளுக்கான தடயம் (இதனை new criticism-த்தில் trace என்பார்கள், Psycho-Linguistic-ல் reminder என்பார்கள். பேசியதில் உள்ள பேசப்படாததின் மிச்சம்) இவ்வர்ணனைகளிலும், அதற்கான தேர்வுகளிலும், பேச்சை உருவமைப்பதிலும், அவற்றை வரிசைப்படுத்துவதிலுமே படைப்பாளனது வர்க்க, பாலியல், சாதீய, மத தன்னிலை வெளிப்பாடு கொள்ளும். அக்கதையில் வரும் நாயகன் அதாவது கண்ணனின் 'அப்பாவித் தமிழன்' ஒரு பிராமணன். (இன்னும் நம் ஆட்கள் மனிதர்களை நல்லவர், வல்லவர், அப்பாவி, கள்ளன் என்று வகைப்படுத்துவது எனக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. வகை படுத்துதல் என்பது தாவரவியலில் லிண்ணேயஸால் துவக்கி வைக்கப்பட்டது. அதன் உச்ச விளைவுதான் பரிணாமம். அதன் அரசியல் வெளிப்பாடுதான் பாசிசம் அல்லது இனத்தூய்மை அல்லது வலிமை அல்லது திறமை மட்டுமே வாழ்வதற்கான காரணி என்பது. அது முதல் அறிவு என்பது எப்படி வகைப்படுத்துதல் வழியாக ஒரு அதிகார தொழில் நுட்பமாக உருவமைக்கப்பட்டது என்பதை Archeology of Knowledge விபரமாக கூறும். மேலும் வகைப்படுத்துதல் ஒருபடித்தானவர்களாக மனிதர்களை (Same X Other, Black x White, Indian... etc...) கட்டமைப்பதற்கான ஒரு காலனிய தொழில்நுட்பம். அது இப்படித்தான் துவங்கும். அப்பாவி, வளர்ச்சியற்றவன், காட்டுமிராண்டி, மூடநம்பிக்கையாளன் என்பதாக... அது போகட்டும்)

**4.** கதைநாயகன் ஒரு பிராமணன் (ஆரியனும், பிராமணனும் ஒன்று அல்ல. ஆரியனைவிட பிராமணன் ஆபத்தானவன. ஆரியன ஒரு இனம. பிராமணன மனுவின் வகைப்பாட்டில் அதிகாரம் பெற்ற ஒரு வர்ணம்) இதற்கான தெளிவான புறவிபரம் கதையில் 'கொழுமோர்' என்கிற பிராமண வழக்குச் சொல் மற்றும் 'ஏழுமலையானை' வேண்டுதல். இதனை யூகிக்க பிம்பத்திற்குள் பிம்பம், மகா செர்மானியர்கள் அல்லது ஆரியர்கள் பற்றி எல்லாம் ஆழமாக போக வேண்டிய அவசியமில்லை. கண்ணன் தேவையில்லாமல் இதனை வருவிக்க பிம்பம், அடுக்கு பிம்பம் அது, இது என்று சிரமப்படுகிறார்.

**5.** அவரது எதிர்வினையின் உச்சம் தமிழனுக்கு செக்ஸ் அறிவு இல்லை என்கிற முடிவுதான். சங்க காலத்தில் வேலன் வெறியாட்டம் மற்றும் நெய்யணி மயக்கம் எல்லாம் என்ன? உடல்களை பொதுக்களத்தில் அலைய விட்டு அவற்றை கலப்பதுதான். சங்க கால மகளிர் மது அருந்திவிட்டு இரவுகளில் ஆட்டம் போடுவார்கள் என்கிறது சங்ககால தமிழர் வரலாறு. அகத்திணை இலக்கியங்களை ஒரு பாலியல் வாசிப்பிற்கே உட்படுத்தலாம். உடன்போக்கு, மடலேற்றம் எல்லாம் என்ன? காதலியின் வாயில் ஊறும் நீரின் இனிமைக்கு இணையான நீர் உலகில் இல்லை என்கிறது வள்ளுவம். அது அன்று ஆனால் 'இன்றுள்ள தமிழன்' என்று கூறி தப்பிக்கலாம். அதற்கு தமிழில் செக்ஸ் லைப்பின் அனுபவ பகுதியில் இருந்து தான் உதார ணம் காட்டவேண்டி வரும்.

**6.** பாலியல் பற்றிய புரிதலுக்கு, 'உலகை மிரட்டும் மக்கள் தொகை பெருக்க'த்தை ஒரு அளவுகோலாக வைத்தால், மிக குறைவான மக்கள் தொகை உள்ள நாடுகளே பாலியல் அறிவில் அதிகம் உள்ளவர்களாக கருத வேண்டி வரும். மக்கள் தொகை குறைவாக உள்ள நாடுகளில் ஒன்று சவுதி அரேபியா (ஆனால், ஒவ்வொரு சவுதிக்கும் 10 முதல் 12 குழந்தைகள் உண்டு என்பது வேறு). ஆனால், பாலியல் இங்கு கடுமையான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முகம் தெரிய பெண்களை பார்ப்பதே அரிது. மக்கள் தொகைப் பெருக்கம் உலகை அச்சுறுத்துதாம், இப்படி தனது பயத்தை உலக பயமாக்குவதும் ஒரு ஐரோப்பிய தொழில் நுட்பம்தான். மாவோ கூறினார், 'மனிதன் பிறக்கும்போதே இரண்டு கைகளுடன் பிறக்கிறான்' என்று. மால்த்தூஸியன் பூதம் உலகை விட்டகன்றாலும், இன்னும் இந்த வெள்ளை, ஆணாதிக்க, மத்தியதர வர்க்க மேட்டிமை யினரை (elites) விட்டகலவில்லை. அதனால்தான் கண்ணன் தனது அச்சத்தை உலக அச்சமாக சித்தரிக்கிறார்.

**7.** உலகத்தின் மையமாக மனிதன் தன்னை கருதிக்கொள்ளும் மனிதமுதல்வாதம் என்கிற 'ஹோமோ செண்டரிஸம்' தான் உச்சமாக பாசிச கருத்தியலாக வளர்ந்தது. ஐரோப்பா மனிதனை மையமாக வைத்துக் கொண்டே தனது தத்துவார்த்த அறிதலை துவங்கிற்று. Politics of Humanism பற்றி இங்கு நான் பேசவரவில்லை, ஆனால், மனிதநேயம் பேசிய முதலாளித்துவம்தான், மனித அழிவை அதிகப்படுத்தியது, அழகுபடுத்தியது. மனிதன் ஒரு பதினெட்டாம் நூற்றாண்டின் ஐரோப்பிய கண்டுபிடிப்பு என்கிற பூ.:.க்கோவின் மனித உடலிற்குள்ளான அதிகார செறித்தல்கள் பற்றிய ஆய்வை மறுத்துவிட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக, கண்ணன் தொடர்ந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார் வெவ்வேறு விதமாக. மனிதநேயம் என்பது பிச்சைக்காரர்களுக்கு காசுபோடுவதோ, குளிருக்கு போர்வை தருவதோ அல்ல.

**8.** கண்ணன் இன்னும் 'த்ரில்'- உணர்வுகளிலிருந்து விடுபடவில்லை. மகிழ்வு, வேட்கை போன்ற உணர்வுகள் எப்படி அதிகார உறவுகளால் ஒரு உடலுக்குள் நுட்பமாக பின்னலாக்கப்பட்டு, அதனை அடைவதற் கான பாய்விற்கு உடல்கள் முடுக்கப்படுகின்றன என்பது மற்றொரு ஆய்வு. 'சுயம்', 'ஆத்மா' போன்ற தத்து வார்த்த கூறுகளையே தொழில்நுட்பங்களாக, செய்தி பரிமாற்ற வினையாக கருதி நகரும் மொழியாய்வுகள்... அறிதல் என்கிற அடிப்படைச் செயலையே கேள்விக்குள் ளாக்கி விட்டுள்ளது இந்த நூற்றாண்டில். புனைவுகளால் புனையப்பட்ட ஒரு புனைவாக வாழ்க்கை மாறிக் கொண்டிருக்கும் உலகில் 'வாழ்க்கை விசித்திரமாக' தெரிவதும், 'இலக்கிய உலகம், இலக்கிய பிறப்பு எல்லாம் விசித்திரமாக' தெரிவதும் கண்ணனின் அரசியல் மற்றும் அறிதலின் பிரச்சனைதான் என்பது ஒன்றும் நமக்கு விசித்திரமானது இல்லை.

**9.** கண்ணனின் தர்க்க அறிவு மிக நுட்பமாகத் தான் வேலை செய்கிறது. 'செந்தட்டி', 'அவன் அப்படித்தான்' இரண்டும் எனது குறிப்பில் அருகருகே எழுதப்பட்டிருப் பதால் அதை வைத்துக் கொண்டு அவர் ஒரு முடிவிற்கு வருகிறார். இது இதழ்கள் வாரியாக கதைகளை வரிசைப்படுத்தும்போது அருகருகே வந்தவை. இதில் எல்லாம் 'த்வனி' அல்லது தொனி ஒன்றுமில்லை. இப்படி கண்டுபிடித்து 'யுரேகா' போடும் அற்புதம் எதுவும் இதில் இல்லை.

கிழக்கே போகும் ரயில் பிரச்சனைக்கு வருவோம். 'பாரதிராஜா தனது கிழக்கே போகும் ரயில் என்ற படத்தை பின்னால் தயாரித்தார்.' அது என்ன பின்னால், கண்ணன் Patent Right கேட்கிறாரா? வைகை அணை, ஆண்டிப்பட்டி என்று தெளிவாகவே எழுதியிருக்கலாம். இதை மறைப்பதற்கும் ஒரு கலாச்சாரக் கண்காணிப்பு அல்லது Creative Sensorship செயல்பட்டிருப்பதையே காட்டுகிறது. மேல்விளக்கத்தை விரிவஞ்சி விடுத்தேன் இங்கு.

கதை ஐரோப்பாவைப்பற்றி மேற்புருவ சுழிப்புடன் எழுதப்பட்டுள்ளது. அதனால், ஐரோப்பாவின் உலகக் கொடையை சுட்டிக்காட்டுவது கண்ணனுக்கு பயம் காட்டுவதாக இருக்கிறதாம். பயம்தான். உலகை அழிவின் பயத்தில் வைத்திருப்பது ஐரோப்பிய அறிவு என்பதை நினைவூட்டுவது பயமுறுத்துவதா? கண் ணனை ஜெர்மானியருடன் ஐக்கியப்படுத்தி அடையா ளப்படுத்துவது எனது நோக்கமில்லை. மாறாக, கதையின் உள்ளார்ந்த பார்வை 'ஐரோப்பா' அல்லது 'மேற்கத்தியம்' என்கிற கட்டமைவுடன் கொண்டிருக்கும் உறவைப் பற்றியதுதான். அந்தப் பார்வை கண்ணனுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், கதை எழுதிய 'எழுதும் உருவிற்கு' அல்லது கண்ணன் கூறிய எழுத்தாளனாக கதைக்குள் இருந்து கொண்டு எழுத்தை உரிமை கொண்டாடும் பிம்பத்திற்கு இருக்கிறது. இன்னும் பெண் பற்றிய தவறான கற்பிதம், கீழைநாடுகள் பற்றிய ஐரோப்பிய பார்வை, பாலியல் சுதந்திரம் என்பதை கட்டுப்பாடற்ற பாலியலுடன் குழப்பிக் கொள்ளும் கண்ணோட்டம் இப்படியாக, இன்னபிறவாக இருக்கிறது என்பதுவே அக்கதை பற்றிய எனது கருத்து.

இறுதியாக, கண்ணனைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எப்படி வசந்தி-ராஜாவின் கதையில் சொல்ல செய்திகள் இருந்ததோ அப்படித்தான் கண்ணனின் கதையிலும். எல்லாவற்றையும்விட புலம் பெயர்ந்த நிலையில் உருவாகும் எழுத்தின் அடை யாளம் மற்றும் அரசியல் பற்றியதும்தான் அந்த கட்டுரை. எதையும் சொல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு பரப்பில் சொல்லப் படும் விஷயங்கள் ஏனோ தானோ என்று இருக்கக் கூடாது என்கிற அக்கறையில் எழுதப்பட்டதே அக் கட்டுரை. எழுத்தின் பொறுப்புணர்வுபற்றி அதிகம் அக்கறையும் யோசனைகளும் கொண்டவன் நான். இதையும் 'புனிதக் கட்டமைவு' என்று பின்-நவீனக் கூச்சலுடன் சொல்லக்கூடும். கண்ணன் 'புனிதக் கட்டமைவு' போன்று சமீபத்தில் தீண்டத்தகாத வரிசைக்கு தள்ளப்பட்ட வார்த்தைகளை காட்டி சிலம்பம் ஆடினாலும், வழிகாட்டி, உபதேசி என்று முத்திரைக் குத்தினாலும் பரவாயில்லை. சுகனின் கூட்டுக்கலவி படித்ததில்லை. கூட்டுக்கலவி என்று எழுதிவிடுவதே புரட்சி, புதுமை என்பது ஒரு மோஸ்தர் பித்துதான். இறுதியாக, நான் அறவியலாளனோ, புனித வாதியோ அல்ல. இதை எனது அந்தக் கட்டுரையே சொல்லும். வாதவூரானான மாணிக்கவாசகன் 'நரியை பரி'(?) என சொன்ன கதையை சுட்டிக் காட்டிய 'நல்ல இலக்கிய (முக்கியமாக ஆங்கில பரிச்சயமுள்ள) வாசிப்பற்ற' சொக்கனுக்கு, மாணிக்கவாசகன் செய்த மீள் உபதேசத்திற்கான மறுமொழி இவ்வாறாகவே முடிந்தது.

**ஜமாலன்**
ரியாத். 05-11-2000:(அதிகாலை 05:54).

✣ ✣ ✣ ✣ ✣

சஞ்சிகை மிகவும் காத்திரமானதாக, பல பயனுள்ள வாசிப்புக்குகந்த விடயங்களைத் தாங்கி வெளி வருகிறது. நேர்த்தியான அச்சுப் பதிப்புடனும் அழகான வடிவமைப்புடனும் உயிர்நிழலைக் கொண்டு வரும் உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்,

ஆயினும் பின்நவீனத்துவ சிந்தனைகள் உங்கள் புரிதலை வளம்படுத்துதற்கான ஒரு கருவியாக இருப்பதற்குப் பதில் அது அளவுக்கதிகமாக உங்களை ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கிறீர்களோ என்று அஞ்சுகிறேன், குறிப்பாக படைப்புகளையும் அவை காட்டும் உலகின் சிக்கல்களையும், உறவுகளின் சிக்கலான இடையூடாட்டங்களையும் விளங்கிக் கொள்ள அது பயன்படுத்தப்படுவதற்கு மேலாக அது சமூக வாழ்வின் நடைமுறைக்கு வழிகாட்டக் கூடிய ஒரு சிந்தனையாக கருதப்படுகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது.

எவ்வாறாயினும் இது விவாதத்துக்குரிய ஒரு விடயம் என்பதால் இவ்வளவுடன் விட்டுவிடுகிறேன்.

உயிர்நிழல் சிறுகதைகள் என்னை மிகவும் கவர்கின்றன. சென்ற இதழில் வெளியான 'ராஜகுமார னும் நானும்' என்னை மிகவும் பாதித்த ஒரு சிறுகதை.

**எஸ்.கே.விக்னேஸ்வரன்**
கொழும்பு, இலங்கை

✣ ✣ ✣ ✣ ✣



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியம்: ரஞ்சினி

# “களை மாற்றம்”

ரஞ்சினி

இருட்டு பனி மழை குளிர்

நடுக்கம் ஏக்கம் கோபம் வெறுப்பு
அருவருப்பு
சிந்தனை உழைச்சல் ஓய்வு....

மீண்டும்

ஏங்கி சலித்து களைத்து உடைந்து
அடிவரை துடைத்தெடுத்து கூட்டி அள்ளி
எறிந்தாகிவிட்டது ஆயினும்
சிறு சிறு துகள்கள் ஆங்காங்கே கிடந்து
வலியைக் கொடுக்கின்றன

அன்பின்
உறவின் வலுவை அறியாத....

அயோக்கியத்திற்கு துணைகள்....

பார்க்குமிடமெல்லாம் பொய்கள் நலிந்து
நேர்மையற்ற
வெட்ட வெளி அரசியல்
நண்ப நண்பிகளை இனம் கண்டாயிற்று,

குப்பைகளைக் கூட்டி
தீ இட்டு, பின்
குளித்து எழ
புதிதாய் அனைத்தும்.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



L'OR DE L'INDE
15 Rue Cail 75010 PARIS
Tél : 01 42 05 63 89
M° : La Chapelle ou Gare du Nord

EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France e-mail: EXILFR@aol.com N° d'enreg. 13023204

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்